








20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 56


# உதயன்

சுடர் 27
கதிர் 113

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 05 ஞாயிற்றுக்கிழமை (18/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# ஜனாதிபதியானால் தமிழருக்கு ரணில் தரும் தீர்வுதான் என்ன?

## யாழ்ப்பாணத்தில் மக்களின் கேள்விக்கு அவர் மழுப்பலான பதில்



யாழ்ப்பாணம், மார்ச் 18

அடுத்த முறை தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானால் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வை முன்வைப்பீர்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் யாழ்ப்பாண மக்கள் முன்வைத்த கேள்வியால் அவர் ஆடிப்போனார். இரண்டு இடங்களில் கேட்கப்பட்ட இந்தக் கேள்விக்கு ஒரு இடத்தில் பதிலளிக்காமல் தவிர்த்தார். மற்றொரு இடத்தில் மழுப்பலான பதிலை வழங்கினார்.

நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் வந்தஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டக்குழு நேற்று யாழ்ப்பாணத்தின் பல இடங்களுக்கும் சென்று மக் 23

## போர்க்குற்றம் சுமத்தினாலும் இலங்கைக்கு பிரி. ஆயுதங்கள்

### அந்நாட்டின் உள்துறை அமைச்சு கூட்டத்தில் கண்டனம்

லண்டன், மார்ச் 18

இலங்கை ஆட்சியாளர்களின் கொடூரமான நடவடிக்கைகள் குறித்துப் போதுமான சாட்சியங்கள் இருந்தபோதிலும், அந்த நாட்டுக்குப் பிரிட்டன் தொடர்ந்தும் ஆயுதங்களை விற்பனை செய்து வருவதற்கு, அந்த நாட்டின் உள்துறை அமைச்சின் குழுநிலைக் கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினால் வன்னிப் போரில் குற்றங்கள் இழைக்கப்பட்டமை பற்றிய மேலதிகமான சாட்சியங்களை சனல் -4 தொலைக்காட்சி வெளிப்படுத்தியுள்ள நிலையில், இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளமை 23

## போரை நிறுத்த வற்புறுத்தியது மேற்குலகு



கொழும்பு, மார்ச் 18

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நிறுத்துமாறு மேற்குலக நாடுகள் 23

## இலங்கையின் உப மாநாட்டில் எட்டுப் பேர் மட்டுமே பங்கேற்பு

### பல நாடுகள் புறக்கணிப்பு

ஜெனிவா, மார்ச் 18

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கையின் உப மாநாடுகளை, சர்வதேச நாடுகள் பலவும் புறக்கணித்து வருவதாக ஜெனிவாச் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று முன்தினம் இலங்கையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உப மாநாட்டில், 8 பேர் மட்டுமே பங்கேற்கும் அளவுக்கு, இலங்கையின் நிலைமை மோசமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் பிரதான அமர்வு இடம்பெறும் சமவேளை, உப மாநாடுகள் இடம்பெறுவது வழமையான ஒன்று. இந்நிலையில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தைத் தோற்கடிக்கும் நோக்கில், இலங்கை அரச தரப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் உப மாநாடுகள் பலவும், தொடர்ச்சியாகப் பிசுபிசுத்து வருவதாக அறிய 23

## மக்களை ஏமாற்றி, வற்புறுத்தி அழைத்து வந்து ஆர்ப்பாட்டம்

### ஜெனிவாவுக்கு எதிர்ப்பாம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

ஏமாற்றியும் வற்புறுத்தியும் அழைத்து வரப்பட்ட மக்கள் ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். பஸ்களில் ஏற்றி வரப்பட்ட இவர்கள் யாழ்.நகருக்கு வந்த பின்னரே தாம் பேரணியில் கலந்து கொள்வதற்காகவே அழைத்து வரப்பட்டமை தெரியவந் 23




## விளையாடிய மர்மப்பொருள் வெடித்து 6 சிறுவர்கள் காயம்

### கிளிநொச்சி செல்வாநகரில் சம்பவம்

கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி செல்வாநகர், யூதா கோயில் பகுதியில் வீடொன்றின் முன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் கையாண்ட மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் ஆறு பேர் காயமடைந்து கிளிநொச்சிப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் ஒரு மணிக்கு இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் லக்ஷன் (வயது 12), ஜீவகுமாரன் யசோதரன் 23

## கொழும்பு – தூத்துக்குடி கப்பல் சேவை

கொழும்பு- தூத்துக்குடி பயணிகள் கப்பல் சேவை இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் ஆரம்பமாகும் என்று தூத்துக்குடி சிதம்பரநாத் துறைமுக நம்பிக்கை நிதியத்தின் தலைவர் ஏ.சுப்பையா நேற்றுத் தெரிவித்தார். கப்பல் சேவையை மீள ஆரம்பிப்பதற்கான பங்காளர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

## அருங்காட்சியகத்தில் பொருள்கள் திருட்டு

கொழும்பு தேசிய அருங்காட்சியகத்துக்குள் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த குழுவொன்று அங்கிருந்த பொருள்கள் பலவற்றை திருடிச் சென்றுள்ளனர். இதுகுறித்து கறுவாத்தோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். அருங்காட்சியகத்தின் இரண்டாம் மாடியில் விலை மதிக்க முடியாத புராதன வாள் மற்றும் நாணயங்கள் உட்பட ஒரு தொகை பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

## 5 இலங்கை மீனவர் தமிழகத்தில் கைது

தேவேந்திரமுனையில் இருந்து நேற்றுமுன்தினம் காலை கடலுக்குச் சென்ற ஐந்து மீனவர்கள் தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயணித்த படகையும் தமிழக அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர் என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது 15 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களையும் அவர்கள் பயணித்த நான்கு படகுகளையும் விடுவிக்குமாறு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பெண் கைதிகள் துஷ்பிரயோகம் அறிக்கை சமர்ப்பிப்பு

வெலிக்கடை சிறைச்சாலையில் பெண் கைதிகள் சிலர் சிறை உத்தியோகத்தர்களால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. மகளிர் தினத்துக்கு முன்தினம் இரவு பெண் கைதிகள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிலர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மகளிர் தினத்தை முன்னிட்டு மேடையேற்றப்படவிருந்த நாடகமொன்றின் ஒத்திகைக்காக எனக்கூறி பெண் சிறைக் கைதிகள் சிலரை வேறாக்கி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

Ranjanas CERAMIC (PVT) LTD.
OPEN EVERY DAY
யாழ். நகரில் சர்வதேச தரத்திலான வேறெங்கும் கிடைக்காத WALL HUNG, BACK TOWALL வகையிலான கோமேட் மற்றும் வோஷ் பேசின் வகைகளை உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்..
# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
#05, Stanley Road, Jaffna. 021 222 4777/021 222 4888
#05A, Kodikamam Road, Nelliyadi. 021 226 2000 /021 226 3111



metro engineering (pvt) ltd

CMB / TIRUCHI / CMB - 14800/=
CMB / CHENNAI /CMB - 14400/=
CMB / DUBAI - 13300/=
CMB / LONDON / CMB - 70000/=
Call 0777727617
AIR MARK Travels & Tours
IATA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இப்போதும் போர்ச் சூழ்நிலையே நிலவுகிறது

## அவர்களுக்கான விடுதலை இன்னும் கிடைக்கவில்லை என்கிறார் ரணில்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யுத்தகாலத்தில் இருந்ததைப் போலவே வடபகுதி மக்கள் இப்போதும் துன்பப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களது முகங்கள் தமக்கான விடுதலை இன்னும் கிடைக்க வில்லை என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் ஐ.தே.க தலைவரும் எதிர்க் கட்சித் தலைவ ருமான ரணில் விக்கிரமசிங்க.

நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமி கற்பழிக்கப்பட்டு கோரமாகப் படுகொலை செய்யப்பட்டதன் மூலம் இங்கு பெண்களுக்கு எவ்வாறான பாதுகாப்பு இருக்கின்றது என்பதை நாடாளுமன்றத்தில் எடுத்துக் கூறி சர்வதேசத்துக்குக் கொண்டு செல்வோம். மற்றும் வெள்ளை வான் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து ஜனநாயக விரோதப் போக்காக நடக்கும் இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப வடக்கு, தெற்கு பேதமின்றி அனைவரும் ஒன்றிணைவோம் என்றும் அவர் அறைகூவல் விடுத்தார்.

யாழ். வந்த ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை சாவகச்சேரிக்குப் பயணம் செய்தார். அங்கு சாவகச்சேரி பஸ் நிலையத்தில் கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

இங்கு கூடியிருக்கும் மக்களைப் பார்க்கும் போது இன்னமும் அவர்களின் விடுதலை கிடைக்கவில்லையென நினைக்கின்றேன். யுத்தம் முடிவுக்கு வந்துள்ள போதிலும் மக்களின் மனதில் உள்ள பயம் இன்னமும் நீங்கவில்லை. வெள்ளை வான் கலாசாரம் இன்னும் தொடர்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

அனைத்து மக்களும் இணைந்து அரசுக்குப் புதிய பாடத்தைப் படிப்பிக்க வேண்டும். யுத்த காலத்தைப் போல் இப்பொழுதும் வடக்கு -கிழக்கு மக்கள் துன்பப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த மக்களுக்கு நல்லதொரு அரசியல் தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும். வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டுமெனப் போராடும் எங்களை கூடாதவர்கள் என்கின்றார்கள். அதுமட்டுமல்ல அரசியல் சுதந்திரம் கிடைக்க வேண்டும். வாழ்வாதார நிலைகள் கிடைக்காத நிலையில் இப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் மதிய உணவு அருந்தும் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க (05)

ஒரு வருடத்தின் பின்னர் இப்பகுதிக்குப் பயணம் செய்துள்ளேன். எதிர்காலத்தில் இங்கு அடிக்கடி வந்து இப்பகுதி மக்கள் படும் வேதனைகளை நாடாளுமன்றத்தில் எடுத்துரைப்பேன்.

தமிழ்,சிங்கள,முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும். புரையோடியுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

இலங்கை மக்கள் என்ற ரீதியில் மூவின மக்களும் ஒன்றிணைய வேண்டும்

இப்பிரதேசத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக எமது கட்சியின் சார்பில் பணியாற்றிய தியாகராஜா மகேஸ்வரன் விட்டுச் சென்ற பணியினை அவரது பாரியார் திருமதி விஜயகலா மகேஸ் வரன் உங்கள் பகுதிகளுக்கு மேற்கொண்டு வருகிறார். அவரின் தலைமையில் உங்கள் பகுதிக்கு பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சாவகச்சேரி நகர்ப் பகுதிக்கு பயணம் செய்தனர்.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இறங்கிய இவர்களை சுஜீபா என்னும் யானை மாலை போட்டு வரவேற்றது. பஸ்நிலையத்தில் கூடியிருந்த மக்கள் மத்தியில் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார்

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இருந்து அவர்கள் ஊர்வலமாக தனங்கிளப்பு வீதியில் உள்ள சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு வணிகர்களால் அவர்கள் வரவேற்கப்பட்டுப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சூறாவளிப் பயணம் செய்தனர். இதன் போது பொதுமக்களைச் சந்தித்து உரையாடும்போதே மேற்படி அறைகூவலை எதிர்க்கட்சித் தலைவர் விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க, ஜெயலத் ஜெயவர்த்தன, விஜயகலா மகேஸ்வரன், பி.எம்.சுவாமிநாதன், வேலாயுதம் ஆகியோரும் நேற்றுப் பல இடங்களுக்கும் பயணம் செய்தனர்.

### கச்சாயில்

கச்சாயில் பொதுமக்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும், நேற்றுக் காலை பொதுமக்களைக் கட்டாயமாக வான்களில் ஏற்றி ஆர்ப்பாட்டத்துக்குக் கொண்டு சென்றதால், குறைந்தளவிலான பொது மக்களையே சந்தித்தனர்.

இதன் போது, தாம் மீன்பிடித் தொழிலையே நம்பியிருப்பதாகவும் ஆனால் எரிபொருள் விலை உயர்வு காரணமாக ஒழுங்காகத் தொழிலுக்குச் செல்ல முடியவில்லையெனத் தெரிவித்தனர். வருமானக் குறைவினால் வாழ்க்கைச் செலவு அதிகம் என்பதால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்தனர். யுத்த காலத்தில் கடத்தப்பட்ட தங்கள் பிள்ளைகளை விடுவித்துத் தருமாறும் கோரினர்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர், ஜெனிவாப் பிரச்சினை பெரிய பிரச்சினையல்ல. முதலில் கச்சாய்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு அமைச்சரிடம் சொல்லுங்கள் என்றார்.

### நெல்லியடி

நெல்லியடி மத்திய பேருந்து நிலையத்தில் பொதுமக்களுடன் கலந்துரையாடிய ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்கப் போவதில்லை. இந்த ஆட்சியில்தான் ஊடகவியலாளர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. நாம் தற்போது அரசுக்கு எதிராகப் போராட வேண்டிய தருணம். நாம் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து அரசிடம் மூன்று கோரிக்கைகளை முன் வைத்துள்ளோம் என்றார்.

பருத்தித்துறை மத்திய பேருந்து நிலையத்தில் பொதுமக்களைச் சந்தித்த பின்னர் ரணில் குழுவினர் பொலிகண்டி கந்தவனக் கடவை ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொண்ட பின், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கும் சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் தொண்டைமானாறுடன் இணைந்து மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படாத அக்கரைப் பிரதேசத்துக்குச் சென்று அந்தப் பிரதேசத்துக்கு வந்திருந்த மக்களுடன் சந்திப்பில் ஈடுபட்டனர். இதன் போது அந்த மக்கள் தமது அக்கரைப் பகுதி விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதும், தம்மை மீளக்குடியமர அனுமதிக்கவில்லை என்று தெரிவித்தனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசுவதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நீர்வேலி சமூக அபிவிருத்தி மன்றத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இதன்போது உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமியைக் கற்பழித்துக் கொன்ற நபருக்கு எதிராக ஏன் உரிய விசாரணைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி சிறுமியைக் கொன்ற நபர் 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை. சேனாதிராஜாவைக் கொல்ல முயன்ற நெப்போலியனின் வலது கரமாகச் செயற்பட்டவர்.

இந்த அரசு சமூக விரோதச் செயல்களையே விரும்புகின்றது. எனவே இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இதற்கு வடக்கு, தெற்கு பேதமில்லாமல் ஒன்றிணைந்து போராட வேண்டும். வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தெற்கில் நாங்களும் தனித்துப் போராடுவதால் பயனில்லை. அதனை இந்த அரசு இனவாதத்தைத் தூண்டி அடக்கி விடும் - என்றார்.

இதன் பின்னர் ரணில் குழுவினர் சுன்னாகம் சந்தைப் பகுதி வர்த்தகர்களையும், தொடர்ந்து தெல்லிப்பழையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட தந்தை செல்வாபுர மக்களையும் சந்தித்தனர்.

இதன்போது வலி. வடக்கு மக்கள், தமது பிரதேசங்கள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்றும், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் வீடமைப்பு வசதிகள், மின்சார வசதிகள், போக்குவரத்து வசதிகள் என்பவற்றை ஏற்படுத்தித் தருமாறும் கேட்டனர்.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ அரசு வலி. வடக்கை அழிக்க முயற்சிக்கின்றது. இந்தப் பகுதியிலிருந்து எத்தனை தலைவர்கள் தோன்றினார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் முன்பு இந்தப் பகுதிக்கு பாடசாலை ஒன்றைத் திறந்து வைக்க வந்துள்ளேன். தற்போது இந்தப் பகுதியைப் பார்க்கையில் கவலையாக இருக்கின்றது - என்றார்.

அதன் பின்னர் மாதகல், அராலி, மானிப்பாய் ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்து மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர். (த-2-5-8-9)

---

# சங்கிலியைப் போட்டு அழகு பார்த்தவர் நகைக் கடையிலிருந்து தப்பி ஓட்டம்

### யாழ். நகரில் நேற்றுப் பகல் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கடைக்கு வந்து நகை வாங்குவது போன்று பாசாங்கு செய்து சங்கிலியுடன் தலைமறைவான சம்பவம் நேற்று யாழ். நகர் கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக்கடை ஒன்றில் இடம்பெற்றுள்ளது. தலைமறைவாகிய நபருடன் கூட வந்தவர் எனக் கருதப்படும் மற்றொருவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நேற்று முற்பகல் வேளை யாழ். நகரிலுள்ள நகைக் கடைக்கு இருவர் சென்றுள்ளனர். ஒன்றாகச் சென்ற இருவரில் ஒருவர் அரைப் பவுண் நிறையுடைய கழுத்துச் சங்கிலி தருமாறு கேட்டுள்ளார்.


நகைக்கடையில் விற்பனையில் ஈடுபட்டவர்கள் முக்கால் பவுணில் தான் சங்கிலி இருக்கிறது எனக் கூறியுள்ளனர். ''அந்தச் சங்கிலியைத் தாருங்கள் பார்ப்போம்'' எனக் கூறி வாங்கி அதனைக் கழுத்தில் போட்டுக் கொண்டு அழகு பார்த்தபடி இருந்தார். ஓரிரு நிமிடங்களில் கழுத்தில் சங்கிலியுடன் கடையின் முன்பக்கத்துக்கு வந்த நபர், தன்னுடன் கூட வந்தவரைப் பார்த்து சங்கிலிக் கணக்கைப் பேசி முடிக்குமாறு கூறியபடி வெளியில் மெல்ல - ஆறுதலாக நடக்க ஆரம்பித்தார். பின்னர் விரைந்து சென்று தலைமறைவாகி விட்டார்.

அந்த ஆசாமியுடன் வந்தவரும் கடையிலிருந்து வெளியேற ஆயத்தமானார். அப்போது நகைக் கடையிலிருந்தவர்கள் உஷாரானார்கள். அவரை மடக்கிப் பிடித்து விசாரித்தனர்.

''சங்கிலியுடன் ஓடிய நபரை எனக்கு முன்பின் தெரியாது. பஸ்ஸில் வரும் போது பழகியவர் தான் அவர். நகை வாங்குவதற்குக் கடையைக் காட்டுமாறு கேட்டார். அதைவிட எனக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.'' என்று பிடிபட்டவர் கடைக்காரரிடம் சொன்னார்.

இது குறித்துப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. விரைந்து வந்த பொலிஸார் குறித்த நபரைப் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கென அழைத்துச் சென்றனர். (ஒ-03-04)

# தாக்குப் பிடிக்குமா ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்கள் சுக நலன்களையும் இயற்கை வளங்களையும் பேண...

வடக்கு, கிழக்கில் கால் நூற்றாண்டு காலத்துக்கும் கூடுதலாகத் தொடர்ந்த போர் முடிவுற்று மூன்று வருடங்கள் கழியும் தறுவாயில் உள்ளது. ஆனால் மக்கள் மனங்களில் ஏற்பட்ட பலவகை நோவுகளும் ஆறவில்லை; இன்னும் மேன்மேலும் தொடர்ந்து ஆழமாகின்றன. தமிழர் பிரதேசங்களில் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்பட்டுள்ளன. ஆனால் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைகள், வசதிகள்தானும் இன்னமும் உரிய அளவுக்கு மேம்படவில்லை.

கிழக்கில் பொதுவாக குறைந்த வீதத்தில் வாழ்க்கை வசதிகளும் வாய்ப்புகளும் முந்திய நிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றன. தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளும் அரும்பிக்கொண்டிருக்கின்றன. ஒப்பீட்டளவில் வடக்கில் மேற்கூறப்பட்ட வாழ்க்கை நிலை மற்றும் வசதிகள் தேய்ந்தே காணப்படுகின்றன. அபிவிருத்தித் திட்டங்கள், பணிகள் என்று சொல்வதற்கு முழிப்பாக எதுவும் தென்படவில்லை.

மக்களுக்குத் தேவையான அன்றாட அவசியத் தேவைகளை முழு அளவில் நிறைவேற்றக் கூடிய வசதிகளும் வாய்ப்புகளும் மிக மெல்லியனவாகவே உள்ளன.

குறைபாடுகளும், தேவைகளும் பல்கிப் பெருகும் தன்மையையே அவதானிக்க முடிகிறது. மக்களின் வாழ்க்கைத் தேவைகள் தொடர்ந்தும் உரியவகையில் கவனிக்கப்படாமல் உதாசீனம் செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாண நகரை மிக அண்மித்த கல்லுண்டாய் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் அதனை அண்மித்துள்ள கிராமங்களில் பெரும் சுகாதாரக் கேடு உண்டாக்கப்படுவதை, உதாசீனத்துக்கான உதாரணமாகக் காட்டலாம், கொள்ளலாம்.

கடலை அண்டியுள்ள, அதன் அருகிலுள்ள கல்லுண்டாய்ப் பகுதியில் திண்மக் கழிவுகள், மலக் கழிவுகள் கொட்டப்படுவதால், அருகில் உள்ள நவாலிப் பகுதியை மட்டுமன்றி, அப்பால் அமைந்துள்ள அயல் கிராமங்களிலும் பல சுகாதாரக் கேடுகள் விளைவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபைப் பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுகள், கல்லுண்டாய்ப் பகுதியின் வீதி ஓரங்களிலும் அவற்றை அண்டிய பகுதிகளிலும் கொட்டப்படுகின்றன. அதனால் உண்டாகும் சுகாதாரச் சீர்கேட்டால் அயல் கிராமங்களில் தொற்றுநோய்கள் பரவுவதற்கு ஏதுவாக உள்ளதாக அண்மையில் நடைபெற்ற பொது அமைப்புகளின் கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டது. அத்தோடு, மண் அகழ்வினால் அருகிலுள்ள வயல் நிலங்களுக்குள் கடல்நீர் புகும் அபாயத்தையும் தோற்றுவித்துள்ளதாக ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லுண்டாய்ப் பகுதியைப் போன்று, குடா நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் மக்களின் சுகாதாரத்துக்குப் பங்கமான செயற்பாடுகளும், சுற்றாடல் சூழலைக் கெடுத்து அழிக்கும் ஒவ்வாத நடவடிக்கைகளும் ஒப்பேற்றப்பட்டு வருகின்றன என்பதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போன்று, சிலவற்றை மட்டும் இங்கே வரிசைப்படுத்தித் தருகிறோம்:

* சுன்னாகம் - புன்னாலைக்கட்டுவன் வீதியில் அமைந்துள்ள கொத்தியாலடி இந்து மயானத்துக்கு அருகில் பிரதேச சபையினால் சேகரிக்கப்படும் கழிவுகள் கொட்டப்படுகின்றன. இதன் மூலம் சுகாதாரச் சீர்கேட்டுக்கு வகை செய்யப்படுகிறது.
* கொத்தியாலடி இந்து மயானத்துக்கு அருகில் மாடுகளின் கொல்களங்கள் இருப்பதனால் அங்கு கொல்லப்படும் மாடுகளின் கழிவுகளை கட்டாக்காலி நாய்கள் மயானத்துக்குள் இழுத்துச் செல்வதால், இறுதிக் கடனை மேற்கொள்ள அங்கு செல்லும் பொதுமக்கள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.
* கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு பின்புறம் அமைந்துள்ள வெளியில் கொட்டப்படும் கழிவுகளினால் வீதியால் செல்பவர்கள் அசுத்தக்காற்றைச் சுவாசித்து நோய்களுக்கு ஆளாக நேரிடுகிறது.
* அதே போன்று, செம்மணி இந்து மயானப் பகுதியில் கொட்டப்படும் கழிவுகளினால் வயல்களில் வேலை செய்பவர்களும் பாதசாரிகளும் தொற்று நோய்களால் பீடிக்கப்படுவது வழமையாகிவிட்டது.
* பருத்தித்துறை நகரப்பகுதியில் சேரும் கழிவுகளைக் கொட்டப் பொருத்தமான இடம் இல்லாததால், அல்வாய்ப் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் உள்ள கிடங்குகளில் அவை கொட்டி நிரப்பப்படுகின்றன. அக்காணியைச் சுற்றிவர வசிப்போர் குப்பைகளில் இருந்து வரும் துர்நாற்றம், மற்றும் காற்றுக் காரணமாக குப்பைகளில் இருந்து பலபுறமும் பறக்கும் பொலித்தீன் பைகள் என்பவற்றால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளால் துன்பமுற நேரிடுகிறது.
* வடமராட்சியில் உள்ள பல உள்ளூராட்சிச் சபைகள், அந்தந்தச் சபை மூலம் திரட்டப்படும் திண்மக்கழிவுகளைக் கரவெட்டி, சோனப்புப் பகுதியில் கொட்டி இயற்கைப் பசளை தயாரிக்கும் திட்டத்தை மேற்கொள்ள முயன்ற போதிலும், அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமையால், வடமராட்சிப் பகுதியில் குப்பைகள், கழிவுகளை அப்புறப்படுத்த இயலாத சிரம நிலை நிலவி வருகிறது.
* வடமராட்சியின் அம்பன் பகுதியில் அரச அனுமதியுடன் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருவதால், குடியிருப்புப் பகுதிகள், வயல் நிலங்களில் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க இயலாத கையறு நிலையில் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
* வடமராட்சி கிழக்கில் மணற்காடுப் பகுதியில் காட்டு வளம் பெருமளவில் அழிக்கப்பட்டு வருகின்றது.

மேற்காட்டப்பட்டவை போன்றே குடாநாட்டின் ஏனைய சகல பிரதேச சபைப் பகுதிகளிலும் பலவகை வளங்களும் அழிக்கப்பட்டு விட்டன. அல்லது அழிந்துவிட்டன.

அவற்றின் பாதிப்புகளையும் நட்டங்களையும் இப்போது மக்கள் பெருமளவில் அனுபவிக்கிறார்கள். அவற்றை நீக்குவதற்கும் போக்குவதற்கும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளே - பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளே - முழு மூச்சுடன் உழைக்க வேண்டும். தாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்ற உணர்வுடன் மட்டுமன்றி, பக்கம் சாராமல் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் துறந்து, குடா நாட்டின் சகல பகுதிகளையும் பிரதேசங்களையும், அவற்றின் இயற்கை வளங்கள் மற்றும் சூழலையும் பேணிப் பாதுகாத்து சீரழிந்து போயுள்ள நமது பிரதேசத்தை மீண்டும் முந்திய பொலிவுக்கும் வள நிலைக்கும் மீட்க முழு வீச்சில் பாடுபட வேண்டும்.

மீட்பர்களாகச் செயற்பட்டு எங்கள் மக்களை நலத்துடனும் வளத்துடனும் வாழ வைப்பதற்கான பெரும் பணியும் பொறுப்பும் உள்ளூராட்சிச் சபை அங்கத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவற்றை முந்தைய நிலைக்கு மீள்விக்க வேண்டும் என்ற உணர்வு இயற்கையாகப் பிறக்க வேண்டும். மக்கள் சேவை எந்தளவுக்குப் பொறுப்பானது என்பதை உணர்ந்து செயற்படும் உத்வேகம் அவர்களிடம் பிறக்கட்டும்.

பேரழிவின் பின்னர் மீள் கட்டுமானம் செய்வது இலகுவானது அல்ல. பதவிப் போட்டிகளையும் பகுதிப் போட்டிகளையும், குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தைப் புறக்கணிக்கும் நச்சுக் கொள்கைகளையும் களைந்து செயற்படும் மனச் சுத்தி வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியாளர்களிடம் மலரட்டும்.

## அமெ.தீர்மானத்தை ஆதரிக்கக்கோரி

# தமிழக சட்டத்தரணிகள் நீதிமன்றப் புறக்கணிப்பில்

கொழும்பு,மார்ச்18

சொந்த நாட்டின் மக்கள் மீது தடை செய்யப்பட்ட ஆயுதங்களால் மிகக் கொடுமையான தாக்குதல்களை நடத்தி அப்பாவிப் பொதுமக்களை கொலை செய்த இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில், அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கீழமை நீதிமன்றங்களின் சட்டத்தரணிகள் கூட்டமைப்பு நாளை நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதுகுறித்து மேற்படி கூட்டமைப்பின் தலைவர் பரமசிவம் நேற்று முன்தினம் சேலத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளை எதிர்த்து சண்டை போடுவதாகக் கூறிக் கொண்டு இலங்கை அரசு, அந்த நாட்டில் பூர்வீகமாக வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் மீது பெண்கள், குழந்தைகள் என்றும் கூடப்பாராமல் கொடூரமான ஆயுதங்களால் தாக்குதல் நடத்தி மக்களைக் கொன்று குவித்தது.

மனிதாபிமானம் இல்லாத இலங்கை அரசின் இந்த போர் நடவடிக்கையைக் கண்டித்து அமெரிக்காவின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தத் தீர்மா னத்தின் மீது விவாதம் நடத்தி வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மனிதாபிமானம் மிக்க பல நாடுகள் அமெரிக்கா கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வருகின்றன.

### 60 ஆயிரம் பேர் புறக்கணிப்பர்

ஆனால், இந்தியா இன்னும் தனது முடிவைத் தெரிவிக்காத நிலையில், இந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நாளை திங்கடகிழமை தமிழ்நாடு, பாண்டிச் சேரி சட்டத்தரணிகள் கூட்டமைப்பின் சார்பில் 60 ஆயிரம் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தைப் புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம். அமெரிக்கா கொண்டுவரும் இந்த தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காத பட்சத்தில் அடுத்த கட்டபோராட்டம் பற்றி எங்கள் அமைப்பு அடுத்த கூட்டத்தில் முடிவை எடுக்கும் - என்றார் அவர். (த)

# 2500 கிராம சேவையாளர்களை புதிதாக இணைக்கத் திட்டம்

கொழும்பு,மார்ச் 18

உயர்ந்தபட்ச மக்கள் சேவையினை உறுதிப்படுத்தும் வகையில் புதிதாக 2 ஆயிரத்து 500 கிராம சேவை உத்தியோகத்தர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்ளத் திட்ட மிடப்பட்டுள்ளதாக அமைச்சர் டபிள்யு.டி.ஜே. செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

களுத்துறை, தொடங்கொட புதிய மூன்று மாடிப் பிரதேச செயலகத்தை திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

பிரதேச மட்டத்தில் உள்ள கிராம சேவை உத்தியோகத்தர்கள் மக்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் சேவையாற்றுபவர்கள் ஆவார்கள்.

இந்த நிலையில் ஒரு சில கிராம சேவை பிரிவுகளில் கிராம சேவை உத்தியோகத்தர்கள் இன்மையினால் மற்றைய கிராம சேவை பிரிவுகளில் உள்ள கிராம உத்தியோகத்தர்கள் பதில் கடமையில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலைமையை மாற்றியமைக்கும் முகமாக அரசு புதிதாக கிராம சேவை உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளது. இதன் படி 2000-2500 க்கும் இடைப்பட்ட கிராமசேவை உத்தியோகத்தர்கள் புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கிராம சேவை உத்தியோகத்தர் அற்ற கிராம சேவை பிரிவுகளுக்கே நியமிக்கப் படுவார்கள் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

# வடக்கில் 74.9 வீதத்தினர் இலங்கை இந்துத் தமிழர்

வடமாகாணத்தில் உள்ள மொத்த சனத்தொகையில் 74.9 வீதமானோர் இலங்கை இந்துத் தமிழர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாணத்தில் 7 லட்சத்து 55 ஆயிரத்து 66 இந்துக்களும் ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 663 கிறிஸ்தவர்களும், 33 ஆயிரத்து 185 இஸ்லாமியர்களும், 20 ஆயிரத்து 451 பௌத்தர் களும், ஆயிரத்து 389 வேறு மதத்தவர்களும் 2011 ஆம் ஆண்டில் வசித்ததாகப் புள்ளிவிவரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் கடந்த வருடம் பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட வாழ்வியல் புள்ளி விவரக்கணக்கெடுப்பின் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வடமாகாணத்திலுள்ள இலங்கைத் தமிழர்களில் 7 லட்சத்து 47 ஆயிரத்து 314 பேர் இந்து மதத்தையும், ஒரு லட்சத்து 84 ஆயிரத்து 36 பேர் கிறிஸ்தவ மதத்தையும், ஆயிரத்து 322 பேர் இஸ்லாமிய மதத்தையும் 429 பேர் பௌத்த மதத்தையும் 291 பேர் வேறு மதங்களையும் பின்பற்று கின்றனர். இந்தியத் தமிழர்களில் 6 ஆயிரத்து 47 பேர் இந்து மதத்தையும், ஆயிரத்து 809 பேர் கிறிஸ்தவ மதத்தையும், 124 பேர் இஸ்லாமிய மதத்தையும், 14 பேர் பௌத்த மதத்தையும், 14 பேர் வேறு மதங்களையும் பின்பற்றுகின்றனர்.

வடமாகாண முஸ்லிம்களில் 630 பேர் இந்து மதத்தையும்,363 பேர் கிறிஸ்தவ மதத்தையும் ,31 ஆயிரத்து 653 பேர் இஸ்லாமிய மதத்தையும்,3 பேர் பௌத்த மதத்தையும்,10 பேர் ஏனைய மதங்களையும் பின்பற்றுகின்றனர். சிங்களவர்களில் 519 பேர் இந்து மதத்தையும், ஆயிரத்து 261 பேர் கிறிஸ்தவ மதத்தையும், 20ஆயிரத்து 2 பேர் பௌத்த மதத்தையும் , 64பேர் இஸ்லாமிய மதத்தையும் பின்பற்றுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# அனைத்துலக கவிதை நாள் ஜோன் டி சில்வா அரங்கில்

யாழ்ப்பாணம்,மார்ச் 18

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள அனைத்துலக கவிதை நாள் எதிர் வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொழும்பு ஜோன்.டி. சில்வா ஞாபகார்த்த அரங்கில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் சி.பி.ஏக்கநாயக்க தலைமையில் கலைஞர்கள், அறிஞர்கள் மற்றும் கலாரசிகர்களின் பங்களிப்புடன் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் செயலாளர் விமல் ரூபசிங்க, கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் விஜித் கனுகல ஆகியோர் கேட்டுள்ளனர். (த-7)

# நிகழ்வுகள் இன்று

### நூல் வெளியீடு

மக்கள் எழுத்தாளர் கே.டானியலின் 26 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கும், நூல் வெளியீட்டு விழாவும் காலை 9.00 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள டானியல் ஞாபகார்த்த கல்வி நிலைய மண்டபத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-86)

### நூல் அறிகம் நிகழ்வு

யோ. கர்ணனின் 'சேகுவேரா இருந்த வீடு' என்ற நூலின் அறிமுக நிகழ்வும் [illegible] 10 மணிக்கு இல 51, அம்மன் றோட், நல்லூர் யாழ்பாடி விருந்தினர் விடுதியில் குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-18)

### கூட்டம்

வலி.தெற்கு (உடுவில்) பிரதேச சங்க பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய ஆண்டுப் பொதுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் த.கைலாசநாதன் தலைமையில் நடை பெறும். நிதியத்தின் உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி அழைக்கப்படுவதுடன் புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்கள் ஓய்வூதிய அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-16)

***

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க வருடாந்தக் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு சங்கத்தலை வர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது. (த-8)

### மகளிர் தின நிகழ்வு

உடுவில் பொது நூலகத்தால் நடத்தப்படும் 47 ஆவது ஆண்டு நூலக நிறைவு விழாவும் சர்வதேச மகளிர் தின நிகழ்வும் முற்பகல் 9.30 மணிக்கு இடம் பெறும். உடுவில் பொது நூலகத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு வலி.தெற்கு பிரதேசசபைத் தவிசாளர் தியாகராசா பிரகாஷ் தலைமை வகிப்பார். இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி.ஷிராணி மில்ஸ், சிறப்பு விருந்தினர்களாக இந்து கலாசார திணைக்கள அறநெறி பண்ணிசை ஆசிரியை செல்வி. க.சிவயோகராணி, வலி.தெற்கு பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவயோகம் செல்வவிநாயகர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'போர் சூனிய வலயம்' அறிவிப்பு மக்களை ஒன்று சேர்க்க அல்ல

## இப்படிக் கூறுகிறார் கோத்தா

கொழும்பு, மார்ச் 18

இறுதிக் கட்ட போரின் போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உயிரூட்ட முனைந்த குழுவினர் தற்போது ஜெனீவா மனிதவுரிமைகள் அமர்வில் இலங்கைக்கு எதிராக செயற்படுவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மனிதவுரிமைகள் சபை அமர்வுக்கு சமாந்தரமாக பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட புதிய காணொலி தொடர்பிலும் அவர் கருத்துவெளியிட்டுள்ளார்.

காணொலியில் தெரிவிக்கப்பட்டமைக்கு அமைய,

**தமிழீழ விடுதலைப்புலிகள், முல்லைத்தீவு மக்களை அவர்களின் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றி கடற்கரையோர பிரதேசத்திற்கு ஒன்றுசேர்ந்தனர்.**

இலங்கை அரசாங்கத்தினால் பொதுமக்களை ஒன்று சேர்க்க, ஒருபோதும் யுத்த சூனிய வலயம் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

2009 ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் கிளிநொச்சியை மீட்பதற்கு ராணுவத்தினர் நடவடிக்கை எடுத்தனர்.

யாழ்ப்பாணத்தை அடையும் பிரதான வழியான ஏ 9 வீதியையும் ராணுவத்தினர் கைப்பற்றியதுடன், முல்லைத்தீவு பிரதேசத்தையும் மீட்டிருந்தனர்.

இந்த தருணத்தில், தமிழீழ விடுதலைப்புலிகள், முல்லைத்தீவு மக்களை அவர்களின் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றி கடற்கரையோர பிரதேசத்திற்கு ஒன்றுசேர்ந்தனர்.

அவர்களை மனிதகேடயங்களாக பயன்படுத்துவதற்கே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தற்போது, மனிதவுரிமைகள் தொடர்பாக பேசுபவர்கள் அந்த தருணத்தில் மனிதகேடயங்களை விடுத்து தோல்வியை ஏற்றுக்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளை ஏன் கோரவில்லை என்றும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார்.

அதற்கு மாறாக அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மீண்டும் புத்துயிர் வழங்கும் வகையில் செயற்பட்டனர். (ஒ-15)

# யாழ். நகரில் 'திரு'வின் சிலையை உடைத்தது யார்?



யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்.நகர்ப் பகுதியில் புல்லுக் குளத்துக்கு எதிரேயும் முனீஸ்வரர் ஆலயத்துக்கு சமீபமாகவும் அமைக்கப்பட்டிருந்த தமிழரசுக் கட்சியின் முன்னாள் செனட் சபை உறுப்பினரான அமரர் மு.திருச்செல்வத்தின் சிலை நேற்றுமுன்தினம் இரவு விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளது.

இந்த சிலை நீண்ட நாள்களாக புனரமைக்கப்படாது காணப்பட்ட நிலையில் அடியோடு இடித்து பெயர்க்கப்பட்டுள்ளது. இது திட்டமிட்ட சதி முயற்சியாக இருக்குமோ என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்த சிலை உடைப்புக் குறித்து யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.சரவணபவவிடம் நேற்றிரவு தொடர்பு கொண்டு கேட்டபோது இது குறித்து தனக்கு எதுவும் தெரியாது. சம்பவம் தொடர்பில் நாளையே (இன்று) தன்னால் கருத்துத் தெரிவிக்க முடியும். மாநகர சபையால் குறித்த சிலை புனரமைப்பதற்கான திட்டங்கள் இருந்தன. அது அவர்களால் இடிக்கப்பட்டதா அல்லது விசமிகளால் இடிக்கப்பட்டதா என்பது குறித்து இப்போது கருத்துக் கூற முடியாது என்றார்.

திருகோணமலையில் தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்டது. மட்டக்களப்பில் விவேகானந்தர் சிலை சேதப்படுத்தப்பட்டது போன்ற சம்பவங்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் மு.திருச்செல்வத்தின் சிலையும் உடைக்கப்பட்டுள்ளமை தமிழ் மக்களின் நினைவுச் சின்னங்களை அழிக்கும் செயற்பாடென சமூக ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் சன நடமாட்டம் மிக அதிகமாக உள்ள இடத்தில் இந்த சிலை உடைக்கப்பட்டது குறித்து மாநகர சபை இதுவரை எந்த நடவடிக்கை எடுத்ததாகவோ இது குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தவோ இல்லை.

(ங-10-17)

# வேறுபட்ட பஸ் கட்டணங்கள்

**பூநகரி முக்கொம்பன் வழியாகச் செல்லும் பஸ்கள் சீராக இயங்குவதில்லை.**

அக்கராயன், மார்ச் 18

மன்னாரில் இருந்து பூநகரி வழியாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ்களில் கட்டண வேறுபாடுகள் அதிகளவில் உள்ளதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் விலை யேற்றத்தின் பின்னர் தனியார் பஸ்கள் இவ்வழித்தடத்தில் பயணிக்கும்போது சில பஸ்களில் 60 ரூபாவும் சில பஸ்களில் 90 ரூபாவும் அறவிடப்படுகின்றன.

இதனால் உண்மையான கட்டணம் எதுவென்பது புரியாமல் பயணிகள் விழிக்கின்றனர்.

இதேவேளை பூநகரி முக்கொம்பன் வழியாகச் செல்லும் பஸ்கள் சீராக இயங்குவதில்லை.

இதனால் முக்கொம்பனில் இருந்து பூநகரிக்குப் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-18)

# யாழ். நகரில் ஆசீர்வாதப் பெருவிழா



இயேசு ஜீவிக்கிறார் ஊழியத்தின் 34 ஆவது வருட சுவிசேஷ மாநாடு யாழ். மாநகர சபை மைதானத்தில் (துரையப்பா மைதானம் அருகில்) நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகிறது. இன்றும் இந்த ஆசீர்வாதப் பெருவிழா மாலை 5 மணிக்கு நடைபெறும். நேற்று மைதானத்தில் கூடியிருந்தவர்களைப் படத்தில் காணலாம். (ஒ-4)

# கடைக்கு வந்த ஒருவர் லாவகமாக எடுத்துச் சென்றார் ரூ. ஒரு லட்சத்தை

## யாழ். நகரில் சம்பவம்; ஆசாமி பிடிபட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். ஸ்ரான்லி வீதியில் இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனை நிலையம் ஒன்றிலிருந்து ஒரு லட்சம் ரூபாவைத் திருடிச் சென்றவரை விற்பனையாளர்கள் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்தனர்.

அவரிடம் இருந்து பணம் மீட்கப்பட்டது. அவரை விற்பனையாளர்கள் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலத்திரனியல் உபகரணம் ஒன்றைக் கொள்வனவு செய்யச் சென்ற ஒருவரே அதற்கான பணத்தைச் செலுத்திவிட்டு பொருளுடன் கணக்காளரின் மேசையில் வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சம் ரூபா பணத்தையும் 'நைஸாக' எடுத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறி விட்டார்.

பணத்தைக் காணாமல் தடுமாறிய கணக்காளர், தேடுதலில் ஈடுபட்டபோதே வெளியே வீதியில் ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டிருந்த பிரஸ்தாபநபரை ஓடிச்சென்று பிடித்தார். (ஒ-4)

# தமிழகம் வரும் இலங்கை அதிகாரிகள் முன்கூட்டியே தகவல் அறிவிக்கப்படும்

## மன்மோகன் ஜெயலலிதாவுக்கு உறுதியளிப்பு

சென்னை, மார்ச் 18

தமிழ் நாட்டுக்கு இலங்கை அதிகாரிகள் பயணம் செய்ய இருப்பது குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் முதல்வர் ஜெயலலிதாவுக்கு உறுதியளித்துள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்திய பிரமருக்கு அனுப்பி இருந்த கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையிலே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அதிகாரிகள் தமிழகத்திற்கு வருகை தருவது தொடர்பாக மத்திய அரசினால் தமக்கு அறிவிக்கப்படுவதில்லை என தமிழக முதல்வர் ஜெயலலிதா சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன் காரணமாகவே, இலங்கை அதிகாரிகள் தமிழகத்திற்கு வருகை தரும் போது அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் இவற்றைக் கருத்திற் கொண்ட இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை அதிகாரிகளின் தமிழக பயணம் தொடர்பில் அறிவிக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

(ஒ-15)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (03.02.2012) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**நவரெத்தினம் சுரேஸ்கரன்**

காலமானதை அறிந்து அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (18.03.2012) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் 45 ஆம் நாள் நிறைவை முன்னிட்டு வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உதவி, ஒத்தாசை புரிந்த அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புது வீதி,
ஆறுகால் மடம்,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்
(மனைவி, பிள்ளைகள்)


# புறக்கணிப்பு

கிளிநொச்சி, மார்ச் 18

. கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் சுமார் ஆயிரத்து 50 வரையான குடும்பங்களுக்குச் சொந்தக் காணிகள் இல்லாததால் அவர்களுக் கான உதவித் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

இவர்களில் அனேகருக்கு வீட்டு வசதிகளோ அல்லது ஏனைய வசதிகளோ இது வரை வழங்கப்படவில்லை.

(க-6)

# பாடசாலையில் இராணுவம் அவலத்தில் மாணவர்கள்

கிளிநொச்சியிலுள்ள பாடசாலையொன்றை இராணுவத்தினர் தொடர்ந்தும் தமது பாவனைக்கென வைத்துள்ளதால் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தை இராணுவத்தினர் தொடர்ந்தும் தமது பயன்பாட்டில் வைத்திருப்பதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தினமும் நான்கு கிலோமீற்றர் தூரம் நடந்து வேறு பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியமர்ந்த நிலையில் மேற்படி பாடசாலையினைக் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் கற்றல் செயற்பாடுகளுக்கு நிர்வாகத்திடம் இராணுவத்தினர் ஒப்படைத்துதவுவதாக உறுதிமொழி வழங்கியிருந்தனர். ஆனால் இன்று இரண்டு ஆண்டுகளாகியும் பாடசாலை இதுவரை இராணுவத்தினரால் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவில்லை. இதனால் இந்தப் பாடசாலையை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் இந்தப்பாடசாலையில் கல்வி கற்க வேண்டிய சுமார் நானூறுக்கும் மேற்பட்ட மாணவர்களில் ஒரு தொகுதியினர் வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர். தற்போது இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் அயற் பாடசாலைகளான, பூநகரி மகாவித்தியாலயம் மற்றும் ஏனைய பாடசாலைகளுக்குக் கால்நடையாக நடந்து சென்று கல்வி கற்க வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

எனவே இந்தப்பாடசாலையை மீள ஆரம்பிக்கக் கூடிய வகையில் உரிய பாடசாலைக் கட்டத் தொகுதி மற்றும் அதன் வளாகத்தையும் இராணுவத்தினரிடம் இருந்து பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவுக்கு மின்சாரம் தொடர்ந்தும் இழுத்தடிப்பு

**தீவகம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம். அதிலும் மண்டைதீவு, அல்லைப்பிட்டி என்பன அபிவிருத்தியில் பின் நிற்கின்ற பிரதேசங்களாகும்.**

யாழ்ப்பாணம், மார்ச் 18
மண்டைதீவுப் பிரதேசம் மின் இன்றி இருளில் மூழ்கியுள்ளது எனத் தெரிவித்து இதுவரை 20 இற்கும் மேற்பட்ட கடிதங்களையும், மகஜர்களையும் வழங்கி விட்டோம்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும், எங்களுக்கு வாய் மூல உறுதிமொழி வழங்கிச் சென்றார். ஆனால் இதுவரை எதுவித முன்னேற்றமும் இல்லை.

இவ்வாறு வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் ஜெ.ஜெயரஞ்சன் தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர் ஜெ.ஜெயரஞ்சன் மேலும் தெரிவித்ததாவது:-

தீவகம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம். அதிலும் மண்டைதீவு, அல்லைப்பிட்டி என்பன அபிவிருத்தியில் பின் நிற்கின்ற பிரதேசங்களாகும்.

எந்த ஓர் அபிவிருத்தியையும், வேலைத்திட்டத்தையும், சிறுகைத்தொழிலையும் இங்கு மேற்கொள்வதாயின் மின்சாரம் மிக மிக அவசியமானது.

ஆனால் மண்டைதீவுக்கு மின்சாரம் வழங்குவதற்கு இலங்கை மின்சார சபையின் வடக்கு பிரதிப் பொது முகாமையாளர் ஏன் பின்னடிக்கிறார் என்பதுதான் தெரியவில்லை.

யாழ். நகரில் இருந்து கடலுக்கு ஊடாக மின் கொண்டு வருவதற்கு ஆய்வும், மதிப்பீடும் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் அப்படியான எதுவும் இது வரை இடம்பெறவில்லை.

கடந்த 22 வருடங்களுக்கு மேலாக மண்டைதீவுக் கிராமம் இருளில் மூழ்கியுள்ளது.

கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் மாகாண குறித்துரைக்கப்பட்ட நிதியூடாக 10 லட்சம் ரூபா இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டு மண்டைதீவுக்கு மின் வழங்குமாறு கோரப்பட்டது.

ஆனால் இது வரையும் அந்தப் 10 லட்சம் ரூபா மின்சார அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படவில்லையெனப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா எமக்கு அறிவித்துள்ளார்- என்றார். (த)

## பாடசாலைகளில் களஞ்சியம் அமைப்பதற்கு நடவடிக்கை

பருத்தித்துறை,மார்ச் 18
வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள 28 பாடசாலைகளுக்குக் களஞ்சியங்கள் அமைக்கப்படவுள்ளன.

உலக உணவுத் திட்டத்தில் மாணவர்களின் உணவுக்காக வழங்கப்படும் அரிசி, பருப்பு மற்றும் உணவுப் பொருள்களைப் பழுதடையாமல் பாதுகாக்கும் பொருட்டே இந்தக் களஞ்சியங்களை பாடசாலைகளில் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் களஞ்சியங்களை அமைப்பதற்கு 50 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரை பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளன. (எ-190)

## சாட்டியில் வசதிகளை ஏற்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 18
பல இடங்களில் இருந்தும் இப்போது புனித பிரதேசமான சாட்டிக்கு மக்கள் படையெடுத்து வருகின்றனர். எனவே சாட்டி அந்தியேட்டி கிரியை மடத்துக்கு உரிய வசதிகளைச் செய்து தாருங்கள்.

இவ்வாறு சாட்டி அந்தியேட்டி மடத் தலைவரும் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத் தலைவருமான க.மார்க்கண்டுதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் யுத்தம் காரணமாகச் சாட்டி புனித பிரதேசத்துக்கு வருவோர் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

தற்போது வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் இருந்து அந்தியேட்டி கிரியைகளை நிறைவேற்றுவதற்காகவும் சாட்டி கடற்கரைச் சூழலை ரசிப்பதற்காகவும், சாட்டி மாதாவைத் தரிசிப்பதற்காகவும் பெருமளவானோர் அங்கு வருகின்றனர்.

வேலணைப் பிரதேச சபை இந்தப் பகுதியில் தேவைகளை நிறைவு செய்து வருகின்றது. எனினும் அவை போதாமல் உள்ளன. மேலும் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தலைவர் கோரியுள்ளார். (த)

## யாழ். பஸ் நிலையத்தில் 'பிக்பொக்கட்' அடித்தார் பெண்

யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ். பஸ் நிலையத்தில் 'பிக்பொக்கட்' அடித்த பெண் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

யாழ். திருநகர் இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த பிரஸ்தாப பெண், யாழ். பொது நூலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவரிடம் 'பிக்பொக்கட்' அடித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் கடந்த புதன்கிழமை பிரஸ்தாப பெண்ணைக் கைது செய்தனர். ஒரு நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர் நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார் நீதிவான் மா.கணேசராஜா. (ஒ-4)




மூத்த சிறுகதை எழுத்தாளர் அநாதரட்சகனின் ''நிமிர்வு'' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது முதற்பிரதியை உதயன் பூட்வெயர்ஸ் உரிமையாளர் மா.புவனேந்திரன் பெற்றுக் கொள்கிறார். நடுவே தாயகம் ஆசிரியர் எஸ்.தணிகாசலம் காணப்படுகிறார். (த-8)

## கொழும்புத்துறையில் புதிய ஆலயம்

கொழும்புத்துறை, மார்ச் 18
கொழும்புத்துறை வளன்புரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புனித சூசையப்பர் ஆலயம் யாழ். ஆயரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் அமலமரித் தியாகிகள் குருமடத்துக்கு அண்மையில் உள்ள பழைமை வாய்ந்த சூசையப்பர் ஆலயம் குருமடத் தேவைக்கு பயன்படுத்தப்படவுள்ளதால் இப்பங்கு மக்களுக்கென புதிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய ஆலயத்திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறும். யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஆலயத்தை மந்திரித்து திறந்து வைப்பார்.

அதேவேளை ஆலயத்தின் வருடாந்த திருவிழா ஆயத்த வழிபாடுகள் கடந்த 15 ஆம் திகதி முதல் புதிய ஆலயப் பகுதியில் நடைபெற்று வருகின்றன.

இன்று மாலை 4.45 மணிக்கு நற்கருணைப் பெருவிழா நடைபெறும்.

நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொருப ஆசீரும் யாழ். ஆயர் தலைமையில் நடைபெறும். (த-135)

## கிராம சேவையாளர்கள் பற்றாக்குறையால் சிரமம்

**அங்கு 10 கிராம சேவையாளர் பிரிவுகளில் நீண்ட காலத்துக்குப் பின்னர் தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர்.**

பருத்தித்துறை, மார்ச் 18
மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 18 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ள போதிலும் 8 கிராம சேவையாளர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

இதனால் கிராம சேவை அலுவலர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில் பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கு 10 கிராம சேவையாளர் பிரிவுகளில் நீண்ட காலத்துக்குப் பின்னர் தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இந்த மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதிலும், கிராம சேவையாளர்கள் பணி செய்வதிலும் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராம சேவையாளருக்கான வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படாது விட்டால் மக்களுக்கான பணிகளில் மேலும் பாதிப்பு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-190)

## கெயர் நிறுவனத்தின் நிகழ்வு

கெயர் நிறுவனத்தின் அனுசரணையுடன் புத்தூர் கிழக்கு சொக்கதிடல் சரஸ்வதி சனசமூக நிலையத்தினூடான சமூக முன்னெடுத்தல் குழுவின் ஓராண்டு நிறைவு விழா கடந்த முதலாம் திகதி முன்னெடுத்தல் குழுவின் தலைவர் திருமதி த.சறோஜினி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகிழக்கு பிரதேச உதவிப் செயலர் செல்வி பிறேமினியும், சிறப்பு விருந்தினராக கெயர் சர்வதேச நிறுவனத்தின் 'லிவ்ற் திட்டம் 2' இன் திட்டப் பணிப்பாளர் திருமதி போனியட்டவராவும் கலந்து சிறப்பித்தனர். (த-288)

## பொது நூலகம் மக்கள் பாவனைக்கு

பருத்தித்துறை, மார்ச் 18
பருத்தித்துறை பிரதேச சபையின் மருதங்கேணி பொதுநூலகம் மீண்டும் பொதுமக்களின் பாவனைக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 வருடங்களாக இந்த நூலகம் செயலிழந்து காணப்பட்டது. மருதங்கேணிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்ததையடுத்து பருத்தித்துறை பிரதேச சபை மீண்டும் மருதங்கேணி பொது நூலகத்தை இயங்க வைத்துள்ளது.

கடந்த காலப் போரில் பொது நூலகத்தின் கட்டடங்கள் சேதமடைந்ததால் தற்போது நூலகம் பருத்தித்துறை பிரதேச சபையின் மருதங்கேணியிலுள்ள உப அலுவலகக் கட்டடத்திலேயே இயங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-190)

## அச்சுவேலி தொழில்பேட்டையில் 2000 பேருக்கு வேலை வாய்ப்பு

**யு.என்.ஓ.பி.எஸ் நிறுவனமும் இந்திய அரசும் கைத்தொழில் பேட்டைக்கு நிதி உதவி செய்வதற்காக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன**

யாழ்ப்பாணம், மார்ச் 18
அச்சுவேலியில் உள்ள கைத்தொழில் பேட்டை இயங்க ஆரம்பித்தால் உடனடியாக 2000 பேருக்கு வேலைகிடைக்கும். எனவே இந்தக் கைத்தொழில் பேட்டையை மீள உருவாக்குவதற்கு நிபுணர்கள், கல்விமான்கள், முதலீட்டாளர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி இவ்வாறு தெரிவித்தார்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:-

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை 65 ஏக்கரில் உள்ளது. இதில் 25 ஏக்கர் நிலம் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 33 உற்பத்தி அலகுகள் வெற்றிகரமாக செயற்படுகின்றன. தற்போது யு.என்.ஓ.பி.எஸ் நிறுவனமும் இந்திய அரசும் கைத்தொழில் பேட்டைக்கு நிதி உதவி செய்வதற்காக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் திட்டப் பணிப்பாளர் அஜித் எக்கநாயக்கா, இந்தியத் தூதரக அதிகாரி எஸ். சிறிகாந்தா, யுனொஸ் நிறுவன அதிகாரி அத்துக்கோறள, யுனொப்ஸ் நிறுவன பொறியியலாளர் எந்திரி ஏ.ஜெ. அஜந்தன், யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் ஆகியோருடன் முதலீட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த)

## 3 கோடி 82 லட்சம் பரிசாக கிடைத்தது

சங்கானை, மார்ச் 18
கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற மகாஜன சம்பத சீட்டிழுப்பின் மூலம் சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த விவசாயி ஒருவர் 3 கோடி 82 லட்சத்து 82 ஆயிரத்து 51 ரூபாவை பரிசாகப் பெற்றுள்ளார்.

இந்தச் சீட்டு தேசிய லொத்தர் சபையின் சங்கானை முகவர் கதிரேசு ஜீவகனிடம் பெறப்பட்டதாகும். சென்ற மாதமும் இந்த முகவரிடம் பெற்றுக் கொண்ட சீட்டு மூலம் சித்தங்கேணியைச் சேர்ந்த ஒருவர் 20 லட்சம் ரூபாவை வென்றமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைக்கிள்கள் அன்பளிப்பு

வடமராட்சி,மார்ச் 18

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் சமூகப்பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவிகளுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. குப்பிளான் மகாவித்தியாலயத்தில் கற்கும் மாணவி நிலக்சனா வசந்தகுமாருக்கு தமிழகப் பேராசிரியை முனைவர் விஜயலட்சுமி இராமசாமியும், துன்னாலை கிழக்கு குடத்தனையைச் சேர்ந்த மாணவி நிரோஜினிக்கு அதிபர் ஆ.சிவநாதனும் ஆச்சிரமத்தின் சார்பில் சைக்கிள்களை வழங்கினர்.

தொண்டமானாறைச் சேர்ந்த திருமதி கிறிஸ்டின் நாகம்மா என்பவருக்கு மலசல கூடம் அமைக்க ஒரு பகுதி நிதியாக 10 ஆயிரம் ரூபா ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது. (ம-8)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 - 09 - 1950 | 18 - 02 - 2012 |

### அமரர் செல்லையா கைலாயநாதன்

கடந்த 18.02.2012 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (19.03.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம் பெறவுள்ள அவரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து வருகை தந்து ஆறுதல் மொழி கூறியோருக்கும், மலர்வளையம் வைத்தும், கணணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியயோருக் கும், நோயுற்ற வேளையில் உதவி புரிந்த போதனா வைத்தியசாலை சமூகத்தினருக்கும் மேலும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

23, அம்மன் வீதி, கந்தர்மடம். குடும்பத்தினர்.

(15817) (6,10)


## குற்றச் செயல்கள்...

வடமராட்சி,மார்ச் 18

கைத்தொலைபேசியில் உரையாடியவாறு ஓட்டோவை செலுத்திச் சென்ற சாரதி ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் 8 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குள் கைத்தொலை பேசியில் பேசிக்கொண்டு ஓட்டோவை செலுத்திய சாரதி பருத்தித்துறை நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது சாரதி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து 8 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ம-8)

* * *

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் பொலிஸாரின் எச்சரிக்கையை மீறி வாகனம் செலுத்திய சாரதிக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. வீதிப் போக்குவரத்து கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸாரின் எச்சரிக்கையை மீறி வாகனத்தைச் செலுத்திச் சென்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சாரதி ஒருவர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனிடம் முன்னிலைப்படுத்தப்பட்டார். இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாரதி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் குறித்த தொகை அபராதமாக விதிக்கப்பட்டது. (ம-8)

## வன்னியில் தேடுதல்; விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மீட்பு

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகளும் இராணுவ உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா பிராந்திய குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போதே இந்த உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆர்.பீ.ஜீ. குண்டுகள், விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் துப்பாக்கிகளும் அடங்கியுள்ளன.

அடையாளம் காணப்படாத ஆயுதங்களின் பாகங்களும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன. பதவியா மற்றும் பாலம்பிட்டி ஆகிய பிரதேசங்களின் வரைபடங்களும் இந்த தேடுதலின்போது கண்டெடுக்கப்பட்டுள்ளன. (ஒ-15)


## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி நடராஜா

17.03.2012 பக்கம் 8இல் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் தவராசா (லண்டன்), இந்திரேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் என வாசிக்கவும்.

(C/9807) (6,10) குடும்பத்தினர்



## புதிய வகுப்புகள் ஆரம்பம்

Spoken English
IELTS / City & Guilds
Spoken Sinhala

Business Management
Marketing Management
Human Resource Management

Mobile Phone Repairing
Mass Media (Journalism)

Computer Hardware
Web Designing
MS - Office
DTP / Graphic Designing

Montessori Diploma Course
Diploma in Counseling & Psychology
Diploma in Child Psychology

அனைத்து பாடநெறிகளும் ஐக்கிய இராச்சியத்தின் பிரபல அமைப்பான UKAP(UK) ன் அங்கீகாரமான சான்றிதழ் வழங்கப்படும்

All our courses are Accredited by: UKAP (UK)
UKAP (UK) www.ukap.org.uk
Internationally Recognized Certificates

Apekz - 0777353427

10 வருட நம்பகமான சேவை

விண்ணப்ப முடிவு திகதி 31.03.2012
அரசாங்க வியாபார பதிவிலக்கம் PV67191

STUDY IN
UK, Canada, New Zealand, Cyprus, Malaysia, Singapore

ஆகிய நாடுகளில் உயர்கல்வி தொடர்வதற்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

வெளிநாடு சென்ற மாணவர்களின் புகைப்படங்களை நேரில் வந்து பார்வையிடலாம்.

GREENWICH COLLEGE
39, 3rd Lane,
Power House Road,
(மின்சார நிலைய வீதி),
Jaffna.

Head Office
GREENWICH COLLEGE (PVT) LTD
34, Galle Road, Dehiwala.
Tel : (011) 2713214, 2726237
E: info@greenwich.lk,
w: www.greenwich.lk

மேலதி விபரங்களுக்கு Mob: 0755091091 / 0777630708



# துஷாரியின் 90 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் 33ஆவது அகவை நினைவும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18.03.1979 | 23.12.2011 |

## அமரர் ஜீவானந்தன் துஷாரி



என்றும் இணைபிரியா நாயகியே! சோடியாய் ஒரு கூட்டுப் பறவை போல் கூடிக் குலாவி
எங்கும் சுற்றித் திரிந்து வந்தோம்!
யார் கண்பட்டதுவோ நான் உனைப்பிரிவதற்கு. கண்ணின் கருமணியே!
என் அருமை காதலியே நேசமுடன் பழகியதையும் உன் அழகிய வதனங்களிலும் கடமையும்
கண்டு ரசித்து வாழ்ந்தேன். என்னருமை தெய்வமே!
என்னை விட்டு எங்கு சென்றாயம்மா ஒரு கணம் நினைந்தால் என் மனம் வேகின்றதோ
நெஞ்சம் நின்று விடுகின்றதோ தெரியாமல் தவிக்கின்றேன் அம்மா!

ஈன்ற பொழுதில் உச்சி மோர்ந்து பால் நினைந்தூட்டி பட்டாடை உடுத்தி சீர்செய்து
பக்குவமாய் பாடசாலைக்கு அனுப்பி பாசமோடு நேசமுமாய்
காலம் தவறாது உணவு ஊட்டி வளர்த்தாய் அம்மா! பக்குவமாய் பற்பல பணிகள் செய்து
பாரினில் நாம் உயர்ந்திட வழிசமைத்து நின்ற தெய்வமே அம்மா இன்று உம்மை இழந்து
தவிக்கின்றோம் யாரம்மா எங்களுக்கு ஆறுதல் பாவிகளானோம் தாயே!

என் செல்வமே! கனியமுதே! உன்னை பெற்று வளர்த்து உன் உயர்வு கண்டு மனம் குளிர்ந்து
இருந்தேன். என் குடும்பத்தை இழந்தும் மகளே உன் ஆறுதலும் உனது அன்பு மொழியும்
கேட்டு என் அகம் குளிர்ந்திருந்தேன். இன்று உனை இழந்தேன் நான் பாவி மகளே! நான்
பாவியானேன் என் செய்வேன்.

மூத்த மகனின் முத்தான செல்வமென்றும், என்னருமை மருமகளே! அல்ல மகளே என்று
அருமையாய் அழைத்து ஆசைகொண்டேன் இன்று உம் பிரிவு எம்மால் தாங்க முடியாது
நிலைகொண்டு தவிக்கிறோம் அம்மா. இனி எங்கே! பாரினிலே [illegible] தாயே!
உன் 33ஆவது அகவையில் உன் நினைவு இழந்து வருந்தி [illegible] அம்மா!

  Registration No.: PV 71651
- **Partner Institution of Isles International University -**
  UK, Malaysia, Ireland, Kenya, St.kitts & Nevis
  License No. IIU/AF-SL/09-2001
  **Registered with the UK register of learning provider No :**
  UKPRN10027470 &
  SSM Reg. No. : 994097M
  Web: www.iiuedu.ac, www.iiuedu.org

BIS Department for Business Innovation & Skills

Listed with UK Government

- **Approved Center of Cambridge Association of Managers – UK**
  Listed in British Qualification
  (A complete guide of professional, vocational and academic qualification in UK)
  Year Book – 36th, 37th and 38th Edition.
  Web: www.cam-uk.org
- **Registered as a Higher Education Provider at**
  - Quality Assurance Commission UK
    Web:- www.qac-uk.org
  - Accreditation Syndicate for Education and Training – UK
    Web: www.aset.com.my
- **Listed in University Directory World Wide as an approved Institute of Isles International University UK**
  The Degree Certificates can be endorsed at, Ministry of Foreign Affairs Government of Malaysia, British High Commission Sri Lanka, and Ministry of Foreign Affairs Government of Sri Lanka


University Directory world wide

சர்வதேச தரம் வாய்ந்ததென்று எச் சந்தர்ப்பத்திலும் நிரூபித்துவரும் பட்டச்சான்றிதழ்கள் பற்றிய விபரம் ..










எமது மண்ணிலேயே பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து Degree Certificateயை வழங்கிவரும் தன்னிகரற்ற தனித்துவமான நிறுவனமாக எப்போதும் விளங்கிவரும்

# NORTH LANKA IIT

**#113, NAVALAR ROAD, JAFFNA. Phone: 021 567 7774**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

யாழ். பூநாரி மரத்தடியில் இரண்டு மாடி 4அறைகளுடன் அழகான வீடு வாடகைக்கு உண்டு. NGO / உத்தி யோகத்தர்கள் விரும்பப்படுவர். தொடர்பு: 0777 066 008

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

புத்தம் புதிய CBZ - XTREME BIKE கறுப்பு கலர்XH-xxxx விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0783258808

## மணமகன் தேவை

34 வயது நிரம்பிய வளர்ப்பு மகளுக்கு கிறிஸ்தவ மணமகன் தேவை
தொடர்பு : 021 3210804

## வாடகைக்கு

பல்கலைக்கழகத்துக்கு அருகில் சகல வசதிகளுடனான 2 அறை வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு : 077 314 4593

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள NP MF - xxxx சுப்பர் கப் மோட்டார் சைக்கிள், 200 - xxxx பச்சைநிற ஆட்டோ ஆகியன விற்பனைக்கு உண்டு.
T.P : 077 5925488 (15783)(9-7-8)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1975 பூராடம் 3 ஆம் பாதம் செவ்வாய் குற்றம் அற்ற இலக்கினத்தின் இராகு உச்சம் 7 இல் கேது அமையப் பெற்ற ஜாதகம், அரச பாடசாலை ஆசிரியை BA . Science Trained இளமைத் தோற்றமுடைய அழகிய மகளுக்கு பெற்றோர் தகுந்த, எந்த வித தீயபழக்கமற்ற மணமகனை உள்நாட்டில் எதிர்பார்க்கிறார்கள் உங்கள் ஜாதகக் குறிப்பு சகல விவரங்ளுடன், கிரகநிலை நவாம்சநிலை பிறக்கும் போது இருப்பு மகாதிசையுடன் பொருத்தம் பார்த்த பின்பு உங்கள் விவரங்களை திருப்பி அனுப்புவோம்.

தொடர்பு : 077 4887531
விளம்பர இல : 4237
மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (15785)(9-7-8)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
# அருமைநாயகம் ஆமோஸ்

மலர்வு
09 ★ 02★ 1951



உதிர்வு
18★ 03★ 2006

சிலுவை மொழி பேசி
சிறகடித்த எம் தெய்வம்
சிறகுடைந்த இந் நாளில்
ஆத்ம சாந்திக்காய்.

ஆமோஸ் மில்,
தர்மபுரம். (15744) (2-6-7) - குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் றோட், உடுப்பிட்டியில் தோறணப்புளியடி நிலப்பரப்பு 4 விஸ்தீரணம் கொண்ட காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0773224335

## மணமகன் தேவை

தென்மராட்சி உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 ஆம் ஆண்டு லக்கினத்தில் செவ்வாய் அவிட்டம் 4ஆம் பாதம், கும்பராசி பாவக்கிரகம் 21. கொழும்பு தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மகளுக்கு பெற்றோர் வெளிநாட்டில் பணிபுரியும் PR உள்ள இலங்கை வந்து திருமணஞ் செய்யக் கூடிய மணமகனை எதிர் பார்க்கின்றனர்.

மாலை 4 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும் : 0779884205

## மரண அறிவித்தல்



# செல்லத்துரை சிவஞானம்

ஏழாலை வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை சிவஞானம் 16.03.2012 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நல்லம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகனும் சகுந்தலா தேவியின் அன்புக்கணவரும், கோகிலகீர்த்தன் (மாணவன் யா/ஏழாலை மகாவித்தியாலயம்), துவாரகன் (மாணவன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் பார்வதிதேவி (ஆசிரியை யா/ஏழாலை மகாவித்தியாலயம்), புஸ்பராணி , சிவபாதம், சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும் தங்கேஸ்வரன், மகேஸ்வரன், ஜெயரூபன், சிவனேசன், சுமதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பட்டுவன் வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை (15801)(6-7-8)

தகவல்:
குடும்பத்தினர்

## வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) மருதங்கேணி

### பதவி வெற்றிடம்

சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 15.04.2012 இக்கு முன்னராக தமது பெயர், முகவரி, வயது, கல்வித் தகைமை, மேலதிக தகைமை, அனுபவம் என்ப வற்றைக் குறிப்பிட்டு "பொது முகாமையாளர், வடமராட்சி கிழக்கு ப.தெ.வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மருதங்கேணி" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூல மாகவோ அல்லது நேரிலோ விண்ணப்பிக்கலாம். பூரண விவரங்களைக் கொண்டி ராத விண்ணப்பங்களும், முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப் பங்களும் நிராகரிக்கப்படும்.

**01. பதவி : விற்பனை உதவியாளர்**

குறியீட்டு இல: 308/17
சம்பள அளவுத் திட்டம் : 8950-65x10-70x10-10300
(66/2006 இன் படி)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஸ்ர தரச் சான்றிதழ் அல்லது
ஆ) 08ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவலகளுடன் தொடர்புடையதான (03) மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**02. பதவி: கணக்குப் பதிவாளர்**

குறியீட்டு இல: 301/13
சம்பள அளவுத் திட்டம் : 9950-85x10-90x10-11700
(66/2006 இன் படி)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
அ) கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத்திட்டக் கணக்குப் பதவியொன்றில் (02) இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது
கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்டக் கணக்குப் பதவியொன்றில் (04) நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது
ஆ) க.பொ.த (சாதாரண) தரம் கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட (05) ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி யுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (06) ஆறு பாடங்களில் சித்தியும், கூட்டுறவுச் சங்கமொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றின் (02) இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**03. பதவி : எழுதுநர்**

குறியீட்டு இல: 302/16
சம்பள அளவுத் திட்டம் : 9200-70x10-75x10-10650

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
அ) க.பொ.த (சாதாரண) தரம் கணிதம், வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (06) ஆறு பாடங்களில் சித்தி.

மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை 21-45 இற்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் பணி புரிவோருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. சங்கங்களில் பணிபுரிவோர் அச் சங்கங்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும். (15851) (10)

வடமராட்சி கிழக்கு,
ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
மருதங்கேணி.

வே. [illegible]
பொது முகாமையாளர்
0214913754/0771020417

## வகுப்புக்கள் ஆரம்பம்

German Deutsch எம்பசியில் நடாத்தப்படும் பரீட்சைக்கான டொச் மொழிபாடவகுப்பு ஆசிரியரால் தமிழ் விளக்கத்துடன் கற்பித்து சான்றிதழ் இலகுவாக பெற ஏற்பாடு செய்து தரப்படும். அடுத்த பிரிவு ஆரம்பம்
464 Hospital Road, Jaffna College 072 4847109

## காணி விற்பனைக்கு

உடுவில், முருகமூர்த்தி லேன் முதலாம் ஒழுங்கை ஆலடி மில்லின் பின் உள்ள 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
தொ.பே. 0776218319, 0770454137

## விற்பனைக்கு

8 வருடமாக ஒரே கைப்பாவனை யில் உள்ள NP JT xxxx தொடர் இலக்கம் உள்ள பச்சை நிற Batch Model Super cup Lancer 50 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0772002442

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய் யக்கூடிய 48 வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை.
சம்பளம்:- ரூபா 10,000
தொடர்பு: 021 7900637

## கடை வாடகைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்குச் சந்தியில் சகல வசதிகளுடனும் கூடிய கடை வாடகைக்கு உண்டு. 35 அடி நீளம், 10 அடி அகலம்.
(15766)(9-7-8) தொடர்பு : T.P. 077 7250900

## வீடு விற்பனைக்கு

பிறவுண் வீதிக்கண்மையில், நீராவியடியில் 2 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள தனிக்கிணறு உட்பட சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு
தொடர்பு:- 0770871721

## வேலைக்கு ஆள்கள் தேவை

ராஜா பான்ஸிக்கு வேலையாள்கள் தேவை. (இருபாலாரும் விரும்பத் தக்கது)
153, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில், கதிரிப்பாய் கிராமசேவகர் பகுதியில், இடைக் காடு வளலாய் பகுதியிலிருந்து அச்சுவேலி செல்லும் வீதி ஓரமாக ஐந்து (05) பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விலை பரப்பு 2½ இலட்சம்.

[illegible] 0772811105 அல்லது [illegible] என்னும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## வீடுவளவு விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு, இல. 075 பண்டார மடலேனில் 4 பரப்புடன் வீடு வளவு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 3815579
மாலை 4.00 மணிக்கு பின்

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு, அளம்பிலில் உள்ள உடுப்புக்குளம், 5 ஆம் கட்டைப் பகுதியில் முல்லைத்தீவு புல்மோட்டை திருகோணமலை பிரதான காப்பெற் வீதியில் 11 ஏக்கர் தென்னந்தோட்டக் காணி உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்புகளுக்கு:- 0774912596

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## லொறி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Mitsubishi Canter No 43 xxxx லொறி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0778210166, 0779994912

## கணினி அறிவுடையோர் தேவை

கைதடியில் உள்ள லங்கா எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கணினியைக் கையாளக்கூடிய தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது. விண்ணப்பங்களை 26.03.2012 ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
முகாமையாளர் லங்கா எரிபொருள் நிலையம், கைதடி.

## வேலை வாய்ப்பு

கிறில், கேற் செய்யக்கூடிய வெல்டர் தேவை. மற்றும் வேலை பழக விருப்பம் உள்ளவர்களும் தேவை. நேரில் வரவும்.
லிங்கோ நுண்பட்டறை,
109, சட்டநாதர் வீதி, நல்லூர்.

## காணி விற்பனைக்கு உண்டு

மருதனார் மடத்தில் இருந்து உரும்பிராய்க்குச் செல்லும் வீதியில் சேவிஸ் ஸ்ரேஸனுக்கு (Service Station) முன்பாக செல்லும் ஒழுங்கையில் நன்கு பயன்படுத்தப்பட்ட நிலையில் தனிக் கிணறு, சிமெந்து கட்டடத்துடன் கூடிய 13 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:- 0777852864

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 60

## இறப்பும் இறப்பை எதிர்கொள்ளலும்

மரணம் என்பது அனைத்து மனிதர்களின் மனதிலும் மறைபொருளாகக் காணப்படும் ஓர் உண்மைத் தத்துவமாகும். மரணம் அல்லது இறப்பு என்னும் பதம் வார்த்தைகளாகக் கூடத் தவிர்க்கப்படுவதை நாம் அறிவோம். இந்தப் பிரபஞ்சத்தில் தோன்றும் அனைத்து உயிர்களும், தமது பிறப்பின் மூலம், தான் சார்ந்தவர்களை மகிழ்வித்து, புதியவராக அறியப்பட்டாலும் அவர்களுக்கு இறப்பு என்ற ஒன்று உண்டு என்பது உணர்வுகளின் அடித்தளத்தில் புதைக்கப்பட்ட உறங்குநிலைப் பொருளாகக் கொள்ளப்படும். இந்த உண்மையை மறந்தும் கூட மீட்டுப் பார்க்க எம் மனம் இசைவதில்லை. ஏனெனில் இழப்புக்கள் பல வகையினதாகக் காணப்படுவது போன்றே இழப்பின் பெறுமதியும் மாறுபட்டுக் காணப்படுகின்றது. இதை முதுமையின் வெளிப்பாடாக மட்டும் கொள்ளப்பட முடியாது. ஏனெனில் எவ் வயதினரிலும் ஏற்பட வாய்ப்புண்டு.

### இறக்கும் தறுவாயிலுள்ள நோயாளிகளின் உரிமைகள்

ஒருவர் இறப்பை ஏற்றுக்கொண்டு எதிர்நோக்கிக் காத்திருக்கும் போதாயினும் சரி திடீரென இறக்கும் நிலையை அண்மிப்பாராயினும் சரி, அவரும் எல்லா உரிமைகளையுமுடைய தனி மனிதரே. இந்த உரிமைகள் அவரின் தனித்துவத்தையும், அமைதியான மரணத்தையும் நிச்சயப்படுத்திக் கொடுக்க உதவும் எனினும், இதன் நடைமுறை சம்பந்தமாக எமது வைத்தியசாலைக் கட்டமைப்பில் பெரிய இடைவெளியே காணப்படுகின்றது. இதற்குப் பல கோணங்களில் காரணங்களை நோக்கலாம். எனினும் இது சம்பந்தமான அறிவு எமது சமுதாயக் கட்டமைப்புக்கு முழுமையாக சென்றடையாமை மிகப்பெரும் பிரச்சினைகளில் ஒன்றாகும். சமூகம் விழிப்படைந்து தமது உரிமைகளைப் பாதுகாக்க விளையின் அது பராமரிப்பின் தராதரத்தையும் உத்தியோகத்தின் மாண்பையும் உயர்த்த வழிகோலுவதுடன், தேர்ச்சியான பராமரிப்பைப் பெறவும் வழி வகுக்கும். மறுதலையாக சேவையில் அல்லது பராமரிப்பில் உள்ளவர்கள் எந்தளவுக்கு அவரின் உரிமைகளைத் தெரிந்து மனித விழுமியங்களின் பெறுமதியை மதித்து பராமரிப்பளிக்கும் நிலையிலுள்ளார்கள் என நோக்கின், அது ஆய்வுக்குரிய பொருளாகக் கொள்ளப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத உண்மையாகும்.

அவர்களின் உரிமைகள் எவை என்பதை அதை எதிர்நோக்கியிருப்பவரின் கருத்தூன்றலில் தருகிறார் A.J.Barbus (1975) என்னும் ஆராய்ச்சியாளர்.

1. நான் இறக்கும் வரை உயிருள்ள ஒருவருக்கு சிகிச்சை அளிக்கப்படுவது போன்றே பராமரிக்கப்படும் உரிமையையும் கொண்டிருக்கிறேன்.
2. என் சம்பந்தமாக மாறுபட்ட அவதானங்கள், முடிவுகள் காணப்பட்டாலும், எதிர்பார்ப்புக்களைப் பேணும் உணர்வைக் கொண்டிருக்கின்றேன்.
3. என்னைப் பராமரிப்பவர்கள் என் சம்பந்தமாக நேரான எதிர்பார்ப்புக்களுடனான உணர்வுகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இவ்வுணர்வு மாற்றப்பட வேண்டிய ஒன்றாகக் கூட இருக்கலாம்.
4. நான் இறப்பை அண்மிக்கும் போது, எனக்கு விருப்பமான எனக்கே உரித்தான முறையில் எனது உணர்வு மனவெழுச்சிகளை வெளியிடும் உரிமை.
5. எனது பராமரிப்பு சம்பந்தமான அனைத்து முடிவுகளிலும் கருத்துக்களைத் தெரிவித்து அதில் பங்கெடுக்கும் உரிமை.
6. என்னைக் குணப்படுத்தல் என்னும் இலக்கு எனக்கு சௌகரியமளித்தல் என்பதாக மாற்றப்பட்டாலும், நான் தொடர்ச்சியாக மருத்துவ, தாதிய அவதானங்களையும், பராமரிப்பையும், பெறும் உரிமையுடையவன்.
7. நான் இறக்கும் தறுவாயில் தனியாக அல்லாது எனக்கு வேண்டிய அல்லது அக்கறையுடைய ஒருவரின் பிரசன்னத்தின் முன் இறக்கும் உரிமையுடையவன்.
8. நான் இறக்கப்போகும் ஒருவராயினும் என்னைத் துன்புறுத்தும் வலி இல்லாமல் சௌகரியமாக இருக்கும் உரிமை.
9. என்னால் கேட்கப்படும் சகல வினாக்களுக்கும் நேர்த்தியாக நேர்மையான பதிலைப் பெற்றுக்கொள்ளும் உரிமை.
10. என்னை மற்றவர்கள் இழிவுபடுத்தாமல் இருப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளேன்.
11. நான் இறப்பை ஏற்றுக் கொள்ளும் படி நிலையில் குடும்பத்தினரின் உதவியைப் பெற்றுக் கொள்வதுடன் அவர்களும் ஏனையோரின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் உரிமையையும் கொண்டுள்ளனர்.
12. நான் அமைதியாகவும் தனித்துவத்துடனும் இறக்கும் உரிமையுடன் உள்ளேன்.
13. நான் எனது தனித்துவத்தையும், தனித் தன்மையையும் பேணுவதுடன் எனது தீர்மானங்களை மற்றவர்கள் விமர்சிக்காமல் இருக்கும் உரிமை உடையவன். இந்த முடிவு சில சமயம் பிழையான நம்பிக்கையாகக் கூட இருக்கலாம்.
14. நான் எனது சமய, ஆன்மிக ரீதியான அனுஷ்டானங்களை விரிவுபடுத்தவும், கடைப்பிடிக்கவும் உரித்துடையவன். இது மற்றவர்களால் ஏற்க முடியாததொன்றாகக் கூட இருக்கலாம்.
15. எனது இறப்பின் பின்னரும் எனது உடற் பாகங்கள் சிதைக்கப்படாமல் மதித்துப் பேணப்பட வேண்டிய உரிமையுண்டு.
16. நான் மிக அமைதியான மரணத்தை அடைய எனது தேவைகளைப் புரிந்து கொள்ளக் கூடிய, எனக்கு மனத் திருப்தியை ஏற்படுத்தக் கூடிய, மிகவும் அறிவுள்ள, அனுபவமுள்ள, தேர்ச்சியான மருத்துவக் குழு அங்கத்தவர்களைப் பராமரிப்புக்குப் பெற்றுக்கொள்ளும் உரிமையுண்டு.

வைத்தியசாலையிலுள்ள ஒவ்வொரு சிகிச்சை பெறுநரும் பல உரிமைகளைக் கொண்டுள்ள தனித்துவமான தனி நபராவார். அதேபோலவே வாழ்வின் அஸ்த மனத்தில் தவித்துக் கொண்டிருப்போரும் பல உரிமைகளைக் கொண்டிருப்பது மருத்துவக் குழுவின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் தெரியாமல் இருக்க முடியாது. இந்த உரிமைகளை மதித்துப் பாதுகாத்து கடைப்பிடிப்பது எமது கடமையேயன்றி சட்டத்திற்குள் கொண்டு செல்லப்பட வேண்டிய ஒன்றல்ல. இதை நாம் பாதுகாக்கத் தவறின் நாம் எமது கடமையிலிருந்து பிறழ்வுபட்டுக் கடமையை மீறியவர்களாகக் கருதப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆவோம்.

இதற்கான சூழலை ஏற்படுத்தாமல் பாதுகாத்தல் பராமரிப்புக் குழுவின் மிக முக்கிய அங்கத்தவரான தாதிய உத்தியோகத்தரின் கடமையே. ஏனெனில் விடுதியில் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அவர்களின் பாதுகாப்பிலேயே உள்ளார்கள். விடுதியை நிர்வகிக்கும் போது தங்களின் பாதுகாப்பிலும் முழுப்பொறுப்பிலும் விடப்பட்டுள்ள அனைவருக்கும் பொறுப்புக் கூறுபவராக நாம் இருக்க வேண்டும். உரிமைகள் மதிக்கப்படும்போது மனித விழுமியங்களின் பெறுமதியும் உயர்வு பெற்றுச் செல்லும்.

S.[illegible]
தாதிய போதனாசிரியர்
தாதியர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## சமவிகித உணவு (Balanced diet)

சமவிகித உணவு என்பது நான்கு பிரதான உணவு வகைகளான பழங்கள், மரக்கறி வகைகள், காபோஹைதரேற்று உணவுகள், நார்ச்சத்துள்ள உணவுகள் என்பவற்றை அதிகளவிலும் ஐந்தாவது உணவு வகையான கொழுப்புணவுகள், இனிப்புப் பண்டங்கள், உப்பு அதிகம் உள்ள பைக்கற்றில் அடைக்கப்பட்ட உணவுகளை சிறிய அளவிலும் கொண்டிருக்க வேண்டும்.

தனியே ஒரு வகை உணவை உண்ணும்போது அதில் எமது உடலுக்குத் தேவையான சக்தியோ எல்லா வகையான ஊட்டச் சத்துக்களோ கிடைக்காது. எனவே சமவிகித உணவை உண்பதே ஆரோக்கியமானதாகும்.

சம விகித உணவில் இருக்க வேண்டிய உணவு வகைகளும் அவற்றை என்ன அளவில் உட்கொள்ள வேண்டும் என்பதும் கீழே தரப்பட்டுள்ளன.

### 1. மாப்பொருள் உணவுகளும் தானியங்களும்

ரொட்டி, உருளைக்கிழங்கு, சோறு, நூடில்ஸ், தானிய வகைகள் என்பன இதில் அடங்கும்.

இவை எமது ஒவ்வொரு பிரதான உணவு வேளையிலும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். உணவு கோப்பையின் மூன்றிலொரு பங்கை நிரப்பக் கூடியதாக இருக்கலாம். அவற்றில் காபோஹைதரேற்று, நார்ப்பொருள், விற்றமின் B என்பன அதிகளவில் காணப்படும். இவற்றினுள் நார்ச்சத்து அதிகமுள்ள உணவுகளான தீட்டாத அரிசி, முழுத்தானியங்கள் என்பன விரும்பத்தக்கன.

### 2. பழங்கள் மற்றும் காய்கறிகள்

எல்லா வகையான பழங்களும் காய்கறிகளும் இதில் அடங்கும். அத்துடன் தகரத்தில் அடைக்கப்பட்ட உலர்த்திய பழங்கள், சுவையூட்டப்படாத பழச்சாறு என்பனவும் உள்ளடங்கும் இவை நார்ச்சத்து, விற்றமின்கள், கனியுப்புக்கள் என்பவற்றை அதிகளவில் கொண்டிருக்கும்.

ஒரு நாளைக்கு 5 பரிமாறல்கள் உண்ணலாம். ஒரு பரிமாறலின் அளவு- ஒரு அப்பிள் துண்டு/ ஒரு சிறிய கிளாஸ் பழச்சாறு/ 3 மேசைக்கரண்டி மரக்கறி.

### 3. பால் மற்றும் பாற்பண்டங்கள்

பால், சீஸ், யோக்கட் என்பன இதிலடங்கும். இவற்றிலும் கொழுப்பு குறைந்த உணவுகளான ஆடை நீக்கிய பால், கொழுப்பற்ற யோக்கட் என்பவற்றைத் தெரிவு செய்யலாம். இவற்றில் புரதம், விற்றமின்கள், கனியுப்புக்கள் பிரதானமாக கல்சியம் அதிகளவில் காணப்படுகின்றன. ஒரு நாளைக்கு 2-8 பரிமாறல்கள் உள்ளெடுக்கலாம். ஒரு பரிமாறலின் அளவு-ஒரு கிளாஸ் பால், தீப்பெட்டியளவு சீஸ்.

### 4. இறைச்சி, மீன் வகைகள்

இறைச்சி வகைகள், மீன்கள், முட்டை என்பன இதிலடங்கும். இவை புரதச்சத்து, விற்றமின்கள், கனியுப்புக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். ஒரு நாளைக்கு 2 பரிமாறல்கள் உள்ளெடுக்கலாம். ஒரு பரிமாறலின் அளவு - 1 முட்டை, 2. சிறிய துண்டு மீன்.

### 5. கொழுப்புணவுகளும், இனிப்புப் பண்டங்களும்

எண்ணெய் வகை, கேக், பிஸ்கட், புடிங்ஸ், கிறீம், சீனி, குளிர்பானங்கள், ஸ்னாக்ஸ்(snacks) என்பன இதிலடங்கும். இவற்றை எப்போதாவது (occasionally) உண்ணலாம். அதிகளவில் உள்ளெடுப்பது உடற் பருமனாதலை ஏற்படுத்தும்.

உங்கள் சமவிகித உணவை ஆரோக்கியமுள்ளதாக்க மேலும் சில குறிப்புகள்:-

-மீன்களை அதிகளவில் உண்ணுங்கள். எண்ணெய் மீன்களான salmon, sardine, mackeral,tuna என்பவற்றில் ஒமேகா -3 (omega-3) கொழுப்பமிலம் அதிகளவில் உள்ளது. இது இதயத்தை ஆரோக்கியமாகப் பேணும்.

- நிரம்பிய கொழுப்பமிலம் உள்ள பட்டர், கிறீம், பேஸ்ரி என்பன இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவை அதிகரிக்கும். எனவே இவற்றை மிகக் குறைந்தளவிலேயே உள்ளெடுக்கவும்.

- நிரம்பாத கொழுப்பமிலம் உள்ள சூரிய காந்தி எண்ணெய் ஒலிவ் எண்ணெய், போன்றவற்றை சமையலுக்கு உபயோகிக்கவும்.

- உப்பு 6 கிராமுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். அதிகளவில் உப்பு உள்ளெடுப்பது உயர் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தலாம். சூப், சோஸ், ஸ்னாக்ஸ், பீஸா (pizza) போன்றவை அதிகளவில் உப்பைக் கொண்டிருக்கும் எனவே இவற்றை அதிகளவில் உண்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

-போதுமான அளவு நீர் அருந்துங்கள்.

- பிரதான உணவு வேளையில் உணவுகளைத் தவறவிட வேண்டாம். உணவு உள்ளெடுக்காமல் விடுவதன் மூலம் உடல் நிறையைக் குறைக்கலாம் எனப் பலர் எண்ணலாம். ஆனால் தவறவிட்ட உணவை ஈடுசெய்வதற்காக நாம் அடுத்தவேளை உணவை அதிகளவிலேயே உள்ளெடுக்கிறோம்.

அத்துடன் பசி எடுக்கும்போது பைக்கற்றில் அடைக்கப்பட்ட உணவுகளை அதிகம் உண்கிறோம். இவற்றில் அதிகளவு கலோரிகள் இருப்பதால் உடல்நிறை அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது.

Dr.த.கார்த்திகா
நீரிழிவுச் சிகிச்சை நிலையம்
யாழ். போதனா வைத்தியசலை.

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது மக்களுக்கான அறிவித்தல்

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(29.02.2012 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
3. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. கபீப் பாங்க் லிமிடெட்
10. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
15. டொயிச் பாங்க் ஏஜி
16. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
17. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
18. த கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
19. பப்ளிக் பாங்க் பேர்காட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
24. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
6. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
7. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
8. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் பிஎல்சி
9. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
10. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
11. கப்பிட்டல் எலையின்ஸ் பினான்ஸ் பிஎல்சி
12. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
13. கொமர்சல் லீசிங் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
14. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
15. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
16. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
17. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
18. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
19. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
20. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
21. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
22. சொவ்றிலொயிக் பினான்ஸ் பிஎல்சி
23. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
24. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
25. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. த ஸ்ரான்டட் கிறடிற் லங்கா லிமிடெட் (*)
27. திவச பினான்ஸ் லிமிடெட்
28. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
29. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
30. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் பிஎல்சி
31. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
32. பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
33. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
34. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
35. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
36. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
37. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
38. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
39. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
40. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் கண்காணிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களும் மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்பினர்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளன.
- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk
நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: [illegible]@cbsl.lk





நல்லூரில்..... 526,529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 1723.

யாழ்.நகரில்..... 770, 772, கே.கே.எஸ்.வீதி, (தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 0421. பக்ஸ்: 222 0421.

வடமராச்சியில்..... இல.171, பிரதான வீதி, நெல்லியடி, (சம்பத் வங்கிக்கு அருகில்) தொ.பேசி: 021 226 2992.




தொடர்புகளுக்கு திரு. பாஷில் 0773075068

ரகீப் இன்ரநஷனல் (தனி) நிறுவனம்
No: 743/20, கடுவல வீதி, தலங்கம வடக்கு, பத்தரமுல்ல
Tel: 011-2789214 Fax: 011-2790499


## மரண அறிவித்தல்

## மார்க்கண்டு நாகையா

*(முன்னாள் கிராம சபை உறுப்பினர் உடுவில்)*



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட மார்க்கண்டு நாகையா (15.03.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நாகமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான செல்லையா - சீனிக்குட்டி தம்பதியரின் அருமை மருமகனும், மனோன்மணி யின் பாசமிகு கணவரும் நவரத்தினம், காலஞ்சென்றவர்களான யோகநாதன், நல்லையா மற்றும் செல்வராணி ஆகியோ ரின் அருமைச் சகோதரனும், கிருபாகரன் (மது வரித்திணைக்களம், யாழ்ப்பாணம்), சந்திரவதனா (பிரான்ஸ்), கலையரசன் (இந்தியா), கலையரசி (கொழும்பு), ரவிச் சந்திரன் (விவசாயக் கல்லூரி - வவுனியா), செந்தில் நாதன் (ஆசிரியர் - கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாசாலை), அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜியா, தயாபரன் (பிரான்ஸ்), சுதர்சினி (இந்தியா), ரவீந்திரகுமார் (Free lanka granite (pvt) Ltd, கொழும்பு), கலை வாணி (பிரதேச செயலகம் - வவுனியா), தயாளினி (இணுவில் இந்துக்கல்லூரி), ஆகியோரின் மாம னும் காலஞ்சென்றவர்களான நடராசா, சண்முகநாதன் மற்றும் செல்வரத்தினம், இராஜேஸ்வரி, லோகநாதன், கனகமணி, முருகையா, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சரவணன், சேந்தன், கௌசிகன், ஆதித்தியன், சாதித்தியன், நாதங்கி ஆகி யோரின் அன்புமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கௌசிசேந்தகம்,
[illegible] வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
நா. கிருபாகரன்
(மகன்)

(15854)(2-7-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். விலகிச்சென்ற உறவினர்கள் சிலர் தாமாக வந்து பேசுவார்கள். மாறுபட்ட அணுகு முறையால் பழைய சிக்கல்களுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புதிய தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் இழந்த உரிமையைப் பெறுவீர்கள். திடீர் திருப்பம் ஏற்படும் நாள்.

**இடபம்:** பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். அயலில் இருப்பவர்களை அனுசரித்துப் போகவேண்டும். முன்கோபத்தால் பகை உண்டாகும். வியாபாரத்தில் மிகுதிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் உங்களைப்பற்றி வதந்திகள் வரும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**மிதுனம்:** மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். மனதிற்கு இதமான செய்திகள் வரும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்புக்கு பாராட்டுக் கிடைக்கும்.தொட்டது துலங்கும் நாள்.

**சிங்கம்:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் ஆதாயமும் உண்டு. நீண்டநாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி:** எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத் தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

## நாளை

பங்குனி 06 திங்கட் கிழமை 19.03.2012
திதி: துவாதசி மு.இ 06.43 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.ப 07.39வரை
சுபநேரம்: 12.18- 01.48 வரை,
ராகு காலம்: 07.48 - 09.18 வரை

**துலாம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளால் புகழ், கௌரவம் உயரும். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**விருச்சிகம்:** கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் பின்னரும். அழகு, இளமை கூடும். நட்பால் ஆதாயம் உண்டு. கடனாகக் கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத் தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்யோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**தனுசு:** ஒரே முயற்சியில் முடிக்க வேண்டிய விடயங்களை பல முறை அலைந்து முடிப்பீர்கள். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். வாகனத்தை இயக்கும் முன் எரிபொருள் இருக்கிறதா எனப் பார்த்துக்கொள்ளுங்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். உத்தியோகத்தில் பொறாமை அதிகரிக்கும். சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**மகரம்:** பழைய கசப்பான சம்பங்கள் நினைவுக்கு வரும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. உடல் நலத்தில் கவனம் தேவை. யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியரின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டிவரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோரின் ஆதரவுக் கிட்டும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் ஆர்வம் பிறக்கும். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். சவாலில் வெற்றி கிட்டும் நாள்.

**மீனம்:** எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை வரும். உறவினர்கள்,நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நீண்ட நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு லாபம் காண்பீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | 9 | | 2 | 6 | 5 |
| | | | | 5 | 4 | 8 | | 9 |
| 2 | | | 1 | 6 | | 4 | | |
| 7 | | 5 | | | 1 | | 3 | |
| | | | | | | | | |
| | 6 | | 8 | | | 7 | | 4 |
| | | 6 | | 4 | 7 | | | 1 |
| 5 | | 1 | 9 | 8 | | | | |
| 3 | 4 | 7 | | 1 | | 6 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 6 | 8 | 3 | 5 | 7 | 1 | 9 |
| 7 | 3 | 5 | 6 | 1 | 9 | 4 | 8 | 2 |
| 9 | 8 | 1 | 2 | 4 | 7 | 3 | 5 | 6 |
| 8 | 1 | 4 | 7 | 6 | 2 | 5 | 9 | 3 |
| 5 | 7 | 9 | 4 | 8 | 3 | 6 | 2 | 1 |
| 2 | 6 | 3 | 9 | 5 | 1 | 8 | 7 | 4 |
| 1 | 5 | 8 | 3 | 2 | 4 | 9 | 6 | 7 |
| 6 | 4 | 7 | 1 | 9 | 8 | 2 | 3 | 5 |
| 3 | 9 | 2 | 5 | 7 | 6 | 1 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி, வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரிலிருந்து மைல் தூரத்தில் கைதடி A9 றோட்டில் அரசாங்க டிஸ்பென்சறி, வயோதிபர் இல்லத்தின் எதிர்புறத்தில் குறுக்கு றோட்டில் (2ஆவது வீடு) நல்ல தண்ணீர் கிணற்றுடன் 4 பரப்புகாணியில் 4 அறைகளுடன் பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.

0112586435, 0772963496

## வாடகைக்கு தேவை

யாழ்.மாவட்டத்தில் பொருள்களை விநியோகிப்பதற்கு (Body) அடித்த "படி" ரக வாகனம் மாதாந்த அடிப்படையில் வாடகைக்குத் தேவை.

தொடர்பு:-
0776164901, 0770416135

## வாடகை/ குத்தகை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றோட் (16'x110') சதுர அடி அளவில் நல்ல வியாபார மையத்திலுள்ள மூன்று மாடிக்கட்டடம் வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ கொடுக்கப்படும். வாகனத்தரிப்பிடமாக கீழ்த் தளத்தை உங்களது வசதிக்கு மாற்றிக் கொள்ளலாம் (விவரங்களுக்கு கொழும்பு)

தொலைபேசி-2504788/2506345

## வீடு, காணி விற்பனை

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோவிலருகில் சகல வசதிகளுடன் கூடிய 4 பரப்புக் காணியில் அமைந்த வீடும் அருகில் விவசாயம் செய்யக்கூடிய 8 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

(C/9792))(6-7-8) தொடர்பு : 077 2197194

## தென்னங்காணி விற்பனைக்கு

வரணி, இயற்றாளையில், பருத்தித்துறை வீதியிலிருந்து மேற்காக 150 மீற்றர் தூரத்தில் தென்னங்காணி உடன் விற்பனைக்குண்டு. மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை தொடர்புகொள்ளலாம்.

(15853)(6-7-8) தொடர்பு : 077 7222305

## திருமண சேவை

சுலபமான சுயதெரிவு முறையில் மணமக்களைத் தெரிவு செய்வதற்குக் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனிடம் செவ்வாய், வியாழன் தவிர்ந்த மற்றைய நாள்களில் நண்பகல் 11.00 - 1.00 மணிக்குள் விவரங்களை விசாரித் தறிக.

Tel - 011 4873929
(C/9715)(6-7-8) 011 2360488

## சேவை

எமது நிறுவனத்தில் கனடா, Uk, France இத்தாலி USA போன்ற நாடுகளுக்கு Work ,Visit, PR, Skilled, Business போன்ற Visa ஆலோசனை தருவதுடன் Rejected/Appeal என்பனவும் செய்து தரப்படும்.

011 2363880 / 077 2484403
Jeansasi@Yahoo.com

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இறக்குமதி செய்து விற்பனை செய்யும் மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையமொன்றுக்கு விற்பனைப் பிரதி நிதிகள் மற்றும் ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. தொடர்பு:- 0777707465

## TOYATA TOWN ACE விற்பனைக்கு

TOYATA TOWN ACE NOAH - 2000
MODEL CR - 42 DIESAL NPHB xxxx
வான் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0775614955

## பணியாளர் தேவை

போட்டோ சொப்பில் வடிவமைக்கக் கூடிய கணினி வடிவமைப்பாளர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# வஜிர ஹவுஸ்

யாழ்ப்பாணத்திலும் மற்றும் நாடெங்கிலும் தனது சேவையை வழங்குகிறது

**ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நாங்கள் உங்களிடம்**

96 ஆண்டுகள் வரலாற்றுடன் 4 தலைமுறைகளான சேவை

# VAJIRA HOUSE






**Call Now**
**Ruban**
**0716 500800**

GUARANTEE 20 YEARS





முதலில் 25% செலுத்தி மிகுதியை தவணை முறையில் செலுத்தவும்

## Vajira House Builders (Pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tel : 2580332 / 2580333 / 2584627 / 2508256 www.vajirahouse.net Skype ID : Vajira.Col4 No 04, Vajira Road, Bambalapitiya

# 106 ஆவது வடக்கின் பெரும் போர்

## ஒருநாள் ஆட்டத்தில் மத்தியிடம் மடிந்தது சென்.ஜோன்ஸ்



நாணயச் சுழற்சியின் போது....



களம்புகும் மத்தியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள்

வடக்கின் பெரும்போரின் ஓர் அங்கமான யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையே நேற்று இடம்பெற்ற 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி களத்தடுப்பிலும் துடுப்பாட்டத்திலும் பிரகாசித்து 62 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு இந்தப் போட்டி ஆரம்பமானது. நாணயச் சுழற்றியில் வெற்றி பெற்ற மத்தியகல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. மத்திய கல்லூரியின் துடுப்பாட்ட வீரர்கள் ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்த ஓட்ட எண்ணிக்கை சடுதியாக உயர்ந்தது. சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்களும் இலகுவான பிடிகளைக் கூட தவறவிட்டு மத்திய கல்லூரிக்கு ஒத்தாசை புரிந்தனர்.

இதனால் மத்திய கல்லூரி அணி 44 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் நிரோஜ் 42 ஓட்டங்களையும் கபிலன் 48 ஓட்டங்களையும் விளாசி அணியின் வெற்றிக்கு வலுச் சேர்த்தனர். சென்.ஜோன்ஸ் அணி உப தலைவர் ரஜிந்தன் 4 இலக்குகளையும், துவாரகசீலன் இரண்டு இலக்குகளையும் வீழ்த்தினர்.

அத்துடன் உதிரிகளாகவும் சென்.ஜோன்ஸ் அணி வீரர்கள் மத்திய கல்லூரிக்கு 37 ஓட்டங்களை வாரி வழங்கி தம் களத்தடுப்புத் திறனை (?) வெளிப்படுத்தினர். அதுவும் தங்களுடைய சொந்த மைதானத்தில் இவ்வாறு சென். ஜோன்ஸ் அணி வீரர்கள் சொதப்பியதால் ரசிகர்கள் முதல் இனிங்ஸ் முடியும் போதே கொந்தளிப்புடன் காணப்பட்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் நிதானமாக ஆட முற்பட்டனர். எனினும் இலக்குகள் ஒருபுறம் சீரான வேகத்தில் சரிவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. மத்திய கல்லூரி அணிவீரர்கள் சிறந்த களத்தடுப்பின் மூலம் சென். ஜோன்ஸ் அணியின் ஓட்டங்களை அதிகரிக்கும் எண்ணத்துக்கு தடை போட்டனர். இதனால் ஆமை வேகத்திலேயே சென்.ஜோன்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது.

எனினும் 45.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்த சென்.ஜோன்ஸ் அணி 131 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 62 ஓட்டங்களால் மத்தியகல்லூரியிடம் மடிந்தது.

சென்.ஜோன்ஸ் அணி சார்பில் அற்றியன் 32 ஓட்டங்களையும், துவாரகசீலன் 19 ஓட்டங்களையும், விந்தாரகன்18 ஓட்டங்களையும் அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர். மத்திய கல்லூரியின் சார்பில் கோகுலன், சௌமிதரன் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தி அணியின் வெற்றியை உறுதிசெய்தனர். வெற்றிக்குப் பங்களித்த மத்தியின் மைந்தன் கபிலன் ஆட்ட நாயகனாகத் தெரிவானர்.

(ங-23-86)

### சென்.ஜோன்ஸ் எதிர் சென்றல்

யாழ். மத்திய கல்லூரி மைதானம்

சென்றல் 193 (44) சென்.ஜோன்ஸ் 131 (45.2)

சென்றல் வெற்றி- 63 ஓட்டங்களால்

**சென்றல் கல்லூரி**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| நிரோஜ் | ரன் அவுட் (ரஜிந்தன்) | 42 | 47 | 6 | 0 |
| அலன்டிலன் | c கிருத்திகன் b பிருந்தாபன் | 4 | 13 | 0 | 0 |
| கபிலன் | c துவாரகசீலன் b ரஜிந்தன் | 48 | 96 | 5 | 0 |
| சௌமிதரன் | ரன் அவுட் (கிருத்திகன் b துவாரகசீலன்) | 12 | 23 | 1 | 0 |
| டார்வின் | c சன்சயன் b ரஜிந்தன் | 7 | 19 | 0 | 0 |
| வதுசனன் | c கபிலன் b அமிர்தயன் | 12 | 16 | 1 | 0 |
| கோகுலன் | c ரஜிந்தன் b ரஜிந்தன் | 12 | 29 | 1 | 0 |
| யூனிஸ்கலிஸ்ரன் | c கபிலன் b துவாரகசீலன் | 8 | 5 | 1 | 0 |
| சர்மிகன் | (ஆட்டமிழக்காமல்) | 8 | 9 | 1 | 0 |
| லக்சனன் | c சன்சயன் b துவாரகசீலன் | 1 | 5 | 0 | 0 |
| கிசாந்தன் | c ரஜிந்தன் b ரஜிந்தன் | 2 | 6 | 0 | 0 |
| உதிரிகள் | | 37 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 193 | | | |

இலக்கு இழப்பு: 1-17, 2-80, 3- 105, 4-126, 5-148, 6-164, 7-178, 8-179, 9-184, 10-193

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பிருந்தாபன் | 4 | 0 | 19 | 1 |
| சஞ்சயன் | 4 | 0 | 16 | 0 |
| கபிலன் | 3 | 0 | 23 | 0 |
| துவாரகசீலன் | 10 | 1 | 33 | 2 |
| அமிர்தயன் | 8 | 0 | 36 | 1 |
| விந்தாகரன் | 6 | 0 | 20 | 0 |
| ரஜிந்தன் | 9 | 0 | 42 | 4 |

**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கிருத்திகன் | c கிசாந்தன் b சௌமிதரன் | 11 | 26 | 2 | 0 |
| கபில்ராஜ் | ரன் அவுட் (டார்வின்) | 4 | 11 | 0 | 0 |
| துவாரகசீலன் | c யூனிஸ்கலிஸ்ரன் b சௌமிதரன் | 19 | 24 | 3 | 0 |
| ரஜிந்தன் | c யூனிஸ்கலிஸ்ரன் b சௌமிதரன் | 2 | 7 | 0 | 0 |
| அமிர்தயன் | c யூனிஸ்கலிஸ்ரன் b கிசாந்தன் | 2 | 7 | 0 | 0 |
| அற்றியன் | lbw b கோகுலன் | 32 | 76 | 4 | 0 |
| சன்சயன் | c யூனிஸ்கலிஸ்ரன் b கோகுலன் | 6 | 13 | 1 | 0 |
| பிருந்தாபன் | ரன் அவுட் (டார்வின்/கோகுலன்) | 3 | 9 | 0 | 0 |
| விந்தாரகன் | b கோகுலன் | 18 | 61 | 1 | 0 |
| ஏ.பி.அனோஜன் | c யூனிஸ்கலிஸ்ரன் b டார்வின் | 7 | 17 | 1 | 0 |
| கபிலன் | (ஆட்டமிழக்காமல்) | 4 | 21 | 0 | 0 |
| உதிரிகள் | | 23 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 131 | | | |

இலக்கு இழப்பு: 1-21, 2-23,3-30, 4-43, 5-50, 6-62, 7-72, 8- 108, 9-119, 10-131

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வதுசனன் | 8 | 2 | 19 | 0 |
| கிசாந்தன் | 9 | 0 | 33 | 1 |
| சௌமிதரன் | 9 | 1 | 27 | 3 |
| கோகுலன் | 9.2 | 4 | 20 | 3 |
| டார்வின் | 8 | 0 | 22 | 1 |
| லக்சன் | 2 | 0 | 6 | 0 |



வெற்றி பெற்ற மத்திய கல்லூரி அணித் தலைவர் கோகுலனிடம் ஜனசக்தி நிறுவனத்தின் வடக்கு கிழக்கு சிரேஷ்ட முகாமையாளர் ஸ்ரீவிஜயகாந் வெற்றிக் கிண்ணம் வழங்குகிறார்



ஆட்டநாயகன் விருதை மத்தியகல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர்கள் வீரர் கபிலனுக்கு வழங்கும்போது

## நியூஸியைப் பந்தாடியது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கப் பந்து வீச்சாளர்களின் சிறப்பான பந்துவீச்சுக் காரணமாக நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் ஹமில்டனில் இடம்பெற்று வந்த இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 9 இலக்குகளால் இலகுவாக மூன்றாவது நாளிலேயே வெற்றிகொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் 4 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாளான நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்த நியூஸிலாந்து அணி - தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்தது.

டானியல் விட்டோரி 21 ஓட்டங்களுடனும், வான்வைக் 20 ஓட்டங்களுடனும், சிறப்பாக ஆடிய கேன் வில்லியம்ஸன் 77 ஓட்டங்களுடனும் டக் பிரேஸ்வெல் ஓட்டமெதனையும் பெறாமலும், மார்க் கிலெஸ்பி 14 ஓட்டங்களுடனும், இறுதி இலக்காக கிறிஸ் மார்ட்டின் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக தொடர்ச்சியாகச் சிறப்பாகப் பந்து வீசிய வரும் வேர்ணன் பிலாந்தர் 6 இலக்குகளைக் கைப்பற்றினார். 44 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 6 இலக்குகளைக் கைப்பற்றிய வேர்ணன் பிலாந்தர் - டெஸ்ட் போட்டியில் தனது சிறப்பான பந்துவீச்சையும் பதிவு செய்தார். முதல் இனிங்ஸில் 4 இலக்குகளைக் கைப்பற்றிய பிலாந்தர், இந்த ஆட்டத்தில் 10 இலக்குகளைக் கைப்பற்றி தனது 6 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் வாழ்வில் இதுவரை ஐந்து தடவை 5 இலக்குப் பெறுதிகளையும், 2 பத்து இலக்குப் பெறுதிகளையும் கைப்பற்றி 45 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.

இதன்படி 101 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 19.5 பந்து பரிமாற்றங்களில் ஒரு இலக்கினை இழந்து வெற்றி இலக்கை இலகுவாக அடைந்தது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் கிரேம் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

முன்னதாக, நியூசிலாந்து அணி தனது முதல் இனிங்ஸில் 185 ஓட்டங்களையும், தென்னாபிரிக்க அணி பதிலளித்தாடி 253 ஓட்டங்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆட்டநாயகனாக சிறப்பாகப் பந்துவீசிய தென்னாபிரிக்காவின் வேர்ணன் பிலாந்தர் தெரிவானார். (5)

## ஆஸ்திரேலிய அணி இலகு வெற்றி

மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான முதலாவது ஒரு நாள் சர்வதேச ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 64 ஓட்டங்களால் இலகுவாக வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. மெதுவான ஆடுகளமாக அமைந்த ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாடுவது சிரமமாக அமைந்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய வொட்சன் - அணி 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் ஜோடி சேர்ந்த போறஸ்ட், டேவிட் வோணர் ஜோடி மெதுவாக ஓட்டங்களைப் பெற்றது. மிகவும் மெதுவாகத் துடுப்பெடுத்தாடிய போறஸ்ட் 64 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் அணி மேலதிக ஓர் ஓட்டத்தைப் பெற்ற வேளையில் டேவிட் வோணர் 40 ஓட்டங்களோடும், மேலதிகமாக அணி 7 ஓட்டங்களைப் பெற்றவேளையில் டேவிட் ஹசி ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். இதன் காரணமாக ஆஸ்திரேலிய அணி 26.3 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த அறிமுக வீரர் ஜோர்ஜ் பெய்லி மற்றும் மைக்கல் ஹசி இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைப் பெற்றனர். 32 ஓட்டங்களைப் பெற்றிருந்த மைக்கல் ஹசி 5 ஆவது இலக்காக 162 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மத்தியூ வேட் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். சிறப்பாக ஆடிய அறிமுக வீரர் ஜோர்ஜ் பெய்லி, 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, ஆஸ்திரேலிய அணி 7 இலக்குகளை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றுக் காணப்பட்டது. இறுதியில் 50 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. டானியல் கிறிஸ்டியன் 18 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டுவைன் பிராவோ 3, கமர் றோச், மார்லன் சாமுவேல்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், சிறப்பாகப் பந்து வீசிய சுனில் நரைன் 10 பந்து பரிமாற்றங்களில் 24 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

205 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலளித்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆரம்பம் முதலே தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து தடுமாறியது. 33 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது. எனினும் அதன் பின்னர் ஜோடி சேர்ந்த டுவைன் பிராவோ, மார்லன் சாமுவேல்ஸ் ஜோடி 64 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தது. டுவைன் பிராவோ 32 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, மேலதிகமாக எந்த ஓட்டங்களையும் பெறாது மேற்கிந்தியத் தீவுகள் அணி மார்லன் சாமுவேல்ஸையும் இழந்தது. மார்லன் சாமுவேல்ஸ் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்த இலக்காக கால்ட்ன் போ அதே 97 ஓட்டங்களோடு ஆட்டமிழக்க, அன்ட்ரே ரசல் ஓர் ஓட்டத்துடனும், கெய்ரன் பொலார்ட் 4 ஓட்டங்களுடனும், சுனில் நரைன் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

28.3 பந்து பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக அணித்தலைவர் டெரன் சமி அதிரடியாக ஆடினார். 20 பந்துகளில் 35 ஓட்டங்களைப் பெற்ற அவர் இறுதி இலக்காக ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 140 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஷேவியர் டொகேர்ட் சிறப்பாகப் பந்துவீசி 4 இலக்குகளை கைப்பற்றினார். ஆட்டநாயகனாக கடினமாக ஆடுகளத்தில் 48 ஓட்டங்களைப் பெற்ற ஆஸியின் அறிமுக வீரர் ஜோர்ஜ் பெய்லி தெரிவானார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவில், நாதஸ்வர இசை விருந்து பிற்போடப்பட்டுள்ளது

தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இன்று (18.03.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு நிகழவிருந்த தவில், நாதஸ்வர இசை விருந்து கலாநிதி மு. பஞ்சாபிகேசனின் அன்புத்துணைவியார் திருமதி பஞ்சாபிகேசன் இரத்தினத்தின் திடீர் மறைவையிட்டுப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை மிகவும் மன வருத்தத்துடன் கலா ரசிகர்களுக்கு அறியத் தருவதுடன் .
அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது மன்றின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனை வேண்டுகின்றோம்.

(14695)(6-14-8) சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றம்.




சிவமயம்

கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பொங்கல் (05.04.2012) விழாவில் வாணிபம் மேற்கொள்ளும் வர்த்தகர்களுக்கான

### நில வாடகை சம்பந்தமான அறிவித்தல்

புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழா எதிர்வரும் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இத்தினத்தில் வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில வாடகை எதிர்வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை

நாகதம்பிரான் பொங்கல் விழாவின்போது உணவு கையாளும் நிலையங்களுக்கான சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தல்

### சம்பந்தமான அறிவித்தல்

01. உணவு கையாளும் நிலையங்களுக்குத் தனியான இடம் ஒதுக்குதல்.
02. இலங்கையின் எந்தவொரு பகுதியிலேனும் பிரதேச சபையின் அனுமதிபெற்ற உணவு கையாளும் நிலையங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கவும்.
03. அனுமதிபெற்ற உணவு கையாளும் நிலையங்கள் தமக்குரிய நிலையத்தில், தமது பொறுப்பில் கழிவுத் தொட்டிகளை (தற் காலிகமாக) அமைத்துப்பேணுதல் வேண்டும்.
04. உணவகங்களில் தேநீர், குளிர்களி என்பவற்றுக்கு ஒருமுறை மட்டும் பாவிக்கக்கூடிய "Disposable Cup" ஐ மட்டுமே பயன் படுத்தல் வேண்டும்.
05. பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் குடிநீரை மட்டுமே பெற்று பயன்படுத்தவும்.

இந்த அறிவுறுத்தல்களுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சுகாதார வைத்திய அதிகாரி,
கண்டாவளை.

## கடை வாடகைக்கு

A9 பாதையில் நாவற்குழி, சந்தியில் (11 x 22) அளவுள்ள கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0773446035, 0773991585

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 ★ 04 ★ 1941



இறப்பு 18 ★ 03 ★ 2003

அமரர் செல்லப்பா தங்கராசா
(இளைப்பாறிய அதிபர்)

ஒன்பதாண்டுகள் கடந்தும் கூட - துயரம்
இன்று நடந்தது போலல்லவா இருக்கிறது!
தங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தும்பளை வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

## முன்பள்ளி கட்டட திறப்பு விழா

சாவகச்சேரி, மார்ச் 18

மட்டுவில் வடக்கு கண்ணகை முன்பள்ளி யின் புதிய கட்டடம் இன்று ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

மட்டுவில் வடக்கு திருமதி பாக்கியம் நடராசா நினைவாக இந்தக் கட்டடம் நிர் மாணிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் ஆ.மகேந் திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜாவும், சிறப்பு விருந் தினராக ஓய்வு பெற்ற நீதிபதி மு.திருநாவுக் கரசுவும் கலந்து கொள்வர். (ஒ-131)

## கே.ஸி.ஸி.ஸி. இறுதிப்போட்டி இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 18

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக அணிக்கும் ஜொலிஸ்ரார் அணிக்கும் இடையிலான கே.ஸி.ஸி.ஸி. கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட மாகாண பொறியியலாளர் ஆர்.சிவசங்கர் கலந்து கொள்வார்.

## நன்றி கூறுகின்றோம்

கடந்த 13.03.2012 ஆம் திகதி யாழ்ப் பாணத்தில் தவறவிடப்பட்ட விஜயசிங்கம் ஜசிந்தன் ஆகிய எனது ஆவணங்களுடன் கூடிய பணப்பையினை கண்டெடுத்துத் தந்து உதவிய நாவற்குழி, வரணியைச் சேர்ந்த பொன்னுத்துரை குலமணி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறுகின்றேன்.

நன்றி கூறுபவர்:
வி. ஜசிந்தன் (பருத்தித்துறை)

## கடைத்தொகுதியுடன் மாடி வீடு விற்பனைக்குண்டு

சாவகச்சேரி சந்தை கட்டட கடைத்தொகுதிக்கு முன்னால் கண்டி வீதியிலிருந்து திரும்பியவுடன் டச்சு வீதியில் மூன்று வர்த்தக கடைகளும், மாடி வீட்டுடன் இரண்டு பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0771738050

## சாரதி தேவை

கூலர் வாகனம் செலுத்துவதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள சாரதி தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0777804493

## வீடு விற்பனைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 0779856359

## மணமகள் தேவை

1981இல் பிறந்த திருவோணம் செவ்வாய் பாபம் இல்லாமல் 35 பாவமுடைய பட்ட தாரி ஆசிரியர் மணமகனுக்கு மணமகள் தேவை (குருகுலம்)

தொடர்பு - 021 3201231

## German, Swiss மொழிகள்

தமிழ் மொழிப்பெயர்புடனும் Audo, Book விளக்கத்துடனும் Gothe Institute Examக்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது.

ஆரம்பம் - 22.03.2012
10, Palaly Road, Jaffna. Appalo Hospital இற்கு அருகில் T.P. 0771604823.

## பணிப்பெண் தேவை

பருத்தித்துறையில் முதியவர்கள் இருவரை வீட்டில் தங்கிநின்று பராமரிப்பதற்கும், சமையல், வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பெண் தேவை.

சம்பளம் - 10,000/- வழங்கப்படும். (மாதம்)

தொடர்பு - 0771950712.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 ★ 04 ★ 1963



மறைவு 17 ★ 02 ★ 2012

எமது முன்னாள் திட்ட பொறியியலாளர்

அமரர் கந்தையா ஜெயவீரசிங்கம்

நேற்றுவரை எம்முடன் வீற்றிருந்தீர்
ஈற்று வரை வருவீர் என இருந்தோம்
கூற்றவன் வந்து உமை அழைத்ததாய்
காற்றுவழி சேதி வந்து கனலாய் கனத்தது.
தேற்றுவதற்கு யாருமில்லை
தேம்பியே நிற்கின்றோம்
மாற்று வழி தோன்றவில்லை
மானுடத்தின் நியதி இதுவோ!

49, வில்வம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம் - குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில் தவப்புதல்வனாக 11 ★ 08 ★ 1967



ஆண்டவன் அடியில் அமரராக 29 ★ 03 ★ 2011

அமரர் பாலசுப்பிரமணியம் பாலகுமார்

திதி : ஏகாதசி

ஆண்டு ஒன்று ஆனதப்பா
ஆறவில்லை எம் துயரம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறக்க
முடியாது அப்பா. கடலின் ஆழத்தை
அளக்கலாம் ஆனால் நாம் உம் மீது
வைத்த அன்பின் ஆழத்தை அளக்க முடியாது
அப்பா கண்ணீருடன் கசப்பான வாழ்வு
வாழ்கின்றோம் அப்பா

உங்களை பிரிந்து தவிக்கும்
அம்மா - தேவசிகாமணி - சுவிஸ்
மனைவி - ருக்மணி
மகள்மார் - வருணிகா - வருணா
சகோதரர்கள் - சாந்தினி - சுவிஸ்
சாந்தகுமார் - சுவிஸ்
பாலினி - கொழும்பு
மச்சான்மார், மச்சாள் மற்றும் மருமக்கள்,
பெறாமக்கள், உறவுகள்

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (16.02.2012) வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் செ. செல்லத்துரை (செல்லையா)
(முன்னாள் நாவலர் கலாச்சார மண்டப ஊழியர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியை கள் இன்று (18.03.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் இடம் பெறும்.

அத்தருணம் எமது துயரில் பங்குகொண்டு எமக்கு பேருதவி யாக இருந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டு கிழக்கு,
குளிப்பன் வீதி,
வட்டுக்கோட்டை

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி செல்லத்துரை அன்னப்பிள்ளை

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை அன்னப்பிள்ளை நேற்று (17.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை யின் அன்பு மனைவியும், லோகேஸ்வரி, கதிர் காமநாதன் (சுவிஸ்), தவராணி (இந்தியா), ரங்கேஸ் வரி (சுவிஸ்), பாலமோகன் (சுவிஸ்), காலஞ்சென்ற வசந்தி ஆகி யோரின் அன்புத் தாயும், லோகநாதன், சந்திர ரதி (சுவிஸ்), செல்வ ராசா, தெய்வேந்திரம் (சுவிஸ்), சுபோதினி (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் சுகன்யா, நிக்ஷன், சியாமா செல்வரூபன் (லண்டன்), பானு மதி ரஞ்சிதகுமார் (சுவிஸ்), யசோதரா சொரூபன் (இந்தியா), மது மதி, சிவசங்கர் (சுவிஸ்), மதன் சுஜிதா (ஜேர்மனி), தாரகா, அபர்ணா, அகல்யா (சுவிஸ்), பிரவீன், கவாஸ்கர் (சுவிஸ்), காலஞ்சென்ற கோகு லன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஹரிஷ், அக்ஷயா, ரோஷன், ரேஷ்மி, அபிலாஷ், அபிஷா, அபிஷன் (லண்டன்), கஹுஷ், கம்ஷா (சுவிஸ்), விஷ்வா (ஜேர்மனி), காலஞ்சென்ற சுருதியன் மற்றும் மேனிலா ஆகியோரின் பூட்டியும், சுப்பிரமணியம் - நாகேஸ்வரி ஆகியோரின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2012) ஞாயிற் றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லோகநாதன் (மருமகன்).
00914314030710.

58/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

# மாணவர் கண்காட்சி

முல்லைத்தீவு,மார்ச் 18

கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் கண்காட்சி யொன்று இடம்பெற்றுள் ளது.

தரம் ஐந்தில் கற்கும் மாணவர்களின் இந் தக் கண்காட்சி கடந்த 8ஆம் திகதி காலை 9 மணியளவில் வகுப்பாசிரியை செல்வி ஐ.சிவப் பிரியா மற்றும் வகுப்புத் தலைவன் செல்வன் த.அனுவின் தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஆதிகாலம் தொடக்கம் நவீன காலம் வரையான சகல விடயங்களும் உள்ளடக் கப்பட்டிருந்தன. தரம் 5 மாணவர்கள் மட்டு மன்றி அவர்களின் பெற்றோர்களும் இந்தக் கண்காட்சி சிறப்புடன் இடம்பெறுவ தற்குத் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

பாடசாலை அதிபர் சி.நாகேந்திரராசா நாடா வைவெட்டிக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். (க-500)

# அறுவடை இறுதிக் கட்டத்தில்

வவுனியாவில் பெரும்போக நெல் அறு வடை நிறைவடையும் நிலையில் உள்ளது. இந்த முறை வவுனியா விவசாயிகள் அதிகள வில் ஆர்வத்துடன் நெல் விவசாயத்தில் ஈடு பட்டனர்.

தற்போது அறுவடை வேலைகள் நிறை வடையும் கட்டத்தை எட்டியுள்ளன. விளைச் சல் அமோகமாகக் கிடைத்ததால் விவசாயி கள் மகிழ்ச்சியில் உள்ளனர் . இங்கு சிவப்பு நெல் ஒரு மூட்டை ஆயிரத்து 700 ரூபாவுக்கும், சம்பா ஆயிரத்து 800 ரூபாவுக்கும், வெள்ளை நெல் ஆயிரத்து 400 ரூபாவுக்கும் கொள் வனவு செய்யப்படுகின்றது. (க-421)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பஞ்சாபிகேசன் இரத்தினம்

சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி பஞ்சாபிகேசன் இரத் தினம் நேற்று (17.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2012) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலாநிதி கே.எம். பஞ்சாபிகேசன்
(கணவர் - நாதஸ்வர வித்துவான்)

சங்கம் ஒழுங்கை,
சங்கத்தானை,
சாவகச்சேரி.



## திருமதி செல்லத்துரை இரத்தினம்

கீரிமலையைப் பிறப்பிடமாகவும், மாசியப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை இரத்தினம் நேற்று (17.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மாசியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

Annai Nagaa Food City

அகவை 10இல் கால் பதிக்கும்...
அன்னை நாகா பூட் சிற்றி

நாளை (19.03.2012) திங்கட்கிழமை தனது 9ஆவது
அகவையைப் பூர்த்தி செய்து, தனது பத்தாவது
அகவையில் கால் பதிக்கும் நன்நாளில்
எமது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்கள்
அனைவரையும் இந்நிகழ்வில் பங்குகொண்டு
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் இதுவரை காலமும் எமக்கு
வழங்கிய ஆதரவு, ஒத்துழைப்புக்கும்
எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவிக்கும் அதேசமயம் மேன்மேலும்
சிறப்பாக எமது சேவையைத் தொடர்ந்து
நடத்துவதற்கு தங்களின் ஆதரவை
எதிர்பார்க்கின்றோம்

175, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

உரிமையாளரும்,
பணியாளர்களும்.

10ஆவது அகவையைமுன்னிட்டு அன்னை நாகா பூட்சிட்டி வழங்கும் பரிசில்களும் விசேட கழிவுகள் தொடர்பான விபரம் நாளைய (19.03.2012) பத்திரிகையில்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 18.03.2012 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்புச் சகோதரி

## அமரர் துரைலிங்கம் கமலாதேவி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.03.2012) திங்கட்கிழமை மு.ப. 5.00 மணி யளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நெற்கொழு வீதி,
ஊரிக்காடு.

குடும்பத்தினர்.

கோடைகாலத்தில் திருநெல்வேலி கந்தர்மடம்
அபான்ஸ் வழங்கும் மற்றுமொரு
அதிரடிச் சலுகை

A/C (வளி சீராக்கிகள்)
LG, Haier, Media சகல
விதமான A/C
வகைகளையும் வட்டி
இன்றி மாதாந்த
தவணை முறையில்
பெற்றுக்கொள்ளலாம்.

உங்களுக்காக 6, 12, 15, 18 மாத தவணைக் கட்டண வசதிகள்

மாதாந்தம் 2885/- மட்டுமே

திருநெல்வேலி கிளையில் A/C வாங்கும்
வாடிக்கையாளருக்கு இலவசமாக பொருத்தித் தரப்படும்

உடன் நாடுங்கள்
269, பலாலி வீதி, கந்தர்மடம், திருநெல்வேலி.
021 222 0247, 0774649204

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு
விசேட கட்டணங்கள்

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு),
கடல் உணவு, மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும், வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு
கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்,
CD, Vedioகள் என்பன
மிக விரைவாக அனுப்ப DHL

நீங்கள் உங்கள் இல்லங்களில் இருந்தவாறே உள்நாடு,வெளிநாடுகளுக்கான
DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள (Door to door Service)
அழையுங்கள் 021 222 7835, 0719554528

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
1 kg - 500/-
1 kg - 400/-

திருமுருகன் கொம் நெற்
DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்
TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு-6
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி. இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சண்டிலிப்பாய் மத்தியஸ்த சபைக்கு அண்மையில் தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்கள், தவிசாளர், உப தவி சாளர் ஆகியோர். (ம-17)





கைதடி நவீல்ட் செவிப்புலன் ,விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அங்கிலிக்கன் சபை குருமுதல்வர் ஜெயந் ஜெயவீரசிங்கன் உட்பட ஏனைய விருந்தினர்களை மைதானத்துக்கு மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் அழைத்துவருகின்றனர். (ம-288)




மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையில் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழாவில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வட மாகாணப் பணிப்பாளர் திருமதி வி.சிறீகாந்தரூபன், இளைஞர் நாடாளுமன்ற தென்மராட்சி பிரதேச உறுப்பினர் எஸ்.ரி. விமல், மாவட்ட சம்மேளன உறுப்பினர் ச.மதியழகன், வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டனர். (ம-9)



லேக்லன்ட் இன்ரல் அமெரிக்கன் முன்பள்ளியில் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்ற போது முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர், யாழ் மாவட்ட இணையத்தின் பிரதித்தலைவர் வி.சிறீசக்திவேல் நிலையத்தைத் திறந்து வைக்கின்றார். (ம-8)



மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் சாவகச்சேரி வர்த்தக வங்கி உதவி முகாமையாளர் பிரஜீவ் மாணவர்ளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குகின்றார்.



வட்டுத் தெற்கு முதலி கோயிலடி அம்பாள் சனசமூகத்தின் வளாகத்தில் வேல்ட் விசன் நிறுவனத்தால் 40 அடி உயரமான தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான அத்திபார அடிக்கல்லை வலி மேற்கு பிரதேச தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் நடுகின்றார். (ம-100)



கைதடி பரா சக்தி பாலர் பகல் இல்லத்தில் மாண்வர்களுக்கான இலவச சிகிச்சைமுகாம் இடம்பெற்ற போது யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சி.சிவசண்முகராஜா தலைமையிலான நான்காம் வருட சித்த மருத்துவத்துறை மாணவர்கள் சிகிச்சையை மேற்கொள்கின்றனர். (ம-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியானால் தமிழருக்கு ரணில் தரும் தீர்வுதான் என்ன?

## யாழ்ப்பாணத்தில் மக்களின் கேள்விக்கு அவர் மழுப்பலான பதில்

களைச் சந்தித்தது.

மாதகலில் இடம்பெற்ற சந்திப்பில், ஜனாதிபதியானால் தமிழ் மக்களுக்கு ரணில் வழங்கவுள்ள தீர்வு என்ன என்று மக்கள் கேள்வி எழுப்பினர். ''நீங்கள் ஜனாதிபதியாகத் தெரிவானால் தமிழ் மக்களுக்கு எத்தகைய தீர்வை வழங்குவீர்கள்?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு நேரடியாகப் பதிலளிப்பதைத் தவிர்த்த ரணில் விக்கிரமசிங்க ''இந்த நாட்டில் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைத் தருவோம்'' என்றார்.

அராலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க முன்றலில் பொதுமக்களுடன் ரணில் நடத்திய சந்திப்பின் போதும் தமிழ் மக்கள் இதே கேள்வியை எழுப்பினர். பதிலளித்த ரணில், ''2005ஆம் ஆண்டு நான் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைத்தபோது பிரபாகரனும் அவருடன் இணைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் அதனை எதிர்த்தனர்'' என்றார்.

இந்தப் பதிலில் திருப்தி கொள்ளாத மக்கள் ''எதிர்காலத்தில் நீங்கள் என்ன தீர்வை முன்வைப்பீர்கள் என்பதைச் சொல்லுங்கள்'' என்று அழுத்தம் கொடுத்தனர். நழுவ முடியாத நிலையில், மழுப்பலான பதிலை வழங்கினார் ரணில். ''நான் கொள்கை அடிப்படையில் பணியாற்றுபவன். என் மீது நம்பிக்கை வையுங்கள்'' என்றார் அவர்.

2005ஆம் ஆண்டு தான் முன்வைத்த தீர்வுத் திட்டத்தினை ஏற்றுக்கொண்டிருந்தால் அதன் பின்னர் இவ்வளவு பெரிய போர் ஒன்று ஏற்பட்டிருக்கமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். எனினும் 2005ஆம் ஆண்டில் ஒஸ்லோ உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளக சுயநிர்ணயததின் அடிப்படையிலான சுயாட்சி வழங்கப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக எத்னையும் சொல்ல வில்லை என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

''இலங்கையின் இரு பெரும் அரசியல் கட்சிகளும் தமிழ் மக்களைத் தமது தேவைக்குப் பயன்படுத்தவே முனைகின்றன. தமிழ் மக்களுக்கு நீதியான நிரந்தரத் தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கான உளச்சுத்தியை அவை இதுவரை வெளிக்காட்டியதில்லை என்பது தான் உண்மை. ஆனாலும் தமிழர்கள் இந்த நிலைமைகளைப் புரிந்துகொண்டு காய் நகர்த்துவதே ராஜதந்திரத் தேவையாகவும் உள்ளது'' என்றார் அந்த அரசியல் விமர்சகர். (உ-05)

# யாழ். போதனா வைத்தியசாலையில் இரட்டைப் பிரசவம்: ஆண் குழந்தை காணாமற் போனமை குறித்து வழக்கு; 3 வைத்தியர், தாதி உட்பட 6 பேருக்கு அழைப்பாணை

யாழ். போதனா வைத்தியசாலையில் 2004ஆம் ஆண்டு பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஆண் குழந்தை எங்கே? அது எவ்வாறு காணாமற் போனது? இது குறித்து தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பில் மூன்று வைத்தியர்கள் உட்பட ஆறு பேருக்கு நீதிமன்று அழைப்பாணை அனுப்பியுள்ளது.

குழந்தைகளின் பெற்றோரால் இந்த வழக்கு 2005ஆம் ஆண்டு யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணையில் இருந்த இந்த வழக்கு கடந்த வாரமும் எடுக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் நகர்தல் பத்திரம் சமர்ப்பித்து வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போதே 2004ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி யாழ். போதனா வைத்திய சாலையில் குழந்தைகளின் பிரசவத்துடன் தொடர்புடைய மூன்று வைத்தியர்கள், தாதி ஒருவர் உட்பட 6 பேருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது நீதிமன்று. இந்த வழக்கு ஏப்ரல் 16ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

குழந்தைகள் பிறப்பதற்கு முன்னர் 'ஸ்கான்' செய்து பார்த்தபோது இரண்டு குழந்தைகள் இருந்தமை தெரிய வந்தது. அவற்றில் ஒன்று ஆண் குழந்தை மற்றையது பெண் குழந்தை. 'ஸ்கான்' மூலமாக உறுதிப்படுத்தப்பட்ட அந்தப் பிரதியும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

குழந்தைகள் பிறந்த பின்னர் அந்த நாளன்று பதிவேட்டில் குறித்த நேரத்தில் பிறந்த குழந்தைகள் பற்றிய விவரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பதிவேட்டில் 45ஆவது இலக்கத்தில் பெண் குழந்தை பிறந்தமை பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. 46ஆவது இலக்கத்தில் ஆண் குழந்தை பற்றிய விவரம் பதிவு செய்யப்பட்டு பின்னர் அது அழிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வரியில் 46ஆவது இலக்கம் பதிவு செய்யப்பட்டு அதில் பெண் குழந்தை பிறந்தமை பற்றிப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவை ஒரு வகைத் திரவம் மூலமாக அழிக்கப்பட்டிருப்பதாக சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது என்று அறிக்கைகள் நீதிமன்றில் சமர்ப்பிக் கப்பட்டிருக்கின்றன.

அதேநேரம் எதிர் மனுதாரர்கள் சம்பவத்துக்கு முன்னர் 'ஸ்கான்' செய்யப்பட்ட பிரதிகள் தவறு என்று கூறி குற்றச்சாட்டை மறுத்துள்ளனர். இரட்டைக் குழந்தைகள் பிறக்கவில்லை, ஒரு குழந்தைதான் பிறந்தது என்றும் எதிர் மனுதாரர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். இது தொடர்பான விளக்கத்துக்காகவே இவ் வழக்கு ஏப்ரல் 16ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி ஜோனி மதுரநாயகம் முன்னிலையாகி இருந்தார். (ஒ-4)

# விளையாடிய மர்மப்பொருள் வெடித்து 6 சிறுவர்கள் காயம்

(வயது 10), ஜீவகுமாரன் டிலக்ஷன் (வயது 2), சௌந்தரராஜன் கஜேந்திரன் (வயது 16), சௌந்தரராஜன் சசிதரன் (வயது 8), சௌந்தரராஜன் சுஜீவன் (வயது 14) ஆகியோர் காயங்களுக்கு இலக்காகி கிளிநொச்சிப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் ஹெலிகொப்டர் மூலம் மேலதிக சிகிச்சைக்காக நேற்று மாலை கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளதாகப் பிந்திக் கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

இந்தப் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீள் குடியேற்றப்பட்ட நிலையில் அங்கு காணப்பட்ட வெடி பொருளை எடுத்து இவர்கள் விளையாடியபோதே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்துக்கு இராணுவத்தினர் விரைந்து சோதனை மேற்கொண்டதுடன் கிளிநொச்சிப் பொலிஸாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டு பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

சிறுவர்கள் வீட்டு முற்றத்தில் குறித்த பொருளை எறிந்து விளையாடிய போதே அது வெடித்துச் சிதறியதாகத் தெரிவிக் கப்பட்டது. (ஒ-10-6)

# போரை நிறுத்த வற்புறுத்தியது மேற்குலகு

திபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடுமையான அழுத்தம் கொடுத்ததாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பல்கலைக் கழகப் பழைய மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பிரான்ஸ், பிரிட்டன் போன்ற பல மேற்குலக நாடுகள் மனிதாபிமான மீட்புப் பணிகளை இடைநிறுத்த முயற்சித்தன. நாட்டின் தலைவர் மற்றும் படைகளின் சேனாதிபதி என்ற ரீதியிலும் இந்த அழுத்தங்களைக் கண்டு ஜனாதிபதி அஞ்சவில்லை.

இறுதிக் கட்ட போரின் போது மேற்குலக நாடுகள் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தன. புலிகளின் வான்படைப் பலம் பெரும் பீதியை ஏற்படுத்தியிருந்தது. அதனை முறியடிப்பதற்கு ஜனாதிபதி சிறந்த ஆலோசனைகளை வழங்கினார். ஒரே நோக்கத்தில் போரை முன்னெடுத்த காரணத்தினால் வெற்றியீட்ட முடிந்தது -என்றார் அவர்.(த)

# போர்க்குற்றம் சுமத்தினாலும் இலங்கைக்கு பிரி. ஆயுதங்கள்

ஏன் என்று விளக்கமளிக்குமாறு பிரிட்டன் அரசிடம் ஆயுத விற்பனைக்கு எதிரான பரப்புரை அமைப்பு கோரியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் 2009 மே மாதம் முடிவுக்கு வந்த பின்னர் பிரிட்டன், 3 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் பெறுமதியான இராணுவ மற்றும் இருபயன்பாட்டுக் கருவிகளை இலங்கைக்குக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியுள்ளதாக இந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பிரிட்டன் அனுமதி பெற்ற ஆயுதங்களை இலங்கை அரசு விடுதலைப் புலிகளைத் துடைத்தழிக்கும் முயற்சியின்போது பயன்படுத்தவில்லை என்ற உத்தரவாதத்தை வழங்க முடியாது என்று பிரிட்டன் நாடாளுமன்றக் குழுநிலைக் கூட்டத்தில், ஆயுத ஏற்றுமதி கட்டுப்பாட்டகம் கூறியுள்ளது.

பிந்திய தகவல்களின் படி, 2011ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில், பிரிட்டன் 1.5 மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதியான ஏற்றுமதிக்கு அனுமதியளித்துள்ளது. இவற்றில் 1.3 மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதியான கருவிகள் இலங்கை இரா்ணுவத்துக்குரியவையாகும். இவற்றில் கவசவாகனங்கள், குண்டுதுளைக்காத உடற்கவசங்கள், பொறியில் சிக்க வைக்கும் எதிர் நடவடிக்கை கருவிகள் மற்றும் கூறுகள் என்ற தலைப்பின் கீழ் வரும் கைக்குண்டுகள், குண்டுகள், ஏவுகணைகள் என்பன அடங்கியுள்ளன.

இது பற்றிக் கருத்து வெளியிட்டுள்ள ஆயுத விற்பனைக்கு எதிரான பரப்புரை அமைப்பின் பேச்சாளர் காயிஸ்ரியமன், கிளர்ச்சியில் ஈடுபடும் சொந்த மக்களுக்கு எதிரான அரசுகளின் அடக்குமுறைகளை அரபுலக எழுச்சி உலகின் கவனத்துக்கு கொண்டு வந்தது.

சிறிலங்காவின் கொலைக் களங்கள்– தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் வீடியோ. தனக்கு எதிரானவர்கள் மற்றும் போர் வலயத்தில் சிக்கிய ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மீது ஏவி விடப்பட்ட இலங்கை அரசின் கொடூரமான நடவடிக்கைளை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் பிரிட்டன் அரசு தொடர்ந்தும் இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளது ஏன் என்று நாம் கேட்க வேண்டியுள்ளது என்று கூறியுள்ளார். (த)

# மக்களை ஏமாற்றி, வற்புறுத்தி அழைத்து வந்து ஆர்ப்பாட்டம்

தது.

வீட்டுக் கூரைகள், தகரங்கள் உட்படப் பல உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன என்று கூறி இராணுவத்தினர் தம்மை வாகனங்களில் ஏற்றி வந்தனர். பின்னர் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ளும்படி எம்மை இறக்கிவிட்டனர் அதில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

மீசாலை, கோண்டாவில் பகுதிகள் உட்படப் பல இடங்களில் இருந்து நேற்றுமுன்தினம் இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்ட பொது மக்களிடம் இருந்து அடையாள அட்டைகள் வாங்கப்பட்டன. அவர்களை மறுநாள் காலை முகாமுக்கு வரும்படி இராணுவத்தினர் கூறியுள்ளனர். இதன்படி நேற்று அவர்கள் முகாமுக்குச் சென்ற போது அடையாள அட்டைகளைக் கொடுத்துக் கட்டாயத்தின் பேரில் வாகனங்களில் ஏற்றி ஆர்ப்பாட்டப் பேரணிக்கு அழைத்து வரப்பட்டதாக அடையாள அட்டைகளைச் சான்றாக வைத்து இராணுவத்தினரால் அழைத்து வரப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இ.அங்கஜனின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஒழுங்கமைக்கப்பட்டது. அந்தந்தப் பிரதேசங்களுக்குப் பொறுப்பாக உள்ள இராணுவத்தினரே தம்மை அழைத்து வந்து ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொள்ள வைத்தனர் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

அமைச்சர்கள் வருகிறார்கள், உதவிப் பொருள்கள் வழங்கவுள்ளனர். அதற்காகத் தான் உங்களை அழைத்துச் செல்கின்றோம் என இராணுவத்தினர் தெரிவித்ததை நம்பி வந்து வெயில் காய்கிறோம் என மானிப்பாயில் இருந்து அழைத்து வரப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

பெரும்பாலான இடங்களில் இருந்தும் வந்தவர்கள் தாம் வீதியால் சென்று கொண்டிருந்தபோதும், பஸ் நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்தபோதும் கட்டாயத்தின் பேரில் வாகனத்தில் ஏற்றப்பட்டு அழைத்து வரப்பட்டதாகத் தெரிவித்தார்.

நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் மூவின மக்களும் பங்குபற்றியிருந்தனர். தென்னிலங்கையில் இருந்தும் பலர் அழைத்து வரப்பட்டிருந்தனர். வெளி மாவட்டத்திலிருந்து அழைத்து வரப்பட்டிருந்த மக்களுடன் பொலிஸாரும் இராணுவத்தினரும் சிவில் உடையில் இணைந்து கொண்டனர்.

இதனை ஒழுங்கு செய்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இ.அங்கஜன் பேரணியின் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

பல மூலைகளில் இருந்தும் யாழ்.மாவட்டத்துக்கு வந்துள்ளவர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

ஐ.நா. அதிகாரிகளுக் [illegible] யும், எதிர்ப்பையும் தெரிவிக்கின்றோம். அநியாயக் குற்றச்சாட்டுகளைக் கூறி எமது வாழ்க்கையைப் பாதிக்காமல் எம்மை முன்னேற விடுங்கள். அபிவிருத்தியைப் பெற்றுத் தரும் இந்த அரசுக்காக நாம் எப்போதும் ஒன்றிணைந்து உழைப்போம் - என்றார்.

பிறந்த நாட்டுக்கு அன்பு செலுத்துவோம், ஜெனிவாப் பிரேரணையை நிராகரிப்போம், இலங்கையில் சமாதானமுள்ளது. ஒற்றுமையுள்ளது. ஐக்கியமுள்ளது. ஜெனிவாப் பிரேரணை எதற்கு? எமது நாட்டுக்கு வெளிநாட்டுச் சூழ்ச்சிகள் வேண்டாம் என எழுதப்பட்ட பதாதைகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்களுக்கு வழங்கப்பட்டன.

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணி வைத்தியசாலை வீதி, பருத்தித்துறைவீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி [illegible] பஸ் நிலையத்தைச் சென்றடைந்து நிறைவுபெற்றது. (த-4-3)

# இலங்கையின் உப மாநாட்டில் எட்டுப் பேர் மட்டுமே பங்கேற்பு

முடிகின்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உப மாநாட்டில், 8 பேர் மட்டுமே பங்கேற்றுள்ளதாகத் தெரியவருகிறது. ஜெனீவாவில் முகாமிட்டுள்ள இலங்கை அரச தரப்புக் குழுவினரோடு இணைந்துள்ள, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஜீவ விஜேசிங்கவினால் இந்த் உப மாநாடு நடத்தப்பட்டிருந்தது. டென்மார்க், இந்தியா தவிர்ந்த பிற நாடுகள் பலவும் இந்த உப மாநாட்டைப் புறக்கணித்துள்ளதோடு, இராஜதந்திரிகளையோ அல்லது மனித உரிமை அமைப்பு பிரதிநிதிகளையோ இங்கு காண முடியவில்லை.

போருக்கு உதவிய அமெரிக்கா போன்ற பல மேற்குலக நாடுகள் தற்போது ஏன் போர்க்குற்றச் சாட்டுக்களைத் தங்கள் மீது சுமத்துகின்றன என இலங்கையின் அரச தரப்பு பிரதிநிதி ரஜீவ விஜேயசிங்க கேள்வியெழுப்பியுள்ளார். அமெரிக்காவின் தீர்மானம், இலங்கையின் இறையாண்மைக்குள் தலையிடுகின்ற விடயமெனவும் ரஜீவ விஜேயசிங்க இங்கு கூறியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின் வீட்டுத் திட்டம் முஸ்லிம்களுக்கும் வேண்டும்

## இந்தியத் தூதுவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 18

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சுமார் ஒரு லட்சம் முஸ்லிம் மக்களுக்கும் இந்திய அமைத்துக் கொடுக்கவுள்ள 50 ஆயிரம் வீடுகளில் ஒரு தொகுதியை ஒதுக்கவேண்டும் என்று முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய 15 பேரடங்கிய குழு இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தாவிடும் கோரிக்கை விடுத்துள்ளது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம் பௌஸி ரிசாத் பதியுதீன், ஏ.எல்.எம் அதாவுல்லா, பிரதி அமைச்சர்கள் ஏ.ஆர்.எம் காதர், பஷீர் சேகுதாவூத், பைசல் முஸ்தபா நாடாளுமன்ற உறுப்பினர்கள் பைஸர் காஸிம், எம்.எஸ் தௌபீக், எஸ்.எம்.அஸ்வர், எம்பி பாரூக், ஏ.எச்.எம் அஸ்வர், எச்.எம்.எம் ஹரிஸ், ஐ.தேக நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஸீம் ஆகியோர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் புத்தளத்திலும் நாட்டின் வேறு பல பாகங்களிலும் தற்காலிகமாக வசித்து வருகின்றனர். வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அனைவரும் வடக்கில் மீளக் குடியமர்த்தப்படவில்லை. இந்த நிலைமை வடக்கில் இருந்து முஸ்லிம்களை துடைத்தழிக்கும் புலிகளின் கொள்கையாக அமைந்துவிடும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கு முஸ்லிம்களின் உரிமை குறித்து எந்தவொரு மனித உரிமை அமைப்பும் கரிசனை செலுத்தவில்லை. இடப்பெயர்வுக்கான காலப் பகுதியை வைத்து மக்களை புதிய மற்றும் பழைய இடம் பெயர்ந்தோர் என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளுக்கான நிறுவனம் வகைப்படுத்துகின்றது.

இடம்பெயர்ந்த அனைவரும் சமத்துவமாக நடத்தப்படுவர் என்ற இலங்கை அரசின் கொள்கைக்கு இது முரணானது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(ஒ-15)

# கத்திக்குத்தில் முடிந்த ஓட்டோ சாரதிகளின் வாய்த் தர்க்கம்

## குத்தியவர் கிளிநொச்சிப் பொலிஸில் சரண்

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சியில் ஓட்டோ சாரதிகளுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக் குத்தில் முடிவடைந்தது. இதில் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்கானவர் கிளிநொச்சிப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இதில் விவேகானந்த நகர், கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லத்துரை செல்வநாயகம் (வயது 34) என்பவரே கத்திக் குத்துக்கு இலக்கானார்.

கத்தியால் குத்தியவர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் உள்ள ஓட்டோ தரிப்பிடத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள ஓட்டோ தரிப்பிடத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட முறுகலைஅடுத்து இந்த கத்திக் குத்துச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி ஓட்டோ சங்கத்தின் கீழ் உள்ள இந்த இரண்டு தரிப்பிடங்களைச் சேர்ந்தவர்களுக்கும் நீண்ட நாள்களாக முரண்பாடு இருந்த வந்த நிலையில் நேற்று அது கத்திக் குத்தில் முடிந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ -10-6)

**வீடு வாடகைக்கு உண்டு**

இல. 17, பிரப்பன் குளம் வீதி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 0774322923, 0112520158, 0777718736

**வெளிவந்துவிட்டது**
**வெற்றித்தேர்வு**
தரம் - 5 1, 2, 3 - தரம் - 4 1 2
புத்தகசாலைகளுக்கான வெளியீடுகள் இன்றே பெற்றுக் கொள்ளலாம். கிடைக்கும் இடங்கள்
பூபாலசிங்கம் - யாழ். நகர் - துர்க்கா - சுன்னாகம்
K.P.K. - வவுனியா - ஜோதி - மன்னார்
அறிவு நதி - கிளிநொச்சி - அருள்நாயகி - கொடிகாமம்
பாக்கியா - கோக்குவில் - யாழ். புத்தக நிலையம் - மல்லாகம்
தொடர்புகளுக்கு 0212229016, 0776388471, 0773126807

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980ஆம் ஆண்டு பிறந்த சதய நட்சத்திரம், உதயத்தில் செவ்வாய் குற்றம் உள்ள (பாவகிரகம் 104) மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு - 0772961459

**தேவை**
தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றுக்கு அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை
தொடர்புகளுக்கு- 0771372751

**வெளிவந்துவிட்டது**
யாழ். முன்னணி ஆசிரியர்களின் தயாரிப்பில் பிரபல அக்கடமியின் வெளியீடாக
தரம் 4 முதல் O/L வரை அனைத்துப் பாடங்களுக்குமான
முதலாம் தவணை வினாப்பத்திரங்கள் வெளிவந்துவிட்டன. இன்றே பெற்றுக்கொள்ள முடியும்.
பூபாலசிங்கம் - யாழ். நகர்

## மரண அறிவித்தல்



### குமாரசுவாமி துரைராசா

(பண்டிதர், ஆசிரியர் - யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி)

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசுவாமி துரைராசா (பண்டிதர், ஆசிரியர் - யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி) 16.03.2012 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், நவரத்தினம் - சிவகங்கை தம்பதியரின் அன்பு மருமகனும் மற்றும் வருதினிதேவியின் அன்புக் கணவரும், தேனுசனின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் மற்றும் கோகிலா, திலகவதி (இளைப்பாறிய வைத்திய அதிகாரி), சரஸ்வதி (ஆயுள்வேத வைத்தியர்), காலஞ்சென்ற ஞானேஸ்வரியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராசலிங்கம் மற்றும் கோபாலரட்ணம் (இளைப் பாறிய இலிகிதர்), சக்திவேல் (ஆயுள்வேத வைத்தியர்), ஜெயராச சேகரம் (இளைப்பாறிய மின்சாரசபை உத்தி யோகத்தர்), சாந்தகுமாரி, ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகுமாரி, உதயகுமாரி, பிரதீபன், துஷ்யந்தி (வைத்திய அதிகாரி, யாழ். போதனா வைத்திய சாலை), நிஷாந்தி, சைலா, திருச்செல்வன், சத்தியா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2012) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் (3ஆம் கட்டை, ஞானபாஸ்கரோதய சங்க வீதி, கல்வியங்காட்டு) நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

**செங்கல் விற்பனைக்கு**
அத்திவார கற்கள், 1 ½ அங்குல கருங்கல் சல்லி, 1 அங்குல கருங்கல் சல்லி, 3/4 அங்குல கருங்கல் சல்லி, ½ அங்குல கருங்கல் சல்லி,
சல்லி கற்கள்
நிலப்பதிப்புக் கற்கள்
பல வடிவங்களில் பல்வேறு அளவுகளில் நிலப்பதிப்புக் கற்கள் மற்றும் பூகற்கள் (Grill) விற்பனைக்கு உண்டு.
யாழ் மற்றும் வன்னி பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யப்படும்
பிரணவன் என்ரபிறைசஸ்
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 3818799

**இந்தியா செல்லும் பயணிகளுக்கு**
கொழும்பு–சென்னை 1600/= RTN
NATION POPULAR TRAVELS & TOURS
Head office #16 ½, E.S. Fernando Mawatha, Colombo – 06
Hotline: +94 114 65 1199 Tel : +94 114 37 53 57 Fax :+94 114 50 55 32
HNB Special Offer for Credit Card holders
Branch: #82 பிறவுன் வீதி யாழ்ப்பாணம் (நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக)
airtel ஏயார்டெல் சிம் இலவசம் இந்தியா செல்லும் பயணிகளுக்கு
அனைத்து விதமான நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களையும் பெற அழையுங்கள்
Hotline : 0214 920 920

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
O/L DAY CLASS (8.30 - 2.00) பிரிவு - 1 (Mon to Fri)
* பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கும் பாடசாலை செல்லாத மாணவர்களுக்குமான பிரிவு
* இம்முறை பிரிவு 6 மட்டுமே
* பிரிவு 1 ஆரம்பமாகவுள்ளது.
* தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும்
* பிரிவு 1 இல் 60 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி
* அனுமதிகளை அலவலகத்தில் உறுதிப்படுத்தவும்.
* ஆரம்பத் திகதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
யாழில் O/L Day Class இங்கு மட்டும்

**வின்றிச்**
10 வரப்பிரசாதங்களுடன் ஐஸ்கிறீம் இயந்திரம்
50,000/- மேல் மாத வருமானம்
• சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
• இலவச பயிற்சி
• விற்பனையின் பின் சேவை
ஒரு வருட உத்தரவாதம்
விலை ரூ 99,000/- இல் இருந்து புத்தம் புதியது
WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.
தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 477 4782

**BIT** Call : 0776577359
ஆரம்பம் Semester 2, 4, 6
BIT கல்வித்துறையில் தொடர்ச்சியான 10 வருட அனுபவம்
5 year past papers
100% pass rate Free Books / CD
Mr R.Kumaran-B.Sc. MIS
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m

**பணியாளர்கள் தேவை**
யாழ் நகரில் உள்ள வியாபார விற்பனை நிலையத்துக்கு கீழ் காணும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.
★ முகாமையாளர்
★ காசாளர்
★ சிட்டை எழுதுநர்
★ பணம் வசூலிப்பவர்
★ சிற்றூழியர்கள் - (வாகனத்தில் பொருள் ஏற்றி இறக்கல்)
★ சாரதிகள்
மேற்படி பணிநிலைகளில் முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பிக்கும் பணிநிலையுடன் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு கீழ்காணும் முகவரிக்கு எதிர்வரும் 25.03.2012 இற்கு முன்னர் சுயவிபரக் கோவையை அனுப்பிவைக்கவும்.
விளம்பர இல.4236
மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
Chartered Accountancy
CAB-I & CAB-II
Minimum Requirement :- GCE A/L 3 Passes
விரிவுரைகள் ஆரம்பம் - 17-03-2012 சனி
BATCH 1- sat & Sun 10.00-2.00pm TAMIL MEDIUM
BATCH 11- sat & Sun 8.00-1.00pm ENGLISH MEDIUM
வங்கியியல் கற்கைநெறிகள்
CBF & DBF
BATCH 1- sat & Sun 07.00-2.00pm TAMIL MEDIUM
BATCH 11- sat & Sun 07.00-2.00pm ENGLISH MEDIUM
BATCH 111- sat & Sun 11.00-5.00pm TAMIL MEDIUM
அடிப்படைத்தகமைகள்
G.C.E.( O/L) 06 PASSES with 05 Credits including Maths/Commerce & Accounts and Language (Tamil/English)
விரிவுரைகள் ஆரம்பம் 24-03-2012
Further Detail, Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382/0212229149

**STUDY IN UK**
AFTER GCE O/L GCE A/L what next?
உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்
March/April Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்
• ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
• பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
• 4 வருட visa உத்தரவாதம்
• ஒரு மாதத்தில் பயணம்
• 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
• GCE(O/L) தகமை போதுமானது
• இலவச IELTS வகுப்புகள்
HOTLINE : 021 7538395 / 021 2227230 011 7 555511/14
EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



கடலாடி
சின்ரவத்ரின் விமத்தது
ச(க)ாட்சிகள்

**06**



சிக்கித் திணறும்
இலங்கை

**07**



பொல்லாத '......'!

**02**




சச்சின் ஒரு
சகாப்தம்

**23**



இறுதியாட்டம் 22 இல்

**21**


# சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
01

உதயன் 18 மார்ச் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# இருளில் எழும் கொடுங்கனவு


■ *ஓாண்யன்*

உள தா நிறத்து மாலையை அணிந்தபடி எக்காளச் சிரிப்போடு வந்து கொண்டிருக்கிறார் ஜனாதிபதி. அவர் கைகளில் சிங்கக்கொடியும், பௌத்த கொடியும். எங்கும் வெற்றியின் ஆர்ப்பரிப்பு. காலிமுகத் திடல் கடல்கூட அலைகளால் ஆர்ப்பரித்து தன்வெற்றியை கொண்டாடி மகிழ்கிறது. அலைகளுக்குப் போட்டியாக அதன் அருகே இருந்த நட்சத்திர விடுதியில் குருதி நிறத்திலான மதுபானம் ஒன்றை கிண்ணங்களில் ஏந்தியபடி நிறையக் கனவான்கள். அவர்களின் நடுநாயகமாக அமைச்சர் பீரிஸ். வாத்தியங்கள் சுதியை இன்னும் ஏற்றுவதற்காக உச்சஸ்தாயியில் முழங்கத் தொடங்கின்றன. வாய் நிறையச் சிரிப்போடு வரும் ஜனாதிபதி சர்வதேச கூட்டங்களில் மாலை மரியாதையோடு உரை நிகழ்த்துகிறார். பிரிட்டன் மகாராணியோடு மகிழ்வோடு உரையாடியபடி கைலாகு கொடுக்கிறார்.

இந்த நேரத்தில் குறுக்கிடுகிறது எல்லோரும் மறந்துபோன சாம்பல் மேட்டின் ஒப்பாரி ஒன்று. காயங்களின் வலியோடு "அம்மா!" என்று எழுகின்ற அந்த ஒற்றைத் துயர் ஒலி ஒரே கணத்தில் எல்லா ஆரவாரங்களையும் மிஞ்சி எழுகிறது. இன்னொரு புறத்தில் எல்லோருமே கைவிட்டுப்போன இடம் ஒன்றில் தனித்திருக்கும் இரு குழந்தைகளின் உடலங்கள் மீது சொந்தம் கொண்டாடி மொய்த்தபடி துக்கம் கொண்டாடுகின்றன இலையான்கள். இருளில் எழுகிறது நீதியின் குரல்.

"இலங்கையில் இறுதிப்போரில் கொல்லப்பட்ட 40 ஆயிரம் பொதுமக்களின் உயிர்களுக்கும் நீதி கிடைக்குமா? இல்லாவிட்டால் அந்தக் கொலைகள் தண்டிக்கப்படாத குற்றங்களாகும். உலகின் மனச்சாட்சியில் இருந்து மறைந்து போகும் நினைவுகளாக மாறுமா?" கேள்வியோடு தேய்ந்துபோகிறது அந்தக்குரல்.

சனல்-4 வெளியிட்ட 'இலங்கையின் கொலைக்களம்: தண்டிக்கப்படாத குற்றங்கள்' காணொலி



இப்படித்தான் முடிந்துபோகின்றது. ஏற்கனவே 2010 மார்ச் மாதம் சனல்-4 இலங்கையின் கொலைக் களங்கள் ஆவணப்படத்தை வெளியிட்டிருந்தது. அதில் உள்ளடங்கி இருந்த நிர்வாணக் கொலைகள் உலகை உறைய வைத்திருந்தன. இலங்கைக்கு எதிரான சர்வதேச ரீதியில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற குரலை இன்னும் அழுத்தம் பெற வைப்பதற்கும், உறங்கிக் கொண்டிருந்த ஏராளமான மனச்சாட்சிகளை தட்டி எழுப்புவதற்கும் இந்த ஆவணப்படத்தால் முடிந்திருந்தது. தற்போது ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணை அமெரிக்கா கொண்டு வந்துள்ள தருணத்தில் 'கொலைக் களங்கள்' காணொலியின் இரண்டாம் பாகத்தை வெளியிட்டுள்ளது சனல்-4.

ஏற்கனவே சனல்-4 வெளியிட்ட ஆவணப்படத்தால் எல்லா இடமும் சூடுபட்டிருந்த இலங்கை அரசுக்கு இரண்டாவது ஆவணப் படம் வெளிவரப்போகும் செய்தி 'பேதி குடித்த நிலையை' ஏற்படுத்தியிருந்தது. அரச தலைவருக்கும் சகோதரர்களுக்கும் அவர்களின் விசுவாசிகளுக்கும் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.

குற்றத்தின் பங்காளிகள் எல்லோருக்கும் வியர்வைத் துவாரங்களில் கூட பயத்தில் சிறுநீர் கசியத் தொடங்கியிருந்தது. அத்தோடு இரண்டாவது ஆவணப்படத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினதும் அவரது இளைய மகன் பாலச்சந்திரனதும் மரணங்கள் குறித்த திடுக்கிடும் மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டிருப்பதாக வந்த தகவல்களால் 'மஹிந்த அன்ட் கோ' வின் ஈரல் குலையை தீயவைத்துவிட்டது.

வியாழக்கிழமை விடிகாலையில் உலகின் எல்லாக் கண்களும் கொலைக்களத்துக்குச் சென்று மீண்டன. முதலாவது கொலைக் களத்தில் வெளியிடப்பட்டிருந்த நிர்வாணப்படுகொலைகள் உள்ளிட்ட காட்சிகள் இரண்டாவதிலும் இடம்பெற்றிருந்தாலும் புதிதான சில காட்சிகளும் புகுத்தப்பட்டிருந்தன. அவற்றில் முக்கியமானது புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனின் உடலில் சன்னங்களால் ஐந்து இடங்களில் துளையிட்டு காட்டேரிகள் இரத்தம் குடித்த காட்சிதான். படையினரிடம் பாதுகாவலர்களுடன் சரணடையச் சென்றபோது அந்தப் பாலகன் மிகக் கொடூரமாக மிக நெருங்கிவந்த காட்டேரிகளின் சுடு கலன்களில் இருந்து புறப்பட்ட ரவைகள் மூலம் வீழ்த்தப்பட்டிருந்தான். பாலச்சந்திரனின் பாதுகாவலர்களும் கண், கை என்பன கட்டப்பட்டு வெடி வைத்து சிதைக்கப்பட்டிருந்தார்கள். கொலையின் பின்னர் அதை கைத்தொலைபேசியில் உடலங்களைப் பதிவு செய்த காட்சியே இரண்டாவது கொலைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

5 ஆயிரம் 6 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட உயிரிகளின் சிறு எலும்புத் துண்டை வைத்தே அவற்றின் தோற்றம், வாழ்வியல் முறை, அழிவடைந்தமைக்கான காரணம் என்பவற்றை அக்குவேறு ஆணிவேறாக விளக்கமளிக்கும் அளவுக்கு தொழில்நுட்ப வளர்ச்சி உச்சாணிக் கொம்புக்கு போய்விட்ட இந்தக் காலத்தில் இருளில் புதைந்துபோன மரணம் ஒன்றில் கடைசிக் கணத்தில் பதிவு செய்யப்பட்ட காணொலி கிடைத்துவிட்டால் சும்மா இருக்குமா சனல்-4?

போரியல் நுட்பங்களிலும் தடயவியல் துறையிலும் தேர்ந்தவரான பேராசிரியர் டெரிக்பௌண்டர் மூலம் குறித்த காணொலியை அலசி ஆராய்ந்து பாலச்சந்திரனின் மரணம் எப்படி நேர்ந்திருக்கலாம்? என்பதைக் கண்முன்னே ஆதாரங்களுடன்பட்டியல் இடுகின்றது இரண்டாவது கொலைக்களம்.

இதேபோன்று புலிகளின் தலைவர் பிரபாகரனின் உடலம் என்று இலங்கை அரசால் வெளியிடப்பட்ட காணொலிகள், புகைப்படங்கள் என்பனவும் ஆராயப்பட்டு 'அவரும் சித்திரவதையின் பின்னர் அண்மித்த இருந்த ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்' என்றும் இரண்டாவது கொலைக்களம் நிறுவ முற்படுகின்றது. சிறுவயதில் வசனங்கள் அற்ற படங்களை தந்துவிட்டு அதன் மூலம் ஒரு கதை சொல்லும் முறைமை பாடப்புத்தகங்களில் இருந்தது. அதைப் போலவே இப்போதும் படங்களை வைத்துக்கொண்டு பாடங்கள் சொல்லப்படுகின்றன.

தனியே பிரபாகரன், பாலச்சந்திரன் என்ற பெரிய விம்பங்களை மட்டுமே பேசாமல் சாதாரண மக்களின் சாவுகள் குறித்தும் அவற்றின் கோரங்கள் குறித்தும், பேசும் இரண்டாவது கொலைக் களத்தில் காட்சிக்குக் காட்சி பார்ப்பவர்களின் முகத்தில் தெறித்து ஒழுகுகின்றது குருதி. அனேகமாக எல்லாக் காட்சிகளிலும் ஒப்பாரிகள் குவிந்துபோய்க் கிடக்கின்றன. படம் முழுதும் சிதறுண்டு கிடக்கின்ற சடலங்களின் அனேகமானவை குழந்தைகளுடையவை. ஆனாலும் அவர்களைக் கொஞ்சிக் குலவியிருந்த பெற்றோர் பக்கத்தில் இல்லை. தனியே சிதறிக்கிடக்கும் பொருள்கள் இடையே யாராலும் தீண்டப்படாத பொருள்களாக குழந்தைகளின் சடலங்கள் பெருகியபடியே உள்ளன.

குழந்தைகளின் அல்லது உறவுகளின் இழப்புகளால் எழும் துயரொலிகள் போரையும், கடவுளர்களையும் சபித்துக்கொண்டே இருக்கின்றன. தங்களது குழந்தைகளை உயிர்ப்பித்துத் தருமாறு கெஞ்சுகின்றன. ஆனாலும் எல்லாக் கேவுதல்களும் அர்த்தமற்று மீண்டும் குருதிக்குள்ளேயே சோர்ந்து விழுகின்றன. சாவில் இருந்து தப்பிப்பதற்காக இரண்டாவது கொலைக்களத்தின் எல்லாக் காட்சிகளிலும் மக்கள் ஓடிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் சாவு அவர்களைவிட வேகமானது. அவர்கள் ஓடிக் களைத்து கொஞ்சம் மூச்சுவிட எத்தனிக்கும் சமயத்தில் எல்லோரையும் பார்த்து எகத்தளமாகச் சிரித்தபடி தன் வேலையை மரணம் செய்துவிட்டுப் போகின்றது.

இசைப்பிரியாவின் குதறப்பட்ட உடல், குருதி குடிக்கப்பட்ட பின் வீசப்பட்டுக் கிடக்கும் பாலச்சந்திரன், தலையில் வெடிவாங்கி வீழ்ந்து கிடக்கும் இனங்காணப்படாத அப்பாவிகள், நிர்வாணப்படுகொலையில் சிக்கியோர் என்போரின் மரணங்கள் எல்லாமே ஒத்த தன்மையானவை என்பதையும் இரண்டாவது கொலைக்களம் நிரூபித்திருக்கிறது. செருகிக் கிடக்கும் கண்கள், மிக நெருக்கமாக நின்றவர்கள் நடத்திய வெறித்தனமான துப்பாக்கி வேட்டை, சதுப்பு நில புவியியலைக்கொண்ட கொலைக் களம், களையப்பட்டிருக்கும் ஆடைகள், கொலை கைபேசியில் பதிவு செய்தல் என நிறைய ஒற்றுமைகள் எல்லா மரணங்களிலும் ஒளிந்திருக்கின்றன.

[பார்க்க பக்கம் 23]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இன்னும் ''தாதா''தான் மேர்வின்

பழைய ''தாதா''வாகிப் போன அமைச்சர் மேர்வின் அண்மைக் காலமாக அதிகம் வாய் திறப்பதில்லை. சில தினங்களுக்கு முன்னர் விகாரை ஒன்றுக்கு 'சில்' [இரவு முழுதும் பிரார்த்தனை செய்தல்] அனுஷ்டிக்கப் போயிருக்கிறார். இவர் போன நேரம்பார்த்து ஜனாதிபதியும் அதே 'சில்'லுக்காக அங்கு வந்திருக்கிறார். இதென்னடா சில்லெடுப்பு என்று நினைக்காமல் மேர்வின் ஜனாதிபதியிடம் ஓடிப்போய் தனது விசுவாசத்தைக் காட்ட முயன்றிருக்கிறார்.

ஜனாதிபதியோ, தனது கிரக நிலைக் கோளாறால் கொழும்பு முதல் ஜெனிவா வரை படும் சிக்கலில் இருந்து விடுபடுவதற்காகவே 'சில்' எடுக்க அந்த விகாரைக்கு வந்திருந்தாராம். இதில் முக்கியமான விசயம் என்னவென்றால், அன்றைய தினம் ஜனாதிபதி 'சில்' எடுக்க வருகிறார் என்று நன்கு தெரிந்து கொண்டேதான் மேர்வின் அந்த விகாரைக்குப் போனார் என்பதுதான். என்ன இருந்தாலும் முன்னாள் ''தாதா'' இல்லையா! அதனால் துப்பு நன்றாகவே துலக்குகிறார் என்கின்றன ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள்.



## நாய் கலைக்கும் டொலர் நோட்டு

டொலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு கீழிறங்க இறங்க விலைவாசி வானுலகும் தாண்டி எங்கோ பறந்து கொண்டிருக்கிறது என்று மக்கள் எல்லாம் அங்கலாய்த்துக் கொண்டிருக்கையில் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரின் மகன் ''சும்மா டொலர் நோட்டுக்களை அள்ளி எறிகிறார்'' என்று பெருமூச்சு விடுகிறார்கள் அவரது உறவினர்கள்.

''நாயை விரட்டுவதானால்கூட டொலர் நோட்டால் எறிந்துதான் விரட்டுவார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்'' என்கிற அளவில் அவரது விளையாட்டுக்கள் இருப்பதாக அந்தச் சொந்தக்காரர்கள் செய்தியாளர்களின் காதுகளைக் கடிக்கிறார்கள்.

அண்மையில்கூட இந்த அமைச்சரின் மகன், பத்தாயிரம் ரூபா கூடப் பெறாத இரத்தினக் கல்லை 5 லட்சம் ரூபா கொடுத்து வாங்கினார் என்பதும் கூடுதல் தகவல்.

## சரிவராத கணக்குகள்



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து அமைச்சராகிவிடத் துடித்துக் கொண்டிருக்கிறார். அவரது துடிப்புக்கு பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவும் தூபம் போட்டுக்கொண்டிருக்கிறார்.

துமிந்த சில்வா திரும்பி வருவாரா இல்லையா என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில், சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பட்டியலில் அடுத்து கூடுதல் வாக்குப் பெற்றிருப்பவரான சந்தன கத்திர ஆராய்ச்சியே வர வேண்டும். ஆனால் அவர் கொலை வழக்கு ஒன்றில் தொடர்புபட்டிருக்கிறார். அதை வைத்து எப்படி அவரை நாடாளுமன்ற உறுப்பினராகாமல் தடுக்கலாம் என்று போகொல்லாகம தரப்பு கடுமையாகப் பரிசீலித்து வருகிறது.

இருந்தாலும் சந்தனவுக்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆதரவாக இருக்கிறார். இதனால் போகொல்லாகம தரப்பு நினைப்பது போல் நடப்பது அவ்வளவு சுலபமானதல்ல என்கின்றார்கள்.

## ஜோன்ஸனின் ஜோக்




கேலிச் சித்திரம் வரைபவர்களைப் பொறுத்தவரையில் மிகப் பிரியமானவர் அமைச்சர் பந்துல குணவர்த்தன. அவரைத்தான் அவர்கள் அடிக்கடி வரைவார்கள். அவருக்கு அடுத்து அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ அவர்களின் விருப்புக்குரியவர். இவர் எதைத் தொட்டாலும் அது பிரச்சினையில்தான் போய் முடியும் என்பதுதான் அதற்குக் காரணம்.

இப்படித்தான், மரக்கறிகளை 'பிளாஸ்டிக் கூடை'யில் கொண்டு செல்ல வேண்டும் என்ற இவரது திட்டமும் பலத்த பிரச்சினைகளைச் சந்தித்தது. இப்போது நெல்லுக்கு உத்தரவாத விலை கொடுத்து வாங்கும் இவரது திட்டமும் சரிவரச் செயற்படவில்லை என்று பிரச்சினை எழுந்துள்ளது.

இதனால் கடுப்பான அனுராதபுரத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர், ஜோன்ஸ்டன் பெர்னான்டோவைக் கடுமையாக விமர்சித்தார். ஆனாலும் மனுசன் அதற்காகக் கோபப்பட்டு அலட்டிக் கொள்ளவில்லை. ''நீ என்னைத் திட்டினால் பதிலுக்கு நான் உன்னைத் திட்டுவேன். இந்தத் திட்டுக்களால் மக்களுக்கு அரசு மீது கோபம் வராது. உன் மீதுதான் கோபம் வரும்'' என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார்.

ஒருவேளை இப்படித்தான் எல்லாமும் நடக்கிறதோ என்று இப்போது பல ஊடகவியலாளர்களுக்குச் சந்தேகம். ஏனெனில் சம்பிக்க ஒன்றைச் சொல்ல வாசுதேவ அதற்கு மறுப்புச் சொல்ல என்று அடிக்கடி இப்படித்தானே சில விடயங்கள் நடக்கின்றன.

## நான் 'அங்கிள்' அவர் 'தாத்தா'

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் மகனது திருமண வரவேற்புவிழா அண்மையில் கொழும்பில் நடந்தது. திருமணம் அமெரிக்காவில் நடந்தபடியால் இந்த ஏற்பாடு. அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, அதாவுட செனிவிரத்ன, மேர்வின் சில்வா போன்று மிகச் சிலருக்கே அழைப்பு வழங்கப்பட்டது. விழாவில், பஸிலைச் சுட்டிக்காட்டி அவரது மனைவி புஷ்பாவிடம் ''நான் இவரைவிட இளமையாக இருக்கிறேன்'' என்று மஹிந்தர் கூறினார். அது ஏன் என்று புரியாது புஷ்பா மிரள, ''குடும்பத்திலுள்ள சிறுவர்கள் எல்லாம் என்னை 'அங்கிள்' என்றும் அவரைத் 'தாத்தா' என்றும்தானே கூப்பிடுகிறார்கள்'' என்று கூறிக் கடகடவெனச் சிரித்தார் மஹிந்தர். பக்கத்திலிருந்த பஸிலும் மெல்லச் சிரித்து வைத்தார். வேறென்னதான் செய்யமுடியும் அவராலும்.

## பட்டம் பெறத் துடிக்கும் எம்.பி.

தான் இடைநடுவில் கைவிட்ட பட்டக் கல்வியைத் தொடர ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஹந்துன் நெத்தி முயற்சித்து வருகிறார். அதற்கான அனுமதியை அவர் கட்சியிடம் இருந்தும் பெற்றுள்ளார். நீண்ட காலமாக இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இந்த விடயம், அவர் பல்கலைக்கழகத்துக்குச் சென்று விசாரித்ததை அடுத்து படக்கென வெளியே வந்துவிட்டது. அந்தளவுக்கு ஜே.வி.பி. என்ன செய்கிறது என்பதை அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்கிறார்கள் கட்சிக்காரர்கள்.

## பொல்லாத '......'!

ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிப்பதற்கு முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவின் தலைவர் இரா. சம்பந்தனை அலரி மாளிகைக்கு அழைத்து உயர் மட்டம் பேசியது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அந்தச் சந்திப்பில் உலக நாடுகளைச் சமாதானப்படுத்தும் விதத்தில் 'அவர்' தெரிவுக்குழு விடயத்தைக் கேட்க, சம்பந்தர் பிடிகொடுக்கவில்லை. பதிலுக்கு அதற்கு வருவதாக இருந்தால் தமிழர்களுக்கு என்ன தருவீர்கள் என்பதை எழுத்தில் தாருங்கள் என்று பேரம் பேசி இருக்கிறார்.

அதற்கு 'அவர்' தயாராக இல்லாததனால் பேச்சு இணக்கப்பாடானதாக முடியவில்லை. சந்திப்பு முடிந்து எழுந்து போனபோது, ''இந்தக் கிழடு பிரபாகரனைவிட மோசமாக நடக்கிறது. எனக்குக் கோபம் வந்தால் என்ன நடக்கும் என்று இதற்குத் தெரியவில்லை. சொல்வதைக் கேட்காவிட்டால் விரைவில் என்ன நடக்கும் என்று தெரியும்'' என 'அவர்' கத்திக்கொண்டே சென்றதை அங்கிருந்த பணியாளர்கள் கேட்டிருக்கிறார்கள்.




'அவர்' கத்தியது சம்பந்தருக்குக் கேட்டிருக்க வாய்ப்பில்லை என்று அவரைப் பற்றி நன்கு தெரிந்த அங்கிருந்தவர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் 'அவரை' கரித்துக் கொட்டும் ஆங்கிலத் தளம் ஒன்று இதனை வெளியிட்டுவிட்டது. அது பற்றிக் கேட்டவர்களிடம் சம்பந்தர் ஐயா, 'அவர்' இருந்த மூட்டில் அப்படிச் சொல்லியிருக்கக்கூடும்தான் என்று கூறியிருக்கிறாராம். என்றாலும் அடுத்த முறை சந்திக்கும்போது ''நீங்கள் அப்படிக் கூறினீர்களா?'' என்று கேட்காமல் விடப் போவதில்லை என்றும் சொல்லி வைத்திருக்கிறாராம்.

தமிழனாக இருந்தாலும் சம்பந்தர் ஐயாவின் வயதுக்காகவது ஒரு மரியாதை தரவேண்டாமா?

## வருத்தம்

என்னதான் இருந்தாலும் அமெரிக்கா மீது கூட்டமைப்பின் முக்கிய தலைகள் இப்போது வருத்தத்தில் இருக்கின்றன. ஜெனிவாவில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மான வரைவு எதிர்பார்த்தளவுக்கு வீரியமாக இல்லை என்பதே காரணம். அண்மையில் வந்த அதிகாரியிடமும் வெளிப்படையாக இந்த விசனம் பதிவு செய்யப்பட்டிருக்கிறதாம். இந்த நிலையில் இந்தியாவையும் 'சப்போர்ட்' பண்ணு என்று வலியுறுத்தப்போக, தாங்கள் 'சப்போர்ட்' பண்ணுறத்துக்காகவே இருக்கிற பிரேரணையை டில்லி இன்னும் நீர்த்துப் போகச் செய்துபோடுமோ என்ற பயம் இப்ப கூட்டமைப்புத் தலைகளுக்கு வந்திருக்கு. அதனால் புதுடில்லிக்குப் போய் மன்மோகனைச் சந்திக்கிற திட்டத்தை மெல்லக் கைவிட்டிட்டினம் போலக் கிடக்கு. அங்க போய் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கு ஆகாமல் இருந்தாலே பெரிசு என்று நினைக்கினம். ஆனாலும் ஜெனிவாவில் தீர்மானத்தை நிறைவேற்றிப்போடுறத்துக்கு கடுமையாக பின்கதவு வேலையள் நடந்துகொண்டுதான் இருக்குதாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org








"ஒரு வெடக்கோழி தாய்க் கோழியான கதை" என்று வர்ணித்திருக்கிறது ஆங்கில இணையத்தளம் ஒன்று. முன்னாள் உலக அழகி, பொலிவூட் ஹொலிவூட் கனவுக்கன்னி என்று நூலிழை இடையும் மெல்லிடை நடையுமாக கலக்கித் திரிந்த ஐஸ்வர்யா ராய், தனது முதல் குழந்தையைப் பெற்றெடுத்த பின்னரும் கர்ப்பத்தின் போது போட்ட மேலதிக 'சதை'யைக் குறைக்கவில்லை என்பதால் வந்த ஆத்திரத்தில்தான் அந்த இணையத்தளம் அப்படி வர்ணித்திருக்கிறது. குழந்தைக்கு ஒரு வயதாகும் வரை திரைப்படங்களில் நடிப்பதில்லை என்று முடிவெடுத்துவிட்டதால் உடம்பைப் பற்றிக் கவலைப்படாமல் விட்டுவிட்டார் ஐஸ்வர்யா. ஆனால் சதை போட்ட அவரைப் பார்க்க முடியாமல் ரசிகர்கள்தான் அல்லாடுகிறார்கள். அண்மையில் உறவினர் வீட்டுக் கலியாணம் ஒன்றுக்கு அவர் வந்ததிலிருந்துதான் இதுவெல்லாம்.





சீனாவின் தென்பகுதியில் அந்த நாட்டு மற்றும் ஆஸ்திரேலிய வரலாற்றாய்வாளர்கள் நடத்திய ஆய்வுகளில் புதிய மனித இனத்துக்குரிய மண்டையோடு மற்றும் சில எலும்பு எச்சங்களைக் கண்டெடுத்துள்ளனர். நாம் ஏற்கனவே அறிந்திருந்த மனித இனங்களைவிட இந்த இனத்தவர்களின் தாடைகள் மிக உறுதியானவையாக இருக்கின்றன என்று ஆய்வாளர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்களது அனுமானத்தின்படி வரையப்பட்ட படமே அருகிலிருப்பது. அனைத்து ஆய்வாளர்களாலும் இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆபிரிக்காவில் இருந்து வெளியேறி முதலில் நாகரிகமடைந்த மனிதர்களாக இவர்கள் இருக்கலாம் என்று சிலர் வாதிடுகிறார்கள். வேறு சிலரோ இது ஏற்கனவே உள்ள மனித இனத்தைச் சேர்ந்தவர்களுடையதுதான்; மனிதர்கள் எல்லா வடிவங்களிலும் இருந்திருப்பார்கள் என்கிறார்கள். எனினும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள எலும்பு எச்சங்கள் 11,500 வருடங்களுக்கு முற்பட்ட கற்காலத்துக்கு உரியவை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அந்த மனிதர்களின் மூளையின் அளவும் அந்தக் காலத்தில் வாழ்ந்த ஏனையவற்றுடன் ஒப்பிடுகையில் பெரிதாக இருப்பதாகவும் கூறுகிறார்கள். தட்டையான முகம், அகன்ற மூக்கு, முகவாய் இல்லாத அளவுக்கு முன்துரித்தி நிற்கும் தாடை, பெரிய கண்கள் என்பன இந்த மனித இனத்துக்குரியவையாக இருந்துள்ளன.




சில மனிதர்கள் பல சமயங்களில் தமது மனிதத் தன்மையை இழந்துவிடுகிறார்கள். மிருகங்களாகி அவர்கள் புரியும் கொடுமைகளால் பெரும்பாலும் பச்சிளம் பாலகிகளின் மொத்த வாழ்க்கையும் முழுதாகச் சீர்குலைந்து போகும் சோகம் நெடுந்தீவில் போன்றே ஹெய்ட்டியிலும் அரங்கேறி இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அந்த நாட்டில் பூகம்பம் ஏற்பட்டது. பலர் இறந்துபோக எஞ்சியிருந்தவர்கள் உயிர்களைக் காக்க முகாம்களை நாடிய, பெற்றோரை அல்லது உறவுகளை இழந்து தனிமைப்பட்ட பெண்களைக் குறிவைத்து வேட்டையாடி இருக்கிறது ஒரு காமக் கும்பல். பதின்மவயதில் இப்படி வாழ்வு குலைக்கப்பட்ட பெண்களில் பலர் இன்று கைகளில் குழந்தையுடன் வாழ வழி தெரியாது அலைந்து கொண்டிருக்கிறார்கள். பூகம்பத்தில் இறந்த தாயை வீட்டுத் தோட்டத்தில் புதைத்துவிட்டு முகாமுக்கு வந்து கொண்டிருந்தபோது, தலையை பொலித்தீன் பையினால் மூடி இறுக்கிவிட்டு மரியா கேனா மிச்சேலை (படத்தில் இருப்பவர் அவரல்லர்) கொடூரர்கள் சிதைத்தபோது அவருக்கு வயது 19 மட்டுமே.



ஒரு வழியாகத் தங்கள் 5 வருடக் காதல் வாழ்க்கைக்கு முடிவு கட்டிக் கொண்டு இந்த வருட இறுதியில் திருமண வாழ்க்கைக்குள் நுழையப்போவதாக பொலிவூட் கனவுக் கன்னிகளில் ஒருவரான கரீனா கபூர் தெரிவித்துள்ளார். 2007 முதல் அவர் காதலித்து வரும் சயீப் அலி கானுடன் அவரது திருமணம் இந்த மாதத்தில் நடக்கும் என்று எதிர்வுகூறல்கள் இருந்து வந்தன. ஆனால் அப்படி ஒன்றும் தனக்கு அவசரமில்லை என்று கூறியிருக்கிறார் கரீனா. எனினும் தனது கனவு இந்த ஆண்டு இறுதிக்குள் நனவாகிவிடும் என்று மகிழ்ந்திருக்கிறார். காதலைப் பொறுத்தவரையில் தானும் ஒரு சாதாரண பெண்தான் என்பது அவரது கருத்து. வாழ்க்கையில் தான் ஒரு கதாநாயகி இல்லையாம்.



நாடே இல்லாமல் ஒரு விளையாட்டு அணி இருக்கின்றது என்றால் அது பலஸ்தீனத்து அணி மட்டும்தான். காத்மண்டுவில் நடைபெறும் ஆசிய உதைபந்தாட்டக் கோப்பைத் தொடரில் இம்முறை பங்கேற்கிறது. பலஸ்தீனம் ஒரு நாடாக ஐ.நாவில் இன்னும் அங்கீகரிக்கப்படாதபோதும் அது முதல் தடவையாக ஆசியக் கோப்பையில் விளையாடுகிறது.






ஜப்பானில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்துக்குப் பின்னர் எழுந்த ஆழி அலைகள் அந்த நாட்டைப் பந்தாடி ஓராண்டு நிறைவாகி உள்ளது. ஆழிப் பேரலையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டமைக்கும் பணியை ஜப்பானிய அரசு எவ்வளவு வேகமாகச் செய்து முடித்திருக்கிறது என்பதற்கு இந்தப் படங்கள் சாட்சியங்கள். மியாகியின் இஷோனோமாகி நகர் போரால் மோசமாகச் சிதைந்து போயிருப்பதையும் நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கும் புனரமைப்பு வேலைகளின் பின்னர் நகரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஜெரா

# கடலாடி நின்றவற்றின் வியத்தகு ச(க)ாட்சிகள்



புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவுக்கு முள்ளி வாய்க்கால் ஊடாகச் செல்லும் தெருவொன்றிருந்தது. 2002ஆம் ஆண்டுக்கு முன் அது செவ்வீதி. அதற்குப் பிறகு அது தார் வர்ணக் கலருக்கு மாற்றப்பட்டது. அந்த வீதியின் இடையில் மந்துவில் என்ற ஒரு கிராமம் இருந்தது. அந்தக் கிராமமும் வன்னியின் ஏனைய கிராமங்களைப் போல படுகொலை ஒன்றின் ஊடாகவே தனக்கான விளம்பரத்தைத் தேடிக்கொண்டது.

1999ஆம் ஆண்டில் மந்துவில் சந்தை மீது நடத்தப்பட்ட 'கிபீர்' தாக்குதலில் 50 மக்கள் பிணமாகினர். அப்போது வட இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து போரின் பெயர்வாளர்களாய் வந்த சனங்களுக்கு மந்துவிலும் இடமளித்தது. அதனால் தான் இப்படியான சாவுகளும் அதிகரித்தன. அதோடு மந்துவிலும் பிரபல்யமடைந்தது.

சமாதான காலத்தில் பெரிய வீடுகள் முளைத்தன. வீதிகள் அகலமாயின. வீதியோடு ஒட்டி நின்ற பாலை மரங்கள் எல்லாம் விரைவாகப் படுகொலை செய்யப்பட்டன. தார்வர்ணம் விரைவாகப் பூசப்பட்டது. மந்துவில் சந்தை விரைவாகக் காணமல் போனது. அந்த ஊரைத் தெரிந்த அனைவருக்கும் கீழ்வரும் விடயங்கள் ஞாபகமிருக்கும்.

மந்துவில் கடக்கையில் வரும் சிறு குளம். வாகனச் சாரதிகளுக்கு கட்டாயம் நினைவிருக்கும். ஏனெனில் அந்தக் குளத்தில் தம் வாகனங்களைக் குளிப்பாட்டாதவர்கள் கொடுத்து வைக்காதவர்கள். வாகனம் கழுவுவதற்கு அந்தச் சிறுகுளம் அவ்வளவு பிரபல்யம். அதற்கருகில் இடம்மாறிக் கொண்டேயிருக்கும் ஒரு பிள்ளையார் கோயில், தனிப் பனை, போராளிகளுக்கான நூலகம், எனது நண்பன் காதலிக்க முயற்சித்த மந்துவில் அழகியின் அழகான வீடு. (அவளைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு நாளும் மாலை ரியூசன் முடிந்த கையோடு மந்து வில் போய் அப்படியே ஆனந்தபுரம் கிருஷ்ணன் கோயிலடியால் சுற்றி வருவோம் - கிட்டத்தட்ட 20 கிலோ மீற்றர்கள்) கடற்புலிகளின் வாகன தரிப்பிடத் தென்னங்காணி, சில வெட்டைக் காணிகள், அதில் புதிதாக நடப்பட்ட இளந் தென்னம்பிள்ளைகள் இவை மட்டும்தான் மந்துவில் பற்றிய பொதுவான ஞாபகங்கள்.

அப்போது யாரும் நினைக்கவில்லை மந்துவில் நம்மை இவ்வளவு மோசமான நினைவுகளால் கொல்லுமென்று. நம் கடந்த காலத்தை அதிகமாக நேசித்த ஒவ்வொருவரையும் கிழித்துக் குதறி கொடுமைப்படுத்தும் நினைவொன்றை மந்துவில் இப்போது வைத்திருக்கின்றது. அது தமிழரின் ஆயுதங்கள் உலக நாடுகளின் துணையுடன் சிங்கள ஆட்சியாளர்களால் - ஒடுக்கு முறையாளர்களால் - கைவிடப்பட்டமைக்கான அடையாளங்களைக் காட்சிப்படுத்தியிருக்கின் றது.

குளத்தின் நடுவில் இப்போது பிரமாண்டமான வெற்றிச் சிலை எழுப்பப்பட்டுள்ளது. அந்த வெற்றிச் சிலையை சிங்கங்கள் காவல் காக்கின்றன. குளத்தின் அருகில் பரந்த வெளி உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த தென்னை மரங்களையும் வீடுகளையும் காணவில்லை. அவை இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னரே அழிந்துவிட்டன என்று சொல்லக்கூடிய வகையிலேயே சான்றுகள் காணப்படுகின்றன.

அந்த வெளி முழுவதும் ஆயுதக் கூடுகள் இப்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன - எல்லாம் கழற்றி சுத்தம் செய்யப்பட்டவை. பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு வியப்பை ஏற்படுத்தக் கூடியளவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. எத்தனை வகை ஆயுதங்கள்! சாதாரண பார்வைகளுக்கு இதுவரை உட்பட்டிருக்காத ஆயுத ரகசியங்கள்.

அங்கு காட்சிப்படுத்தப்பட்டவைகளில் பெரும்பாலானவை ஆயுத சந்தைகளில் விற்பனையாகாதவை. எந்த அமெரிக்க ஆங்கிலப் படங்களிலும் காட்டப்படாதவை. படங்களில் வரும் பல்வேறு ஆயுதங்களின் கலப்பினாலும் பிரசவமானவை.

எத்தனை அறிவு! எத்தனை தொழில் நுட்பம்! எத்தகு சிந்தனைகள்! ஒவ்வொன்றையும் பார்க்கும்போது வியக்காமல் நகர முடியவில்லை. இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு தோல்வி எப்படிச் சாத்தியமானது என்ற கேள்வியையும் பார்வையிடும் ஒவ்வொரு தமிழரும் முணுமுணுக்கின்றனர். இந்தப் பயங்கரமான ஆயுதக்காரரைத் தமது படையினர் வென்ற பெருமையை சிங்கள சுற்றுலாவிகள் சத்தமாய்ப் பேசிக் கொள்கின்றனர்.

எலும்புக் கூடுகளாய் கிடக்கும் ஆயுதங்களின் காவலாளிகளை கதாநாயகர்களாகப் பார்க்கின்றனர். அந்தச் சுற்றுலாவிகளுக்கு அது ஆச்சரியம். அதைப் பார்த்து தமிழர்கள் கழிவிரக்கம் கொள்ளத் தேவையில்லை. எமக்கும் அது பெருமைதான். எவனோ உற்பத்தி செய்த ஆயுதங்களைக் கொண்டு சண்டையிட்டவர்களுக்கு முன்னே, மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டு சொந்தமாக நாமே தயாரித்தவைகள் அவை என்று நாமும் மார் தட்டிக்கொள்ள முடியும். நெஞ்சின் ஓரமாய்க் குத்தும் மெல்லிய நெருஞ்சியைப் புறந்தள்ளிய படியே.

பெரும்பாலான பொதுசனங்களுக்கு அறிமுகப்பட்டிருந்த பரந்தாமன், வெண்ணிலா, வளர்மதி போன்ற கடற்புலிப் படகுகள் தரையில் நிற்கின்றன. இந்தப் படகுகளின் அறிமுகத்தை முல்லைத்தீவு மக்கள் அதிகம் அறிவர். 2004 ஆம் ஆண்டில் ஒரு நாள் கடற்புலிகளின் கடற் சாகசம் முல்லைத்தீவுக் கடலில் நடந்து கொண்டிருந்தது. வெண்ணிலா படகில் நின்றிருந்த போராளி படகின் வேகத்தால் உந்தப்பட்டுக் கடலில் விழுந்தான். அவனை கரையில் தயாராக இருந்த சனங்கள் காப்பாற்றினர்.

அந்த விறுவிறுப்பு ஆறும் முன்பே அடுத்த விறுவிறுப்பொன்று நடந்தேறியது. நடுக் கடலில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த மிதப்பத்தில் மாவீரர் தீபமேற்றப் பயணித்த கடற்புலித் தளபதி சூசை திடீரென ஏற்பட்ட சறுக்கலில் தவறி கடலில் விழுந்தார். அந்தக் கணத்தில் முல்லைத்தீவு மக்கள் அவரையும் காப்பாற்றினர். கரையில் நின்ற சனங்கள் புலிகளின் பெரிய படகுகளும் ஏனைய போராளிகளும் வரும் முன்னர் கடலில் குதித்து அவரைத் தம் தோள்களில் சுமந்து வந்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் சடுதியாகக் கரைக்குத் திரும்பிய முதலாவது தாக்குதல் படகு பரந்தாமன், இரண்டாவதாக வந்தது வெண்ணிலா. இதனாலேயே அந்தச் சாகசத்தைப் பார்த்தவர்கள் காட்சிப் பொருளாய்ச் செத்துக் கிடக்கும் இந்தப் படகுகளைத் தம் பொக்கிஷங்களாய் நெஞ்சில் பொத்தி நினைவு வைத்திருக்கின்றனர்.

ஆழிப்பேரலை இடர்வந்த போது சூசையும் அவருக்கு கீழ் செயற்பட்ட போராளிகளும் அந்த மக்களுக்கு தம் மனப்பூர்வமான நன்றிக்கடனை நிறைவேற்றியிருந்தார்கள். அதிக மக்களை மீட்டெடுத்திருந்தனர். இயக்கம் ஆயுதங்கள் தயாரிப்பது பற்றி சனங்களுக்கு சாடைமாடையாய்த் தெரியும். காதுகளுக்குள் மட்டும் இருக்கிற ரகசியங்களில் கட்டாயமானதொன்றாக அன்று அது இருந்தது. அப்படியிருந்த செய்திகளில் ஒன்றுதான் தலைவரின் மகன் "சமாதானம்" என்ற ஒரு பெரிய ஆயுதத்தை கண்டுபிடிச்சிருக்கிறாராம் என்பதும்.

"அது பெரிய சத்தமாக வெடிக்குமாம். அந்தத் தயாரிப்பில் ஈடுபட்ட பலருக்கு காது கேட்காமல் போய்விட்டதாம். பெரிய தண்டவாளத்தில தானாம் அது செய்திருக்கினம் இனி வரப் போற சண்டையில் அதைத்தான் பாவிக்கப் போகினமாம்" என்பது போன்ற பல கதைகளை நம் பாடசாலை இடைவேளை நேரங்களில் கதைத்திருக்கின்றோம். ஆனால் யாரும் அதை நேரில் கண்டதில்லை.

நாம் அறிந்திருந்த ஆயுத விடுப்புச் செய்திகளில் வந்த அடையாளங்களோடு மந்துவிலிலும் பிரமாண்டமானதொரு பீரங்கி இப்போது நிற்கின்றது. தண்டவாளத்தால் செய்யப்பட்டிருக்கின்றது. ஒரு மனித உயரத்தில் தயாரிக்கப்பட்ட குண்டுகள் பக்கத்திலேயே வைக்கப்பட்டிருக்கின் றன. "சமாதானம்" இதுவாகத்தான் இருக்கக் கூடும்.

ஊர்காவற்றுறைக் கடற்பரப்பில் மர்மமான முறையில் ஒரு தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அதில் கடற்படையினர் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் இருந்தனர். அந்தக் கடற்கலம் மிக மோசமாக சிதைந்து கடலில் மூழ்கியதாகப் பத்திரிகைகள் எழுதியிருந்தன. அதில் நீரடியில் பயணிக்கக் கூடிய சைக்கிள் போன்றதொரு தற்கொலைப் படகே பயன்படுத்தப்பட்டதாகப் பலரும் வாரப்பத்திரிகைகளில் எழுதினர். அவர்கள் கூறிய சாயலில் சில நீரடி உந்துருளிகள் மந்துவில் வெட்டையில் அடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆயுதங்களை இறக்கவும் ரகசிய நடவடிக்கை களுக்கு எனவும் தயாரிக் கப்பட்ட நீர்மூழ்கிகள் என ஊடகங்களில் காண்பிக்கப்பட்ட மூடிய படகுகள் பலவும் மந்துவிலில் நிலத்துக்கு மேல் கிடக்கின்றன. 'ஈழநாதம்' பத்திரிகையில் எதிர்பாராத வெடிவிபத்தின்போது சாவடைந்த தோர் பற்றிய பெயர் விவரம் ஒவ்வொரு நாளும் வரும். அதெப்படி ஒவ் வொரு நாளும் எதிர்பாராத வெடிவிபத்து நடக்கும் என்ற சந்தேகம் பல பேருக் கிருந்தது. காலையில் பத்திரிகையை பார்த்தவுடனேயே இந்த சந்தேகத்தைப் பலர் கிளப்புவர்.

ஆயுதங்கள் தயாரிக்கும் போது ஏற்படும் கவனயீனங்கள், தவறுகளால் நிகழும் மரணங் களைத்தான் அப்படி அடையாளப் படுத்துகிறார்கள் எனப் பின்வந்த காலங்களில் தெரியவந்தது. 'கிபீர்' மற்றும் இராணுவத்தினர் அடித்து வெடிக்காமல் இருக்கும் குண்டுகளைக் கழற்றி அதன் பாகங்களைக் கொண்டு புதிதாய் இன்னொன்றை கண்டுபிடிக்கும் போதே இத்தகைய சம்பவங்கள் நிகழ்கின்றன எனவும் தெரியவந் தது. இதில் எதிர்பாராமல் நிகழும் கதிர் வீச்சுக்களால் பலருக்கு கண் தெரியாமல், காது கேளாமல், கை, கால் இல்லாமல் போகும் சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்பதும் விடுப்புச் செய்திகளில் விருப்பம் கொண்ட அனைவருக்கும் தெரியும்.

இவ்வளவு கஷ்டங்களின் மத்தியிலும் பொருளாதாரத் தடைகளின் மத்தியிலும் தன் அறிவையும் நுட்பத்தையும் பயன்படுத்தி தமிழன் - விடுதலைப் புலிகள் - வரலாறு படைத்தான் என்பதை மந்துவில் இன்று உலகுக்குப் பறைசாற்றி நிற்கிறது. எத்தனையோ வகையான குண்டுகள் மந்துவிலின் போர் நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. உள்ளங்கை அளவிலி ருந்து ஒரு மனித உருவம் அளவு வரையிலான குண்டுகள்; தமிழ்ப் பிள்ளைகளால் கண்டுபிடிக்கப்பட்டவை.

இங்கு குறிப்பிடப்பிட்டவை சனங்களின் கதைகளில் இடம்பிடித்திருந்த சில ஆயுதங்கள் பற்றிய ஞாபகங்கள் மட் டுமே. இதனைப் போல அங்கு கிடத்தப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு ஆயுதத்துக்கும் தமிழ் சனத்தோடு தொடர்புடைய கதைகளும் நினைவுகளும் ஏராளம் உண்டு. அவ்விதமான அனைத்து ஆயுதங்களும் அந்த வெளியில் பரப்பப்பட்டிருக்கின்றன. அவை இப்போது அழகான காட்சிப் பொருள்கள். அதைச் சுற்றுலாவிகள் தொட்டுப் பார்க்கின்றனர். தூக்கிப் பார்க்கின்றனர். வியப்பும், பயங்கரமும் நிரம்பிய ஞாபகக் கதைகளை ஆயுதங்களிலிருந்து தெற்குக்கு எடுத்துப் போகின்றனர்.

அது பற்றிக் கவலையில்லை. அவர்களிடம் இல்லாததை, எம்மிடம் இருந்ததை அவர்கள் வியக்கிறார்கள். எமக்கொரு நாடு வந்து விட்டால் நாளை நாமே அவற்றை அவர்களுக்குப் பெருமையுடன் காண்பித்துக்கொள்ளலாம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்கப்பட வேண்டியது?

பஞ்சவர்ணன்

அத்துடன் வெளிநோயாளர் பிரிவில் உள்ள மருந்தகம் செயற்படாமையால் மருந்து பெற முடியாமல் நோயாளர் பெரிதும் சிரமப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது

“யாழ். மாவட்ட மக்கள் மிகவும் அவதானமாகச் செயல்பட வேண்டிய ஆபத்தான காலத்துக்குள் தற்போது இருக்கின்றார்கள். ஆபத்துக்கள், விபத்துக்கள் நோய்கள் போன்ற உயிராபத்துக்கள் ஏற்படும் பொழுது உயிர்காக்கும் கூடங்களாகச் செயற்படுபவை வைத்தியசாலைகள் ஆகும். அங்கு பணி புரிகின்ற அனைவரது செயற்பாடுகளும் வைத்தியசாலை நோக்கி வருகின்ற நோயாளர்களது உயிர்காப்பு நடவடிக்கையில் ''தனியாகவும்'', ''சங்கிலிக் கோப்பு'' முறையில் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். அங்கு வைத்திய சேவை பல்வேறுபட்ட பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் “சங்கிலிக் கோப்பு” சிகிச்சை முறையில் ''இடைத் துண்டுகள்'' துண்டாடப்பட்டது போல் சில பகுதிச் செயற்பாடுகள் தொழிற்சங்க நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு இருப்பது வேதனைக்குரியதே. இதனால் நோயாளர்கள் சிகிச்சை பூரணத்துவம் பெறாமலும், மேலதிக சிகிச்சை மேற்கொள்ளப்பட முடியாமலும், சில நோய்களை இனங்காண முடியாமலும், நோய்க்கு மருந்து கொடுக்கவோ, சிகிச்சை வழங்கவோ, முடியாமலும் துடிக்கின்ற நிலைமைக்குள் எம்மை நாம் உட்படுத்தி இருப்பது சிந்திக்க வேண்டியதே.

இணை மருத்துவ சேவைக்குள், மருந்தாளர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள், எக்ஸ்ரே கதிரியக்கவியலாளர்கள், இயன் மருத்துவர்கள், தொழில் வழிச் சிகிச்சையாளர்கள் போன்றோர் அடங்குகின்றனர். இவர்களை அங்கத்துவமாகக் கொண்ட நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் ஒன்றியம் கடந்த 13 ஆம் திகதி முதல் தொழில் சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதென முடிவெடுத்தது.

அண்மையில் சுகாதாரத்துறையில் ஏனைய பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்குதல், பட்டதாரிகளாக வெளியேற்றப்பட்டுள்ள மருத்துவ ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர்களின் நியமனத்தை உடனடியாக அமுல்படுத்தல், கடந்த 6 வருடங்களாக வழங்கப்படாதுள்ள வகுப்பு ஒன்றுக்கான நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுத்தல், 15 வருடங்களாக வழங்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ள விசேட தரத்துக்கான நியமனங்களை உடனடியாக வழங்குதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடைய இந்தப் பிரச்சினைகள் வருடக் கணக்கான பிரச்சினைகள். அது மட்டுமல்லாமல் கடந்த வருடம் இந்தக் கோரிக்கைகளை சுகாதார அமைச்சுக்கு உத்தியோக பூர்வமாகத் தெரியப்படுத்தி, இவை நிறைவேற்றப்படாத பட்சத்தில் தமது தொழில் சங்க நடவடிக்கையை ஆரம்பிக்க உள்ளதாக தெரிவித்தும் இருந்தனர். ஆனால், இவர்களது கோரிக்கைகளை அரசு செவிசாய்ப்பதாகத் தெரியாத பட்சத்தில் கடந்த ஜனவரி 18 ஆம் திகதி ஒரு நாள் அடையாள சுகவீன விடுமுறைப் போராட்டமாக நாடளாவிய ரீதியில் மேற்கொண்டனர். எனினும் அவசர, அவசிய சிகிச்சைகளுக்கு என சில பணியாளர்கள் உத்தியோக பூர்வமற்றமுறையில் நோயாளர்கள் நலனுக்காக கடமையாற்றினர். எனினும் அதற்கும் அரசு பதிலளிக்காத பட்சத்தில் கடந்த 13 ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் இவர்கள் குதிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

எனினும் சுகாதார அமைச்சரது சந்திப்பைத் தொடர்ந்து மறுநாள் 15 ஆம் திகதி திறைசேரிச் செயலாளருடன் பேச்சு நடத்த இணங்கிக் கொண்டதன் பின்னர் நல்லெண்ணச் சமிக்கையாக அன்று நண்பகல் 12 மணியில் இருந்து இவர்களால் தொழிற் சங்கப் போராட்டம் கைவிடப்பட்டு அனைவரும் வழமை போல் கடமைக்குத் திரும்பினர்.

எனினும் அன்று மாலை திறைசேரிச் செயலாளருடன் நடைபெற்ற பேச்சு தோல்வியில் முடிவடைய இவர்கள் மீண்டும் மறுநாள் 16 ஆம் திகதி காலை 8 மணிமுதல் முழு அளவிலான தொழில் சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய நிலமைக்குள் தள்ளப்பட்டனர்.

இது அவர்களது உத்தியோக நலனுக்கானதும், சங்கக் கட்டளைக்குப் பணிகின்ற செயற்பாடாகவும் கருதலாம். ஏனெனில் இவர்களது நியமனம், இடமாற்றம் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொழிற் சங்கம் என்பதும் குறிப்பிட வேண்டியது.

ஆனால், நோயாளர் நலன் நோக்கில் பார்வையைச் செலுத்தினால் அவர்கள் ஏதும் அறியாத அப்பாவிகள், உயிர்காக்க ஓடி வர, பரிதாபக் கேடாகக் கவனிப்பார் இல்லாமல் கிடக்கும் நிலைக்குள் சிக்கி இருப்பது பாவமே.

கோப்பாய், அச்சுவேலி, சாவகச்சேரி, சங்கானை, வல்வெட்டித்துறை, தெல்லிப்பளை போன்ற மாவட்ட வைத்தியசாலைகள், மந்திகை ஆதார வைத்தியசாலை போன்ற பிராந்திய வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளர்கள் இவர்களது போராட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனெனில் அந்தப் பிராந்தியத்தில் முறையான சிகிச்சை பெற தனியார் சிகிச்சை நிலையங்கள் இல்லை. மேலதிக சிகிச்சைக்கான யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டாலும் அங்கு தனியார் நிலையங்களில் அந்த சேவையைப் பெறுவதானால் பெருமளவு பணம் ''கறக்கப்படுகிறது'' ஒருவர் விபத்துக்கு உள்ளாகி இருந்தால் ''எக்ஸ்றே'' எடுக்க வேண்டும் என்பார்கள். இரத்தப் பரிசோதனையும் செய்ய வேண்டும். மருந்தெடுக்கவும் வேண்டும். இதற்கு ஆயிரக்கணக்கில் பணம் தேவைப்படும். சராசரி வசதி உடைய நோயாளி இந்த நிலமைக்கு உள்ளானால் அவனது நிலமை பரிதாபகரமே ஆகும். இந்த நிலையில் வேடிக்கை என்னவென்றால் ஒரு சில மருந்து வகைகள் எவ்வளவு பணம் கொடுத்தாலும் வெளியே வாங்க முடியாதன.

சில சந்தர்ப்பத்தில் நோயாளி தீவிர சிகிச்சைப் பிரிவிலோ, அவசர சிகிச்சைப் பிரிவிலோ அனுமதிக்கப்பட்டால் சில விசேட இரத்தச் சோதனைகளை வெளியே ஆயிரக் கணக்கில் பணம் கொட்டினாலும் உடனடியாக, திருப்தியான, தகுதி வாய்ந்தவரிடம் இருந்து ஆய்வறிக்கையை நம்பகமாகப் பெறலாமா என்பதும் பெரிய வினாவே! அப்படிப் பெற்றாலும் வேறொரு இடத்தில் மீண்டும் ஒருமுறை அந்தப் பரிசோதனை வைத்தியர்கள் செய்யச் சொன்னால் ஆச்சரியப்படவும் தேவையில்லை!

அதுமட்டுமல்லாது வெளிநோயாளர் பிரிவிலும் தினமும் நூற்றுக் கணக்கான நோயாளர் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். அவர்களுக்கான இரத்தப் பரிசோதனைகள் நடைபெறாததால் அவர்களது மேலதிக சிகிச்சைகளுக்கும் தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் வெளிநோயாளர் பிரிவில் உள்ள மருந்தகம் செயற்படாமையால் மருந்து பெற முடியாமல் நோயாளர் பெரிதும் சிரமப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உள்ளக மருந்தகமும் செயற்படாமல் நடைப்பட்டுள்ளதால் விடுதிகளுக்கான மருந்துகளும் விநியோகப்படாமல் உள்ளது. இந்த நிலமை தொடருமானால் விடுதிகளில் உள்ள மருந்துகளும் முடிவடைந்து விடும். பின்னர் விடுதிகளில் தங்கி உள்ள நோயாளர்களுக்கும் சில நாள்களில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படலாம். இது ஆபத்தான நிலமையை தோற்றுவிக்கும்.

இதற்கான ஒரே தீர்வு வைத்தியசாலை நிர்வாகம் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் அரசுக்கும், தொழிற்சங்கத்துக்கும் இடையே ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி முடிவுகான முயற்சிக்க வேண்டும். இது மட்டுமன்றி இந்த விடயத்தில் உலக சுகாதார ஸ்தாபனமும் கவனம் எடுத்து மக்கள் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணவேண்டும்.

# என்னத்தைச் செய்ய எங்கே போய் முறையிட

பாண்டியம்மா

“எங்கட இருப்பிடத்திலையும், பொது இடங்களிலையும் சிங்கள இராணுவம் வந்து புத்தர் கோயில்களையும், காவல் அரங்களையும், தங்குமிடங்களையும், கடைகளையும் கட்டி நிலங்களைப் பறித்தெடுத்துள்ள போது, அந்தக் காணிகளை உரிமை கோர எவருக்கும் துணிவு வரவில்லை. அப்பாவி மக்களை அதுவும் ஒரே இனத் தமிழர்களைத் தஞ்சமடைந்துள்ள வன்னிப் பிரதேசத்தில் இருந்து துரத்த நினைக்கும் அதிகாரத் தொனிகள் கொஞ்சம் சிந்திக்கலாமே?

“மாவீரர் குடும்பம்” என்று இயக்கம் எங்களுக்கு தந்த காணியாம் இப்ப காணிக்கு உரிமை கொண்டாடிக் கொண்டு புதுசு புதுசா ஒவ்வொருத்தரும் வருகினம். இஞ்ச இருந்து உங்களுக்கு எந்த உதவியும் கிடைக்காது. நீங்கள் எழும்புறதுதான் நல்லம்.

''சமாதான காலத்தில காடாக்கிடந்த இடத்தை நாங்கள் தான் துப்புரவு செய்து காடாக் கிடந்த நிலத்தில வீட்டப் போட்டு குடியிருந்தம்'' அப்ப ஒருத்தரும் வரேல “எங்கட காணி'' என்று சொல்ல.

பாழாப் போன பிரச்சினை வந்து இப்ப எங்கட வாழ்க்கையை முழுங்கிக் கொண்டு, இருக்கிற காணியைக் கூட உரிமை கோர முடியாத படி எங்கள நடுத்தெருவில தள்ளிப் போட்டுது. அடுத்த கட்டமாக என்னதான் வழி? எங்க போறது! வாறது! எதுவுமே யோசிக்க முடியாத நிலையில நாங்கள் இருக்கிறம்.

வன்னியில் இடம் பெற்ற போரின் விளைவுகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு பிரச்சினையாக உருவெடுக்கிறது. காணி இருந்தும் வீடு இல்லாமல், வீடு இருந்தும் காணியை உரிமை கோரமுடியாமல், தமக்கான வாழிடத்தை நிரந்தரமாகப் பெற்றுக் கொள்ள முடியாமல் அங்கும் இங்குமாக அலைந்து திரிய வேண்டிய நிலை மக்களுக்கு.

“பாவிகளுக்கு போற இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்'' என்பார்கள். அது போலதான் வன்னி மக்கள் ஏதோ பாவம் செய்த பாவிகளாயிட்டம். திசை தெரியாமல் நடுக்காட்டில் தத்தளிக்கும் வழிப்போக்கர் போல வழி தெரியாமல் திண்டாடுறம். சமாதான காலத்தில் வன்னியில காடாகிக் கிடந்த இடங்களைத் துப்பரவு செய்து காணிக ளற்று நிற்கதியாக இருந்த குடும்பங்களை குடியமருமாறு வன்னி மாவட்டத்தில் அப்போது இருந்த நிர்வாக சபை அனுமதி வழங்கி இருந்தது.

வன்னியில்இருந்த காணிகள் அனைத்தும் நிர்வாக சபையின் பொறுப்பில் இருந்தபடியால், இந்த அனுமதியை நிர்வாக சபை கொடுக்க வேண்டி இருந்தது.

இதனால் அரசின் தலையீடுகள் எதுவுமே அங்கு இருக்கவில்லை. பதிவுகள் கூட இருக்கவில்லை. எல்லாமே பொதுச் சொத்து என்பது போல பாரபட்சமின்றி மக்கள் வழி நடத்தப்பட்டிருந்தனர்.

''இயக்கம்'' இருந்த காலத்தில எங்களுக்கு காணி வழங்கும் போதே! நாங்கள் வீடு கட்டி இருக்கும் போதோ யாருமே தங்கட காணி என்று வரேல. ஏனென்றால் இது காட்டுக்காணிதானே.

பரந்தன், புதுக்குடியிருப்பு, விசுவமடு, அக்கராயன், இரணைமடு, தர்மபுரம் என மக்கள் குடியமரக் கூடிய சரியான வளங்கள் பொருந்திய இடங்களில் இனாமாக, காட்டு நிலங்கள் அங்கு குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

குறிப்பாக வீடுகள் அற்று, காணிகள் அற்று வன்னியைத் தஞ்சமடைந்திருந்த யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்காக விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாக சபை, அடைக்கலமாக மேற்கூறப்பட்ட இடங்களில் காணிகளை வழங்கி இருந்தது.

ஆனால் மக்கள் குடியமர்த்தப்பட்ட போது நிர்வாக சபையினால் புலிச் சின்னத்துடன் கூடிய ஓர் உறுதிப்பத்திரம் ஓரிரு குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

போரின் விளைவால் இத்தகைய ஆவணங்களைக் கூட வைத்திருந்தவர்கள் “புலிச்சின்னம்'' பொறிக்கப்பட்டிருந்த அச்சம் காரணமாக அவற்றைத் தீயூட்டி இரையாக்கிவிட்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இராணுவத்தினரிடம் தஞ்சம் அடைந்து இருந்தனர்.

தஞ்சமடைந்த மக்கள் மீளவும் அவரவர் சொந்த இடங்களில் குடியமர்வு செய்யப்பட்ட போது, கடைசியாக தமது காணிகள் என வழங்கப்பட்ட இடங்களில் மீளக்குடியமர்ந்தனர்.

மீள் குடியமர்வு செய்யப்பட்டு 2 வருடங்கள் கடக்கும் நிலையில் “இது உங்கள் காணி இல்லை! எங்கட காணி நீங்கள் எழுப்பத்தான் வேண்டும்'' என்ற ஓர் அபாய சங்காக அறிவிப்பு அதிகாரத் தொனியுடன் ஒவ்வொரு பக்கத்திலும் இருந்தும் கேட்கும் போது திகிலடைந்து பீதியுடன் காணப்படுகிறார்கள் மக்கள்.

“இயக்கம் எங்கள இருத்தேக்க ஒருத்தரும் தங்கட காணியெண்டு சொல்ல வரேல இப்ப எங்க இருந்து வருகினம் என்று தெரியேல, திடீரென இப்படிச் சொன்னா நாங்கள் எங்க தான் போறது!'' பாதிப்படைந்துள்ள ஒவ்வொரு குடும்பத்தினரினதும் வினா இதுவாக உள்ளது.

காணி இல்லா ஆள்களுக்கு என்று தான், அப்ப இருந்த நிர்வாக சபை இதைத் தந்தது. ஆனா இப்ப சொல்லினம் நீங்கள் ''மாவீரர் குடும்பம்'' “போராளி குடும்பம்'' என்று தான் உங்களுக்கு தஞ்சம் கொடுத்து வச்சிருந்தவ இப்பதான் ஒன்றுமில்லையே நீங்கள் போகத்தானே வேண்டும். குரல் கொடுக்கும் அதிகாரத் தொனி இது.

பாதிப்படைந்த குடும்பங்களுக்கு இப்படி ஒரு பட்டம் கிடைத்துள்ளதால் யாரிடம் போய் முறையிட முடியும். பொலிசுக்குப் போனா ஆயிரம் முறைப்பாடு, இராணுவத் திட்ட போனா சிறைக்குத் தான் போகவேணும் ''புலிக்குடும்பம்'' என்று.

என்ன செய்வது எனத் திண்டாடிக் கொண்டிருக்கும் அதிகாரத் தொனி போடுபவர் கள் சற்றும் சிந்திக்கவில்லை. உண்ட வீட்டுக்கே துரோகம் செய்வது போல ஒரே இடத்தில் இருந்து நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு இப்ப யார்தான் கேட்கப் போகிறார்கள் என இவர்களது ஆட்டம், அதிகாரத் தொனிகளின் தாக்கம் இந்தக் குடும்பங்களின் காணிகளை மட்டும் பறித்தெடுக்கவில்லை. அரசினாலோ அரச சார்பற்ற நிறுவனங்களாலோ கிடைக்கும் வாழ்வாதார உதவிகள், வீட்டுத் திட்டங்கள் என்பவற்றையும் சேர்த்து பறித்தெடுத்துள்ளது.

“மனிதனுக்கு ஆறடி நிலமே கடைசி நேரத்தில் தஞ்சம்'' என்று எங்கட ஊரில காணிச் சண்டை பேசேக்க நான் அடிக்கடி கேட்டிருக்கிறன்.

இது வன்னியில் குடும்பங்களை வதைக்கும் அதிகாரத் தொனிக்குத் தெரியாதா என்ன? எங்கட காணி எங்கட காணி என்று, போகும் போது நாம் எதையும் கொண்டு போகப் போறதில்லை. இதை அதிகாரத் தொனி கொஞ்சம் உணர்ந்தால் பாதிப்படைந்த குடும்பங்கள் கொஞ்சம் மீண்டு வர வழி கிடைக்கும்.

எங்கட இருப்பிடத்திலையும், பொது இடங்களிலையும் சிங்கள இராணுவம் வந்து புத்தர் கோயில்களையும், காவல் அரங்களையும், தங்குமிடங்களையும், கடைகளையும் கட்டி நிலங்களைப் பறித்தெடுத்துள்ள போது, அந்தக் காணிகளை உரிமை கோர எவருக்கும் துணிவு வரவில்லை. அப்பாவி மக்களை அதுவும் ஒரே இனத் தமிழர்களைத் தஞ்சமடைந்துள்ள வன்னிப் பிரதேசத்தில் இருந்து துரத்த நினைக்கும் அதிகாரத் தொனிகள் கொஞ்சம் சிந்திக்கலாமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்மாதிரிக்கு உதவுங்கள்

நிரோசன்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. இதனையும் ஒரு காரணமாகக் கொண்டதாலோ என்னவோ கோயில் இல்லா ஊர்களையே இன்று காண முடியவில்லை. ஒவ்வொரு ஊரிலும் ஒன்றுக்கு மேற்பட்ட கோயில்களும் உள்ளன. முன்னைய காலங்களில் சாதியத்தை அடிப்படையாகக் கொண்டு கோயில்கள் அமைக்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஆளுக்காள் மாறி மாறி ஆலயங்களை அமைத்து வந்தமையும் கோயில்கள் இந்தளவுக்குப் பல்கிப் பெருகிக் காணப்படுகின்றமைக்கும் ஒரு காரணம்.

ஒரு வகையில் இவ்வாறான கோயில்களின் எண்ணிக்கை அதிகரிப்பும், வளர்ச்சியும் இந்து நெறியின் வளர்ச்சிக்கு பிரதான பங்கு வகிக்கிறது என்று சொல்லலாம். ஏனைய மதங்களுடன் போட்டி போட்டு முதன்மையாகவும் இன்றுவரை திகழ்கிறது. இந்து நெறி வளர ஆன்மிக சிந்தனை வளர அதனூடாக ஒவ்வொரு இந்துவும் வளர கோயில்கள் சிறந்த அமைவிடத்தைப் பெற்று விடுகின்றன.

மதமாற்றத்தைத் தடுப்பதற்கும் தவிர அந்நிய மத ஊடுருவதை தடுக்கவும் இல்லாது செய்யவும் இந்த ஆலயங்கள் துணை நிற்கின்றன. ஆனால், இந்த ஆலயங்கள் இன்னும் வளரவும், அதனூடாக பல்வேறு அறப்பணிகளை மேற்கொள்ளவும், இல்லையென்று வருபவர்களுக்கு அள்ளிக் கொடுக்கவும் பின்நிற்கக் கூடாது.

இன்று அநேகமான ஆலயங்கள் எவ்வித அறப்பணிகளும் இல்லாத நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சில எண்ணிக்கையான ஆலயங்கள் அறப்பணிக்குப் பின்நிற்கவில்லை. முன் மாதிரியாகவும் விளங்குகின்றன. வட பகுதியில் உள்நாட்டுச் சண்டை ஆலயங்களின் சீரழிவுக்கும், வறுமைதொடரவும் காரணமாக அமைந்துவிட்டன.

இவ்வாறானதொரு நிலையில் வடுக்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்து 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற நோக்கில் விரைவாக மக்களிடத்தேயும், மாணவர்களிடத்தேயும் பெரு மாற்றத்தைக் கொண்டு வந்து இன்றுவரை அதனைத் தக்க வைத்து இருப்பவற்றைக் கொண்டு சிறப்பாக இயங்கும் ஆலயங்களில் ஒன்றாக 'முழங்காவில் கிஷ்ணன் கோயில்' செயற்படுகிறது.

வட பகுதியில் பூநகரிப் பிரதேசத்தின் முழங்காவிலில் இந்தக் கோயில் 1996 ஆம் ஆண்டு உருவானது. இதே காலப் பகுதியில் அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டு இளநிலா கிராமத்தில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களின் எண்ணத்தில் உதித்த கருப்பொருளே இந்த ஆலயம்.

அன்றிலிருந்து நாள்தோறும் நாகபாம்பு ஒன்று அங்குள்ள புற்றிலிருந்து வந்து படம் எடுத்துக் காட்சி கொடுத்த வண்ணம் இருந்தது. அதனைக் கண்ட மக்கள் அந்த இடத்திலேயே கிருஷ்ணர் ஆலயம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்து மண்ணால் கொட்டகை அமைத்து ஸ்ரீதேவி பூதேவி சமேத வெங்கடேச வரதராஜப் பெருமாளும், பரிவார மூர்த்திகளாக சனீஸ்வரனும், ஆஞ்சநேய மூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பது கோயில் வரலாறு.

பின்னர் அதற்கென கட்டங்கள் அமைக்கப்பட்டு புதிய அமைப்புடன் நிறுவி தற்போது இந்து கலாசார அமைச்சில் பதிவு செய்யப்பட்ட கோயிலாகத் திகழ்கிறது.

2008 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது மக்களுடன் கிருஷ்ண பெருமானும் இடம்பெயர்ந்தார். பக்தர் ஒருவர் கிருஷ்ண பெருமானை புதுமாத்தளன் ஊடாக வவுனியா இராமநாதன் முகாமுக்குக் கொண்டு சென்று 2009 டிசெம்பரில் தனது இடமான முழங்காவிலுக்கு கொண்டு வந்தார்.

இந்தக் கோயிலின் ஊடாக பல்வேறு அறப்பணிகள் இன்றுவரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இந்தக் கிராமத்துக்கு கிருஷ்ணாநகர் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அங்கு அறநெறிக் கல்விக்கூடம் அமைக்கப்பட்டு அதனூடாக சிறுவர்கள், மாணவர்களுக்குமான, சமூக விழுமியங்களும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. தியான வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. அந்தத் தியானம் ஒவ்வொருவரையும் முழுமை நிலைக்குக் கொண்டு வந்து விடுகிறது. பக்குவநிலை அடைய வைத்திருக்கிறது என்றார் கோயில் பொறுப்பாளரும் அறநெறி பாடசாலையின் பொறுப்பாசிரியருமான சி.குபேந்திரன். இவற்றைவிடப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பெறுவதற்கான உதவிகள் செய்யப்படுகின்றன. கிராமத்தவர்கள் இறந்தால் மரணக்கிரியைகள் செய்வதற்கு தேவையான பொருள்கள் வழங்கப்படுகின்றன. சமயக் கிரியையின் போது உரிய முறையில் பணிகள் நடைபெற வேண்டும் என்பதற்காகவே இந்த உதவி வழங்கப்படுகிறது என்கிறார் அவர்.



அங்குள்ள அறநெறிப் பாடசாலையில் 221 சிறார்கள் பயில்கின்றனர். அவர்கள் கல்வியுடன் பக்தி நெறியிலும் திளைத்து கோயில் பணிகளையும் செய்து வருகின்றனர். இந்தக் கோயிலின் முன் மாதிரியான பணியை ஏனைய கோயில்களிலும் செயற்படுத்தப்பட வேண்டும். இவர்களுக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதில்லை. சேவை நோக்குடன் செயற்பட்டு வருகின்றனர்.

அங்கு 15 இற்கும் மேற்பட்ட சிறார்கள் பெற்றோரை இழந்த நிலையில் உறவினர்களுடன் வசித்து வருகின்றனர். மிகவும் இக்கட்டான நிலையிலேயே கோயிலில் சிறார்கள் பற்றுடன் பணி செய்தும் கல்வி பயின்றும் வருகின்றனர். இவர்களுக்கென கோயிலில் தங்குமிட வசதியில்லை. தியானம் செய்வதற்கு மண்டபம் இல்லை அறநெறி வகுப்புக்கள் நெருக்கடியான நிலையிலேயே நடைபெறுகின்றன. கோயில் மண்டபங்களில் இவையெல்லாம் நடைபெறுகின்றன.

மக்கள் மீளக்குடியமர்ந்த போதும் கோயில் முழுமையாக இன்னும் சீர்செய்யப்படவில்லை. அங்கு பயிலும் மாணவர்களுக்கு மல சலகூட வசதிகள் கூட முழுமையாக இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. பொருளாதார வசதியின்மையேகாரணம்.

இருப்பவற்றைக் கொண்டு அங்குள்ள சிறார்களுக்கு வகுப்புகளும் கல்விக்கான உதவிகளும் வழங்கப்படுகின்றன. அவை போதுமானதாக இல்லாமை பெருங்குறையாக இருக்கின்றது.

அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் தம்மால் இயன்றளவு இந்தப் பணிகளை முன்னெடுத்து கோயிலுக்கும், சிறார்களுக்கும் உதவி வருகின்றனர். அரச அதிகாரிகளோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ திரும்பியும் பார்க்கின்ற னர் இல்லை என்றும் கவலை தெரிவிக்கின்றனர். ✱

# தமிழ் மீது கொண்ட ஆர்வம் என்னை வளர்த்துவிட்டது



இணுவிலைச் சொந்த ஊராகக் கொண்டு தற்சமயம் லண்டனில் இலக்கிய சங்கமத்தின் அமைப்பாளராக இருக்கும் சிவதணிகாசலம் கவிஞர் அமுதுவின் (அடைக் கலமுத்து) மேல் மிகவும் பிரியம் கொண்டவர். அவரைப் பற்றிய நூல் ஒன்றை எழுதும் பொருட்டு அவர் குறித்த தகவல்களைச் சேகரிக்க நெடுந்தீவுக்கு வருகை தந்துள்ளார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதுடன் தனது தந்தையைப் போன்று பிரிய முள்ள இளவாலை அமுது குறித்த கருத்துக்களையும் உதயனுடன் பகிர்ந்து கொண்டார். இணுவில் சைவப்பிரகாசாவிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் தனது கல்வியைப் பெற்றுக் கொண்ட சிவதணிகாசலம் தமிழ் மீது அதீத பற்றுதல் கொண்டவர். குழந்தை வடிவேலுவிடம் தமிழ் கற்றேன் அவர் கற்பித்த நெல்லுக்கிறைத்த நீர் பாடல் இன்றும் என் நெஞ்சில் நிற்கிறது. அவர் ஒரு நல்ல சிறந்த ஆசிரியர் எனக்கு தமிழ் உணர்வு ஏற்படவும் தமிழில் ஒரு ஊட்டத்தை ஏற்படுத்தவும் காரணமாக இருந்தவர் என்று வாய் நிறைய மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

சந்திப்பு: லக்ஸ்மன்

**கேள்வி:** உங்களுக்கு இலக்கியத்துறையில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன?

**பதில்:** 1981 இல் வேலைக்காகச் சிங்கப்பூர் சென்று 1986 இல் திரும்பிவந்து ஊரில் திருமணம் முடித்த கையோடு கம்பவாருதி ஜெயராஜுடன் தொடர்பு ஏற்பட்டது. ஊரெழு கண்ணகி அம்மன் கோயிலில் அவரது தலைமையில் பட்டிமன்றத்தில் கலந்து கொண்டபோது அவரைச் சந்தித்தேன் அதன் பின்னர் ஒரு புலவர் உலகையே சந்திக்க முடிந்தது. இந்தச் சந்திப்புக்கள் இலக்கியத் துறையில் நான் ஈடுபடக் காரணமாக இருந்தது.

**கேள்வி:** நீங்கள் சந்தித்த புலவர்களைக் கூறமுடியுமா?

**பதில்:** ஆம். வித்துவான் சொக்கன் உமாமகேஸ்வரன், நுணாவில் பண்டிதர் பொன்னுத்துரை, பண்டிதர் வீரகத்தி, கவிஞர் சோ.பத்மநாதன், புலவர் ஈழத்துச் சிவானந்தன், காரை சுந்தரம்பிள்ளை, தமிழருவி சிவகுமாரன் போன்றவர்களைச் சந்தித்ததில் இந்த ஈடுபாடு ஏற்பட்டது.

**கேள்வி:** லண்டனில் இலக்கிய மன்றத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது.

**பதில்:** நீ தமிழை எவ்வாறு விசுவாசமாக நேசிக்கின்றியோ அது உன்னை உயர்த்தும் என்ற நம்பிக்கையைத் தந்தவர் ஜெயராஜா, அவரது கூற்றுத்தான் லண்டனில் இலக்கிய மாற்றத்தை உருவாக்கி அறிஞர்களைச் சந்திக்கும் வாய்ப்பை எனக்குத் தந்தது. லண்டனின் ஆறு திருமுருகன், கம்பவாரிதி சிவகுமார ஆகியோரைச் சந்தித்ததும் இலக்கிய மன்றத்தை உருவாக்க வேண்டும் என்ற உணர்வை எனக்குத் தூண்டியதும் இதில் ஒன்று எமது கழகத்தில் ஒரு ரசிகன் நான் என்று ஜெயராஜா என்னை அறிமுகப்படுத்தியிருந்தார். அந்த அளவுக்கு தமிழ் இலக்கியத்துறையில் நான் அக்கறை கொண்டிருந்தேன்.

**கேள்வி:** புலவர் அமுது உங்களுக்கு எவ்வாறு அறிமுகமானார்? அவரை அடிக்கடி சந்திப்பதுண்டா?

**பதில்:** லண்டனில் மடுமாதா காவியம் என்ற புலவர் அமுதுவின் நூல் வெளியிட வித்துவான் வேலன் தலைமையில் ஏற்பாடாகி இருந்தது மடுமாதா காவியம் நூலை ஆய்வு செய்ய ஒரு நல்ல இளம் இலக்கியவாதி துடிப்புள்ள இளைஞர் தேவை என அமுது விரும்பியிருந்தார். புதினம் ராஜகோபால் என்னை அமுது அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அன்று தொடக்கம் புலவர் அமுது அவர்கள் கல்லறைக்குச் செல்லும் வரை ஒரு தந்தையைப் போல் நல்ல உறவாக என்னுடன் இருந்து வந்தார். புலவர் அமுதுவை லண்டனில் தனியான ஒரு வீட்டில் தான் இருந்தார் அப்போது மாதத்தில் இரண்டு தடவையாவது சந்திப்போம். லண்டன் இலக்கிய மன்றம் பின்னர் இலக்கிய சங்கமம் என மாற்றப்பட்டது. இலக்கிய சங்கமத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் அமுது கௌரவிக்கப்படுவார், சங்கமத்தின் ஊடாக அமுதுவைக் கொண்டு பேராசிரியர் சண்முகதாஸ், ஆறு. திருமுருகன், கம்பவாரிதி ஜெயராஜ் பேராசிரியர் அருளை பாலசுப்பிரமணியன், பேராசிரியை சரஸ்வதி ராமநாதன், பேராசிரியர் சிவச்சந்திரன், தமிழரசி சிவகுமாரன் ஆகியோரையும் கௌரவித்துள்ளேன்.

**கேள்வி:** அமுது குறித்த நூல் ஒன்றை வெளியிடவுள்ளதாகத் தெரியவருகிறது அதற்கான முயற்சிகள் எந்த அளவில் உள்ளன?

**பதில்:** அவர்குறித்த நூலை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட சமயம் அதை அவருக்குத் தெரியப்படுத்தினால் எனக்கு மனதில்ஒரு திருப்தி கிடைக்கும் போல் இருந்தது. அவர் சுகவீனமுற்று படுத்து உயிர் பிரியும் தறுவாயில் எப்படி அதனை வெளிப்படுத்த முடியும் என்று எண்ணினாலும் அவரது உயிர் பிரியும் தறுவாயில் நான் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதுவேன் என ஒரு துண்டில் எழுதி அவரது கையில் வைத்தேன் அது எனக்கு ஓரளவு ஆன்ம திருப்தியாக இருந்தது.

**கேள்வி:** புலவர் அமுது குறித்த தரவுகளைப் பெற உங்களுக்கு எவ்வாறு முடிந்தது?

**பதில்:** அவர் குறித்த விவரங்களை நான் தேடிக் கொண்டிருந்த போது அவரது சகோதரி திரேசம்மாவும் மகன் துரைசிங்கமும் முழு ஒத்துழைப்பும் வழங்கினர். அத்துடன் நெடுந்தீவு முன்னாள் பிரதேச சபைத் தலைவர் புலவர் அரியநாயகம் என்னை எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று விவரங்களைப் பெற உதவியதுடன் நான் பார்க்க வேண்டிய முக்கிய அடையாளங்களையும் தனிநாயகம் அடிகளார் குறித்த விவரங்களையும் தந்துதவினர். அமுதுப்புலவரின் கனமான இதயத்தின் ஆழத்தை நான் அரியநாயகத்தில் கண்டேன்.

**கேள்வி:** இறுதியாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:** தமிழ் கூறும் நல்லுலகின் பெருமைக்குரிய ஒரு புலவர் குறித்து சிறந்த நூலொன்றை வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் வெற்றி காரணமாக அமையும் வகையில் அமைந்த ஒரு சிறப்பான இலக்கியப் பயணமாக இது இருந்ததும் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகன்

# சிக்கித் திணறும் இலங்கை



அண்மையில் வெளியான "தண்டிக்கப்படாத போர்க் குற்றம்" என்ற தலைப்பிலான காணொலி இலங்கை அரசுக்கு இன்னும் கடுப்பைக் கிளப்பியுள்ளது. ஏற்கனவே மருத்துவ தொழில் நுட்பவியலாளர் பணிப்புறக்கணிப்பு, பல்கலைக்கழக போராட்டம், ஜெனீவாப் பிரேரணை என அழுத்தத்தில் சிக்கியுள்ள அரசுக்கு இந்தக் காணொலி மேலும் நெருக்கடியை கூட்டியுள்ளது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

ஒரு அப்பாவிக்குக் கூடக் காயம் ஏற்படாமல் மனிதாபிமான படை நடவடிக்கையில் ஈடுபட்டதாக உலக நாடுகளுக்கு படம் காட்டி வந்த அரசின் சுயரூபம் வெளிவந்ததால் பதில் சொல்ல முடியாமல் திண்டாடி வருகிறது.

அடிக்கடி தமிழ் மக்களின் அங்கத்துவத்தைக் கொண்ட புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என்று சாட்டுப்போக்குக் கூறி வந்தவர்கள் இப்போது செய்வதறியாது திணறிப் போய்க் காணப்படுகின்றனர்.

சனல் 4 ஆதாரமற்றது. அது போலியானது என பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவும் தெரிவித்துள்ளார். தாமும் ஒரு காணொலியை வெளியிடப் போவதாகவும் வாய்ச் சொல்லில் வீரராகத் தன்னை உருவகப்படுத்தியுள்ளார். இதே வேளை சில இராணுவத்தினர் தவறு செய்துள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய கர்ச்சித்திருக்கிறார்.

சனல் 4 காணொலி பக்கச் சார்பானது எனவும் அதில் உண்மைத் தன்மை இல்லை என பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகம் கற்பூரம் அடித்துச் சத்தியம் பண்ணாத குறையாக தெரிவித்திருக்கிறது. இவ்வாறு அரச உயர் மட்டத்திலிருந்து தமது கைகள் சுத்தமானவை, தமது படையினர் உத்தம புருஷர்கள் என்ற தொனிப் பொருளில் விடப்படும் அறிக்கைகள் ஒரு புறத்தில் குற்றவாளிகளை நிரபராதிகளாக்கும் – அடையாளப்படுத்தும் கட்டங்களாக அமைந்துள்ளன.

அரசு ஆயுத உதவிகளை அள்ளி வழங்க குறுகிய நிலப்பரப்புக்குள் மக்களை அடைத்து வைத்து வேட்டையாடி கொத்துக் கொத்தாக கொன்று குவித்த பெருமை ஹிட்லரின், முசோலினியின் படைகளுக்கு அடுத்ததாக இலங்கை அரச படைகளையே சாரும் என்ற உண்மையே இந்தக் காணொலி மூலம் அம்பலமாகி இருக்கிறது.

ஜனநாயகம், இறைமை என அடிக்கடி சர்வதேசத்துக்கு அரிச்சுவடிப் பாடம் படிப்பித்து படம் காட்டி வரும் ஒரு அரசின் படைகள் ஒரு சிறிய மக்கள் கூட்டமொன்றின் மீது காட்டிய அதியுச்ச அரச பயங்கர வாதத்தை அப்பட்டமாக வெளிக்காட்டியிருக்கிறது சனல் 4 தொலைக்காட்சி.

அடைக்கப்பட்ட மானின் கூண்டுக்குள் புகுந்த சிங்கத்தின் அதியுச்ச வெறியாட்டம் எப்படி இருக்கும் என்ற கற்பனையின் வெளிப்பாட்டை வன்னிக் களமுனையில் அரசு அரங்கேற்றியிருக்கின்றது என்ற உண்மை அப்பட்டமாக வெளிக்காட்டப்பட்டு இருக்கிறது.

ஆடைகள் களையப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு இழுத்துவரப்படும் ஆண்கள் சதுப்பு நிலமான ஒரு சூழலுக்குள் வைத்து பின்னந் தலையைப் பதம் பார்க்கும் துப்பாக்கி வேட்டுகளால் பலியெடுக்கப்படும் காட்சிகளை தனது பதிவுகளுக்குள் உள்வாங்கி நடந்த உண்மையை, ஊடக தர்மத்தை நிலை நாட்டியிருக்கிறது பிரிட்டன் சனல் 4 தொலைக்காட்சி.

மக்களை மீட்பதற்கான போர் எனக் கூறி அரசு வன்னிக் களமுனையில் அப்பாவிப் பொதுமக்கள் மீது ஆடிய ருத்ர தாண்டவத்தின் கொடுமையை உலக வல்லரசுகளின் மனச்சாட்சியை உலுப்பும் வகையில் வெளிக்காட்டியிருக்கிறது சனல் 4 ஊடகம். குறிப்பாக மோதல் தவிர்ப்பு வலயம், பொதுமக்கள் தங்குமிடம் எனத்தானே துண்டுப்பிரசுரம் மூலம் அறிவித்துவிட்டு அங்கு கூடிய மக்கள் மீது தனது விமானப்படையை ஏவிவிட்டு இந்திய செய்மதிகளின் துணையுடன் குண்டுகளை வீசி தனது திறமையை வெளிக்காட்டியிருக்கிறது இலங்கை அதிகாரபீடம்.

மருத்துவ மனைகள் பொது மக்களின் வாழ்விடங்கள் என்பவற்றை இலக்குவைத்து வீசப்படும் எறிகணைகள் அதனால் சிதறப்படும் உடலங்கள், பிழக்கப்படும் அவயவங்கள், சீண்டப்படும் பெண்களின் மேனிகள் என அனைத்து திருகுதாளங்களையும் சர்வதேசத்துக்கு தெரியாது என்ற ஆணவத்தில் அரச படைகள் ஆடிய ஊழித் தாண்டவத்தையும் கண்முன்னே படமாக்கியிருக்கிறது தண்டிக்கப்படாத போர்க்குற்றம் எனும் காணொலி.

வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்தவர்களை வேட்டையாடிக் கொன்று குவித்து அவர்களின் பிணங்களுக்கு மேல் இலங்கையின் இறைமையும் அரச படைகள் பேணும் ஒழுக்கத்தையும் அப்பட்டமாக நிலைநாட்டியிருக்கிறது என்ற உண்மையை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக போட்டுடைத்திருக்கிறது சனல் 4 காணொலி. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகனான 12 வயதேயுடைய பாலச்சந்திரன் துப்பாக்கி வேட்டுகளால் பலியெடுக்கப்பட்ட பயங்கரத்தையும் வன்னி மோதல் பகுதியில் சிக்கியுள்ள மக்களின் எண்ணிக்கையை குறைத்து மதிப்பிட்டு சர்வதேசத்துக்கு அறிக்கை அனுப்பி மருத்துவப் பொருள்களையும் தடைசெய்த போர்க் குற்றத்தையும் அம்பலமாக்கியிருக்கிறது இந்தக் காணொலி.

குறிப்பாகப் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் ரீதியான கொடூரங்களையும் ஆடைகள் களையப்பட்டு மேற்கொள்ளப்பட்ட அராஜகத்தையும் இலங்கைப் படைகளின் வக்கிர எண்ணத்தையும் படம்பிடித்து சாட்சியாக வெளிக்காட்டியிருக்கிறது இந்தக் காணொலி. உலக நாடுகள் கைகளைக் கட்டி, கண்களை மூடி தமது நாடுகளில் படுத்துறங்க, தமிழ் மக்கள் மீது அரங்கேற்றப்பட்ட படுகொலை வெறியாட்டம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

இந்தக் காணொலியில் இலங்கைப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட மீறல்களுக்கு அதிகாரபீடமே காரணம் என விரல் நீட்டி வெளிப்படையாக குற்றஞ் சாட்டியிருக்கிறது சனல் 4 தொலைக் காட்சி. ஆனால் இதற்கும் தமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை எமது படைகள் போர்க்குற்றத்தில் ஈடுபடவில்லை என பழைய பல்லவியை மீண்டும் பாடுகிறது இலங்கைப் படைத்துறை உயர்பீடம்.

ஆனால், உண்மைகள் ஒரு போதும் உறங்குவதில்லை. அராஜகங்கள் எப்போதும் நிலைத்திருப்பதில்லை. அதர்மவாதிகள் எப்போதும் தப்பிவிடுவதில்லை என்பதே சனல் 4 காணொலி மூலம் வெளியாகும் உண்மை. ★

பிறேமினி

# கற்றுக் கொடுங்கள் கற்றுக் கொள்வார்கள்

பெற்றவர்களதும் , ஆசிரியர்களதும் கைகளில் தான் பிள்ளைகளின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்', ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்றெல்லாம் எம் முன்னோர்கள் சும்மா எதனையும் சொல்லி விட்டுப் போகவில்லை. தம் வாழ்வியல் அனுபவங்களின் மூலம் பட்டறிந்தவைகளையே எதிர்கால சந்ததியினருக்காகச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள்.

ஒரு குழந்தை பிறந்ததிலிருந்தே வாழ்வதற்கான பாடத்தைக் கற்கத் தொடங்குகின்றது.

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான்
மண்ணில் பிறக்கையிலே-அது
நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே......' என்று பாடி வைத்தான் ஒரு கவிஞன், உண்மையிலேயே குழந்தைகள் வளரும் போதே அவர்களுக்கு நல்லது எது, கெட்டது எது என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஒரு குழந்தை தத்தித் தளர்நடை பயிலும் போது அது தவறி விழுந்து விட்டால் குழந்தை அழுகின்றது. உடனே பெற்றவர்களும் குழந்தையின் அந்த நேர- அழுகையைத் தடுப்பதற்காக பிள்ளை விழுந்த இடத்துக்கு அடிக்கிறார்கள். குழந்தையும் அதைப் பார்த்து விட்டு, தானும் அந்த இடத்துக்கு அடிக்கின்றது. இங்கே யாரும் அறியாமலே பிஞ்சு மனசுக்குள் வன்மம் வளர்க்கப்படுகின்றது. இங்குதான் பெற்றவர்கள் தவறு விடுகின்றார்கள்.

இதேபோல் குழந்தை ஒன்றை தனியே கிடத்தி விட்டுச் சென்றால் அந்தக் குழந்தை சற்று நேரத்துக்குள் அழ ஆரம்பித்து விடுகின்றது. குழந்தை அழுகின்றதே என்று விட்டு தாய் ஓடி வந்து பிள்ளையைத் தூக்கிக் கொண்டால், குழந்தை ஒரு இடத்தைப் பிடித்துக் கொள்கின்றது. தான் அழுதால் தன்னை ஓடி வந்து தூக்குவார்கள் என்று. அதனால் அவசரங்கள் ஆபத்துக்களுக்கு கூட பிள்ளையைத் தனியே ஒரு சில நிமிடங்கள் விட்டுச் செல்ல-முடியாத இக் கட்டுக்குத் தாய் தள்ளப்படுவதோடு, குழந்தையும் 'பிடிவாதம்' , 'அழுதுசாதித்தல்' போன்ற குணங்களை அங்கே கற்றுக் கொள்கின்றது.

இதிலிருந்து நாம் ஒன்றைக் கற்றுக் கொள்ள முடியும். குழந்தைகளின் ஒவ்வொரு அசைவுகளிலும் செயற்பாடுகளிலும் பெற்றவர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். குழந்தைப் பருவத்திலே கற்றுக் கொள்ளும் பாடங்கள்தான் பிள்ளையின் நல் ஆற்றலை, ஆளுமையை, விருத்தியை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கின்றன.

எனவே குழந்தைப் பருவத்தில் நல்லவைகளைக் கற்றுக் கொள்ளும் பிள்ளை நல்லாற்றலும் ஆளுமையும் உள்ளவனாகச் செதுக்கப்படுகின்றான்.

சில குழந்தைகள் உணவுப் பண்டங்களை எல்லோருக்கும் கொடுத்துச் சாப்பிடுவார்கள். ஆனால் சில குழந்தைகள் மற்றவர்கள் கேட்டாலும் கொடுக்க மாட்டார்கள். இங்கு சிறுவர்கள் தானே என்று விட்டு பெற்றோர்கள் பிள்ளையின் செயலைப் பார்த்து சிரிப்பார்கள். ஆனால், அங்கேயே பிள்ளை மற்றவர்களுக்கு கொடுத்து சாப்பிடும் பண்பையும், மற்றவர்களுக்கு கொடுக்காது சாப்பிடும் இயல்பையும் கற்றுக் கொண்டு விடுகின்றது. எனவே இந்த இடத்தில் பெற்றவர்கள் மற்றவர்களுக்குக் கொடுத்துச் சாப்பிட வேண்டும் என்ற பண்பை பிள்ளைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இப்போதெல்லாம் 3 வயதிலேயே குழந்தை முன் பள்ளிக்கு கற்கச் சென்று விடுகின்றது. இவ்வளவு நாளும் பெற்றவரின் கையில் வளரும் பிள்ளை இப்போது ஆசிரியரின் கைக்கு மாறுகின்றது. இங்கே சேர்ந்து வாழல், ஒற்றுமையாக இருத்தல், ஆரோக்கியமாக வாழ்தல், சிந்தனைக்கேற்ற வகையில் ஆடலுடன் பாடலுமாய் மகிழ்வான மன நிலையைப் பேணல், மற்றவர்க்கு உதவி செய்தல், அறிவை வளர்த்தல் என நிறையப் பண்புகளை பிள்ளை கற்றுக் கொள்ளத் தொடங்குகின்றது.

எனவே பெற்றவர்களும் ஆசிரியர்களும், உன்னதமான சிந்தனைகள் பிள்ளையின் உள்ளத்தை வந்தடையக் கூடிய வகையில் பிள்ளைகளுக்கு வாழ்வியலில் நிறைய விடயங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

எல்லாப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் முதலில் பிள்ளைகளுக்கு மனிதர்களைப் பற்றி கற்றுக் கொடுக்க வேண்டும். எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள். நல்லவர்களும் இருப்பார்கள், கெட்டவர்களும் இருப்பார்கள் என்பதைப் பிள்ளை முதலில் புரிந்து கொள்ள வேண்டும், இதனால் ஒவ்வொருவரையுமே பிள்ளைகள் பகுப்பாய்ந்து கொள்வார்கள்.

இதே போல் சுயமான உழைப்பின் பெறுமதியைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்போது தான் பிள்ளைகளுக்குத் தானாக உழைக்க வேண்டும் என்ற ஆசை வருவதுடன், மற்றவர்களின் உழைப்பை மதிக்க வேண்டும் என்ற எண்ணமும் உருவாகும்.

வெற்றியை அனுபவிக்கவும் தோல்வியை ஏற்றுக் கொள்ளவுமான மனநிலையையும் பிள்ளைகளுக்கிடையே வளர்க்க வேண்டும். இயற்கையை நண்பனாகவும், நல்ல புத்தகங்களை வழிகாட்டியாகவும் பிள்ளைகள் எடுத்துக் கொள்வதற்கான நேரத்தை அவர்களுக்கு வழங்க வேண்டும். சொந்தக் கருத்துக்களைத் தயக்கமின்றி வெளியிடவும், நம்பிக்கையோடு எந்தக் காரியத்திலும் இறங்கவும், விடா முயற்சியோடு அதனைத் தொடரவும் மெல்ல மெல்ல பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். பிள்ளைகள் சரியென்று நினைக்கும் காரியங்களில் உறுதியாக நின்று கடைசி வரை போராட வேண்டும் என்பதை உணர்த்துங்கள்.

இவ்வாறு ஒவ்வொரு விடயத்திலும் நல்லவற்றைக் கற்றுக் கொடுத்து, நல் ஆளுமையும் நல்ல சிந்தனையும் உள்ள பிள்ளைகளைச் செதுக்கி எடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றவர்களது கையிலும் ஆசிரியர்களது கையிலுமே இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பொறுப்பு யாருக்கு?

■ தென்னவன்

இன்று சமூகத்தில் புரையோடியுள்ள பல்வேறு அதிர்ச்சியூட்டும் சம்பவங்களைப் பத்திரிகைகள் தினமும் பிரசுரித்து வருகின்றன. பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் பார்த்து விட்டு அதிர்ச்சியடைவதும் அதைப் பற்றி விவாதிப்பதும் யாழ். குடாநாட்டு மக்களின் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன.

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த பெண்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர், சிறுமிகள் மீது பாலியல் வன்புணர்வு, கோஷ்டி மோதல்கள் அதிகரிப்பு, மதுப்பாவனை, சட்ட விரோத செயற்பாடுகள் ஆகியவை தலை தூக்கி ஒவ்வொருவரையும் தலை குனிய வைக்கும் செய்திகளாகத் தான் பிரசுரமாகிக்கொண்டு இருக்கின்றன.

இவ்வாறான குற்றச் செயல்களை செய்வற்கு யதார்த்தமான காரணத்தைக் கண்டறிய வேண்டிய கடப்பாடு யாழ்ப்பாணச் சமூகத்தினர் அனைவருக்கும் உண்டு. காரணத்தைக் கண்டறியத் தவறின் இனிவரும் முப்பது ஆண்டுகளில் இதன் முழுப் பயனையும் எமது மக்களே அனுபவிக்க வேண்டி வரும்.

உதாரணத்துக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர் ஆண்கள் பெண்கள் கருத்தடை செய்வது தொடர்பாக வீடு வீடாகப் பிரச்சாரம் செய்த போது, அதனை ஏற்க எவரும் முன்வரவில்லை. பெண்களை இயந்திரமாக நினைத்து எத்தனை பிள்ளை பெற்றாலும் நாங்கள் வளர்ப்போமெனக் கூறி பெண்ணின் தாயாரும் அந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆனால் அதே தாயும், மாமியும் இணைந்து கருத்தடை முகாம்களுக்கு அழைத்து வருகின்றனர்.

இதேபோல் தற்போது சமூகம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் எதிர்காலச் சந்ததியினரின் எதிர்காலத்தில் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் உண்மையான நிலையைத் தெரியப்படுத்தும். இந்தக் குற்றச் செயல்களைத் தடுக்கும் பணி பொலிஸாருக்கு எனத் தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்கள். உண்மையில் நடந்த குற்றங்களுக்காகத் தான் பொலிஸாரே தவிர, நடக்க விருக்கும், நடக்கும் குற்றச் செயல்களை பொலிஸார் தடுக்கும் பணி என நினைப்பது மடமைத்தனமாகும்.

ஐந்து லட்சம் மக்கள் வாழும் யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த ஐயாயிரம் பொலிஸார் போதுமா? இதை சமூகம் உணர வேண்டும். கல்விக்கு சமூகத் தொண்டுக்கு பெயர் பெற்ற பலர் வாழும் யாழ். குடாநாட்டினை சீரழிக்கும் செயற்பாடுகளை அனுமதிக்கலாமா? ஒவ்வொருவரும் ஒரு கணம் சிந்தியுங்கள், எமது நாடு, எமது சமூகம், எமது மக்கள் என்று பிதற்றித் திரியும் கூட்டத்தினர் கூட இந்தச் செயற்பாடுகளைக் கண்டும் காணாது போல் திரிவது வேதனைக்குரிய விடயமாகும்.

இன்று அதிகமாகக் காணப்படும் குற்றச் செயல்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளே அதிகமாகும். பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுவது தான் பெண்கள் மீது இழைக்கப்படும் வன்முறையல்ல ஆண் ஆதிக்கம் அதிகமுள்ள யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்கள் பெற்றோரால் , சகோதரர்களால், கணவரால், உறவினர்களால், அயலவர்களால் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவதும் வன்முறைகள் தான்.

இவர்களால் தாக்கப்படும் பலர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுகின்றனர் . குடும்ப மானம் வெளியே வரக் கூடாது என்பதற்காக வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும் பெண்கள் ஆயிரமாயிரம் பேராவர். இந்த நிலை தவிர்க்கப்படல் வேண்டும்.


வெளிநாடுகளைப் பார்த்தால் உரத்துக் கதைப்பது, சண்டை பிடிப்பது , கணவன் மனைவி தாக்கப்படுவது மிக மிகக் குறைவு . காரணம் ஒரு வீட்டில் நடக்கும் பெண்கள் மீதான தாக்குதல் பற்றி அயல் வீட்டுக்காரன் பொலிஸிற்கு அறிவித்து விடுவான் என்ற பயம் அங்குள்ள ஒவ்வொருவருக்கும் உள்ளது. குடும்பங்களில் அப்பாவினால் அம்மா தாக்கப்படுவதை பிள்ளைகள் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. அதே போல் அடுத்த வீட்டில் பெண்கள் தாக்கப்பட்டால் உடனடியாகப் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர், பெண்கள் வன்முறைக்கு எதிரான பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கத்துக்கு அறிவித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதே போல் யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களின் தொலைபேசி இலக்கங்கள் மக்களுக்குத் தெரியும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இந்தக் கடமையை ஒவ்வொரு குடிமகனும் தனது சொந்த உடன்பிறப்பாக பெண்களைக் கருதி செயற்பட்டால், நிச்சயம் பெண்களுக்கான வன்முறைகளைத் தடுக்கவோ குறைக்கவோ முடியும்.

சிறுமிகளுக்கான பாலியல் வன்புணர்வுக்குக் காரணம் இன்றைய காலத்து சிறுமிகளின் அதீத வளர்ச்சி முதியவர்களையும் வசீகரிக்கக் கூடிய அளவில் காணப்படுகின்றது . இதுவே அவர்களுக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்துகிறது. பெற்றோர் சொல்லிப் புரிய வைக்கும் பக்குவமடையாத நிலையில் இருப்பதால் பெற்றோரைக் குறை சொல்ல முடியாது. சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்துபவர்களின் மனோ நிலையைக் கண்டறிய வேண்டும் .

பதின்ம வயது வாலிபம் துடிப்புமிக்கது என்பதால் இந்த வயதில் புகட்டப்படும் அறிவுரைகள் அவர்களுக்கு மட்டுமல்ல அவர்களது சகோதரர்களையும் நல்வழிப்படுத்த உதவும் .

இதற்கு மருத்துவத்துறையினர் , பொலிஸார், சமூகத் தொண்டர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் கொண்ட குழு ஒவ்வொரு பிரதேசத்திலும் தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொரு பாடசாலைகளிலும் தரம் 6 தொடக்கம் க.பொ.தா உயர்தரம் வரையான வகுப்புகளில் மாணாவிகளுக்கு பாலியல் வன்புணர்வு தொடர்பான அறிவுரைகளும் ஆலோசனைகளும் புகட்டப்பட வேண்டியது கட்டாய தேவையாக இன்று உள்ளது. குறிப்பாக க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் படிக்கும் மாணவிகளுக்கு வழங்கப்படும் அறிவுரைகளும் ஆலோசனைகளும் எதிர்காலப் பெண்களின் சமுதாயத்திற்கு பெரும் [illegible]வாக அமையும். ✱



# முன்மாதிரிகள் இல்லையே

■ சங்கர்

நீங்கள்வளர்ந்து யாரைப் போல வர ஆசைப் படுகிறீர்கள் என எங்கள் சிறுவயதுப் பிள்ளைகளிடம் ஒரு தடவை கேட்டுப் பாருங்கள். சொல்வதுக்கு யாரும் இல்லாத நிலையில் மௌனத்தை மட்டுமே பிள்ளைகள் பதிலாகத் தருவார்கள். இல்லையேல் நாடு கடந்த நிலையில் காந்தி தாத்தாவின் பெயரை அல்லது அணு உலை விஞ்ஞானி அப்துல் கலாமின் பெயரையோ அவர்கள் கூறலாம். தவிர வேறு யாதேனும் மகான்களின் பெயர்களையும் குறிப்பிடலாம்.

நாட்டிலுள்ள அல்லது எமது பகுதிகளிலுள்ள மனிதர்களின் பெயர்களை சிறுவயதுப் பிள்ளைகள் கூறுவார்களாயின் அதுவே பெரிய விடயமாகும்.

கல்வி அறிவால் உயர்ந்த அதிக மாணவர்களைக் கொண்ட பகுதியாக கூறப்பட்டு வந்த எமது பகுதிகளில் கூட முன்மாதிரியாகத் திகழும் மனிதர்களுக்குப் பற்றாக்குறையாக உள்ளது.

எங்கள் பகுதிகளிலுள்ள கற்ற மனிதர்கள் அல்லது சமூக சமயப் பெரியவர்களின் பெயர்களைக் கூட சிறுவயதுப் பிள்ளைகள் கூறுவதற்கு பின்னடிப்பார்கள் அந்தளவுக்கு பெரியோர்களின் நடத்தைகள் சிறுவயதுப் பிள்ளைகளுக்கு அதிருப்தியளிப்பதாக இருக்கிறது.

இளைய தலைமுறையினர் தறிகெட்டுப் போகிறார்கள் தடமாறிப் போகிறார்கள் என்றெல்லாம் தற்போது பரவலாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

சிறுவயதுப் பிள்ளைகளின், இளைஞர்களின் நடத்தைகளை எவ்வாறு திருத்திக் கொள்ளலாம் என துறை சார்ந்த அதிகாரிகள் பல்வேறு கூட்டங்கள் போட்டு கலந்துரையாடி வருகின்றனர்.

இளவயதுப் பிள்ளைகள் சிலரின் விலகல் நடத்தைகள் கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது தற்போது ஓரளவு அதிகரித்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

தற்போதுள்ள சூழல் பிள்ளைகளை விலகல் நடத்தைக்கு இட்டுச் செல்வதாக இருக்கிறது என பரவலாக கூறப்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசியத்தின் உரிமைக் குரல்களை இளஞ் சமூகத்திடமிருந்து அகற்றுவதுக்கு என திட்டமிட்ட முறையில் புறச் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளமை மறுக்க முடியாத உண்மை. இந்த நிலையில் எங்கள் இளவயதுப் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய பெரிய பொறுப்பு பெற்றோர், கற்றோர், சமூக சமய பெரியோர்களிடம் உள்ளது.

ஆனால் இவர்களே விலகல் நடத்தைகளைக் கொண்டிருக்கும் போது பிள்ளைகள் எப்படி தம்மைத் திருத்திக் கொள்ள முடியும். முன்மாதிரியாக விளங்க வேண்டியவர்கள் சிலரின் நடத்தைகள் பிள்ளைகளுக்கு வெறுப்பு ஊட்டுவதாகவே இருக்கிறது.

கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் சிலர் பாடசாலை மாணவர், மாணவிகள் மீது அநாகரிகமாக நடந்து கொண்ட சம்பவங்கள் தொடர்பாக பத்திரிகைகளில் காணக்கூடியதாக இருக்கிறது.

பெரியவர்கள் எனச் சொல்லப்படுபவர்கள் பெரியவர்களுடனும் சிறுவர்களுடனும் அநாகரிகமாக நடந்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. பெண் பிள்ளைகளைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தும் சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன.

அது மட்டுமா வீட்டுக்குள்ளேயே பிள்ளைகள் வெறுக்கத் தக்க வகையில் பெற்றோர்கள், உறவு முறையினர் நடந்து கொள்கிறனர். குடும்பம் ஒன்றின் தந்தை குடிகாரனாக இருப்பார், மாமன் அடிதடி தனம் பண்ணுபவராக இருப்பார். இந்த நிலையில் பிள்ளை எப்படி நல்ல முறையில் சிந்திக்க முடியும். பிள்ளைகளுக்கு வீட்டிலும், வீட்டுக்கு வெளியேயுமுள்ள பெரியவர்கள் முன்மாதிரியாக நடந்து கொள்வார்களானால் பிள்ளையும் சமூகத்துக்கும் வீட்டுக்கும் ஆரோக்கியமானதாக வளர்ந்து வரும்.

பிள்ளைகளை வழிநடத்தும் பெரியவர்கள் பெரியவர்களாக முன்மாதிரியாக நடந்து கொண்டால் பிள்ளைகளும் அவ்வாறே நடந்து கொள்வார்கள். எங்கள் பெரியவர்கள் காட்டும் வழியிலேயே எங்கள் சிறு வயதுப் பிள்ளைகளும் பயணிக்கின்றார்கள்.


கற்றுயர்ந்த பெரியவர்கள் சமய சமூகப் பெரியவர்கள் முன் மாதிரியாக நடந்து கொண்டால் எமது இளம் தலைமுறையினரும் சமூகத்துக்கு ஏற்ற நற்பிரஜைகளாக உருவாகுவார்கள்.

இளஞ் சமூகத்தை திருத்தி எடுக்கும் அதே நேரம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் திகழக் கூடியவர்களாக பெரியவர்கள் நடந்து காட்டுவது அவசியமானது.

பெரியவர்கள் பெரிய மனத்துடன் செயற்பட்டு வாழ்ந்து காட்டினால் எங்கள் பிள்ளைகளும் எமது பகுதியிலுள்ளவர்களின் பெயர்களைக் கூறுவார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார் பாட்டின்பம்





மட்டுவில் நல்லதம்பி

## இலக்கியக்காட்சி 126

பாரத தேசத்தில் அந்நியர் ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்த பொழுது தான், தமிழ்நாட்டிலே பாரதியார் தோன்றினார். அப்பொழுது தமிழ் அறிஞர் பலரும், தமிழ் மொழியைப் பேசுவதை, எழுதுவதைப் புறந்தள்ளி, அந்நிய மொழியைப் பேசுவதும் எழுதுவதும் அழகு எனக் கொண்டிருந்தனர். இதனைக் கண்ணுற்ற சுப்பிரமணிய பாரதியார், ''நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்'' என மனம் வேதனையுற்றார்.

இவ்வாறு தம் தாய் மொழியான தமிழ் மொழி ஊடாக மறந்தவர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டுவதற்காக இலகு தமிழில் செந்தமிழ்க் கவிதைகளைப் பாடி, மக்கள் மத்தியிலே பரவ விட்டார். தமது பாட்டுத்திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட வேண்டும் என்பது பாரதியாரின் கனவாக இருந்தது.

*''செந்தமிழ் நாடெனும் போதினிலே*
*-இன்பத்*
*தேன் வந்து பாயுது காதினிலே*
*-எங்கள்*
*தந்தையர் நாடென்ற*
*பேச்சினிலே-ஒரு*
*சக்தி பிறக்குது மூச்சினிலே ''*

என உணர்ச்சி பொங்கப் பாடினார் பாரதியார்.

அகத்திய முனிவர் தமிழ் வளர்த்த பொதிய மலை, தமிழ்நாட்டிலேயே இருக்கிறது. ''பொறுப்பிலே பிறந்து, தென்னவன் புகழிலே கிடந்து, சங்கத்திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை..'' என்பது பாடல்- வட பாரதத்திலிருந்து அனுமன் முதலிய வானர வீரர், சீதையைத் தேடி இலங்கையை நோக்கித் தெற்கே வரும் போது, தென் தமிழ் நாட்டில் அமைந்த பொதிகை மலையைக் கடந்து போகாமல், அம்மலையை வணங்கி அப்பாற் செல்க எனக் கம்பர் பாடியிருப்பதும், பொருனை என்ற தமிழ் நாட்டு நதியைத் திருநதி எனப் போற்றியிருப்பதும் செந்தமிழ் மொழியின் இனிமையினால் அன்றோ!

*''தென் தமிழ் நாட்டு அகன் பொதியில் திருமுனிவன்*
*தமிழ்ச் சங்கம் சேர்கிற் பீரேல்*
*என்றும் அவன் உறைவிடம் ஆம்; அதனால்*
*அம்மலையை இறைஞ்சி ஏகி,பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை என்னும்*
*திருநதி பின்பு ஒழிய, நாகக்*
*கன்று வளர் தடஞ் சாரல் மயேந்திர மா*
*நெடுவரையும் கடலும் காண்டிர்''*

(கம்பராமாயணம்) (கிட்டுந்தா-நாடவிட்-செய் 31)

இத்தகைய பண்டைக் காலப் புகழ் வாய்ந்த செந்தமிழை -உலகின் வேற்று நாட்டுப் புலவர்களால் வியந்து போற்றப் படும் செந்தமிழைக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டைப் பாரதியார்,

*''செந்தமிழ் நாடெனும் போதினிலே -இன்பத்*
*தேன் வந்து பாயுது காதினிலே''* என்று அழகாக எடுத்துரைத்து தமிழரைச் சிந்திக்க வைத்தார்.

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை எனப் பொருள் கண்டார்கள் தமிழர். அது செந்தமிழ் ஆனபோது மேலும் இனிமை பெறுகிறது. செந்தமிழ் நாட்டுடன் சேர்ந்து நாட்டையும் இனிமை பெறச் செய்கிறது. அதனால் செந்தமிழ் நாடு எனச் சொல்லும் போதே இன்பத் தேன் வந்து காதிலே பாய்கிறது என்கிறார் பாரதியார்!

மேலும் தமிழ் மொழியில் நூல் செய்து சிறப்பித்த பெரியார்களைப் போற்றுதல் நம் கடன் என்கிறார் பாரதியார். அதனால்,

*''கல்வி சிறந்த தமிழ் நாடு-புகழ்க்*
*கம்பன் பிறந்த தமிழ் நாடு ...''*
*என்றும்*
*''வள்ளுவன் தன்னை உலகினுக்கே-தந்து*
*வான் புகழ் கொண்ட தமிழ்நாடு-நெஞ்சை*
*அள்ளும் சிலப்பதிகாரமென்றோர்-மணி*
*ஆரம்படைத்த தமிழ் நாடு'' என்றும்*
*பாடியுள்ளமை கற்று இன்புறத்தக்கது.*

*இன்னோரிடத்தில் இப் புலவர்களை வியந்து கூறும் போது*

*''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்*
*வள்ளுவர் போல் இளங்கோ வைப்போல்*
*பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;*
*உண்மை,வெறும் புகழ்ச்சியில்லை;''*

என ஆணித்தரமாகக் கூறியதோடு, நாம் 'பழம் பெருமை பேசுவதை விட்டு, மேலும் செந்தமிழைச் செழிப்புற வளர்க்கப்பாடுபட வேண்டும் என இடித்துக் கூறுதலும் காணலாம்.

மேலும், ஆங்கிலத்தோடு வடமொழியும் கற்றுணர்ந்தவரான சுப்பிமணிய பாரதியார், தமிழ் மொழிபோல், தமிழ் அறிஞர் போல் பூமியில் எங்கும் இல்லை என்று கூறுவதற்குச் செந்தமிழின் சுவையே காரணமாகிறது காண்போமாக.

வீடு தோறும் தமிழின் முழக்கம்; வீதிதோறும் தமிழின் விளக்கம்; நகரமெங்கும் நற்றமிழ் ஓசை; நாடு எங்கும் செந்தமிழ் ஓசை என எங்கும் தமிழ் முழக்கமே இருக்க வேண்டும் என்பது பாரதியாரது பெரு விருப்பமாகும்.

மேலும், அழகினைத் திருமகள் என்றும், அறிவினைக் கலைமகள் என்றும் போற்றினார்கள் பாரத மக்கள். கலைமகளை வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப்பணி பூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கச் செய்கின்றார் பாரதியார்.

அதேநேரம், கலைகளை கவின் கலை என்றும் பயன் கலை என்றும் இரு வகையாகக் கண்ட தமிழ் மக்கள், பொதுவாக, கலைமகள் கவிவாணர் கருத்திலும் மனத்திலும் வேதங்களிலும் சஞ்சரிக்கின்றாள்; மக்கள் பேசும் மழலை மொழியிலும், கிளியின் நாவிலும், குயிலின் குரலிலும், ஓவியங்கள் சிற்பங்களிலும். உறைகிறாள் என்றும் உணரச் செய்கிறார் பாரதியார்.

அன்றியும், கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு இருப்பதாகப் பெரியோர் கூறுவதைச் சுட்டிக் காட்டிய பாரதியார் எல்லோரும் கற்றிருக்க வேண்டும் என்பதை எடுத்துரைத்தார்.

*''..................*
*அன்னயாவினும் புண்ணியம் கோடி*
*ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்''* எனக் கல்வி கற்பிப்போரையும் ஊக்கப்படுத்தினார்.

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' எனக் கற்றலின் அவசியத்தை மக்கள் உணரச் செய்தார் பாரதியார். மேலும், கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாக, கல்லார் நெஞ்சில் நில்லாத இறைவனாக அறிந்தவர்கள் தமிழர். அதனால் இறை ஆலயங்களை அமைப்பதற்கு முன்னர் அறிவாலயங்களை அமைப்பது அவசியமென்பதை எடுத்துரைத்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க )

# அன்பின் வலிமை




இராஜினிதேவி
சிவலிங்கம், கோப்பாய்.

வழமை போல மாதா கோயில் மணி ''டாங்.... டாங்....'' என நான்கு முறை அடித்து ஓய்ந்தது. திடுக்கிட்டு எழுந்த நிர்மலா தன் அருகே படுத்திருந்த மகன் முரளியின் உடலைப் பதற்றத்துடன் தொட்டுப் பார்க்கின்றாள். உடல் அனலாகக் கொதிக்கின்றது.

பரபரப்பாக எழுந்தவள் காய்ச்சலால் துவண்டு கிடக்கும் மகனின் முகத்திற்கு அருகிலே குனிகின்றாள். அவன் ''அப்பா.... அப்பா'' என மெல்ல முனகுவது கேட்கின்றது. ''முரளி.... முரளி'' என மெதுவாக அவனை அழைத்தவள் அவன் தலை முடியை அன்புடன் கோதினாள்.

இரவு முழுவதும் கண்விழித்து மகனின் அருகே இருந்தவள் உடல் அசதியினால் தூங்கி விட்டாள். இரண்டு நாள்களாக மகன் முரளிக்கு காய்ச்சல். கையில் காசில்லாமல் கணவன் மாறன் திண்டாடுவது தெரிந்தும் ''பிள்ளைக்கு காய்ச்சல் விடுகுதில்லை உடம்பு அனலாய்க் கொதிக்குது யாரிடமாவது காசு மாறிக் கொண்டு வாருங்கோ மருந்தெடுக்க வேணும்...''

மனைவியின் நச்சரிப்பைப் பொறுக்க மாட்டாத மாறன் ''யாரிடமாவது காசு மாறி வருகின்றேன்'' என்று போனவன் இரவு முழுவதும் வீடு வந்து சேரவில்லை.

வயிற்றை ஏதோ பிராண்டுவது போல் இருக்கவே வயி[illegible] பார்க்கின்றாள் நிர்மலா. ஆ[illegible] அவள் வயிற்றிலே வளரும் ஜீவனும் தன் பசியை வெளிப்படுத்துகிறதோ என்னவோ அப்பொழுதுதான் இரண்டு நாள்களாக தான் சாப்பிடாமல் வெறும் வயிற்றுடன் இருப்பது அவளுக்குப் புரிகின்றது. இன்று ஐந்து மாதக் கர்ப்பிணியான நிர்மலா அன்று தனது பெற்றோரைப் பிரிந்து மாறனோடு ஓடி வந்துவிட்டாள். தங்கள் வீட்டின் கார் சாரதியாக இருந்த மாறனை விரும்புகின்றாள் என்பதை அறிந்த அவளது தந்தை கிருஷ்ணமூர்த்தி பொங்கி எழுந்தார். அவளது மனதை மாற்றப் பெருமுயற்சி செய்தார். ஈற்றில் ''குடும்பத்தின் மானத்தைக் கப்பலேத்த வந்த உந்த நாய் எக்கேடும் கெட்டுப் போகட்டும்'' எனக் கூறி கௌரவத்தின் பால் விடுப்புக் கொண்டார். பெரும் பணக்காரரான கிருஷ்ணமூர்த்தி மகளின் காதலை ஏற்றுக் கொள்ளவில்லை. அவரது அலட்சியம் அவர்களைத் தனிமைப்படுத்தியது.

நிர்மலாவை அழைத்துச் சென்ற மாறனை அன்புடன் வரவேற்றான் நண்பன் தியாகு. ''மாறா எனக்குச் சொந்தமான வீடொன்று இருக்கு. அதில இப்போதைக்குத் தங்கலாம். அதோடை எனது வயலும் விதைக்கலாம்'' ....என்றவன் அதனைச் செயற்படுத்தியும் விட்டான்.

காலம் உருண்டோடியது.மாறன் தம்பதியினருக்கு முரளி பிறந்தான். இருவரும் மகிழ்ச்சியின் உச்சிக்கே சென்றனர். குழந்தையையும், மனைவியையும் கண்கலங்காமல் பார்த்தான் மாறன். முரளிக்கு இரண்டு வயது முடிந்துவிட்டது. நிர்மலா மீண்டும் கர்ப்பமானாள். அவள் தனது பெற்றோரின் கோபத்திற்குள்ளிருந்து வெளியேற அன்று இயலாது தவித்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆறு மணி இருக்கும் அவர்களின் வீட்டிற்குப் பரபரப்பாக வந்தான் தியாகு. '' மாறன் இங்கு பிரச்சினை வரும் போலை இருக்கு. இங்க இருக்கிறது புத்திசாலித்தனமில்லை. நாங்கள் எங்கையாவது போவம்... '' அவன் கூறி முடிப்பதற்கு முன் வானத்தில் விமானங்களின் இரைச்சல் காதைப்பிளந்தது.

வெடிச்சத்தங்களும் குண்டுகளின் ஓசையும் நான்கு பக்கங்களிலும் கேட்டன. மாறன், ''நிர்மலா பிள்ளைக்கும் உனக்கும் அவசியமான பொருள்களை ஒரு பாக்கில எடு'' எனக் கூறியவன் மகன் முரளியைத் தூக்கிக் கொண்டு நிர்மலா எடுத்துவந்த பாக்கையும் கையில் வாங்கிக் கொண்டு தியாகுவுடன் வெளியேறினான்.

வீதி எங்கும் வெறிச்சோடிக் கிடந்தது. வெறுமையான வீடுகளும், தெருவிலே ஊளையிடும் நாய்களும் மரண பயத்தை ஏற்படுத்தின. அயலவர்கள் எல்லோரும் உயிர் தப்பினால் போதும் என்று அவ்வூரைவிட்டே போய்விட்டனர். தியாகுவின் மாமாவின் குடும்பம் புதுக்குடியிருப்பில் இருந்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைப்பழமும் தாழைப்பழமும்

■ ரம்யன்

அசை போட ஒரு விடயம் 20

"-வாழைப் பழம் தின்றால்
-வாய் நோகும் என்று சொல்லி
-தாழைப் பழம் தின்றால்
-தாழ்வுனக்கு வாராதோ..!"

வாழைப் பழமானது இனிமையானது, சத்துக்கள் நிறைந்தது. வயிற்றில் ஏற்படும் மலச்சிக்கலை நீக்கி உணவு சீரணிக்க உதவுகிறது. வயிற்றில் ஏற்படும் வேறு உபாதைகளுக்கும் நிவாரணம் தருகிறது. வாழைப் பழத்தில் பல்வேறு இனங்கள் உண்டு. ஒவ்வொன்றும் வெவ்வேறு சுவைகளையும், குணங்களையும் கொண்டுள்ளது. வாழைப் பழத்தின் சிறப்பியல்புகள் இன்னும் பல இருக்கின்றன. அவைகளை யெல்லாம் நாம் ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டாம். வாழைப் பழத்தை உண்பது மிக இலகுவான வேலை. தோலை உரித்து விட்டு அப்படியே வாயிலிட்டு கடித்தும் சாப்பிடலாம். கனிந்த பழம் என்றால் சப்பியும் சாப்பிடலாம். வாயில் வைத்தவுடன் கரைந்து போகும் பழங்களுமுண்டு.

அம்மை வருத்தம் ஏற்படுபவர்களுக்கு வெப்பத்தைத் தணிக்க இதரை வாழைப் பழங்கள் நல்லது என்பார்கள். தென்னிலங்கையில் ஆனை வாழைப்பழம் விசேஷம். மலை வாழைப் பழம் விசேஷ தன்மை உடையது என்பது சில நாட்டு வைத்தியர்களின் கணிப்பு. நீரிழிவு நோயாளர்களை கதலிப்பழத்தை ஒரு நாளைக்கு ஒரு பழம் என்ற முறையில் அதுவும் காய்ப்பதமான பழத்தை உண்ணும்படி நீரிழிவு கிளினிக்கில் ஆலோசனை கூறுகிறார்கள். வாழைப்பழம் மிகவும்மென்மையான சதையைக்கொண்டது. வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல் சில பல காரியங்களை தந்திரசாலிகளான ஆசாமிகள் செய்து விடுவதாக பேச்சடிபடுவதைக் கேட்டிருக்கிறோம்.

பதவியா, அம்பாறை போன்ற இடங்களில் சிங்களக் குடியேற்றங்களை திட்டமிட்டு மேற்கொண்ட போது பெரிய சேனநாயக்கா விவசாயத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் என்ற வகையில் சொல்லிக் கொண்டார். அதற்கு பின்னர் டட்லி சேனநாயக்கவும், சி.பி.டி.சில்வா போன்றவர்களும் அத்திட்டத்தை முன் எடுத்தார்கள். ஆரம்பத்தில் விவசாயத்தை விஸ்தரிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று கூறிக் கொள்ளப்பட்டது. ஆனால் மறைமுகமாக அந்தப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றமே நடைபெற்றது தெரியவந்தது.

இது வாழைப் பழத்தில் நோகாமல் ஊசி ஏற்றும் செயற்பாடு அல்லவா? இது போன்று பல வேலைகள் அரசியல் நோக்கில் இன்றும் கூட நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு வாழைப் பழத்தின் மகத்துவம் பற்றி இன்னும் எவ்வளவோ பேசலாம்.

ஆனால் தாழைப் பழம் எதற்கு உதவும்? தாழை மரத்தில் தாழம்பூ பூப்பது பற்றி அறிவோம். அந்தப் பூ வெறும் மஞ்சள் நிற கீற்றுகீற்றான இலைகள் போன்று தான் காணப்படும். மலையகத்திலும் காடுகளிலும் பற்றையாக தாழை மரங்கள் வளர்வதைப் பார்க்கலாம். இங்கும் தாழை மரங்கள் காணப்படுகின்றன ஆனால் அவை பூப்பது பற்றி தகவல் இல்லை. தாழை மலர் மிகவும் வாசனையுடையது. அருகில் இருப்பவர்களை விட தூரத்தில் இருப்பவர்களுக்கே அதன் வாசம் நுகரக் கூடியதாய் இருக்கும். அம்மலரின் மணம் வரும் திசையை நோக்கிச் சென்று, அதனை விரும்புகின்றவர்கள் பறித்தெடுப்பார்கள். மலரின் இதழ்கள் காய்ந்த பிறகும் வாசம் குறையாது. மக்கள் தமது உடுப்புப் பெட்டிகளில் இம்மலரின் இதழ்களை வைத்துக் கொள்வார்கள். இது பூச்சி கொல்லியாகப் பயன்படுவது மாத்திரமன்றி, உடு புடவைகளுக்கும் மணம் தருவதாயும் இருக்கும்.

தாழையில் காய்களும் காய்ப்பதுண்டு. அது பார்ப்பதற்கு சிறிய அன்னாசிப் பழம் போல் காணப்படும். அதனை எவரும் சாப்பிடுவதில்லை. அது நச்சுத் தன்மையுடையது என்று கேள்வி.அப்படி இருக்க அப்பழத்தை எவரும் சாப்பிடமாட்டார்கள். அப்படி சாப்பிட்டாலும் உடலுக்கு ஒவ்வாமை அல்லது உயிர்ச்சேதமும் ஏற்படலாம்.

எனவே தான் அழுகுணி சித்தர் கேட்கிறார். வாழைப் பழம் சாப்பிடுவதற்கு தாராள மாகக் கிடைக்கும் போது, தாழைப் பழத்தை ஏனடா சாப்பிடத் துணிகிறாய் என்று.

சித்தரின் பாடலில் எப் பொழுதுமே வெளிப்படையான அர்த்தம் ஒன்று இருப்பது போல் அகப் பொருளாக வேதாந்த பொருளும் ஒன்று இருக்கும். அதாவது இறைவனை வணங்கவும், அவனது அருளைப் பெறவும் எத்தனையோ இலகுவான வழிகள் இருக்கும் போது, உடலையும் உள்ளத்தையும் வருத்திக் கொண்டு மனிதன் வீணாக மாய்கின்றானே என்பது அவரது ஆதங்கம்.

இந்த சித்தர், உலகத்தோரின் அறியாமையைக் கண்டு அதற்காக எப்பொழுதும் அழுது கண்ணீர் வடித்துக் கொண்டே இருப்பாராம். ஓரிடத்தில் தரிக்காமல் திரிவாராம். அழுது கொண்டே திரிந்ததனால் அவரை அழுகுணி சித்தர் என்று அழைத்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

மனிதனானவன் மனத்தாலும், உடற் செய்கைகளாலும், தாழ்மையாக இருந்து இறைவனுக்கு விருப்பமானவனாக வாழ்வானாகில் அதுவே போதும் என்று சித்தர்கள் உபதேசிக்கின்றார்கள்.

பெரும்பாலான சித்தர்கள், இறைவன் மனிதனின் உள்ளத்திலேயே வாழ்கின்றார். அவரைத் தேடி வேறுஎங்கும் ஓட வேண்டாம் என்றே உபதேசித்திருக்கிறார்கள். அம்மாதிரி உபதேசித்தவர்களில் சிவவாக்கியர் என்பவரும ஒருவர். அவர் பாடியுள்ள பாடல் உலகத்தோரின் இறைவணக்க முறையை எள்ளி நகையாடுவதாக இருக்கிறது.

*"சுட்ட கல்லை தெய்வமென்று நாலுபுட்பம் சாற்றியே*
*சுற்றி வந்து மொணமொணென்று சொல்லு மந்திரம் ஏதடா*
*நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்*
*சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"*

தெய்வம் உன் உள்ளத்துக்குள்ளேயே இருக்கிறார். ஆனால் நீயோ கல்லை நட்டுவைத்துவிட்டு அதை தெய்வமென்று எண்ணிக் கொண்டு சுற்றிச் சுற்றி வருகிறாய். நாலு விதமான மலர்களை சாத்துகிறாய். உனக்கே விளங்காத மந்திரமென்று சொல்லிக் கொண்டு எதையோ முணுமுணுக்கிறாய். அந்தக்கல் உன்னுடன் பேசுமா, கறி சமைக்கின்ற சட்டியோ அல்லது அதனை எடுக்கின்ற சட்டுவமோ கறியின் சுவையை அறியுமா? மடையனாய் இருக்கிறாயே? என்று வைகின்றார் சிவவாக்கியர்.

தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மட்டுமல்ல, இந்துக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கனுமே இறையருளும் அரும் பெரும் சித்திகளும் பெற்ற சித்தர்கள் வாழ்ந்துள்ளார்கள். இன்றும் கூட வாழக் கூடும்.

இந்த சித்தர்களின் வாழ்வியல் ஆய்வுக்கும், ஆச்சரியத்துக்கும் உரியவை. வட நாட்டில் ராமகிருஷ்ண பரம ஹம்சர் ஒரு சித்தர்தான். அவருக்கு வாய்க்கப் பெற்ற சீடர்கள் மூலம் உலகம் முழுவதும் அவரது புகழ் பரவியது. இந்து மதத்தின் ஆழமும், அருமையும் அழகும், பெருமையும் உலகின் மூலை முடுக்கெல்லாம் விவேகானந்தர் போன்ற மாபெரும் ஞானச் சீடர்களால் பரப்பப்பட்டன. பரமஹம்சர் உலகம் அறியாத ஒரு சிறுமியாக விளங்கிய அன்னை சாரதா தேவியை திருமணம் முடித்திருந்த போதிலும், அவரையே காளி தேவியாகப் பூசித்து துறவறம் காத்தார்.

இவ்வாறு சித்தர்களின் வாழ்க்கைமுறை விசித்திரமாகவும், ஆச்சரியமூட்டுபவையாகவும் இருப்பதுண்டு.

தமிழ் நாட்டில் பொதி சுவாமிகள் என்றொரு அனுபூதிமகான் இருந்தார். அவரது நண்பரான பொன்னையா சுவாமியும், அவரும் ஒரு நாள் மாலை உரையாடிக் கொண்டிருந்த போது, வில் வண்டியொன்றில் அழகிய சீமாட்டியொருவர் சுவாமிகளின் முன்வந்து நின்றார். அந்த பெண்ணை ஏறிட்டுப் பார்த்த பொதி சுவாமிகள், புன்னகை பூத்து, உனது கவலையெல்லாம் தீரும், சொத்து தகராறு சுகமாக முடியும் எனக் கூறி விபூதியும் கொடுத்து வழியனுப்பிவைத்தார். அவர் சென்றதும் இவர் யார் என்று தெரிகிறதா என்று நண்பரிடம் கேட்டார்.

'தெரியவில்லையே' என்றார் நண்பர். அதற்கு பொதி சுவாமிகள் சிரித்து விட்டு "இவள் தான் என்னைத் துறவியாக்கி இந்நிலைக்கு உயர்த்திய புண்ணியவதி. ஒரு காலத்தில் எனது இல்லத்தரசியாக இருந்தவள்" என்று விளக்கினார். "அவருக்குமா நல்லாசி" என்று நண்பர் கேட்க "அவருக்கு கோயிலே கட்டலாம் அவளால் தானே இந்த அடிமை ஞானம் அடைந்தது" என்று கூறிவிட்டு மேலும் சிரித்தாராம். அந்தப் பெண்ணுக்கு சுவாமியார்தான் தனது முந்திய கணவர் என்பது தெரிந்திருக்கவில்லை.

திருமணமான அன்றே கருத்துவேறு பட்டு வீட்டை விட்டு வெளியேறியவர் துறவியானார். அந்த அம்மையார் மறுமண முடித்துக் கொண்டார். வாரிசு இல்லை. கணவனும் இறந்து விட்டதால் அந்த சொத்து விவகாரத்தில் இழுபடுகிறார் என்ற விவரங்கள் பின்னர் தெரிய வந்தது. ★

# பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருள்கள்

■ சோபனா

பண்டைய யாழ்ப்பாணத்துப் பண்பாடுகளைப் பறைசாற்றுவதற்கும் அதனை நினைவுபடுத்துவதற்கும் அங்காங்கே கண்டெடுக்கப்படும் தொல்பொருள் எச்சங்கள் துணைபுரிகின்றன. இன்னும் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டையும் ஏனைய நாடுகளுடன் யாழ்ப்பாணம் கொண்ட உறவு நிலைப்பாடுகளையும் சான்றாதாரங்களாக வெளியிட்ட வண்ணமும் உள்ளன.

இத்தகைய தொல்பொருள் எச்சங்களால் யாராலும் பேசப்படாத இடங்களும் இன்று பரந்துபட்டுப் பேசப்படும் அளவுக்கும் அது சார்ந்த மண் புனிதம் அடைவதற்கும் வற்றாத ஊற்றாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் கால தொல்பொருள் ஆய்வுகளின் கதாநாயகனாக திகழ்கிறது அல்லைப்பிட்டிக் கிராமம். பேரர் மென்று போட்ட எச்சத்தின் மீதமாக யாராலும் அறியப்படாத ஒரு குட்டிக் கிராமமாக இருந்ததுதான் இந்த அல்லைப்பிட்டிக் கிராமம்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக அந்தக் கிராம மக்களால் வெட்டப்பட்ட கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட மனித உருவாக்கத்தை ஒத்த சிலையின் தலைப் பாகத்துக்குரிய சிற்பம் ஒன்று தொல்பொருள் சின்னமாக இனங்காணப்பட்டதை அடுத்து அல்லைப்பிட்டிக் கிராமத்தில் வசந்தம் வீசத் தொடங்கியுள்ளது. மறைமுகமாக யாராலும் அறியப்படாத கிராமமாக இருந்த அல்லைப்பிட்டி இன்று வெளிப்படுவதற்குக் காரணம் அங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் ஆகும்.



"காலங்கள் கடந்து போனாலும் எமது விழுமியமான சொத்துக்கள் என்றுமே அழிந்துபோகாது.

கண்ணி வெடிகளால் விதைக்கப்பட்ட நிலங்களை கண்ணிவெடி அகற்றும் பிரிவு மீட்டுக் கொடுத்த பின்னர் அல்லைப்பிட்டிக் கிராமத்தில் உள்ள மக்கள் தமது இருப்பிடங்களைச் சரிப்படுத்துவதுடன் பொது இடங்களையும் புனரமைக்கும் பணிகளைத் தற்போது ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு பொதுமக்களால் செய்யப்படும் புனரமைப்புப் பணிகளின் போதே யாழ்ப்பாணத்துக்கான தொல்பொருள் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதன் பயனாக இன்று தொல்பொருள் ஆராய்ச்சியில் ஒரு கதாநாயகனாக இடம்பிடித்துள்ளது அல்லைப்பிட்டிக் கிராமம். அல்லைப்பிட்டிக் கிராமத்தில் காணப்படுகின்ற ஐயனார் ஆலயம், இடிந்த நிலையில் உள்ள மாதா ஆலயம் போன்றன புராதன எச்சங்களுடன் தொடர்புடையவையாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட அல்லைப்பிட்டிப் பிரதேசத்தைப் போன்று இன்றும் எத்தனை கிராமங்கள் மறைமுகமாக யாருக்குமே தெரியாமல் உள்ளன. இறைவனுக்கே வெளிச்சம்.

அங்கெல்லாம் எமது பண்டைய கால மரபுகள் இல்லாமல் இல்லை. ஆனால் தொல்பொருள் சின்னங்களை எப்படி அடையாளம் காண்பது, அதன் தாற்பரியம் தொடர்பாக பலர் அறிந்திருக்கமாட்டார்கள்.

ஆனால் இவை யாவும் எமது பண்பாட்டை நிலைநாட்டுவதற்கு உறுதுணையானவை என்பது தொடர்பில் மக்கள் மிகவும் விழிப்புடன் செயற்படவேண்டும்.


அந்த வகையில் யாழ்ப்பாணத்துச் சிறப்புகளில் ஒன்றான இந்தத் தொல்பொருள் சின்னங்கள் காணப்படும் இடங்களை நாம் பாதுகாக்க வேண்டும். இன்னொரு தலைமுறையினர் யாழ்ப்பாணம் என்ன செய்திருக்கிறது எனக் கேட்கும் கேள்விக்குப் பதிலாக சான்றாக எமக்கு இவை உதவும். காலங்கள் கடந்து போனாலும் எமது விழுமியமான சொத்துக்கள் என்றுமே அழிந்துபோகாது. பிற நாடுகள் எவ்வாறான தொடர்புகளை பண்டைக் காலத்தில் வைத்திருந்தன என்பதை இந்தச் சான்றாதாரங்கள் சொல்லாமல் சொல்வதாக அமைந்துள்ளது.

இந்த நிலைபெறாச் சொத்துக்கள் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டப்பட வேண்டியது முக்கிய தேவையாகும்.


வந்தோரை வாழவைத்த எங்கள் மண் யாழ்.மண். இதன் ஆதாரங்களை நாம் ஆவணங்களாக சேர்த்து வைக்க வேண்டும். எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட பிரதேசத்துக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த யாழ்ப்பாணத்துக்கே இவை பெருமை தேடித் தருகின்றன. இதனைப் பாதுகாக்க வேண்டியது காலத்தின் தேவை. ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






பா.டர்ஷிகன்
தரம்-1, வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை



சி.புவிராஜ்
அச்சுவேலி மத்திய கல்லூரி



சு.நிதுஷா
புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை



கு.உசாந்தன்
தரம் - 8 சி, அச்சுவேலி மத்திய கல்லூரி



அ.தர்ஷன்
கனகரட்ணம் ம.ம.வி.



ஜே.ஜோய்சன்
இராமநாதன் கல்லூரி

# அன்பா, செல்வமா, வெற்றியா சிறந்தது?



ஒரு ஊரில் குமரன் தன் தாய் தந்தையுடன் வசித்துவந்தான். அப்போது அவன் வீட்டின் முன் மூன்று வயதானவர்கள் வந்து உள்ளே வரலாமா என்று கேட்டனர். தந்தை வாருங்கள் என்றார்.

நாங்கள் மூவரும் ஒன்றாக வரமுடியாது...யாராவது ஒருவர் தான் வரமுடியும்...என் பெயர் பணம்...இவர் பெயர் வெற்றி... இவர் பெயர் அன்பு.. எங்கள் மூவரில் ஒருவர் தான் ஒரு வீட்டுக்குள் செல்லமுடியும்... எங்கள் மூவரில் உங்களுக்கு யார் வேண்டுமோ அவரை அழைத்துக் கொள்ளுங்கள் என்றார். பணம் எனப் படுபவர். குமரனின் தந்தை வெற்றியை அழைக்கலாம்..நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதில் வெற்றியடையலாம் என்றார்.

ஆனால் குமரனோ... அப்பா பணத்தையே உள்ளே அழைக்கலாம்... நம்மிடம் பணம் சேர்ந்துவிட்டால்... எல்லாவற்றையும்.. வெற்றி.. உட்பட... அனைத்தையும் வாங்கலாம் என்றான். ஆனால் குமரனின் தாயோ வேண்டாம்... அன்பையே அழைக்கலாம். அன்பு தான் முக்கியம் என்றாள். பின் மூவரும், அன்பு உள்ளே வரட்டும் என்றனர்.

அன்பு உள்ளே வர, அவரைத் தொடர்ந்து வெற்றியும், பணமும் கூட உள்ளே நுழைந்தனர். உடன் குமரனின் அம்மா அன்பை மட்டும் தானே உள்ளே அழைத்தோம் என்றார்.

அன்பு சொன்னார், நீங்கள் பணத்தையோ, வெற்றியையோ அழைத்திருந்தால்.. மற்ற இருவரும் வெளியே நின்றிருப்போம். ஆனால் அன்பான என்னை வரச் சொன்னதால்.. நான் இருக்கும் இடத்தில் தான் பணமும், வெற்றியும் இருக்கும்.. ஆகவே அவர்களும் உள்ளே வந்து விட்டனர். அன்பு உள்ளம் இருந்தால்.. நம் வாழ்வில் வெற்றியும், தேவையான வசதிகளும் தானாகவே வந்துவிடும். அன்பே சிவம்... அன்பே முக்கியம். இதையே வள்ளுவர்..

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு

அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும். இல்லையேல், அது எலும்புத் தோல் போர்த்திய வெறும் உடலாகும். சுருங்கச் சொன்னால்..அன்பு மனம் கொண்டவர்களே மனிதர்கள் ஆவார்கள்.

-பிரவீனா

## ஒத்த கருத்துச் சொல்

சினம் - கோபம்
கரை - ஓரம்
தோழர் - நண்பர்
நேயம் - அன்பு
அருவி - ஆறு
அகம் - உளம்
கேள்வி - வினா
வியாபாரி - வர்த்தகர்
வீடு - மனை
சண்டை - யுத்தம்
புலவர் - பாவலர்
வயல் - கழனி
புவி - வையகம்
அக்கினி - நெருப்பு
பரீட்சை - சோதனை
திறமை - வல்லமை
அடிசில் - உணவு
தெளிவு - விளக்கம்
சேனை - படை
குழந்தை - குழவி
அல்லல் - இன்னல்

சி.நிலக்சன்
தரம்-7ஏ, யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை,

## விடை தெரியுமா? 151

### உங்களுக்கும் பரிசில்கள்

1. கண்கள் இருந்தும் பார்வையில்லாத பிராணி எது?
2. நாய்களே இல்லாத ஊர் எது?
3. வைரத்தில் எத்தனை மூலைகள் உள்ளன?
4. மருத்துவ வெந்நீரூற்றுக்கள் நிறைந்த நாடு எது?
5. பென்ரன் என்றால் என்ன?

### விடைகள் 149

1. திம்பு
2. அலுமினியம்
3. கோபி அனான்
4. ஏப்ரல் -15
5. ஆஸ்திரேலியாவில்

### வெற்றி பெற்றோர் விவரம் (150)

★ செ.நபுதரன், தரம் -7, யாழ்.மத்திய கல்லூரி
★ சி.டல்சிகா, தரம்-8, மருதங்கேணி இ.த.க. பாடசாலை
★ க.கபிலன், தரம் -9, உடுவில் மான்ஸ் ம.வி
★ சி.சயன், தரம்-3டி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
★ கு.மாதங்கி, தரம்-4எ, இணுவில் இந்துக் கல்லூரி
★ பா.நவனீதன், தரம் - 7, ஹாட்லிக் கல்லூரி

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 24.03.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.




அம்மாவை நினைத்திடுவோம்
என்றும் அம்மாவை நினைத்திடுவோம்
அம்மாவை நினைத்திடுவோம்
என்றும் அம்மாவை நினைத்திடுவோம்

பத்துமாசம் சுமந்து பெற்றாள்
தாய் அவள்தானே
பத்துமாசம் சுமந்து பெற்றாள்
தாய் அவள்தானே

அ, ஆ சொல்லித்தந்தாள்
அன்னை அவள்தானே
பிறந்தவுடனே பாசத்தையும்
ஊட்டி வளர்த்தாளே

அ.ஜெயதர்சன்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## ஏழு நற்குணங்கள்

1. ஏழ்மையிலும் - நேர்மை
2. கோபத்திலும் - பொறுமை
3. தோல்வியிலும் - விடாமுயற்சி
4. வறுமையிலும் - பரோபகாரம்
5. துன்பத்திலும் - தைரியம்
6. செல்வத்திலும் - எளிமை
7. பதவியிலும் - பணிவு

## சீதை

கே.சுபதாரணி,
சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

இல்லற வாழ்க்கைக்கு சிறந்த வளாகவும்
கணவனின் வெற்றிக்கு துணை நின்றவளாகவும்
எந்த நேரமும் கணவனை நினைத்து இருப்பவளாகவும்
இருந்தவள் தான் இராமனின் மனைவி
அவள் தான் சீதை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி யுத்தம்

பணக்காரனை
இறைவன் படைத்தான்
ஏழைகளை என்ன
விலங்குகள் ஈன்றனவா?

பணக்கார சமுதாயம்
விலத்திச் செல்ல இவர்கள் என்ன
கால்களை அள்ளும்
கண்ணிவெடிகளா?

வசதியானவனே
உன் மாத வருமானம்
லட்சத்தைத் தொடலாம்
நாங்கள் முள்ளந்தண்டு தேய
உழைத்தாலும்
நோய்க்குத் தைலம் போடும்
தேவைக்கு காசிருக்காது

மனைவியின்
மாதவிடாய் அவஸ்தையில்
இருந்து மகளுக்கு
கிறுக்கி அளிக்க அளிறேசர் வரை
வாங்கித் தொலைத்து
நித்தம் ஒரு சாண் வயிற்றை
உலுப்பும் பசியிலிருந்து
மூன்று நேரத்தை ஒரு நேரமாக்கி
சிக்கனத்தை சிறை செய்து
சேமித்து வைத்தோம்!

மழைக்காலமானால்
எங்கள் குடிசைகள்
நனைகிறது, கரைகிறது
குடைபிடிக்க கூரையில்லாமல்
தினம் மழைக்கால
அகதி என்று பதியப்பட்டோம்.

"நான் பட்ட கஸ்ரத்தை
மகனே நியாவது துரத்தியடி"
இது ஏழைத்தலைமுறையின்
ஈனக்குரல்

உடல் வேர்க்காமல்
பணம் சேர்க்கும் முதலாளித்துவமே....
இங்கே எம் வேர்வைச் சுரப்பிகளில்
உணர்வில்லை

சர்வதிகாரி வீட்டு
நாயாய் இருக்கிறது விலைவாசி
விலைவாசியை எதிர்த்தால்
பயங்கரவாதி என்கிறது அரசு

ஏழைகளே எடுங்கள் ஆயுதம்
பணக்கார மிதவாதிகளை அழிப்போம்
எல்லோரும் ஏழைகளாவோம் இல்லை
எல்லோரும் பணக்காரராவோம்

வசதி என்பது உழைத்தால் வரும்
என்கிறார்கள் புத்திசாலிகள்
சேமிப்பென்பது தேவைகளை நிராகரித்து
விட்டு செய்வதில்லை தேவைக்கதிகமாக
பணமிருப்பவர்கள் செய்வது.

வாருங்கள் ஏழைகளே
வறுமையின் கிரீடத்தை
தலையில் சுமந்து
சோர்ந்த மனிதர்களே வாருங்கள்
எம் அடுத்த தலைமுறைக்காய்
ஒரு முறை ஆயுதம் எடுப்போம்
இல்லை எம் தலைமுறையே அழிய
போர் தொடுப்போம்

நாங்கள் விளக்கை
அணைத்த விட்டில்களாவோம்
போராட்டம் ஒன்றால் தான்
மனிதன் தொடக்கம்
எறும்பு வரை
பூமியில் தப்பித்துள்ளது.

சூரியன் ஒரு நாள்
போராடியதில் தான் பூமி பிறந்தது
மரத்தைத் தொட்ட
குரங்கினமொன்று இன்று கணினி
தொடுகிறதே காலத்தோடு மனிதன்
செய்த போராட்டம் தானே
எதிர்த்தலில்லாத வாழ்க்கை
இயக்கமில்லாத உடம்பு போன்றது.
வாருங்கள் ஏழைகளே
ஏழைகளில்லாத
சமுதாயம் படைப்போம்!

எம்.நேதா, நெடுந்தீவு

# ஜெனிவா 2012

மற்போர்முடிந்து
சொற்போர் தொடர்கிறது....
உலக ஒழுங்குகளுக்குள்
உறவாடுகின்றன
இராஜ தந்திரங்கள்
துகிலுரியப்பட்ட
திரௌபதைகளுக்கும்
துன்புறுத்தப்பட்ட
இயேசுக்களுக்கும்
துரத்தியடிக்கப்பட்ட
பாண்டவர்களுக்கும்
நீதி வேண்டி
மனிதவுரிமை
மாநாடு நடக்கிறது....
தன்னினத்துக்கு
எதிராகவே
வெள்ளக்காடாய்
விலைபோகும்
வெள்ளாடுகளும்
நீதி கேட்டு
வேற்றினத்தாடுகளும்
சொந்த ஆடுகளின்
ஆயன்களே
மௌனமானதால்!
உலக ஆயன்
உருவெடுக்கின்றான்
ஜெனிவாவில்
முடிவு........?

பி.ஏ.றெனோல்ட்
யாழ். பல்கலைக்கழகம்



# கனவுக்கோட்டை

என் மனதில் உன் நினைவுகள்
கோட்டையாகக் கட்டினேன்
உன்னைக் குடியமர்த்த
உன் வரவை எதிர்பார்த்து
தினந்தோறும் காத்து நின்றேன்
நீ வந்து குடியேறியதும்
என் கனவுக்கோட்டை
கனவு மாளிகை ஆனது
நீ நடக்க மலர்ப்பாதையையும்
நீ உறங்க மலர்ப் படுக்கையும் அமைத்தேன்
என் மன மாளிகையில் நீ வாழ
நான் காவலனாய்
காத்து நின்றேன்
நாள்கள் சென்றன உன் நினைவுகள்
என் மனச்சுவரை
அரிக்கத் தொடங்கின
காலங்கள் செல்லச் செல்ல
சுவர்கள் இடியத் தொடங்கின
இப்போது நிலைத்திருப்பது
அடி அத்திபாரம்
என் உயிர் மட்டும்தான்.

தி.ஜெ.ஜெல் கிளிங்ரன்



# நெருக்கம்



உனக்கும்
எனக்கும் இடைவெளி
தூரமென்று - என்
இதயத்துக்கும்
தடை போட்டாய் இருந்தும்
யுத்த நிறுத்தம்
செய்யாமல் வார்த்தைகள்
தங்களுக்குள்
சண்டை போட்டன
கண்கள்
மௌனத்தை மொழியாக்கும்
என நினைத்து
பார்வைகளை
கனவுகளுடன் ஒத்திகை
புரிந்தாய் - ஆனால்
நெருக்கம்
இன்னும் அதிகமாகியது
இருந்தும் நம்
சந்திப்புக்களுக்கு
விவாகரத்து கொடுத்துவிட்டாய்
ஆனால்
என் நினைவுகள்
என்றும் உன்னிடம்தான்
வாழ்ந்து கொண்டிருக்கும்.

ஜே.எஸ்.ராஜ்.

# மீட்சி கிட்டுமா?

தாய்த்திரு நாட்டினிலே!
தமிழனாக பிறந்துவிட்டோம்
ஆதலினால் இன்னமும்
அனுபவிக்கின்றோம் வேதனைகள்!

அந்நியர் காலத்தில்
அடக்கப்பட்டவர்கள் ஆதலால்
அடைபட்டுள்ளோம் இன்றும்
ஆட்டு மந்தைகளாய்..!


தனிச் சிங்கள சட்டத்தால்
இனிமை இழக்கத் தொடங்கிய
எம் வாழ்வு..!
விடுதலைப் போரினிலும்
படுகொலை செய்யப்பட்டது....

போர் முடிந்து
ஒரு குடை ஆட்சியென்றார்
பார்முழுதும்!
நல்லாட்சி என்று சொல்லியே
வெறும் சொல்லாட்சி நடத்தி
அபிவிருத்தி என்ற போர்வையில்
கொத்துக்களால் கொன்ற மக்களின்
சொத்துக்களை பறித்தனர்...
அகதியான மக்களை
சாதிகளுக்குள் குடியேற்றி
மீள் குடியேற்றம் என்றனர்...

பன்னிரண்டாம் ஆண்டுக்கான
பாதீட்டு திட்டத்திலும்
பாதுகாப்புக்கே அதிகதொகை!
போதும் இனி என்ற போது
ஏற்றி விட்டார் எரிபொருள் விலையை
எரிபொருள்களின் விலைவாசி
திரிமடைந்தது ஏனையவற்றிலும்
ஆதலினால் வீழ்த்தப்பட்டோம்
வறுமை பிணி தனக்குள்...

நிர்க்கதியாய் திரிந்த வாழ்வு
நிம்மதியாய் இல்லை ஐயா!
தமிழானக பிறந்தமையால்
சோகங்களும் தோல்விகளும்
தொடர்கதையாய் தொடர்கிறது....
மாட்சிமை நாம் பெறுவதற்கு
மீட்சி ஒன்று வேண்டும் ஐயா!


நிலவன், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆஷாத்

# இலங்கையிடம் சரணடையும் இந்திய அரசியல்



இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயான உறவு என்பது நீண்டகால வரலாற்றைக் கொண்டது. சிங்கள இனத்தின் மூலகர்த்தா எனக் கருதப்படும் விஜயன் வங்காள தேசத்திலிருந்து விரட்டப்பட்ட இளவரசன் எனக் கூறப்பட்ட போதிலும் அவனும் அவனது தோழர்களும் பாண்டிய நாட்டிலிருந்தே பெண்களைத் தருவித்துத் திருமணம் செய்து கொண்டனர். அவன் கூட இந்தியாவைச் சேர்ந்தவனாக இருந்த போதிலும் அவனின் காலம் தொட்டு ஐரோப்பியர் வருகை மட்டும் இலங்கையுடனான உறவு தென்னிந்தியாவுடனேயே இருந்து வந்தது.

காசியப்பன் என்ற சிங்கள இளவரசன் தன் தந்தையாகிய தாதுசேனனைக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றி சிகிரியாவில் அரண்மனை அமைத்து ஆட்சி செய்தபோது அவனின் தம்பி இந்தியா சென்று பாண்டியர்களிடம் படையுதவி பெற்று மீண்டும் அரசைக் கைப்பற்றியது வரலாறு. இவ்வாறே பல்லவர்கள் மேற்கொண்ட வதாபி மீதான படையெடுப்பின் போது மானவர்மன் என்ற சிங்களத் தளபதியே ஒரு படையணியை வழி நடத்திப் போரிட்டான். இவ்வாறே பாண்டியர்கள், சோழர்களால் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டபோது பாண்டியர்களின் மணிமுடி தென்னிலங்கையிலேயே மறைத்து வைத்துப் பாதுகாக்கப்பட்டது எனவும் கூறப்படுகிறது. அதேபோன்று ராஜராஜ சோழன் காலத்தில் சோழ சாம்ராஜ்யம் இலங்கையின் அனுராதபுரம் - பொலநறுவை வரை வியாபித்திருக்கும் குறிப்பிடத்தக்கது.

ஞாயிறு
காரம்

அதுமட்டுமன்றி சிகிரியாவின் குகை ஓவியங்கள் எல்லாரா ஓவியங்களை ஒத்துள்ளன எனவும் இலங்கையின் புத்த கோயில் சிலைகள் பல்லவர் கால சிற்ப அடிப்படையிலேயே அமைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வளவுதான் இலங்கை இந்திய உறவுகள் நீண்ட வரலாற்றைக் கொண்டிருந்த போதிலும் அதில் பெரும்பான்மையானவை போரின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. அதாவது இலங்கையில் தோற்கடிக்கப்படுபவர்கள் இந்திய உதவி பெற்று மீண்டும் வந்து ஆட்சியைக் கைப்பற்றுவது அல்லது ஆக்கிரமிப்பது என்ற வகையிலேயே இந்த உறவுகள் அமைந்திருந்தன.

ஐரோப்பியர் வருகைக்குச் சிறிது முற்பட்ட காலத்தில் தென்னிந்தியாவில் பலம் பெற்றிருந்த நாயக்க வம்சத்தினருக்கும் இலங்கையருக்குமிடையே நெருங்கிய உறவு நிலவியது. போர்த்துக்கேயரால் சங்கிலியன் தோற்கடிக்கப்பட்டு பூநகரி வரை பின் வாங்கியபோது நாயக்கர் படைகளே உதவிக்கு வந்து மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நிலை உருவாக்கப்பட்டது.

கண்டியின் கடைசி மன்னனும் ஆங்கிலேயருக்கு எதிராக வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தியவனுமான கீர்த்தி சிறி விக்கிரம ராஜசிங்கன் நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவன் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

ஆனால் ஆங்கிலேயர் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளைக் கைப்பற்றிய பின்பு நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. இந்தியா முழுவதும் ஒரு நாடு ஆக்கப்பட்டு அதன் தலைமை டில்லிக்கு மாற்றப்பட்ட போது தென்னிந்தியாவுடனான இலங்கையின் உறவு இலங்கை- இந்தியா உறவு என்ற வடிவத்துக்கு மாறியது.

இந்தியா ஒரு பெரிய தேசம் எனவும் இலங்கை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு கேந்திர முக்கியத்துவம் கொண்ட ஒரு சிறிய நாடு எனவும் நோக்கப்படத் தொடங்கின. அவ்வகையிலேயே இலங்கை இந்திய உறவும் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

இப்படியான ஒரு நிலையில் அண்மையில் இந்திய நாடாளுமன்றத்தில் இலங்கை இந்திய நீண்ட கால உறவு பற்றிய கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தக் கருத்துகள் தமிழ் மக்கள் மத்தியில் பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் அமெரிக்கா இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கொண்டு வரவுள்ள கண்டனத் தீர்மானத்தை ஆதரிக்கும்படி இந்திய நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க., தி.மு.க., கம்யூனிஸ்டுகள், விடுதலைச் சிறுத்தைகள், பாரதீய ஜனதா கட்சியினர் ஒட்டுமொத்த தமிழகத்தின் குரலாகக் கோரிக்கை முன்வைத்தனர். இதற்குப் பதிலளித்த வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அது தொடர்பான முடிவு இலங்கையுடன் நீண்ட காலமாக நிலவி வரும் உறவின் அடிப்படையிலேயே அமையும் எனத் தெரிவித்திருந்தார். மேலும் அவர் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவே நிறைய உதவிகளை வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டார். இந்தப் பதிலில் திருப்தியடையாத தமிழக உறுப்பினர்கள் எதிர்த்துக் கூச்சலிட்டது மட்டுமன்றி கிருஷ்ணாவின் அறிக்கையைக் கிழித்தெறிந்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர். அதுமட்டுமன்றி இந்திய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்தப் பிரச்சினை தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் இந்தியா எந்த ஒரு நாட்டுக்கும் எதிரான தீர்மானத்துக்கு ஆதரவளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்திருந்தார். எனினும் இந்தப் பதில்களிலிருந்து நாம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். அதாவது மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா எதிர்க்கும் அல்லது தமிழ் மக்களுக்கு ஒரு கண்துடைப்பாக நடுநிலை வகுக்கும்.

எனினும் இந்தியாவின் நீண்டகால இலங்கை - இந்திய உறவின் அடிப்படையிலேயே முடிவு எடுக்கப்படும் என்ற பதிலோ அல்லது இந்தியா எந்த ஒரு நாட்டுக்கும் எதிரான தீர்மானத்தையும் ஆதரிக்காது என்ற பதிலையோ எந்த ஒரு தமிழனும் மட்டுமல்ல எந்த ஒரு நியாயபூர்வமான மனிதனும் கூட ஏற்றுக்கொள்ளமாட்டான்.

அமெரிக்காவால் கொண்டு வரப்படும் தீர்மானம் இலங்கை என்ற ஒரு நாட்டுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானமல்ல. இலங்கை அரசினதும் அரச படைகளினதும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான பிரேரணை மட்டுமே. இது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்க விதிகளின் அடிப்படையில் முன்வைக்கப்படும் பிரேரணையே. இங்கு பிரச்சினை நாடோ, நாட்டு மக்களோ அல்ல. போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தனி மனிதர்களே குற்றம் சுமத்தப்படுகின்றனர். எனவே பிரணாப் முகர்ஜியின் பதிலில் இலங்கை அரசின் பொய்மைப் பிரசாரம் ஒலிப்பதைக் காணலாம்.

அதேவேளையில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நீண்டகாலமாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நிலவிவரும் உறவின் அடிப்படையிலேயே இந்தியா நிலைப்பாடு எடுக்கும் என்ற பதில் பல கேள்விகளை எழுப்புகிறது. இலங்கையில் இருவருக்கிடையில் போர் நிகழ்ந்த பின் தோற்றவர் இந்தியாவுக்கு ஓடிப்போய் படையுதவி பெற்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் உறவு ஒரு காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நிலவியது. இப்போ அதற்கான அவசியமேயில்லை. ஏனெனில் இலங்கை அரசு போரில் வென்ற மமதையுடன் மேலும் தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறையை மேற்கொண்டு வருகிறது.

சோழர்களைப் போல் இந்தியா இலங்கையை ஆக்கிரமித்துத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும் சாத்தியமில்லை. இன்றைய உலக ஒழுங்குக்கு அது அமைவாகாது. இலங்கை மிக வேகமாக அமெரிக்கா பக்கம் சாய்ந்து கெண்டிருந்த வேளையில் ஆயுதக் குழுக்களைப் பலப்படுத்தி இலங்கைக்கு நெருக்கடி கொடுத்துப் பணிய வைத்து இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதிய உறவு முறையா? அதுவும் இப்போ சாத்தியமில்லை. ஏனெனில் இப்போ அப்படியான பலம் பொருந்திய ஆயுதக் குழுக்கள் எதுவுமே கிடையாது.

தமிழ் மக்களைப் பாதுகாக்க அமைதிப் படையை இறக்குகிறோம் என்று சொல்லி விட்டுத் தமிழ் மக்கள் மீது ஒரு பெரும் போரைத் தொடுத்து பேரழிவை ஏற்படுத்திய உறவு முறையா? அதற்கான வாய்ப்புக்களும் இல்லை.

இலங்கை- இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்ட போது இடம்பெற்ற மரியாதை அணிவகுப்பின்போது இந்தியப் பிரதமர் மீது கொலை முயற்சி மேற்கொண்ட கடற்படைச் சிப்பாய்க்கு ஒரு சிறுதண்டனை கொடுத்துவிட்டுப் பின் அவனை பிறசுயநலனுக்குத் தேர்தலில் போட்டியிட வைத்த உறவு முறையா? தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக இலங்கை அரசுக்குப் படையுதவி, ஆயுத உதவி, படைப் பயிற்சி, புலனாய்வுத் தகவல்கள் என எல்லாவித உதவிகளையும் வழங்கி இன்று தமிழ் மக்களைக் கையறு நிலைக்குத் தள்ளிவிட்ட உறவா?

இப்படியாகப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உறவு பல்வேறு வடிவங்களில் பல்வேறு வகைகளில் நிலவி வந்துள்ளன. ஆனால் ஒட்டு மொத்தத்தில் இலங்கை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது நலன்களுக்கு இந்தியாவைப் பயன்படுத்தியே வந்துள்ளது. ஆனால் இந்தியாவோ இலங்கையை தனது கட்டுக்குள் வைத்திருக்கத் தமிழ் மக்களைப் பலிப்பீடத்தில் வைத்து வந்ததே வரலாறு.

எனவேதான் தமிழ் மக்கள் மத்தியில் இப்போ எழும் கேள்வி இதுவரை இரு நாடுகளுக்குமிடையே நிலவிய வெவ்வேறு வடிவங்களிலான உறவுகளில் எதன் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட போகிறது என்பதுதான்.

இலங்கை எப்போதுமே சீனா பக்கம் சாயப்போவதாக மிரட்டியே இந்தியாவிடம் தனது காரியங்களைச் சாதித்து வருகிறது. ஜெனிவாவில் அமெரிக்கப் பிரேரணை பற்றிய பரபரப்புகள் எழுந்த வேளையில் இந்தியா ஒரு மௌனப் போக்கையே கடைப்பிடித்தது. அமெரிக்க அழுத்தங்கள் காரணமாக இந்தியா அமெரிக்காவை ஆதரிக்கலாம் என்ற கருத்தும் நிலவியது.

இந்தவேளையில் இலங்கை இரண்டு குண்டுகளைப் போட்டது. ஒன்று சீனாவால் பூநகரியில் சர்வதேச விமான நிலையம் அமைப்பது, மற்றது கொக்கிளாயில் சீன நிறுவனம் இல்மனைட் தொழிற்சாலை அமைப்பது. இப்போது இரண்டு குண்டுகளும் ஏற்படுத்திய அதிர்வு பாக்குநீரிணையைக் கடந்து நீண்டகால இலங்கை இந்திய உறவு ஒரு நாட்டுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிப்பதில்லை போன்ற சிதறல்களைக் கக்கியிருக்கின்றன. இன்னும் இன்னும் துண்டுகள் பறக்கும் சாத்தியங்களும் உள்ளன. எவ்வளவுதான் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் ஒரு சரணடைவு அரசியல் மூலம் இலங்கையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முயன்றாலும் இலங்கை இந்தியாவிடம் ஒரு கபட நாடகத்தை ஆடிக்கொண்டே வேகமாக சீனாவின் இந்து சமுத்திரத்துக்குள் முத்து மாலைத்திட்டத்தில் ஒரு முத்தாக வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகம், தென்னிலங்கை சர்வதேச விமான நிலையம், உத்தேச பூநகரி விமான நிலையம், கொழும்பு லோட்டஸ் தொலைத்தொடர்பு கோபுரம் போன்றவை இலங்கையில் சீனா வலுவான முறையில் காலூன்றுவதற்கான அடித்தளங்களாகும். இவை அனைத்தும் இந்தியாவின் பாதுகாப்புக்குப் பலத்த அச்சுறுத்தல் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இலங்கை மீதான அமெரிக்க நெருக்கடிகள் மேலும் அதிகரிக்கும் போது இலங்கை மேலும் மேலும் சீனா பக்கம் சாயும் என்பது திண்ணம். அப்போது இந்தியாவின் சரணடைவு அரசியல் சாயம் வெளுப்பதுடன் அதன் தோல்வியின் விஸ்வரூபம் வெளியே தெரியவும்வரும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னால் முடியும் பெண்ணே....!

போராடு பெண்ணே போராடு
உன் உரிமைக்காய் போராடு
உன் உயர்வுக்காய் போராடு
சாதனையாளர் சரித்திரத்தைப்
புரட்டிப்பார்
சாதனைப் பெண்களை
நினைத்துப்பார்
சிறிய வட்டத்தை விட்டு
வெளியே வா
பரந்த உலகில் - உன்
பாதச் சுவடுகளை
பதித்து நடந்து வா!
அடுக்களை உந்தன்
இருப்பிடம் அல்ல!
அடிமை வாழ்வு உந்தன்
விதியுமல்ல.....!
உன்னால் முடியும்
பெண்ணே!
உலகத்தின் சக்தி
நீயே.....!
தலை குனிந்து நடக்கச் சொன்னவர்களை
தலை குனிய வைக்க;
தரணிக்கு பெண்மையின் மேன்மையை
உரை வைக்க;
பாரதி கண்ட புதுமைப்
பெண்ணே வா.....!
பௌர்ணமியாய் உலகுக்கு
ஒளி கொடுக்க வா!
நீ நினைத்தால் முடியாதது
எதுவுமில்லை
நீயின்றேல் ஆணினமில்லை
எதையும் முடிக்கும்
உறுதி கொள்



செ. ரவிசாந்,
வீரமனை, குப்பிளான்.

எத்தர்களை எதிர்க்கும்
தைரியம் கொள்
நெஞ்சை நிமிர்த்தி....!
நிமிர்ந்து நில்......!
நாளைய சரித்திரத்தில்
சாதனைப் பெண்ணாய்
உன் பெயரைப் பதித்துச் செல்!

# பெண்ணுக்கு முகங்கள் ஏராளம்



. சுபா, மானிப்பாய்

பெண்ணுக்கான முகங்கள் ஏராளம் கடவுளைப்போல். கடவுளுடைய சிறப்பே எல்லா முகங்களும் அழகாயிருப்பதுதான். பிறந்த வீட்டில் காட்டுகிற முகம் ஓரழகென்றால் பெண் புகுந்த வீட்டில் காட்டுகிற பாசம் பேரழகு. ஆணுக்கு அத்தகைய பெருந்தன்மை கிடையாது. பெண்ணெடுத்த வீட்டில் இறுதிவரை தலைமை விருந்தினனாய் இருக்கவே ஆண் ஆசைப்படுகிறான்.

கணவன் அழகற்றவனாய், ஊனமுற்றவனாய் இருந்தாலும் அவனை உச்சிமேல் வைத்துக் கொண்டாடுகிறாள் பெண். கைகால்கள் விளங்காத கணவன் குடிசையிலும் காதல் மனம் விளங்க வைப்பாள் பெண். ''காதலுக்கும் பெருமையில்லை; கண்களுக்கும் இனிமையில்லை; கடமையில் ஈன்றெடுத்தாள் உன்னையடா'' என்று கணவன் தன் தாழ்வு மனப்பான்மை தொனிக்க பிள்ளைக்குத் தாலாட்டுப் பாடுகிறான். கண்ணதாசன் காட்டும் காதல் தலைவி கணவனின் குறையை ஒப்புக்கொள்வதேயில்லை.

''தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ -உங்கள்

அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் அன்பு குறைவதுண்டோ''என்று அரவணைத்துக் கொள்கிறாள்.

''கால்களில்லாமல் வெண்மதி வானில் தவழ்ந்து வர வில்லையா-அது

கைகளில்லாமல் மலர்களை அணைத்து காதல் தர வில்லையா''என்று ஆறுதல் சொல்கிறாள்.

அதே நேரம், மணவாழ்வின் பூரிப்பில் மனம் மயங்கிக் கிடந்தாலும் பிறந்த வீட்டின் வாசலிலும் பருவமழையாய்ப் பொழிய அவள் தவறுவதில்லை.

''பூமணம் கொண்டவள் பால்மணம் கொண்டாள்
பொங்கிடும் தாய்மையில் சேயுடன் நின்றாள்
மாமனைப் பாரடி கண்மணி என்றாள்
மருமகள் கண்ணிரண்டில் மாமன் தெய்வம் கண்டான்''

என்று சகோதரனைக் குளிர்விக்கும் தங்கையாக மிளிர்கிறாள்.

'' காலமகள் கண்திறப்பாள் சின்னையா- நாம்
கண் கலங்கி கவலைப்பட்டு என்னையா'' என்று தலையை வருடித் தூங்க வைக்கும் தமக்கையாகப் பொலிகிறாள்.

''அவள் எனக்கா மகளானாள்
நான் அவளுக்கு மகனானேன்'' என்று தந்தை மெச்சும் மகளாக மலர்கிறாள்.

பரிவுமிக்க மனைவியாகவும் ஒளிர்கிறாள்.

'' வாழ்வென்றும் தாழ்வென்றும் வளமென்றும் குறைவென்றும் சக்கரம் சுழல்கின்றது-அதில்தான் சரித்திரம் நிகழ்கின்றது!

யாருக்கும் வாழ்வுண்டு அதற்கொரு நாளுண்டு அதுவரை பொறுப்பாயடா-மகனே -என் அருகினில் இருப்பாயடா?''என்று தத்துவம் கூறும் தெய்வீகத் தாயாய் தோற்றமளிக்கிறாள்.

'' ஆறுவது சினம் கூறுவது தமிழ் அறியாத சிறுவனா நீ!
மாறுவது மனம் சேருவது இனம் தெரியாத முருகனா நீ''

என்று முருகனைக் கூட உரிமையுடன் கடிந்து கொள்ளும் தமிழ்ப் பாட்டியாய் தடிரூன்றி வருகிறாள். தாய் என்ற நிலையில் மட்டுமின்றி எல்லா நிலைகளிலும் தாய்மையின் தண்ணிழல் பரப்பி நிற்கிறார்கள் கண்ணதாசனின் கவிதை நாயகிகளான பெண்கள்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்''
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# கணவனை இழந்த கண்மணிகளின் கனவுகள்

வாழ்க்கையில் அனைவருக்கும் துன்பம் வருவது இயற்கைதான். ஆனால் கணவனை இழந்து தமது பிள்ளைகளோடு தனித்திருந்து வாழ்க்கை நடத்தும் பெண்களின் நிலை மிகமிகத் துன்பமானது. ஏனெனில் பெண் என்பவளுக்கு எப்போதுமே பாதுகாப்பாக ஒருவரை சமூகம் நியமிக்கத் தவறுவதில்லை. பெண் தற்துணிவு கொண்டவளாக இருந்தாலும் கூட இந்தச் சமுதாயத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் அவளை நோக்கிய சமுதாயத்தின் பார்வையிலிருந்தும் தப்பிக்கவும் நிறையவே போராட்டங்களைச் சந்திக்கின்றாள்.

விதவையாகவோ, அல்லது கணவரை விவாகரத்து செய்தோ வாழும் பெண்கள் மீது எங்கள் சமூகம் காட்டும் அக்கறை என்பது அவளது மனரீதியான செயற்பாட்டை நோக்கியதாகவே இருக்கின்றது. கணவனை இழந்தவள் என்றால் எந்த ஆணோடும் கதைக்கக் கூடாது. அப்படிக் கதைத்தால் அந்தப் பெண் நடத்தை சரியில்லாதவள் என்று பெயர் பெறுகிறாள்.

அவளும் நம்மைப் போல் ஒரு பெண்தானே. கணவரோடு இருந்தே பல பெண்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். தனியே வாழ்கின்ற பெண் குடும்பச் சுமையோடு எவ்வளவு கஷ்டப்படுவாள் என்று யார் நினைக்கின்றனர்.

விதவை என்றாள் அவளுக்கு ஒரு சுதந்திரமும் தேவையில்லை. ஏதோ இருக்கிறதை சாப்பிட்டு பிள்ளைகளுக்கும் கொடுத்து வீட்டோடு இருக்கட்டும் என்றுதான் கூறுவார்கள். உண்மையில்



அவளுக்கும் இன்றைய கால ஓட்டத்தின் வேகத்துக்கு ஏற்றாற் போல் தேவைகள் இருக்கும். உதவியில்லாத பெண்ணாக இருந்தால் தன் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது தொடக்கம், சகல வீட்டு நிர்வாகமும் அவளிடம் தான் இருக்கு. அதற்காக அவள் வெளியிடங்களுக்குப் போக வேண்டிய கட்டாயம் ஏற்படும். அவற்றை விளங்கிக் கொண்டாலும் சிலர் நினைத்தவாறு கதைப்பார்கள். இது உண்மையில் தவறாகும்.

மனதில் எந்தவிதமான கெட்ட எண்ணமும் இல்லாமல் இறந்துபோன தனது கணவனின் நினைவோடு இருந்து தன் பிள்ளைகளுக்காகத் தான் வாழ வேண்டும் என்று நினைத்து பல போராட்டங்களோடு துன்பமாக வாழ்க்கை நடத்தும் கண்மணிகளை இழிவாகக் கதைப்பது மிகப்பெரிய பாவமாகும்.

இன்று ஆண் துணையில்லாமல் சமுதாயத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து எதிர்நீச்சல் போட்டு வாழும் பெண்களைப் புரிந்து கொள்ள முற்பட வேண்டும். அவள் ஓர் ஆணுடன் கதைப்பது பிழையான தொடர்பு தான் என்று முடிவு எடுத்து விடக் கூடாது.

உங்கள் பக்கத்து வீட்டுப் பெண் உங்கள் உறவு. கணவன் இல்லாமல் கஷ்டப்படுகிறாள். பிள்ளைகள் சாப்பிட்டார்களா? அல்லது நோய்வாய்ப்பட்டு இருக்கும் அவள் மருத்துவமனைக்குச் சென்றாளா என்று யாரும் கவலைப்படுவீர்களா? இல்லை. ஏன் அவ்வளவு தூரம் மனிதாபிமானம் அற்ற மனிதர்களாக வாழ்கின்றீர்கள்.

இந்தநிலையில் மனிதாபிமானம் கொண்டு உதவி செய்ய முற்படுபவர்களைத் குறை கதைக்க எந்த அதிகாரமும் யாருக்கும் இல்லை. கணவனை இழந்தால் ஒரு பெண்ணுக்கு தன் விருப்பத்துக்கு ஏற்ற ஆடை போடக் கூட அதிகாரம் வழங்காது சமுதாயம். கொஞ்சம் சிவப்பாக இருந்தால் கூட அதைக் கட்டாதே என்று கட்டளையிடும் முறைகள் எப்போது மாறும். கண்ணீரோடு வாழும் எங்கள் சகோதரிகளை தேற்றி நிம்மதியாக வாழ வையுங்கள்.

சிவாஜினி சுரேஷ்குமார்
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை இசையின் மாபெருங் கலைஞர் தேவார இசைமணி இ.திருஞானசம்பந்தன்

35



## சாதனைக் கலைஞரைச்
### சந்திப்போம் சிந்திப்போம்

தமிழ் மொழியின் இனிமையை உலகுக்கு எடுத்துரைத்து நிற்கும் திருமுறை இசைப் பாடல்கள், சந்தமும் லயமும் இசைநுட்பங்களும் மொழிச் செழுமையும் கொண்டமைந்த இசைக் கருவூலமாக விளங்குகின்றன. ஈழத்தின் திருமுறையிசை வரலாற்றில் சிறந்த ஆற்றுகையாளராகவும், ஏராளமான மாணவர்களை உருவாக்கிய ஆசானாகவும், தமிழகத்திலும் ஈழத்திலும் இருக்கின்ற புண்ணிய தலங்கள் அனைத்திலும் தூய்மையுடன் திருமுறை இசைபாடி இறைதொண்டு செய்து வரும் அரைநூற்றாண்டுக்கும் மேலான அனுபவம் கொண்ட தெய்வத் தமிழிசைப் பாடகராகவும் விளங்குபவர் பண்ணிசை வேந்தர் தாவடியூர். கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்.

மறைந்த இராசையா தங்கரத்தினம் தம்பதியரின் மகனாக 05.07.1946இல் தாவடியில் இவர் பிறந்தார். தாவடி இந்து தமிழ்க் கலவன்., தாவடி இந்து மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி போன்ற இடங்களில் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்ற இவர் தனது சிறு வயதிலேயே திருமுறை இசைத் துறையில் ஈடுபடத் தொடங்கினார்.

இயற்கையாகவே இசைஞானம் வாய்க்கப்பெற்றிருந்த இவர் திருமுறை இசையில் அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த தனது தந்தையாரிடமே இக்கலையைக் கற்கத் தொடங்கி , தந்தையின் குருவாகிய இசைவல்லார் குப்பிளான் வி.செல்லத்துரையிடமும் கொக்குவில் சைவப்புலவர்மணி த.குமாரசாமிப்பிள்ளையிடமும் வரன் முறையாகப் பண்ணிசையைக் கற்றுக் கொண்டார்.

ஈழத்தின் சைவாலயங்கள் அனைத்திலும் திருமுறை இசையை மேடை நிகழ்வாகவும் ஆலயக் கிரியைகளுக்குரிய முறையிலும் இசைத்து வந்த இவர், இசைநிகழ்வுகளை வழங்குவதற்காகவும், தன்னை மேலும் வளர்த்துக்கொள்வதற்காகவும் பல தடவைகள் தமிழகம் சென்று வந்துள்ளார்.

இந்த வகையில் 1972இல் தமிழ்நாட்டுக்குச் சென்று கோயம்புத்தூர் எஸ்.எஸ். ரங்கப்பாவிடம் செவ்விசையைக் கற்றமையும், 1982இல் திருப்பனந்தாள் ஆதீனத்தால் தேவார இசைமணி எனும் பட்டம் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டமையும், 2004இல் திருவாவடுதுறை ஆதீனத்தில் தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டு பட்டாடையும், பொற்கிளியும் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டமையும் குறிப்பிடத் தக்கவையாகும்.

இதைவிட 1984ஆம் ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகள் திருப்பனந்தாள் முத்துக் கந்ததேசிகர் என்னும் திருமுறையிசை மேதையுடன் ஒன்றாகத் தங்கியிருந்து அவருடன் ஆலயங்கள் தோறும் சென்று இறையிசை நிகழ்வுகளில் கலந்து கொண்டதுடன் அவரிடமிருந்து பண்ணிசை நுட்பங்களையும் நிறைவாகக் கற்றுக் கொண்டார். நல்லை ஆதீன முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளுடைய நிகழ்வுகளிலும், ஐந்து ஆண்டுகளாகப் பங்கு கொண்ட அனுபவத்தைப் பெற்றிருந்த இவர் சுருதி, லயம் பிசகாமல், பாடல் தருகின்ற உணர்வைச் சிதைக்காமல் பாடவல்ல இனிய பண்ணிசையாளராக, பக்திமானாக, தூய்மையான உள்ளம் கொண்ட நல் மனிதனாகத் தன்னை வளர்த்துக்கொண்டார்.

திருமுறை இசைத்துறையில் ஒப்பற்ற ஆற்றுகையாளராக விளங்கிய இவர் இந்தக் கலையை ஏனையோருக்குப் பொறுமையுடன் கற்பிக்க வல்ல சிறந்த ஆசிரியராகவும் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வந்துள்ளார்.

1975ஆம் ஆண்டிலிருந்து பத்து ஆண்டுகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பண்ணிசை வகுப்புக்களை நடத்திய இவர் 1977ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடைவரவுப் போதனாசிரியராகவும், 1991ஆம் ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டுகள் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் திருமுறை ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பண்ணிசை வகுப்புக்களை நடத்தியதுடன், அகில இலங்கைத் திருமுறை மன்றத்தில் 1978ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பண்ணிசை வகுப்புக்களை நடத்தி வருகின்றார். அதன் தொடர்ச்சியாக யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் சிவ தொண்டர் நிலையத்திலும் சனி, ஞாயிறு தினங்களில் மலை நேர வகுப்புக்களைப் பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும் தற்போது வழங்கி வருகின்றார். இவை தவிர தனது இல்லத்திலும், யாழ். வேதாந்த மடத்திலும் தன் பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்றார்.

1978இல் மலேசியா சென்ற இவர் நான்கு மாதங்கள் அங்கேயே தங்கியிருந்து அந்நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் இருக்கின்ற சைவாலயங்களில் தெய்வத் தமிழிசை பாடிச் சிவதொண்டு புரிந்தவர். மேலும் சிங்கப்பூர், இங்கிலாந்து போன்ற இடங்களுக்கும் அழைக்கப்பட்ட இவர் தமிழகத்தில் புகழ் பெற்ற ஈழத்துப் பண்ணிசைக் கலைஞராகவும் விளங்குகின்றார். திருமுறை இசைத் துறையை முழுநேரத் தொழிலாகக் கொண்ட நீண்ட கால அனுபவம் கொண்ட இவரால் பாடப்பட்ட திருமுறைப் பாடல்கள் நல்லை. திருநெறிய தமிழிசை வெளியீட்டுக் கழகத்தால் ஐந்து பாகங்கள் கொண்ட இறுவட்டாக திருமுறைத் தேனமுது என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது.

கலைத்துறை பற்றிய ஆக்கங்களை பத்திரிகைகள் ஊடாக வெளியிட்டு வந்த இவர் புதிதாகப் பாடல்களை எழுதும் திறன் கொண்டவராகவும் அவற்றை இனிமையுடன் இசையமைத்துப் பாடவல்லவராகவும் காணப்படுகின்றார்.

திருமுறை இசை என்பது தெய்வீகமும் அதிநுட்பமும் உடைய தொன்மையான வரலாறு கொண்ட கலைவடிவமாகும். தமிழரின் அரும் பெரும் கலைச் சொத்தாகவும், மொழியின் செழுமையை எடுத்துக்காட்ட வல்ல பாடல்களைக் கொண்ட இசைச் சமுத்திரமாகவும், விளங்கும் பண்ணிசை கலையை, மன்னர்களும் மக்களும் ஒரு காலத்தில் உயிரெனப் போற்றி வந்துள்ளனர்.


ஆனால் தற்காலத்து இசைவிழாக்களில் முதல் நாள் அல்லது இரண்டாம் நாள் மட்டுமே திருமுறை இசை நிகழ்வு இடம்பெறுகிறது. ஏனைய நாள்களில் பாடும் எவரும் ஒரு தேவாரத்தைக் கூடப் பாடுவதில்லை.

திருமுறை பாடுவதைச் சில இசையாளர்கள் நாகரிகக் குறைவாகவும் கருதி வருகின்றனர். அதைவிட ஆலயங்களில் நடைபெறும் கிரியைகளின் போதும் ஓதப்பட வேண்டிய இப்பாடல்களைச் சரியான முறையில் இசைப்போர் அரிதாகவே உள்ளனர்.

உலக இசைகளுள் முதன்மையான இசையாக விளங்கும் எமது திருமுறையிசையானது எம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை இசையாளர்கள் அனைவரும் உணர்ந்து செயற்பட முன்வர வேண்டும் என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ✱

■ வசாவிளான் தவமைந்தன்

# பச்சைக் கொள்ளுச்சாறு நாள்பட்ட கழிச்சலுக்குச் சிறந்தது






**கொள்ளு**

**வேறு பெயர்:**-காணம் குதிரைக்கொம்பு,முதிரை
**தாவரவியற் பெயர்:**- Dolichos Biflorus
(டொலிகோஸ் பை.ஃபுலோரஸ்)
**குடும்பம்:**-Papilionaceae
(பப்பிலியோனேசியே)
**சிங்களப்பெயர்:**- கொள்ளு
**சமஸ்கிருதப்பெயர்:**-குளுத்தம்
**ஆங்கிலப்பெயர்:**-Horse Gram

கொள்ளில் கறுப்புக்கொள்,வெண்ணிறக் கொள், சிவப்புக் கொள் என்ற பேதங்களுண்டு.

இது வரண்ட நிலங்களிலும் செழித்து வளரக் கூடியது. கூட்டிலை கள் ,முச்சிற்றிலைகள், பூக்கள் இளமஞ்சள் நிறம், கனி அவரையம்

பயிர் செய்து பெறப்படும் கொள் நாட்டுக் கொள் என்றும் புறம்போக்கு நிலங்களில் தானாக விளைவது காட்டுக் கொள் என்றும் அழைக்கப் படும் .

குளுத்தம் கபத்தின் கூற்றெனத் துரத்தும் என்ற தேரையர் கூற்றுக் கிணங்க கொள்ளு கபதோடங்களை போக்க வல்லது.

**உடல் பலவீனத்துக்கு**

கொள்ளையும் அரிசியையும் சேர்த்துக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்துவர உடல் மெலிவினம் நீங்கி உடல்வன்மை [illegible]றுப்புடன் [illegible]கும்.

**நாள்பட்ட கழிச்சல், குன்மத்துக்கு** - கொள்ளை அவித்து மிளகு,சீரகம்,பெருங்காயம், உள்ளி சேர்த்து இரசம் வைத்து பருகிவர நாள்பட்ட கழிச்சல், குன்மம்,இரைப்பு, வெள்ளைசாய்தல்,சூதகக் கோளாறுகள் என்பன நீங்கும் பச்சைக்கொள்ளை இடித்துச் சாறாக எடுத்து பருகினாலும் இவை மாறும்

**கழிச்சலுக்கு**

கொள்ளிலைச் சாற்றுக்கு சிறிது தேன் அல்லது காசுக்கட்டித்தூள் சேர்த்து காலை,மாலை கொடுத்து வரமாறும்.

**இருமலுக்கு**

ஒரு பங்கு கொள்ளுக்கு 10 பங்கு நீர்விட்டுக் காய்ச்சி அதில் சிறிது இந்துப்பும் சேர்த்துக் காலை, மாலை பருகி வர இருமல் ஆரம்ப நிலையிலுள்ள சிறுநீரகக் கற்கள் என்பன நீங்கும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 206

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | ■ | 11 | | | |
| | ■ | 12 | 13 | | ■ | | ■ |
| ■ | 14 | | | ■ | 15 | | 16 |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | 21 | |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. இலங்கையின் புனித தலம்
6. மரம்
7.இரும்பில் பிடிப்பது
8. பிழை அல்ல
9. சிறிது என்றாலும் காரம் பெரிது
11. உட்கிடை
12. புதல்வன்
14. ஒரு மிருகம்
15. இப்படி நட
17. கடவுள்
18. இறக்க
19. வலிமை
20. வருமானம்
22. மணிக்கூடு
23. தலைமயிர்க்கொத்து

### மேலிருந்து கீழ்

1. ஒரு நடன வகை
2. களவெடு
3. செவி
4. மருமகன்
5. அருமையானது
8. ஒலி
10. இளைஞன்
13. வாயால் கவ்வு
14. அகப்பை வகை
15. விரலில் வள்ருவது
16. கொண்டாட்ட நாள்
17. கூட
18. சேரும்
20. போக அல்ல
21. இது வந்திடப் பத்தும் பறந்திடும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 204 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சம்மதி (4) மதகு (6) தரிசனம் (8) பாகம் (10) கன (12) திண் (13) அலம்பல் (15) காமுகன் (17) கல (18) விட்டில் (19) சர்வ (20) மாசி (21)தவிர (23) பல்லாண்டு.

**மேலிருந்து கீழ்**

(1) சம்பாதி (2) மதம் (3) திரி (4) மனனம் (5) தம் (7) சகலன் (9) கண்காட்சி (11) வல்லவன் (13) அகல்தல் (14) பகர் (16) முடி (18) விமானி (19) சரண் (22)விலா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 206**
**நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 28.03.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத்தபாலட்டையில்ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.206 இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 01.04.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 203 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ச.புஸ்பதேவி,
இல.86, உப்பளம் வீதி, பெரியகடை, மன்னார்.

**2 ஆம் பரிசு**
வி.வினுசா,
பாடசாலை விடுதி, திருநகர், யோகபுரம், மல்லாவி.

**3 ஆம் பரிசு**
ச.சசிதரன்,
றோயல் எலெக்ரோனிக்ஸ், நெல்லியடி, கரவெட்டி.

**4 ஆம் பரிசு**
ம.தினேஸ்,
கந்த உடையாளர் லேன், பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு**
ப.எரிக்றொசாயினி,
இல.45, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

**இ.மதுசன்,**
தபால் அதிபர், குமுளமுனை.

**திருமதிசிவராசாஇராசமணி**
முள்ளானை, இளவாலை.

**திருமதி இ. இராமகிருஷ்ணன்**
பிரதான வீதி, சின்னக்கடை, மன்னார்.

# பாரதியார்....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆன்மவீரம் படைவீரத்திலும் பெரிதென்னும் உண்மையை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நாவுக்கரசரது வாழ்க்கைமூலம் அறிந்திருந்தது தமிழ்நாடு. இதனைக் கருத்திற்கொண்ட பாரதியார், 'நாமார்க்குங் குடியல்லோம்..' என அப்பரடிகள் பாடியதுபோல,

***''யார்க்குங் குடியல்லேன் யான் என்பது***
***ஓர்ந்தனன் மாயையே-உன்தன்***
***போர்க்கஞ் சுவேனோ பொடியாக்கு***
***வேன் உன்னை மாயையே''***

என மாயையை எதிர்த்துப் பாடியிருக்கின்றார் பாரதியார். பிறிதோரிடத்தில்,

''நச்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டு போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என நல்ல தமிழ்க் கவிதை தந்த பாரதியார், தமிழ் மொழியின் சிறப்பை பேசிக் கொண்டு திருப்திப்படாமல்,

***''சென்றிடுவீர் எட்டுத் திக்கும்- கலைச்***
***செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''*** என்றும் தமிழ் மக்களுக்கு அறை கூவல் விட்டமையையும் கருத்திற் கொண்டு பாரதியார் பாட்டின்பத்தைச் சுவைப்போமாக. ★

# அன்பின்....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிகமாக அங்கே சென்று பின்னர் நிலைமையைப் பார்த்து வேறு எங்கேயாவது போகலாம் என முடிவு செய்தனர். அதன்படி புதுக்குடியிருப்பில் தியாகுவின் மாமாவின் வீட்டிற்கு அருகிலுள்ள சிறிய வீட்டில் மாறன் குடும்பத்தினர் தங்க வைக்கப்பட்டனர்.

நாள்கள் வாரங்களாயின. உக்கிரமான போர் நடைபெறுவதற்கான அறிகுறியாக வெடிச்சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் கிராமத்தை அதிரவைத்தன. ''மாறன் மாமா வீட்டுக்காரரைப் பற்றிய செய்தி ஒன்றையும் அறிய முடியேல்ல. மகள் வீட்டுக்குப் போய் வாறமெண்டு குடும்பமாய்ப் போனவை நான் ஒருக்காப் போய் பார்த்துக் கொண்டு வாறன்''.... என்று அவர்களைப் பார்க்கச் சென்ற தியாகுவையும் நான்கு நாள்களாகக் காணவில்லை. மாறன் குடும்பம் ஆதரவின்றிச் செய்வதறியாது திகைத்தது. கையிலிருந்த பணமும் கரைந்துவிட்டது. வீட்டில் அடுப்புப் புகைந்து இரண்டு நாள்களாகி விட்டன. முரளிக்கும் காய்ச்சல். கர்ப்பிணியான மனைவியின் நிலை அவளது ஆலோசனைப்படியே வீட்டைவிட்டு வெளியேறினான் மாறன்.

படுக்கையில் புரண்டு படுத்த மகனின் தலையை வருடி விட்டவள் தண்ணீரில் நனைத்து வந்த துணியால் தன் மகனின் உடலைத் துடைத்தாள். ''அம்மா.... சோடா'' முரளி மெதுவாக முனகினான். ''அப்பா சோடா வாங்கப் போட்டார். இப்ப வந்திடுவார். கொஞ்சநேரம் கண்ணை மூடிக் கொண்டு நித்திரை கொள்ளுங்கோ.....'' நிர்மலா மகனின் தலையை அன்புடன் கோதினாள்.

காய்ச்சலால் நாக்குவரண்டு சோடா கேட்கும் மகனுக்கு பனடோல் கூட குடுக்குறதுக்கு இல்லையே. தெய்வமே இது என்ன சோதனையப்பா.... அந்தத் தாயின் மனம் துடித்தது.

தொடர்ந்து செல்கள் வீழ்ந்து வெடிக்கும் ஒலி காதைச் செவிடாக்கியது. விமானங்களின் இரைச்சல் ஒரு பக்கம் செய்வதறியாது திகைத்தாள் நிர்மலா. காசுமாற என்று போன மாறன் இரவு வீடு திரும்பவில்லை. அது வேறு அவளின் பயத்தை அதிகரித்தது.

மகனை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்புடன் வீட்டிற்கு அருகிலே மாறன் தற்பாதுகாப்பிற்காக அமைத்த பதுங்குக் குழிக்குள் மகனை மெதுவாகத் தூக்கிச் சென்று படுக்கவைத்தாள்.

இரண்டு நாள்களாகப் பட்டினி கிடந்த உடல் வயிற்றிலிருந்து ஏதோ பந்தாக உருண்டு வந்து நெஞ்சை அடைப்பது போல் இருந்தது. சமையலறைக்குச் சென்றவள் தண்ணீரை வார்த்துக் குடித்தாள். வாசலில் ஏதோ சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தாள் நிர்மலா.

பசிக்களையால் தள்ளாடியபடி வந்துகொண்டிருந்தான் மாறன். அவன் கையில் சோடா, பனடோல், நெஸ்ரோமோல்ட் ரின் என்பன இருந்தன. ''நிர்மலா இந்தா இதைக் கொண்டுபோய் ஒரு நல்ல ரீ போடு. முரளி எங்க இப்ப காய்ச்சல் எப்படி இருக்கம்மா'' ''நான் இரவு வரேலாமப் போச்சு. அங்க உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டு இருந்திட்டு வாறன். முதலிலை சோடாவை நீயும் குடிச்சு முரளிக்கும் குடு. மாறனின் சொற்கள் பாசத்துடன் ஒலித்தன. தன் மகனையும், மனைவியையும் காப்பாற்றுவதற்காக நிர்மலாவின் தந்தை கிருஷ்ணமூர்த்திக்கே தன் இரத்தத்தைக் கொடுத்து அதற்கான பணத்தைப் பெற்றுக் கொண்டவன் தன் மனைவியிடம் அதனைக் கூறவில்லை. இரத்ததானம் செய்து காசு வாங்கிய கதையை கர்ப்பிணியான தன் மனைவி அறிந்தால் மனமொடிந்து போய்விடுவாள் என்பது அவனுக்குத் தெரியும். ஒரு பெருமூச்சுடன் தன் மனைவி செல்லும் திசையைப் பார்த்தான் மாறன்.

நிர்மலாவின் மீதும் பிள்ளைகள் மீதும் கொண்டிருந்த அன்பின் உயர்வை அவளின் பெற்றோர் அறிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில் அவர்கள் அவள் மீது அன்பையல்ல தமது கௌரவத்தின் வலிமையையே காட்டி நின்றனர். மாறன் நிர்மலாவின் தந்தைக்கு இரத்ததானம் செய்த செய்கையைக் கூறாமல் அவர் சுகவீனமாக இருக்கும் அந்தத் துயர் உண்மையைக் கூறியபோது நிர்மலாவின் கண்கள் கலங்கின. தனது பெற்றோரைக் காணவேண்டும் என்ற ஆவல் அவளிடத்தில் பிறந்தது. நோயுற்றுவாடும் தந்தை இருக்கும் இடத்தைத் தேடி அவள் தனது மகன் முரளியோடு புறப்பட்டாள்.... மாறன் தயங்கினான்.

அங்கே மகள் நிர்மலாவையும் பேரனையும் கண்ட கிருஷ்ணமூர்த்தி வருத்தம் நீங்கிப் பாயிலிருந்து எழுந்து உட்கார்ந்தார். அவரின் பார்வைகள் கௌரவத்தைக் களைந்து அன்பைக் காண மருமகன் மாறனைத் தேடின. நிர்மலாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.....

வானத்தில் பறந்து குண்டெறிய விளைந்த விமானத்தின் இரைச்சலும் அப்போது அவர்களுக்குக் கேட்கவில்லை. ஐக்கியப்பட்ட குடும்பபலம் அவர்களுக்கு மகிழ்வையும் ஒருவகைத் துணிவையும் தந்தது. ◆

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்[illegible] காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலா[illegible] அனுப்பிவைக்கப்படும்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்பனா

# போர்க்களமாக்கப்படும் நாடு

இலங்கையின் கல்வித்துறை இன்று தனது இலக்கை நோக்கிப் பயணிக்க முடியாது தடம்மாறிப் பயணிக்கும் நிலையை அடைந்துள்ளது. முன்னைய காலத்தில் புதிதாக பல்கலைக்கழகத்துக்கு காலடி எடுத்து வைக்கும் பிள்ளைகளைப் பெற்றோர் பெருமிதத்தோடும் மகிழ்ச்சியோடும் வழியனுப்பி வைத்தனர். இன்று பல்கலைக் கழகத்துக்கு புதிதாகச் செல்லும் தமது பிள்ளைகளை ஒரு அச்சம் கலந்த உணர்வுடன் அனுப்பி விட்டு அவர்கள் வீடு திரும்பும் வரை வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கின்றனர்.

இன்று பல்கலைக்கழகக் கல்வியிலுள்ள ஒவ்வொரு மாணவனும் மாணவியும் கட்டாயம் தலைமைத்துவப் பயிற்சியைப் பெற்றே ஆகவேண்டும். தலைமைத்துவப் பயிற்சி பெற்றால்தான் அவர்கள் கல்வியைத் தொடர முடியும் என்ற நிபந்தனை அரசால் சட்டமாக்கப்பட்டுள்ளது.


கடந்த ஆண்டு இத்தகைய தலைமைத்துவப் பயிற்சி 22 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மூன்று பிரிவுகளாக 28 இராணுவ முகாம்களில் வழங்கப்பட்டது.

அதேபோன்று இந்த வருடம் பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதன் முதல் கட்டமாக எதிர்வரும் 29 ஆம் திகதி 10,000 மாணவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி என்ற போர்வையில் இராணுவப் பயிற்சி அரசால் திட்டமிட்டு அரங்கேற்றப்படவுள்ளது.

உலகில் எந்தவொரு நாட்டிலும் மேற்கொள்ளப்படாத நடைமுறைக்கு பொருத்தமற்ற இந்த நடைமுறையை பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் திணிக்க முற்படுவது நாட்டைப் போர்க்களமாக மாற்ற அரசு முனைவதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இந்தச் செயற்பாட்டை மானிதாபிமான மற்ற வகையில் கட்டாயப்படுத்தி, நடைமுறைப்படுத்த முற்படுவது மாணவர் சமூகத்தை விரக்தி மற்றும் வெறுப்பு நிலைக்குக்கொண்டு செல்லும் செயற்பாடகவே எண்ணத் தோன்றுகின்றது.

தொடர்ச்சியான போர்ச் சூழல் காரணமாக எண்ணிப் பார்க்க முடியாத இழப்புக்களைச் சந்தித்து பெருமளவில் உளக்காயங்களுடன் பல்கலைக்கழக கல்விக்காகச் செல்லும் எமது தமிழ் மாணவர்களைத் தலைமைத்துவப் பயிற்சி என்ற பெயரில் அழைத்துச் செல்வது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றே.

இந்தப் பயிற்சி அளிக்கப்படுவது இனரீதியான, மத ரீதியான பாகுபாடுகள். சிங்கள, பௌத்த மேலாதிக்கச் சிந்தனை மற்றும் அடக்குமுறையின் வடிவங்கள் என மாணவ சமுதாயத்தின் மத்தியில் எண்ணப் பிறழ்வுகளை நிலைநிறுத்தவே எதிர்காலத்தில் இத்தகைய கட்டாயத் தலைமைத்துவப் பயிற்சித்திட்டம் வழிவகுக்கும் எனக் கருதுவதில் தப்பேதுமில்லை.



இந்தப் பயிற்சிக்கு கடந்த ஆண்டு கட்டாயத்தின் பேரில் அழைக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மாணவர்கள் சரியான அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாது புறக்கணிக்கப்பட்டதாகவும் சிங்கள மொழியிலேயே பயிற்சிக்கான உரைகள் வழங்கப்பட்டதாகவும் அது சிங்கள மேலாதிக்கத் தனத்தை வெளிப்படுத்தும் நோக்கில் அமைந்திருந்ததாகவும் அதில் கலந்து பயிற்சிபெற்ற பல தமிழ் மாணவர்களால் தெரிவிக்கப்பட்டது.


இந்த மாணவர்களுக்கு இலங்கையின் தேசிய கீதம் பற்றிய விளக்கம் மற்றும் அதன் வரலாறு, அதனது முக்கியத்துவம் பற்றிய விளக்கமும் தலைமைத்துவப் பயிற்சியின்போது வழங்கப்பட்டது. இதுவரை இலங்கையின் தேசியகீதம் குறித்து அறிந்துகொள்ளாது ஒரு மாணவர் பல்கலைக் கழகத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளார் எனக் கருத வைப்பதாக இந்தச் சம்பவம் அமைகிறது. ஆனால் சிங்கள மொழியில் தேசிய கீதத்தை தமிழ் மாணவர்களிடம் திணிக்க முயலும் அரசின் ஒரு உத்தியாகவும் இது நோக்கத்தக்கதாகும்.

முப்பது வருடகால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாகக் கூறி உலகமெங்கும் மார்தட்டி புகழ் தேடி அலையும் அரசு தலைமைத்துவப் பயிற்சி என்ற போர்வையில் ஆயுதப் பயிற்சி வழங்கி அதன் மூலம் இனங்கள் மத்தியிலான முரண்பாட்டைத் தீர்க்கப் போவதாகக் கூறுவது வேடிக்கைக்கு உரியதொன்றே.

தலைமைத்துவப் பயிற்சி என்ற திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் இத்தகைய ஆயுதப் பயிற்சி தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை அவசியமற்றதொன்று என்றே எண்ணத் தோன்றுகின்றது. பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பின்னால் மக்கள் வழி நடக்கத் தயாராக இருப்பதும் அடக்குமுறைகளையும் மீறி நினைவு நிகழ்வுகளை பல்கலைக்கழகச் சமூகம் மேற்கொண்டு வருவதையும் அரசு நன்கறியும், இதனாலேயே பல்கலைக்கழகத்துக்கு நுழையும் புதிய மாணவர்களை இத்தகைய அனாவசியமானதொரு பயிற்சி வழங்கலூடாக அரசு கவர முயல்வதாக எண்ணத்தோன்றுகிறது.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக அமையும். அதாவது போர்க் காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு முதலுதவி உட்பட மருத்துவ உதவிப் பயிற்சிகளையும் தற்காப்புப் பயிற்சிகளையும் விடுதலைப்புலிகள் அமைப்பு வழங்கியபோது அதனைப் பயங்கரவாதச் செயற்பாடுகள் என அடையாளப்படுத்திய அரசு தற்போது தலைமைத்துவப் பயிற்சி என்ற போர்வையில் மாணவர்களைக் கட்டாயப்படுத்தி ஆயுதப் பயிற்சியை வழங்குவதை எந்தவகையில் நியாயப்படுத்தப் போகிறது? ✸

யமுனா




“ அகிலேஷ் யாதவ் முதல்வராக வேண்டும் என்று பெரும்பாலான பேரவை உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

## இளவயதில் முதல்வர்

# அகிலேஷ் யாதவ் சாதனை

உத்தரப் பிரதேச மாநில நிர்வாகத்தை இது வரை தனது ஆளுகைக்குள் வைத்திருந்த மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சியின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது சமாஜ்வாடிக்கட்சி, உத்தரப் பிரதேச மாநிலத் தேர்தலில் சமாஜ்வாடிக் கட்சி வெற்றியீட்டியதன் மூலம், அந்த மாநில முதல்வர் பதவியைத் தனதாக்கிக் கொண்டார் சமாஜ்வாடிக் கட்சியின் மாநிலத் தலைவரும் முன்னாள் முதல்வர் முலாயம் சிங்கின் மகனுமான 38 வயதுடைய அகிலேஷ் யாதவ். அதுமட்டுமல்லாமல் உத்தரப் பிரதேசத்தின் வயதில் குறைந்த முதலாவது முதலமைச்சர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

இந்தியாவின் மாநிலங்களில் மிகப் பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசம் 403 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியது. அண்மையில் இடம் பெற்ற மாநிலத் தேர்தலில் முலாயம் சிங் யாதவ் தலைமையிலான சமாஜ் வாடிக்கட்சி 226 தொகுதிகளைக் கைப்பற்றியது. இதுவரை அங்கு ஆட்சியில் இருந்த மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி 77 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றதன் மூலம் தோல்வியைத் தழுவிக் கொண்டதனால் ஆட்சி அதிகாரத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதன் அடிப்படையில் சமாஜ்வாதிக் கட்சியின் மாநிலத் தலைவர் 73 வயதையுடைய முலாயம் சிங் முதல்வராகத் தெரிவு செய்யப்படுவாரா அல்லது 38 வயதான அவரது மகன் அகிலேஷ் யாதவ் தெரிவு செய்யப்படுவாரா என்ற கேள்வி எழுந்தது. இந்த நிலையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சமாஜ்வாடிக் கட்சிப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் லக்னோவில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் அகிலேஷ் யாதவ்வின் பெயரைக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஆசம்கான் முன் மொழிந்தார். இதனையடுத்து சமாஜ்வாடிக் கட்சியின் சட்டமன்றத் தலைவராக அகிலேஷ் யாதவ் ஏகமனதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அத்துடன் அகிலேஷ் யாதவ் முதல்வராக வேண்டும் என்று பெரும்பாலான பேரவை உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்தனர். பேரவை உறுப்பினர்களின் விருப்பத்தின்படி அந்தப் பதவியை தனது மகனுக்கே முலாயம் சிங் யாதவ் விட்டுக் கொடுத்துவிட்டார். அதற்காக நாடு முழுவதிலுமுள்ள தலைவர்களிடமிருந்து முலாயம் சிங்குக்கு பாராட்டுக் குவியத் தொடங்கியது. இதைக்கண்டு தள்ளாத வயதிலும் விடாப்பிடியாக பதவியில் நீடிக்கும் அரசியல் வாதிகள் பலர் வெட்கித் தலைகுனியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த 15 ஆம் திகதி உத்தரப் பிரதேச சட்ட மன்றத்தின் 33 ஆவது முதல்வராக அகிலேஷ் யாதவ் பதவியேற்றார். உத்தரப் பிரதேச ஆளுநர் ஜோஷி அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். அகிலேஷ் ஆஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னி பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் பொறியியல் துறையில் முதுநிலைப் பட்டம் பெற்றவர். முதல்வராகப் பதவியேற்ற அவர் தமது ஆட்சி குறித்து முதன்முதலாக செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டார்.

சமாஜ் வாடிக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும். பதவி ஏற்றதிலிருந்து மாநிலத்தின் சட்டம், ஒழுங்கு எமது பொறுப்பில் வருகின்றது. மக்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் செயற்படும் அரச அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் முன்னாள் முதல்வர் மாயாவதி ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அமைப்பு ரீதியான ஊழல்கள் போன்று அதற்கு முன்னர் ஒரு போதும் நடைபெற்றதில்லை. மாயாவதிக்கு முன்னர் பதவி வகித்த அரச தலைவர்களின் ஆட்சியில் கட்டுப்பாடுகளுடனான முறையான நிர்வாகம் இருந்தது. எமது ஆட்சி ஊழல் இல்லாத, ஜனநாயக நடைமுறை கொண்ட ஆட்சியாக அமையும் என உறுதியளிக்கிறேன் எனத் தெரிவித்தார் அகிலேஷ்.

ஒவ்வொரு ஆட்சித் தலைவர்களும் புதிதாக் ஆட்சிப் பொறுப்பேற்கும் வேளையில் இவ்விதம் வாக்குறுதிகளையும், மக்கள் நலத்திட்டங்களையும் அறிவிப்பது வழக்கமானதொன்றே. ஆனால் அவை அவரது நிர்வாகத்தில் எந்த அளவுக்குச் செயல் வடிவம் பெறுகின்றன என்று பார்த்தால் அது மிகமிகக் குறைவானதே இதற்கு அகிலேஷ் மட்டும் விதிவிலக்கா என்ன? மாநில் நிர்வாகம் எந்த அளவுக்குச் சிறப்பாகச் செயற்படும் என்பதற்கு காலம் தான் பதில் கூறியாகவேண்டும். ✸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மஸ்ரீ-சண்முக-தியானேஸ்வரசர்மா
ஜோதிடர், நுணாவில் மத்தி, சாவகச்சேரி

# அரசியல் துறையில் கிரகங்களின் ஆதிக்கம்

உலகில் எந்தக் காலங்களிலுமே அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் துறையாக, அரசியல்துறை இருந்து வருகிறது. அரசி யலில் இதய சுத்தியுடன் ஈடுபட்டு, ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்று கருதி வாழ்ந்தவர்களும், வாழ்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள். அத்தகைய சிறப்புக்களை அடையக்கூடியவர்களின் கிரம நிலைகளை ஆராய்வோம்.

பொதுவாக அரசியலில் ஒருவர் நிலைத்து நிற்கவேண்டுமாயின், பொதுமக்களின் ஆதரவு அவசியம். அதற்கு, மக்களின் மனங்களை வென்றே ஆகவேண்டும். அந்த வகையில், பொதுமக்களின் ஆதரவைத் தெரிவிக்கும் இராசி கடகராசியாகும்.

அதேபோன்று, அரசியலில் ஈடுபடும் ஒருவர் சுயமாகச் சிந்தித்துச் செயற்பட வேண் டும். அவருடைய சிந்தனையில் மக்களைக் கவரும் கருத்துக்கள் முக்கிய மானவை. அதுமட்டுமன்றி, தனது கருத்துக்களை ஆணித் தரமாக வெளிப்படுத்துவதற்கு மனவலிமை, தைரியம் அவசியமாகிறது. இவற்றைத் தெரிவிப்பதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய இராசி சிங்க இராசியாகும்.

அதேவேளை, அரசியலில் மிகவும் முக்கிய மான மற்றொரு விடயம், அரசியல் வியூகங்கள் என்று கூறக்கூடிய தந்திரோபாயங்கள். அதாவது நாட்டுக்குத் தேவையாக அரசியல் தந்திரோபாயங்கள் மட்டுமின்றி, தனக்கு, அல்லது தனது அமைப்புக்கு என்ன பாதிப்பு இடம் பெறப் போகிறது. அந்தப் பாதிப்பால் ஏற்படக் கூடிய விளைவுகள்பற்றி முன்கூட்டியே அறியும் திறமை போன்ற மிக நுண்ணறியும் திறமையைத் தெரிவிக்கும் இராசி துலா இராசியாகும். அதேபோன்று, உண்மையான அரசி யல்வாதிக்கு இருக்க வேண்டியவை என்று கூறக்கூடிய நல்லெண்ணம், நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்றவைகளைத் தரக்கூடிய இராசி தனு இராசியாகும்.

சூரியபகவான் தான் கிரகங்களுக்கு அரசன். இவருடைய ஆதிக்கமே அரசியலிலும் முதன்மை வகிக்கிறது. அதே போன்று அமைச்சரவை அந்தஸ்துக்கு உறுதுணையாக இருக்கக் கூடியவர் சந்திர பகவானே!

சூரியபகவான் 4ஆம், 5ஆம், 9ஆம், 10ஆம் வீடுகளில் ஒன்றில் நவாம்ச அனுசரணையோடு, பலமாக இருப்பது முக்கியமான தாகும். அதேவேளையில் அரசியல்வாதிகளுக்கு 1ஆம், 5ஆம், 11ஆம் பாவங்கள் மிகவும் பலம்பெறுதல் வேண்டும். அதேபோன்று எந்தவொரு அரசியல்வாதியும் சார்ந்திருப்பது அல்லது பலம்பெறுவது, மக்கள் சக்தியென்ற இமாலய சக்தியில் தான் என்பதே யதார்த்தம். அந்த மகத்தான மக்கள் சக்தியின் ஆதரவைத் திரட்டித் தருவதற்கு அனுசரணையாக இருப்பவர் சனி பகவான்தான்.

லக்கினத்துக்கும் 2ஆம், 10ஆம், 11ஆம் அதிபதிகளில் ஒருவர், சந்திரனுக்கு கேந்திரத்தில் இருந்து, குருவும் 1ஆம், 5ஆம், 11ஆம் அதிபதிகளில் ஒருவருடன் இணைந்திருப்பது, அமைச்சராகும் யோகத்தைத் தரும். அதேவேளை, ஐந்து கிரகங்கள் ஒரு இராசியில் பலம்பெற்று பஞ்ச கிரக யோகம் பெறுவதும் அரசியல் வாழ்க்கையில் உயர் நிலையை அடைய முடியும்.

லக்கினாதிபதி இருக்கும் இராசிகதிபதி ஆட்சி, உச்சம்பெற்று, நவாம்சத்திலும் பலம் பெற்று, லக்கினாதிபதியும், அவர் இருக்கும் இராசிக்கதிபதியும் தொடர்பு பட்டு, லக்கினத்துக்கு கேந்திர, கோணம் போன்ற வீடுகளில் ஆட்சி, உச்சம் பெறுவது தலைவர்வரை உயர்வுபெறுவது அரசியலில் ஆர்வம் ஏற்படவும், உயர் மட்டத் தலைவர்வரை உயர்வுபெறும் வழி சமைக்கும். அதேவேளை, கிரகங்கள் வரிசையாக இடைவிடாமல் அமைவதும் சிறப்பாகும். அது இலக்கினத்திலிருந்தோ, அல்லது ஏனைய பாவங்களிலிருந்தோ அமைவதுடன், அதிலுள்ள கிரகங்கள் பலம் பெற்றிருக்கவேண்டும்.

நாம் முன்னர் ஆராய்ந்த ராகு, கேதுவுக்குள் லக்கினம் உட்பட அனைத்துக் கிரகங்களும் அமைவதால் ஏற்படும் கால சர்ப்பயோகம், கோடீஸ்வரன் வீட்டுப் பிள்ளையாக இருப்பினும், இளமைக் காலத்தில் துன்பங்களைக் கொடுத்தாலும், வாழ்க்கையின் பின் பகுதியில் ராஜயோகத்தைக் கொடுக்கிறது.

உதாரணத்துக்கு இந்தியாவின் முதற் பிரதமரான, ஜவஹர்லால்நேரு கூட ஒரு காலசர்ப்பயோக ஜாதகர்தான்.

கடக லக்கினத்தில் பிறந்த அவருக்கு 12ஆம் வீட்டில், மிதுனத்தில் ராகுவும், லக்கினத்தில் சந்திரன் ஆட்சிபெற்ற அமைப்பும் 2ஆம் வீட்டில் சனியும், 3ஆம் வீட்டில் செவ்வாயும், 4ஆம் வீட்டில் சுக்கிரன் ஆட்சிபெற்றும், 5ஆம் வீட்டில் சூரியன், 6ஆம் வீட்டில் குருபகவான் ஆட்சிபெற்று கேதுவுடன் கூடி அனைத்துக் கிரகங்களும், லக்கினமும் ராகு, கேதுவுக்குள் அடங்குவது சிறந்த ராஜ யோகமாகும். கிரகங்கள் வரிசையாக இடைவிடாமல் அமைவதும் சிறப்பாகும். குரு, கேது இணைந்திருப்பது கேள யோகம் என்று கூறக்கூடிய புகழ்தரும் அமைப்பாகும். நேரு கோடீஸ் வரன் வீட்டுப்பிள்ளையாகப் பிறந்து, இளமைக் காலத்தில் தன் நாட்டின் விடுதலைக்காகப் போராடி, சிறைத் தண்டனையையும் பெற்றார். 12இல் ராகுவும், 6இல் கேதுவும் இருக்க அமைந்த மேற்படி காலசர்ப்பயோக அமைப்பே சிறையில் வாடிய நிலையையும் கொடுத்தது. அவருடைய ஜாதகத்தில் மூன்று கிரகங்கள் ஆட்சிபெற்றதால், அரசாளும் யோகத்தையும் பின்நாளில் பெற்றார்.

பொதுவாக சந்திரனுக்கு 12இல் ராகு இருந்து 11இல் பலம்பெற்ற கிரகம் இருப்பது, அல்லது பார்ப்பது, இறையருளால் அரசாளும் யோகம் அமைகிறது. குருவும், சுக்கிரனும் ஆட்சிபெற்று, அவர்களுக்கு 7இல் யோகம் தரக்கூடிய கிரகம் அமைவது, அல்லது சந்திரனை இராசியில் அல்லது நவாம்சத்தில் பலமான நான்கு கிரகங்கள் பார்ப்பதும் அரசியலில் உயர்வு பெறும் சிறப்பைத் தருகிறது.

அதேவேளையில் லக்கினம், இராசி, சுக்கிரன் இவர்கள் இருக்கும் இராசிகளும், லக்கினாதிபதி, சந்திரன் ஆகிய இந்த ஐந்தும் கடகம், சிங்கம், மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் பலம்பெற்று அமைவது உலகளவில் அரசியலில் புகழ்பெறும் யோகம்.

லக்கினம், சந்திரன், சூரியனுக்கு 10 ஆம் வீட்டை குரு பார்ப்பதும், லக்கினத்துக்கு 3ஆம், 6ஆம், 11ஆம் பாவங்களில் நீசம் பெற்ற கிரகம் இருந்து, நவாம் சத்திலும் நீசம் பெற்று நீசவர்க்கோத்தமம் பெறுவதும், அல்லது லக்கினம், சூரியன், சந்திரன் இருக்கும் இராசிக்கதிபதி பலம் பெறுவதும், அல்லது சந்திரனும் லக்கினத்திலுள்ள கிரகமும் வர்க்கோத்ததம் பெற்று, அதற்கு 4ஆம், 5ஆம், 6ஆம் வீட்டில் சுபக் கிரகம் இருப்பதும் அரசியலில் சிறப்பைத் தரும்.

அதேவேளை, குரு 2இல், 5இல் இருந்து சுக்கிரனால் பார்க்கப்படுவது, அல்லது குரு 2இல், 5இல் ஆட்சி பெறுவது, அல்லது குரு, புதன் இணைந்து 2இல், 5இல் பலம்பெறுவது அல்லது 9இல் பலம் பெறுவது அரசியலில் உயர்வைத்தரும்.

அதேபோன்று சுக்கிரன், குரு கேந்திரத்திலும் லக்கினம், மேடம், கடகம், துலாம், மகரம் என்னும் சரராசிகளில் ஒன்றாகி அதில் சனி பலம்பெற்று கேந்திரத்திலிருப்பது சிறப்பு.

சந்திரன் 5இலும், 5ஆம் , 11ஆம் அதிபதிகள் பரிவர்த்தனம் பெறுவதும், லக்கினத்துக்கு 1ஆம், 4ஆம், 7ஆம், 10ஆம் வீடுகளில் அனைத்துக் கிரகங்களும் இருந்து, அதில் ஒன்று அல்லது இரண்டு கிரகங்கள் ஆட்சியில் உச்சம் பெறுவதும் அரசியலில் உள்ளவர்களுக்குச் சிறப்பைத்தரும். சந்திரனுக்கு அல்லது லக்கினத்துக்கு 6ஆம், 7ஆம், 8ஆம் வீடுகளில் புதன், சுக்கிரன், குரு பலம்பெற்று இருப்பினும் பாவக் கிரகங்களின் சம்பந்தம் பெறாமல் இருப்பதும் நன்று. அதேவேளையில் லக்கினம், அல்லது சந்திரனுக்கு 9ஆம், 10ஆம் அதிபதிகள் தொடர்புபடுத்தப்படுவதும், அல்லது 10ஆம் வீட்டுக்கு 9ஆம், 10ஆம் அதிபதிகள் தொடர்புபடுவதும், 9ம் பாவத்துக்கு 9ஆம், 10ஆம் அதிபதிகள் தொடர்புபடுவதும் அரசியலில் யோகம் பெற்று உச்ச நிலையை அடைய முடியும்.

நித்தியா

# புகையால் மறையும் வாழ்க்கை

இயந்திர கதியில் இயங்கும் இன்றைய அறிவியல் உலகில் சுருங்கிய நிலையில் செல்கிறது மனித வாழ்க்கை. சுருக்கமாகச் சொன்னால் புகையிலேயே பெருமளவானோரின் வாழ்க்கைக் காலம் மறைந்து செல்கிறது.

உலக நாடுகள் பலவற்றிலும் புகைப் பிடித்தலுக்கு தடை விதிக்கப்பட்ட போதிலும் புகைப் பழக்கத்துக்கு அடிமையாகும் இளைஞர்களின் எண்ணிக்கை மாத்திரம் குறைந்தபாடில்லை. இலங்கையில் பல பொது இடங்களையும் ' புகைப் பிடிக்கத் தடை' என்ற விளம்பரப் பலகைகள் அலங்கரித்து நிற்கின்ற வேளையிலும் அதனால் ஆகின்ற பயன் யாதொன்றுமில்லை. புகைப் பிடித்தால் தண்டனை வழங்கப்படுவதும் பத்திரிகை அளவில் தான் நிறைவேறுகிறது.

நெருப்பு வைத்து தன்னை அழித்தவனை பழி வாங்குகிறது சிகரெட் 'கான்ஷர்' வடிவில் என்கிறது புதுக்கவிதை. புகைப்பிடிப்பது உடல் நலத்துக்குக் கேடு என்று நன்கு அறிந்திருந்தும் பலர் இந்தப் பழக்கத்துக்கு ஆளாகி விடுகின்றனர்.

''கடினமான வேலை காரணமாக எனக்கு மன அழுத்தம் அதிகம். புகைப் பிடிப்பதனால்தான் அந்த அழுத்தம் 'தணியும்'' என்று காரணமே இல்லாத காரணங்களைக் கூறி இந்தப் பழக்கத்துக்கு ஆளாகி கடைசியில் அவதிப்படும் எத்தனையே மனிதர்கள் எம் மத்தியில் உள்ளனர்.



ஆனாலும் தமது உடல் நலத்துக்கு எதிரி புகைத்தலே என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இது அந்தளவு கெடுதல் இல்லை என்று வீரவசனம் பேசுவார்கள். பொதுவாகப் புகைத்தலுக்கு அடிமையாகும் [illegible] வெளிப் படுத்துவதாகக் [illegible] தம் பெற்றோர் அல்லது மனைவியரிடம் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவதற்கும் புகைப் பிடிக்கின்றனர். சிலரோ புகை வளையங்கள் காற்றில் கரைகையில் நமது கவலைகளும் கரைந்து விடுவதாக உணர்ந்து அந்தப் பழக்கத்துக்குள் மூழ்கு கின்றனர். இவையெல்லாம் வெறும் மனப் பிரமையே தவிர வேறொன்றுமில்லை.

இந்தப் பழக்கத்தால் அவர்களுக்கு ஏற்படும் தீமைகளே அதிகம். சிகரெட் பிடிக்கும் போது ஏற்படுகின்ற துர்நாற்றம் அவர்களின் உடைகள் உடம்பு எல்லாவற்றிலும் பரவி புகைப்பிடிக்காதவர்களை அவர்களிடமிருந்து விலகச் செய்து விடுகிறது.

மேலும் புகைப் பிடிக்கப் பிடிக்க இன்னும் அதிக அளவில் தொடர்ச்சியாகப் புகைக்க வேண்டும் என்ற தூண்டுதல் தொடங்கும். இது மூச்சுத்திணறல், இரத்த அழுத்தம் போன்ற கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். அது மட்டுமன்றி சுவை நரம்புகள் தமது ஆற்றலை இழந்து நாளடைவில் உணவின் மீதான நாட்டமும் குறையத் தொடங்கும். இவற்றால் [illegible]தற்கான வாய்ப்புக்களே [illegible]ன.

இவ்வாறு புகைப் பிடிப்பவர்கள் தங்களை அறியாமலே காலத்தையும், பணத்தையும் செலவிடுகின்றனர். அதாவது காசு கொடுத்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்கின்றனர். கஷ்ரப்பட்டுத் தேடிய பணத்தை நம் உடம்பைக் கெடுத்துக் கொள்வதற்குப் பயன்படுத்துவதை விடப் பெரிய அறிவீனம் வேறொன்றும் இருக்க முடியாது.

இதைவிடக் கொடுமை புகைப் பிடிப்பவர்களுக்கு ஏற்படுகின்ற இருமல், சளித்தொல்லை, புற்றுநோய் புகைப்பிடிக் காத அப்பாவிகளுக்கும் ஏற்படுகின்றன. தானும் கெட்டு பிறரையும் கெடுக்கின்ற இந்தப் பழக்கத்தை விடுவது அவ்வளவு எளிதானதல்ல. ஆனால் புகைப் பிடிப்பதை விட்டு விட வேண்டும் என்ற நோக்கம் தீவிரமாக இருப்பின் வெற்றி காணலாம். எவ்வாறெனினும் கட்டாயமாக கைவிடப்பட்ட வேண்டிய ஒரு தீய பழக்கமே இது.

இதேவேளை எதிர்கால இளைஞர் மத்தியில் புகைப்பிடிக்கும் பழக்கத்தை குறைக்க பாடாலைகளில் தொடர்ச்சியான விழிப்புணர்வுப் பிரசாரங்களுக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அண்மையில் புகைப்பிடித்தலுக்கு முற்றாகத் தடை விதிக்க நடவடிக்கை எடுப்பதாக அரசு செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் சட்டம் எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமாகும் என்பதைப் பொறுத்தி ருந்து தான் பார்க்க வேண்டும். சரியான முறையில் அதை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டிய பொறுப்பு அரசின் கைகளிலேயே உள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எடுக்கப்படும் தீர்மானங்களும் முடிக்கப்படாத வேலைகளும்

■ சிவனடியான்

வடமாராட்சிப் பிரதேசத்தில் மக்கள் பிரச்சினைகள் தொடர்பான தீர்மானங்கள் பிரதேச சபைகள் ஊடாக எடுக்கப்படுகின்ற போதும், இவ்வாறான தீர்மானங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்றும், அதில் தாமதம் ஏற்படுவதாகவும் மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மிக இடைஞ்சல்களையும், நெருக்கடிகளையும் கொடுத்துவரும் இரு பெரும் பிரச்சினைகளுக்கு பிரதேச ஒருங்கிணப்புக் குழுக் கூட்டங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட போதும், அத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு பல மாதங்களாகியும், அத்தீர்மானங்கள் எதுவுமே இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மணலை ஏற்றுவதற்கு வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் கிராமத்துக்கு ரிப்பர், லொறிகள் சென்று வரும் பாதையை மாற்றம் செய்தல், நெல்லியடி நகரில் பஸ் நிலையத்துடன் அண்டியுள்ள மதுபான சில்லறை விற்பனை நிலையத்தை, மக்கள் நடமாட்டம் குறைந்த ஏதாவது ஒரு இடத்துக்கு பின்நோக்கி நகர்த்துதல் ஆகிய, இரு தீர்மானங்களுமே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்டவை.

முதலாவது தீர்மானமான மணல் ஏற்றிவரச் சொல்லும் ரிப்பர், லொறிகளின் பாதை மாற்றம் தொடர்பாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம், கரவெட்டி, வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலகம் ஆகிய இரு செயலகங்களிலும், நெல்லியடி மதுபான விற்பனை நிலையத்தை பின்நோக்கி நகர்த்துவது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டங்களில் அமைச்சரும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வல்லையிலிருந்து புறாப்பொறுக்கி, குஞ்சர்கடை, நெல்லியடி, மந்திகை வரையான பிரதான வீதி, மந்திகை ஆஸ்பத்திரி வீதி, வல்லிபுரக் கோயில் வீதி ஊடாக மணல் ஏற்றச் சென்றுவரும் ரிப்பர்கள், லொறிகளால் போக்குவரத்துக்கு மிகுந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நெல்லியடி நகருக்கு உட்பட்ட வீதியும், மாலுசந்தியிலிருந்து மடத்தடிக்கு அண்மித்ததாக உள்ள வீதியும் இன்னமும் அகல மாக்கப்படவில்லை. இந்த நிலையில், குறித்த வீதி காலை முதல் மாலை வரை போக்குவரத்து மிகுந்த வீதியாகவும் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதி ஊடாக மணல் ஏற்ற, குறிப்பிட்ட வாகனங்கள் சென்றுவரக் கூடாது என்று கரவெட்டி பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்னதாக பல மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற பருத்தித்துறைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மந்திகையில் உள்ள பருத்தித் துறை அரசின் ஆதார வைத்திய சாலை முன்பாக உள்ள ஆஸ்பத்திரி வீதி, மிகச் சிறிய வீதி என்றும், மணல் ஏற்றச் சென்றுவரும் வாகனங்கள் உட்பட அனைத்து கனரக வாகனங்களும் அந்த வீதி ஊடாக போக்குவரத்துச் செய்வதை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள், பார்வையாளர்கள், ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரும் அம்புலன்சும், போக்குவரத்து நெருக்கடியால் வைத்திய சாலைக்கு வந்து செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இவற்றுடன் மிகச் சிறிய வீதியான ஆஸ்பத்திரி வீதி, கனரக வாகனங்களின் பாவனையால் சேதமடைந்து வருகின்றது. இந்த வீதி ஊடாக கனரக வாகனங்கள் சென்று வருவதை உடன் நிறுத்த வேண்டும் எனவும், இதன் மூலம் நோயாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தவிர்க்கப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியாலை வைத்திய அத்தியட்சகர் சார்பாக இக்கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், இது குறித்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்திய அத்தியட்சகரின் இந்தக் கோரிக்கையை அடுத்து குறித்த கூட்டத்துக்குத் தலைமை வகித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஏற்றுக் கொண்ட நிலையில் குறித்த ஆஸ்பத்திரி வீதி ஊடாக கனரக வாகனங்கள் செல்வதை தடை செய்யுமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டதும் இங்கு நினைவுபடுத்திப் பார்க்க வேண்டிய விடயம்.



மணல் ஏற்றச் சென்று வரும் அனைத்து வாகனங்களும் வல்லை உப்பு றோட்டு சந்தி - துன்னாலை வீதி ஊடாகச் சென்று, அங்கிருந்து கொடிகாமம் வீதி ஊடாக பருத்தித்துறை மருதங்கேணி வீதியை அடைய வேண்டும் என்றும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த உத்தரவுக்கு அமைய சில மாதகாலம் ஆஸ்பத்திரி வீதி ஊடாக கனரக வாகன போக்குவரத்து குறைவடைந்திருந்த நிலையில் மீண்டும் இதே வீதி ஊடாக நடைபெறத் தொடங்கியது.

இந்த நிலையில் கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில், வீதிகளில் செல்லும் வாகனங்களை நாம் தடுக்க முடியாது. ஆனால் மணல் பெற அனுமதி வழங்கும் நிறுவனம் குறித்த வாக னங்கள் எந்த வழியால் சென்று வர வேண்டும் என்று மணல் அனுமதிப்பத்திரத்துடன் அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்க வேண்டும். இந்தத் நடைமுறை பின்பற்றப்பட்டால் தடை செய்யப்பட்ட வீதிகள் ஊடாக மணல் ஏற்றச் சென்றுவரும் கனரக வாகனங்கள் மீது நாம் நடவடிக்கை எடுப்போம் என நெல்லியடிப் பொலிஸ் தெரிவித்தனர்.

[illegible] நிறுவனத்துக்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 6 மாதங்களுக்கு மேலாகியும் எவ்வித நடவடிக்கைகளும் இல்லை. எனினும் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த வீதி, ஆஸ்பத்திரி வீதி ஊடாக மணல் ஏற்றச் செல்லும் வாகனங்கள் அதிக வேகத்தில் பயணிப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

நெல்லியடி பஸ் நிலையத்துக்கு அண்மித்ததாக மூன்று மதுபான விற்பனை நிலையங்கள் உள்ளன. இவற்றால் பொதுமக்கள், மாணவர் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒன்றுக்கு மேற்பட்ட மதுபான விற்பனை நிலையங்களுக்கு அனுமதி எதற்காக வழங்கப்பட்டது என நெல்லியடி வர்த்தக பிரதிநிதி ஒருவர் கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பியதுடன் நகரில் பஸ் நிலையத்தால் பெரும் அசௌகரியத்தை மக்கள் எதிர்கொள்வதுடன் ஒழுக்கக் கேடுகளும் ஏற்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டினார்.

சில பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில், மாணவர்களும், மது அருந்திப் பழக வாய்ப்புகள் கிடைத்துள்ளன. மது அருந்துவோரால் நெல்லியடி நகரில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் நகரில் உள்ள சில்லறை மதுபான விற்பனையை தற்போதைய இடத்திலிருந்து அகற்றி, மக்கள் நடமாட்டம் குறைந்த இடத்துக்கு மாற்ற வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த இரு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு சுமார் 9 மாதங்களைக் கடந்தும் இந்தத் தீர்மானம் எதுவும் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

பிரதேச அபிவிருத்தி, மக்களின் பிரச்சினைகள், தேவைகள் என்பனவற்றை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புகளுடன் இணைந்து ஆராய்ந்து அவற்றை விரைவாகப் [illegible] நடவடிக்கை [illegible] வேண்டும் என்பதே பலதரப்பினரின் எதிர்பார்ப்பாக உள்ளது. ★

“

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வல்லையிலிருந்து புறாப்பொறுக்கி, குஞ்சர்கடை, நெல்லியடி, மந்திகை வரையான பிரதான வீதி, மந்திகை ஆஸ்பத்திரி வீதி, வல்லிபுரக் கோயில் வீதி ஊடாக மணல் ஏற்றச் சென்று வரும் ரிப்பர்கள், லொறிகளால் போக்கு வரத்துக்கு மிகுந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

# இன நல்லிணக்கத்துக்கு

இலங்கையில் தமிழர்களும், சிங்களவர்களும் சகவாழ்வு வாழவேண்டும். அதற்குத் தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள் பேணப்படல் வேண்டும்.

2009 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் யூத இனப்படுகொலைகளுக்கு ஒப்பானவை. அதன் தாக்கம் ஜப்பானில் அணுகுண்டு வீச்சுக்கு ஒப்பானது. அதனை தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் விதம் கம்போடியாவில் பொல்பொட் ஆட்சிக்கு ஒப்பானது.

கடந்த சம்பவங்களை வெறுமனே ஒரு உள்நாட்டு விவகாரமாக அணுக முடியாது; இது ஓர் இன ஒழிப்பு நடவடிக்கை. ஹிட்லரின் நாசிக் குணாம்சத்தை விட, நாகரிக வளர்ச்சி அடைந்த சிங்கள குணாம்சத்தின் வெளிப்பாடே இது.

2009 ஆம் ஆண்டு தமிழினத்துக்கு எதிரான அழிவுகள் மனித குலத்துக்கே இழுக்கானது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் உலக வரம்பில் தண்டனை வழங்க முடியாத அளவு கொடூரமானவை.

ஆனால் அவற்றை மன்னிக்கும் உரிமை ஈழத் தமிழருக்கே உரியது. அதனை நிறைவேற்றுவதற்கு ஐ.நா. மனித உரிமை அமர்வில் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை முறையாக ஆவணப்படுத்தல் வேண்டும்.

**கலிங்க தேசத்தில் இனப்படுகொலையை நிகழ்த்திய அசோக மன்னன் பின்னர் தனது தவறை உணர்ந்து பௌத்த மதத்தைத் தழுவினான்.**

**அவ்வாறே இலங்கையின் வடக்கு, கிழக்கில் தமிழின அழிப்பை மேற்கொண்ட சிங்கள அரசு தமிழ் மக்களுக்கான துன்பம், தமிழ் மக்களுக்கான துன்பத்துக்கான காரணம் என்பவற்றை ஜெனிவா மநாட்டில் புரிந்து கொள்ளலாம்.**

இது முதற் படியாயின் சர்வதேச அனுசரணையில் தமிழ் மக்களின் துன்பத்தை நீக்கும் வழி, தமிழ் மக்களின் துன்பம் நீங்கல் என்பன நிகழும். அவ்வாறு நிகழின் வடக்கு, கிழக்கில் உள்ள 200,000 இராணுவத்தினரும் உண்மையான பௌத்தர்களாக மாறுவர். இது ஓர் ஆசியாவின் ஓர் அதிசயமாக மாறும் .

ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் இலங்கை விவகாரத்தை இந்தியா, சீனா, ரஸ்ஸியா போன்ற நாடுகள் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கின்றன.

இன்று தமிழரின் மனித உரிமைகள் பற்றி தீர்மானிக்கப்படா விட்டால் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழினம் தொடர்ந்து அழிக்கப்படும் நிலைமைதான் தொடரும் என்பதில் இருவேறுபட்ட கருத்துகளுக்கு இடம் இல்லை.

மிக அண்மையில் யாழ். பிரபல பெண்கள் பாடசாலையில் பாலியல் துர்நடவடிக்கையில் ஈடுபட்ட கல்வி அதிகாரிக்கு எதிராக மாணவிகள் வகுப்பு பகிஸ்கரிப்பு செய்தபோது வட மாகாண ஆளுநர், சிப்பாய்த் தனமாக மாணவிகளைத் தனது அலுவலகத்துக்கு அழைத்து அச்சுறுத்தி உள்ளார் என்றவாறான செய்திகளும் கசியத் தொடங்கியுள்ளன.

அடுத்து, ஆயுத அரசியல் குழு உறுப்பினர் சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்தும் உள்ளார்.

இங்கு ஜனநாயகம் என்ற பெயரில் ஆயுத அரசியலே நிகழ்கின்றது. இந்த நிலையில் சர்வதேசம் தமிழ் சிறுபான்மை இனம் ஒடுக்கப்படுவதற்குத் துணைபோகக்கூடாது.

எமது சமூகத்தின் வாழ்வு சிறப்படைவதற்கு நல்லிணக்கம் மிகவும் அவசியமானது.

இதனை நாம் சமூக விஞ்ஞான மாதிரியில் நான்கு படிநிலை உபகரணங்களாக விளக்கலாம். அவையாவன புறநிலை, மேல்நிலை, இடைநிலை,கடைநிலை என்பனவாகும்.

அடுத்து வடக்குக் கிழக்கில் இடைக்கால பொதுநிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படல் வேண்டும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மனித உரிமை மேம்பாடுக்கான சர்வதேச மையங்கள் அமைக்கப்படல் வேண்டும். இது காலத்தின் தேவைகளில் ஒன்று. ★

மருத்துவர்.சி.யமுனானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



14

- அருட்தந்தை
சூ.ம.ஜெயசீலன்

# தமிழனுக்குத் தினமும் சத்திரசிகிச்சைதான்

## உணர்வுகளை இறக்கி வைத்த நேரம்

நான் இலங்கைக்கு போனேன். சுதந்திரம் தேடும்சிறகுகள்அனைத்தும் தீவிரவாதத்தின் கனவுகள் என்று உலகிற்கு அறிவித்து கொண்டிருக்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு நாட்டிற்கு போனேன்.

கடற்பரப்பு தாண்டி நிலப்பரப்பிற்குள் விமானம் பறந்து கொண்டிருந்த போதே எங்கும் சூழ்ந்திருக்கும் பசுமையின் வனப்பு விழிக்குள் விதையானது. வளமையின் தேசத்தில் எம் தமிழினம் அழிக்கப்படுவதை நினைத்து நெஞ்சம் விம்மியது. கட்டுநாயக்க விமான நிலையத்தினுள் விமானம் தரை இறங்கியது முதல் விமான நிலையத்திலிருந்து வெளியேறும்வரை பரந்த நிலப்பரப்பிற்குள் படர்ந்த எம் பார்வையில் எம் வீர மறவர்களின் மறப்போர் ஆச்சரியத்துடனும் ஆனந்தத்துடனும் வியப்புடனும் முட்டி மோதியது. அடிமனதில் ஏக்கம் அலைந்து கொண்டே இருந்தது.

அது உள்ளூராட்சி தேர்தல் காலமாதலால் எம்.ஓ.டி. எனப்படும் அனுமதிக் கடிதம் வழங்கும் முறையை அரசு திரும்பி பெற்றுக்கொள்வதாக அறிவித்திருந்தது. அதனால் சற்று நிம்மதி கிடைத்தது. இந்த அனுமதிக் கடிதம் இல்லாமல் யாரும் தமிழர் பூமிக்கு, யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்க முடியாது. தேர்தல் முடிந்த பிறகும் இந்த விலகல் நடைமுறையில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இது தொடருமா என்ற ஐயப்பாடு அனைத்து தமிழர் மனங்களிலும் ஆழ இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு இரவு பேரூந்தில் முன் பதிவு செய்யப்பட்டிருந்ததால், பகல் பொழுது நண்பர் வீட்டில் கழிந்தது. மாலையில் கொழும்புநகரை சுற்றி வந்தபோது, என் திகைப்பு அதிகரித்தது. சாலையில் சாலையோர கடைகள் இல்லை, பிச்சைக்காரர்கள் தொல்லையில்லை, ஓடிக்கொண்டோ ஓய்ந்து போயோ இருக்கும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் இல்லை. முகம் மலரச்செய்யும் நல் தூய்மை, வாகன ஓட்டிகளின் ஒழுங்கு, பாதசாரிகளின் பக்குவம், அனைத்தும் பிரமிக்க வைத்தது.

சாலையில் வரையப்பட்ட மஞ்சள் கோடுகளை பொதுமக்கள் எந்த நேரத்திலும் கடக்கலாம், எந்த பாதிப்பும் நேராது, வாகன ஓட்டிகள் தங்கள் வாகனத்தின் வேகத்தை குறைத்து நின்று விடுகின்றார்கள். இரவு வேளைகளில் நமது ஊர் நண்பர்களைப் போல் அதிக பட்ச ஒளியை கண்களுக்குள் பாச்சும் அனுமதி அங்கில்லை, அதனால் எரிச்சலும் தடுமாற்றமும் எதிர்வரும் பயணிக்கு இல்லை.

தலைக்கவசம் இல்லாமல் இருசக்கர வாகனம் ஓட்ட முடியாது. பின் அமர்ந்திருப்பவரும் தலைக் கவசம் அணிய வேண்டும். இது அரசின் பரிந்துரை அல்ல. மாறாக சட்டம் இயற்றி கடைப்பிடிக்கிறார்கள். முச்சக்கர ஊர்திகளிலும் குறிப்பட்ட எண்ணிக்கையில் மட்டுமே நபர்களை ஏற்ற வேண்டும். மீறினால் தண்டனைதான், சட்டங்கள் கடுமையாக் கடைப்படிக்கப்படுவதால் விபத்து பற்றிய செய்திகள் மிகக்குறைவாகவே இருக்கின்றன.

இந்த ஒழுங்குகளை உள்வாங்கிய உணர்வுடன் எனது தேசத்திற்குள் செல்வதற்காக பேரூந்தினுள் அமர்ந்தேன். குளிர்சாதன வசதியுடைய பேரூந்து அது. உடல் குளிர ஆரம்பித்தது. ஆனால் மனம் வெப்பமாக இருந்தது. உறக்கம் பிடிக்கவில்லை. கடந்தகால யுத்தம், என் சகோதர சகோதரிகளின் இரத்தம், அழிக்கப்பட்ட சொத்துக்கள், அவமானப்படுத்தப்பட்ட உடல்கள், கற்பழிக்கப்பட்ட கொடூரங்கள். நச்சு குண்டுகளில் மூச்சுவிட முடியாது இறந்தவர்கள். கொத்து குண்டுகளினால் கொலையுண்டவர்கள், ஓடிக்கொண்டே போன எம் எதிர் காலங்கள்.அனைத்தும் எமது மனதுக்குள் புகுந்து ஏதேதோ செய்தது.

இதுவரைக் காலமும் எங்களுடைய இனத்தின் வீரர்கள் என்றால் யார்? ஏன்று கேட்கும் நிலை இருந்தது. ஆனால் இன்று நாம் எமது இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயம் அழியாது என்று முதல் மாவீர தின உரையில் தமிழினத் தலைவர் பரபாகரன் பேசியதை மீண்டும் ஒருமுறை அசைபோட்டபடி எம் வீரர்கள் களமாடிய, போர் மற்றும் அரசியல் பக்கங்களுடன் நின்றுவிடாமல், சமூகம், பொருளாதாரம் நிர்வாக கட்டமைப்புகள், மனிதாபமான பணிகள் என்று பல்துறை சார்ந்து வியாபித்து நின்ற தமிழ் மண்ணின் வாசம் என் சுவாசத்திற்குள் சங்கமிக்கப் போகின்றது என்ற படபடப்பும் பரிதவிப்பும் என்னை சூழ்ந்து கொண்டது.

நள்ளிரவு எல்லோரும் அசந்து தூங்கி கொண்டிருந்தார்கள். எனது வலது பக்க இருக்கையில் அமர்ந்திருந்தவர் மூச்சுப் பிரச்சனை உள்ளவர்போல, தொடர்ந்தும் இருமிக்கொண்டும் கையோடு கொண்டுவந்திருந்த பிளாஸ்ரிக் பையில் வாந்தி எடுத்துகொண்டும் அவதியோடு தன்னால் இயன்றளவு கிருமிகளை பரப்பக்கொண்டு வந்தார்.

திடீரென பேரூந்து நின்றது. இல்லை. இல்லை நிறுத்தப்பட்டது. இருபது வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் இலங்கை இராணுவ உடையுடன் பேரூந்தில் ஏறினான். கையில் சிறிய டார்ச் இருந்தது. ஒவ்வொருவர் முகத்திலும் ஒளிபாச்சி கொண்டே வந்த அவன் எல்லோரின் அடையாள அட்டைகளையும் எடுக்க சொன்னான். அர்த்த ராத்திரியில் தட்டு தடமாறி தங்கள் அடையாள அட்டைகளை காட்டி தாங்கள் இந்த நாட்டின் குடிமக்கள்தான் என்பதை நிரூபித்து கொண்டார்கள், என்னைப் போன்ற வெளிநாட்டவர்கள் தங்கள் கடவுச்சீட்டினைக் காட்டினோம்.

அயல் நாட்டு குடிமக்களையும், தாங்கள் விளையாட்டு பொம்மைகளாக நினைக்கும் ஈழத்தமிழர்கள் சிலரையும் இறங்கி வரச்சொன்னான் அந்த இராணுவ வீரன். அந்த இரவிலும் இறங்கி கொஞ்சதூரம் நடந்தோம். ஆங்கே ஏற்கனவே ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. முந்தைய பேரூந்தில் பயணம் செய்தவர்கள் என்பதை புரிந்துகொள்ள முடிந்தது. வரிசையில் நின்றோம். என் முறை வந்தபோது எனது கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டு பதிவு செய்து கொண்டான் ஒருவன். மற்றவன் கொஞ்சம் தள்ளி இருந்த அறைக்குள் சென்று எல்லோருக்கும் செய்தது போலவே எனது கடவுச்சீட்டை நகல் எடுத்து கொண்டு வந்தான். தமிழும் தெரியவில்லை ஆங்கிலமும் அவனுக்கு அவ்வளவாக தெரியவில்லை. தமிழர் திண்டாட்டம் அங்கிருந்து ஆரம்பமாகின்றது.

பேரூந்து புறப்பட்டது. அந்த இடத்திற்கு பெயர் ஓமந்தை என்றார்கள். பார்த்தீர்களா எனது வீட்டிற்கு போவதற்கும் பயந்து கொண்டு போகவேண்டி இருக்கின்றது. என்று எனது அருகில் இருந்தவர் தனது ஆதங்கத்தை சொல்லும்போதே உலகை ஏமாற்றும் ராஜபக்ஷவின் புழுகு மூட்டை அவிழ ஆரம்பித்தது.

ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலும் யாராலும் தூங்க முடியவில்லை. அமர்ந்திருக்க முடிந்தால் தானே தூங்குவதற்கு. பள்ளங்களும் புழுதிகளுமே சாலைகளாக இருந்தது. ஆனால் அதுதான் கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பிரதான சாலை. ஒரே தேசம் எனச் சொல்லப்படும் நாட்டின் வடபகுதியானது, போரின்போதும் போரிற்கு பிறகு இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற பிறகும் வளமையற்றே கிடக்கிறது. காய்ந்த பூமியும், கருகிய புதர்களும், நொறுக்கப்பட்ட கட்டடங்களுமாக கைம்பெண்ணின் முகம்போல வடிவிழந்து இருக்கும் எம் தமிழ் சகோதரரின் நாட்டுக்குள் இப்படித்தான் பயணப்பட்டோம்.

யாழ்ப்பாணம் வந்திறங்கியபோது பொழுது நன்றாக விடிந்திருந்தது. எம் வீரர்களும் தரம் வாய்ந்த கலைஞர்களும் வாழ்ந்த பூமியில் எனது 15 வாழ்க்கை இருக்கப்போகின்றது என்ற உள்ளப் பூரிப்பில் இறங்கினேன். வரலாறு சுமந்திருந்த யாழ் நூலகம் எரிக்கப்பட்ட பூமியில், வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்ந்த உலகத் தமிழர் மாநாட்டில் தமிழ் அறிஞர்கள் கொலை செய்யப்பட்ட நிலத்தில் நிற்கின்றேன் என்ற பதைபதைப்பில் இறங்கினேன். மிகப் பெரும் அதிர்ச்சி நகரம் என்பதற்கான எந்தவித ஆரவாரமோ, ஆடம்பரமோ, தூய்மையோ வாகன ஒழுங்கு முறையோ ஏதுமின்றி காட்சி அளித்தது யாழ்ப்பாணம். யாருடைய முகத்திலும் இயல்பான மகிழ்ச்சி இல்லை. உரத்து பேசும் ஆற்றல் இல்லை. கூடிக்குலாவும் சாலையோர சந்திப்புக் கள் இல்லை. இன்னும் பல இல்லை இல்லை.

காரணம் விரைவிலேயே புரிந்தது. சாலையில் எப்பக்கம் பயணித்தாலும் இராணுவ வீரர்களே அரணாக நின்று கொண்டிருந்தார்கள். கையில் துப்பாக்கியும் தோளில் ஒரு பையும் சுமந்து கொண்டு பச்சைநிற உடையுடன் சிங்கள இளைஞர்கள் நின்று கொண்டிருக்கும் காட்சியே நமக்கு சூழலின் மொத்தப் பரிமாணத்தையும் உணர்த்திவிடுகிறது. எந்த வீதிக்குள்ளும் அவர்களின் பார்வையில் படாமல் செல்லவேமுடியாது.

எப்போழுது வேண்டுமானாலும் நாம் நிறுத்தப்படலாம். தமிழர் தம் சட்டைப் பையில் அடையாள அட்டை இல்லை என்றாலோ, அடையாள அட்டையில் திருப்தி இல்லை என்றாலோ சிக்கல்தான். இப்படி இடைமறித்து வினவுவது அவர்களின் பொழுதுபோக்கு. வாகன ஒழுங்கைகூட படையினர்தான் செய்து வருகின்றார்கள். ஒவ்வொரு படையினரையும் துப்பாக்கியின் துர்கனவுகளையும் கடந்து செல்வது என்பது தமிழர்களுக்கு தினம்தோறும் அறுவைச்சிகிச்சை. *(சந்திப்போம்...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> தீர்மானத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட வேண்டும் என்பதில் அது விடாப் பிடியாக இருக்கிறது. அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் ஏதாவது ஒரு விடயத்தை எடுத்துவிட்டால் அதில் இறுதி இலக்கை எட்டும் வரை விட்டுக் கொடுக்காது.

# இறுதியாட்டம் 22 இல்

அதிரன்

இலங்கை அரசின் யுத்த குற்ற மீறல்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் ஆகியவற்றுக்கு எதிராக அமெரிக்கா ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் சமர்ப்பித்துள்ள தீர்மானம் எதிர்வரும் 22 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு வருகிறது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு மேற்குலக நாடுகள் உட்பட இதுவரை 22 நாடுகள் வெளிப்படையாக ஆதரவை தெரிவித்துள்ளன. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் ஏனைய நாடுகள் தமது முடிவை இதுவரை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. இவற்றுள் இலங்கை அரசுக்கு ஆதரவான நாடுகளான சீனா, இந்தியா ஆகியனவும் அடங்கும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி அந்தத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு வருவதற்கு முன்னர் அதனை எப்படியாவது தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்ற ஒரே குறிக்கோள் இலங்கை அரசு எந்த வழிகளில் எல்லாம் முடியுமோ அந்த வழிகளிலெல்லாம் முயன்று பார்க்கிறது. மறு பக்கத்தில் எடுத்தது எதிலும் வெற்றிதான் என்று செயற்படும் அமெரிக்கா இலங்கைக்கு எதிரான இந்தத் தீர்மானத்தையும் சபையில் நிறைவேற்றி ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டி நிற்கிறது.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள இலங்கை- அமெரிக்கா இடையிலான இந்த இராஜதந்திரப் போராட்டம் இப்போது உச்சக் கட்ட மோதலாக உருவெடுத்திருக்கின்றது. மனிதாபிமான பிரச்சினை, யுத்த குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல்கள் என்ற விடயங்களையெல்லாம் தாண்டி இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கௌரவப் பிரச்சினை என்றவாறு இந்த போர் நடந்து கொண்டிருக்கிறது. உண்மையில் பார்க்கப் போனால் கிட்டத்தட்ட இரண்டு நாடுகளினதும் கிரிக்கெட் அணிகள் ஐ.சி.சி. உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் மோதும்போது என்ன நிலைமை இருக்குமோ அதே நிலைமையில்தான் இப்போது ஜெனிவாவில் இந்தத் தீர்மானத்தின் நிலைமையும். அந்தளவுக்கு இந்த ஜெனிவாகக் கிண்ண இறுதியாட்டம் படுசூடாக இருக்கிறது.

20 நாடுகள் வெளிப்படையாக இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. மிகுதியாக 27 நாடுகள் தமது முடிவை வெளியிடாமல் மௌனமாக உள்ளன. இதன்னை வைத்துக் கொண்டு இலங்கை அந்த நாடுகளுடான ராஜதந்திர காய் நகர்த்தல்களை முடுக்கிவிட்டிருக்கின்றது. ஜெனிவாவுக்கு இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகம் தலைமையில் ஒரு குழு, அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் மற்றொரு குழு, அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் மூன்றாவது குழு என இலங்கைப் பிரதிநிதிகள் அமெரிக்கத் தீர்மானத்தை வெற்றிக்கொள்வதற்காக ஜெனிவாவில் களம் இறப்பட்டுள்ளார்கள். போதாக்குறைக்கு இலங்கையின் முன்னாள்சட்டமாஅதிபர்மொஹான் பீரிஸ் தலைமையில் சிரேஷ்ட சட்டத்தரணிகளைக் கொண்ட குழுவும் மேற்குறிப்பிட்ட மூன்று குழுக்களுடனும் சேர்ந்து இயங்குகின்றது. ஒருவேளை தீர்மானம் வெற்றி பெறும் நிலை இருந்தாலும்கூட அந்தத் தீர்மானத்தில் கனதியை - வீரியத்தை - குறைத்து விட வேண்டும் என்பதிலும் இலங்கை பிரதிநிதிகள் தீவிரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஜெனிவாவில் இருக்கும் இந்தக் குழுக்களை இலங்கையில் இருந்துகொண்டு நெறிப்படுத்துகிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்கும் அமைச்சர் பீரிஸுக்கும் இடையில் ஜெனிவாக் குழுவுக்குத் தலைமை வகிப்பது தொடர்பில் கடும் கருத்து மோதல்கள் இடம்பெற்ற நிலையில் இருவரையும் இரு குழுக்களாக்கி அவர்களை வழிநடத்துகிறார் ஜனாதிபதி.

இதற்கிடையில் ஆபிரிக்கா நாடுகள் உட்பட சில நாடுகளுக்கு தனது பிரதிநிதி களை அனுப்பி ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்க்குமாறு அந்த நாடுகளிடம் அன்புக்கோரிக்கையையும் விடுக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ. அது எந்த அளவுக்கு பலனளிக்கும் என்பது உறுதியாகத் தெரியாத நிலையிலும் தீர்மானத்துக்கு எதிராக தன்னால் இயன்ற அளவு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருக்கிறார் ஜனாதிபதி. இந்தத் தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டால் அது இலங்கை அரசுக்கு ஒரு மிக ஆபத்தான நிலைமையை உண்டுபண்ணும் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். சில வேளை தனது ஆட்சிக் காலத்துக்கும் - குடும்ப ஆட்சிக்கும் - அது ஆப்பாகிவிடும் என்ற பயமும் அவருக்கு இருக்கிறது. அதனால்தான் இதிலிருந்து எப்படியாவது தப்பி விடவேண்டும் என்பதற்காகவே அவர் இந்த அவசர ராஜதந்திர நடவடிக்கைகளில் மும்முரமாக இருக்கிறார்.

இந்திய அரசு ஜெனிவாத் தீர்மானம் தொடர்பான தனது நிலையை இதுவரை வெளிப்படையாக தெரிவிக்காததும் இலங்கை அரசுக்கு ஆறுதல் அளிக்கும் ஒன்றாகவே இருக்கிறது. இந்திய அரசு ஒருபோதும் இலங்கையின் நலன்களுக்கு எதிராக செயற்படாது எனத் தாம் நம்புவதாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசமும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இலங்கை இப்படியான காரணங்களைக் கூறி ஆறுதல்பட்டுக் கொண்டாலும் இந்த தீர்மானம் இலங்கையை விட இந்திய அரசுக்கே அதிக சிக்கலையும் தர்ம சங்கடமான நிலைமையையும் தோற்றுவித்திருக்கிறது என்பது இப்போது வெளிப்படையாகத் தெரிகிறது.

வழமையாக எந்தவிடயத்தை எடுத்துக் கொண்டாலும் அது நல்லவையாக இருந்தாலென்ன பாரதூரமானவையாக இருந்தாலென்ன இரு பெரும் துருவங்களாக நின்று ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளும் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவும் கருணாநிதி தலைமையிலான தி.மு.க.வும் இந்த விடயத்தில் மட்டும் ஒரே கருத்துடன் ஒன்றாக நின்று மத்திய அரசுக்குப் பெரும் தலையிடியை ஏற்படுத்தியிருக்கின்றன.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு இந்திய அரசு ஆதரவு வழங்கியே தீரவேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கும் இந்த இரு கட்சிகளும் இந்திய மத்திய அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தும் அளவுக்குத் துணிந்துவிட்டன. தீர்மானத்தை ஆதரிக்குமாறு கோரி கருணாநிதியும் ஜெயலலிதாவும் பிரதமர் மன்மோகன்சிங்கிற்குக் கடிதங்களை அனுப்பி வைத்தார்கள். அந்தக் கடிதங்களுக்கான பதில் களை [illegible] களுக்கு அனுப்பியுள்ளார். ஆயினும் பிரதமரின் பதில் கடிதம் தமக்குத் திருப்தியில்லை என இருவரும் உடனடியாகவே அறிவித்தனர். அத்துடன் அவர்கள் நின்றுவிடவில்லை. இந்தப் பிரச்சினை தொடர்பாகத் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர்மேனன் சந்தித்துப் பேச இருந்தார். ஆயினும் மத்திய அரசு சற்றும் எதிர்பார்க்காதவாறு மேனனைச் சந்திக்க மறுத்தவிட்டார் ஜெயலலிதா. அவரது இந்த அதிரடியினால் குழம்பிப்போய் இருக்கிறது இந்திய அரசு. மறுபுறத்தில் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்காவிடில் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமது அமைச்சர்கள் அனைவரும் பதவியிலிருந்து விலகிவிடுவார்கள் என்று எச்சரித்திருக்கிறார் கருணாநிதி. இதுபோதாதென்று தமிழக காங்கிரஸும் இந்த விடயத்தில் மத்திய அரசுக்கு எதிராகப் போர் கொடி தூக்கியிருக்கிறது.

ஒரு போதுமே எதிர்பாராத இந்த மும்முனைத்தாக்குதலினால் நிலை குலைந்துள்ள மன்மோகன் அரசு தமிழக ஆதரவைத் தக்க வைப்பதா? இலங்கைக்கு ஆதரவளிப்பதா? என்ற இரு கேள்விகளுக்கு இடையே நின்று திண்டாடிக்கொண்டிருக்கிறது. இதுவரை அது உறுதியான தீர்மானம் எதையும் மேற்கொள்ளவில்லை. ஆயினும் தமிழகத்தின் இந்த எதிர்வலை தனக்கு எதிராக மோசமான விளைவுகளை உண்டுபண்ணும் என்பதையும் மத்திய அரசு உணர்ந்து கொண்டிருக்கும்.

தமிழகத்தின் இந்த ஒட்டுமொத்த எழுச்சி ஈழத் தமிழர்களுக்கான தீர்வு கிடைப்பதற்கு நல்லதொரு மாற்றம் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். இதுவரை இல்லாத இந்த எழுச்சியை இந்திய அரசு சாதுரியமாக முடிவெடுத்துத் தணிக்காவிட்டால் அது இந்திய அரசுக்கே ஆபத்தை ஏற்படுத்துவதாக மாறக் கூடும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

நிலைமை இவ்வாறு இருக்க ஜெனிவாவில் தீர்மானத்தை சமர்ப்பித்த அமெரிக்காவும் சும்மா விடுவதாக இல்லை. தீர்மானத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட வேண்டும் என்பதில் அது விடாப்பிடியாக இருக்கிறது. அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் ஏதாவது ஒரு விடயத்தை எடுத்துவிட்டால் அதில் இறுதி இலக்கை எட்டும் வரை விட்டுக்கொடுக்காது. இதனை கடந்த கால அனுபவங்கள் பலவற்றிலிருந்து நாம் உணர்ந்து கொள்ள முடியும். இது அமெரிக்காவின் பரம்பரைக் குணம். உலக நாடுகள் பலவற்றிலும் அமெரிக்கா மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகள் பல இதற்கு சான்றாக அமைகின்றன. ஈராக்கில் சதாம் ஹுசைனை வீழ்த்தியமை, ஒசாமா பின்லேடனை சுட்டுச் சரித்தமை, லிபிய அதிபர் மும்மர் கடாபியை தோற்கடித்தமை, எகிப்தில் ஹோஷ்னி முபாரக்கை விரட்டியமை போன்ற நடவடிக்கைகளை கனகச்சிதமாக நிறைவேற்றியது இந்த அமெரிக்காதான். இந்தப் பொறியில் இப்போது மாட்டியிருக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ. ஜெனிவாவில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி மஹிந்த அரசுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என்பதில் குறியாகவே செயற்படுகிறது அமெரிக்க அரசு. அதற்காக தனது ராஜதந்திர நடவடிக்கைகளை அது வேகப்படுத்தியுள்ளது. தீர்மானத்துக்கு ஆதரவு தேடும் முயற்சியில் அமெரிக்கப் பிரபலங்களும் சர்வதேச ஆதரவைப் பெற்றவர்களுமான முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், ஐ.நா. நிபுணர் குழுவின் தலைவர் தருஷ்மன், அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரி மரியா ஒட்டேரா ஆகியோரை அது களத்தில் இறக்கியிருக்கிறது. இவர்களுடன் தனது ராஜதந்திரிகள் 100 பேரையும் இந்த முயற்சியில் அமெரிக்கா ஈடுபடுத்தியிருக்கிறது. ஒட்டுமொத்தத்தில் தீர்மானத்தை வெற்றி கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுவிட்டன. இனி மீதமுள்ளது தீர்மானம் மீதான வாக்கெடுப்புத்தான். தீர்மானத்துக்கு எதிரான இலங்கையின் நடவடிக்கைகளும், தீர்மானத்துக்கு ஆதரவு தேடும் அமெரிக்காவின் நடவடிக்கைகளும் இப்போது ஜெனிவாவில் சூடுபறக்கின்றன. இந்தத் தொடரின் இறுதியாட்டம் எதிர்வரும் 22 ஆம்திகதி ஜெனிவாவில் நடக்கிறது. அதில் கிண்ணத்தை வெல்லப்போவது யார்? ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி........

தருபவர் - வித்தியா

## 18.03.2012 முதல் 24.03.2012 வரை

### மேடம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். எதிலும், பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம். சில வேலைகளை செய்ய மறப்பதன் மூலம் அவதிகளுக்கு ஆளாகலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குக் கூடும். தந்தை வழியில் நன்மைகள் கிட்டும். அலைச்சல்,பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். புதிய விடயங்களில், தொழில் முயற்சிகளில் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும். உடல் ரீதியான உபாதைகளாலும் பலர் அவதிப்படலாம். எந்த விடயத்திலும் அகலக்கால் வைத்து, கடன் வாங்குவது நல்லதல்ல. கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

### இடபம்

எதிர்பார்த்த பணவரவுகள் அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். சிலருடன் சேர்ந்து கூட்டாகச் சில காரியங்களைச் செய்வீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்குதல், பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றி வைத்தல், நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த ஆலயங்கள், முக்கிய இடங்களுக்குச் செல்லுதல், வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளுதல் போன்ற வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். கடந்த காலக் கடன் பிரச்சினைகளில் இருந்து விடுபடும் வாய்ப்பு உருவாகும். வழக்கு விவகாரங்களில் முன்னேற்றமான நிலைமையை காணலாம். வீடு, மனை, தாயார் வழியில் சிரமங்கள் நேரிடலாம். பொறுமை, நிதானம் அவசியம். போட்டி, எதிர்ப்புகளால் மன உளைச்சல் உண்டாகும். விரயச் செலவுகள் நேரும்.

### மிதுனம்

பிள்ளைகள் வழியிலோ அல்லது வேறு வகையிலோ திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல், அனைத்தையும் நீங்களே செய்வீர்கள். எதிர்பாராத வகையில் பணவரவு ஒன்றைப் பெறலாம். மருத்துவ சிகிச்சைக்குச் செல்லும் சிலருடன் நீங்களும் துணைக்குச் செல்லலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். பெண் பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தையின் உடல் நலக்குறைவால் ஏற்பட்ட சிரமங்கள், செலவுகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். மாற்று மதத்தினரை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரும். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம்.

### கடகம்

ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கிவிட்டு அவதிப்படுவீர்கள். பிறருக்காக நீங்கள் செலவு செய்யலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். திடீர் வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். சில காரியங்களைச் செய்வதா, வேண்டாமா என்று அடிக்கடி குழப்பம் அடைவீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிப்படலாம். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு. பணிபுரிவோர் வேலையில் கவனமாக இருக்க வேண்டும். மற்றவர்களை நம்பி உங்களின் பொறுப்புகளை, முக்கிய பணிகளை ஒப்படைப்பதைத் தவிர்க்கவேண்டும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் வீண் பழிகளைச் சந்திக்கலாம். நீங்கள் எவ்வளவு தான் கடினமாக முயற்சித்து சில வேலைகளை முடித்தாலும், அதற்கேற்ற பலன் கிடைக்காது. தாயார் உடல் நலன் தொடர்பான வகையில் செலவுகள், சிரமங்கள் உண்டாகலாம். எந்த வேலையையும் சுலபமாக முடிக்க முடியாத அளவுக்கு ஏதாவது புதிய பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கும். சகோதரர்களால் தொல்லைகளே அன்றி ஆதாயம் இல்லை. பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறப்பீர்கள்.

### சிங்கம்

புதியவர்கள் சிலரின் நட்புக் கிடைக்கும். சோர்வின்றி எந்த வேலையையும் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். பல மணி நேரமாகும் என்று நினைத்த விடயங்கள் எல்லாம் சுலபமாக முடிவுக்கு வரும். சக ஊழியர்கள் அல்லது நண்பர்கள் சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். ஆதாயமில்லாத சில வேலைகளில் இறங்கி அவதிக்கு ஆளாவீர்கள். உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். அடிக்கடி கோப, தாபங்களுக்கு ஆள்பட்டு, மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிலரின் நல்லெண்ணத்தைப் புரிந்து கொள்ளாமல், அவர்களுடன் சண்டை போடலாம். பணப் புழக்கத்துக்கு குறைவிருக்காது. பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றகரமான திருப்பங்களைக் காணலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.

### கன்னி

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். சிறிய வேலை ஒன்றுக்கு நீண்ட நேரம் காத்திருக்கலாம். ஊக்கம், உற்சாகமாக பரபரப்பாகச் செயற்படுவீர்கள். எந்த விடயத்திலும் அவசரப்பட்டு வாக்குக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். சிலர் குடும்பத்தை விட்டு, நீண்ட தூரப் பயணங்கள் செல்லத் திட்டம் போடுவர். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாகலாம். அரசியல்வாதிகள் சந்திப்பால் நன்மை அடையலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். சொத்து விவகாரங்களில் கவனமாகச் செயற்பட வேண்டும். சகோதரர்கள் வழியிலும் எதிர்பாராத [illegible] விவ காரங்களால் கவலைகள் உண்டாகலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு. பயணங்களுக்காகச் செலவிடலாம்.

### துலாம்

மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவிகள் கிடைக்கலாம். நீண்ட நாள்களாகப் பிற்போட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. யாருக்கும் அவசரப்பட்டு வாக்குக் கொடுக்க வேண்டாம். மாற்று மதத்தினர் அல்லது மாற்று மொழி பேசுவோரை உங்களின் குடும்ப விவகாரங்களில் தலையிட அனுமதிக்க வேண்டாம். கொடுக்கல் வாங்கல்களிலும் கவனம் அவசியம். அரசியல்வாதிகள் சந்திப்பால், அவர்கள் மூலம் கிடைக்கும் உதவியால் சந்தோஷம் அடைவீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும். பணவரவுகளைப் பெறலாம்.

### விருச்சிகம்

உறவினர்கள், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். நீண்ட நாள்களாக தொலைபேசியில் மட்டும் பேசிக்கொண்டிருந்த ஒருவரை திடீரென நேரில் சந்திக்கலாம். அடுத்த சில தினங்களுக்குப் பின் நடைபெற உள்ள காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள். ஆபத்தான பொருள்களைக் கவனமாகக் கையாள வேண்டும். சிலர் தரப்பில் எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். அடிக்கடி ஏதாவது பிரச்சினைகளை நினைத்து கவலை கொள்வீர்கள். பிள்ளைகள் வழியில் தொல்லைகள், சிரமங்கள், மனஸ்தாபங்கள் ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையேயும் அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் உண்டாகலாம். பெண்கள், பயணங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் பணம் கரையலாம். மற்றவர்களுக்காக பிணை கொடுப்பதை, உத்தரவாதம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஓய்வாக இருக்காமல், அடிக்கடி பல வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை நாளை செய்யலாம் என்று பிற்போடுவீர்கள்.

### தனுசு

உங்களுக்காகவோ, பிள்ளைகளுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். ஆசைப்பட்ட உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்திகளைக் கேட்கலாம். விருப்பம் இல்லாமல் , சில செலவுகளைச் செய்யலாம். உறவுப் பெண்கள் சிலரின் சந்திப்பு நிகழும். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சொத்து வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் சுலபமாக முடிவுக்கு வரும். புத்துணர்ச்சியுடன், தெம்புடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

### மகரம்

எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். வழக்கத்துக்கு மாறாகக் கூடுதல் நேரம் தூங்கலாம். பயணங்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். இழுபறியாக இருந்த சில காரியங்கள் திடீரென அதிரடியாக முடிவுக்கு வரும். அரசியல்வாதிகள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். தாயார் வழியில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். உறவுப்பெண்கள் சந்திப்பு, விருந்து, விசேடங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். உழைப்பில் கடுமை காணப்படும். கடந்த கால இழப்புகளை ஈடுகட்டும் வாய்ப்பு உருவாகும். சகோதரர்கள், நண்பர்கள் வழியில் தொல்லைகள் உருவாகலாம். அவசரப்பட்டு எந்த விடயத்திலும் முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொடர்பு கொண்டு பேசலாம். வீண் அலைச்சல் உண்டு.

### கும்பம்

கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். சிலரிடம் கேட்ட கடனுதவி கிடைக்கும். தம்பதியர் இடையே அன்னியோனியம் அதிகரிக்கும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். யாரிடமும் தேவையற்ற பேச்சுக்களை, வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். கணவன், மனைவி உறவில் சச்சரவுகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச்செல்ல வேண்டும். சிலர் தொழில் ரீதியான அலைச்சல்களுக்கும் ஆள்படலாம். சுகமான இனிய அனுபவங்களை எதிர்கொள்ளலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### மீனம்

எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். அடுக்கடுக்காகக் குவியும் வேலைகளால் அவதிப்படலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். வெறுப்பு, விரக்தி உண்டாகும். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். எதேச்சையாக நடக்கும் சில சம்பவங்களால் மனதில் சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை அவசியம். எதிர்ப்புகள், போட்டிகளைச் சந்திக்கலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்பீர்கள். பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மாற்று மதத்தினர் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நீண்ட நாள்களாகச் செய்ய நினைத்த சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள். அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்க வேண்டாம். மற்றவர்கள் பேச்சை நம்பி இறங்குவதைத் தவிர்க்க வேண்டும். காரிய வெற்றி உண்டு. முக்கியமான செய்திகளைக் கேட்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் ஒரு சகாப்தம்

■ ஆதங்கன்

இதோ, அதோ என்று கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருந்த நூறாவது சதத்தைக் கடைசியில் சச்சின் அடித்தே விட்டார். கடந்த ஒரு வருடமாக டெஸ்ட் போட்டிகளிலும், ஒரு நாள் போட்டிகளிலும் தன்னுடைய நூறாவது சதத்தைப் பெறுவதற்குச் சச்சின் எடுத்த முயற்சி இப்போதுதான் பலிதமாகியிருக்கிறது. அதுவும் வங்கதேசத்திடம்.

கிரிக்கெட்டில் சச்சினின் பெயர் மறக்கப்படமுடியாத ஒன்று. கிரிக்கெட்டின் பிதாமகன் என்று வர்ணிக்கப்படும் டொன் பிரட்மனைவிடவும் சச்சின் உயர் ஆட்டத்திறன் கொண்டவராக மிளிர்கிறார். தலைக்கனம் இல்லாமை, எல்லோருடனும் இனிமையாகப் பழகும் தன்மை, எத்தனையாவது இலக்க வீரராக களமிறங்கினாலும் தன்னுடைய பணியைச் செவ்வனே செய்யும் ஆற்றல், பந்துகளைக் கணித்து அடிப்பதில் உள்ள நிபுணத்துவம், மெல்லிய சிரிப்பு இவைதான் சச்சினை கிரிக்கெட் ரசிகர்களின் இதய சிம்மாசனத்தில் அசைக்க முடியாத அரசனாக முடி சூடவைத்தன. இந்திய அணியைப் பிடிக்காதவர்களுக்குக்கூட சச்சினைப் பிடித்திருந்தது.

ஒரு காலத்தில் சச்சினும் மற்றைய வீரர்களைப் போல பதவிக்கு ஆசைப்பட்டார். தலைமைப் பொறுப்பும் அவரைக் கேளாமலே வந்து சேர்ந்தது. சச்சினிடம் உள்ள மிகப் பெரிய பலவீனம் அப்போதுதான் வெளிப்பட்டது. சச்சின் வெளியில் முகத்தை நிதானமானவர் போல காட்டிக் கொண்டாலும் உள்ளூர மிகவும் பதற்றம் அடையக்கூடிய ஒரு வீரர். தலைமைப் பொறுப்பு வந்தவுடன் பதற்றத்தில் அவரது துடுப்பாட்டத்திறன் கீழ்நிலை நோக்கிப் போனது. விமர்சன அம்புகள் நாலாபுறத்தில் இருந்தும் புறப்பட, சச்சினிடமிருந்து தலைமைப் பதவி பறிக்கப்பட்டது. அதன் பின்னர் தன்னுடைய இயல்பான ஆட்டத்தை சச்சினால் வெளிப்படுத்த முடிந்தது. அணித் தலைமைப் பொறுப்பேற்றால் தன்னால் சரிவர துடுப்பெடுத்தாட முடியாது என்பதை ஒன்றுக்கு இரண்டு தரம் சூடுபட்டுக்கொண்ட பின்னர் உணர்ந்து கொண்ட சச்சின், அதன் பின்னர் தலைமைப் பதவி என்றாலே தூர ஓடத்தொடங்கினார். ஆனால் அவருக்கு அணியின் தலைமைப் பதவி மீது வெறுப்பிருந்தாலும், ரசிகர்கள் அவரையே மானசீகத் தலைவராகக் கொண்டாடினார்கள்.




சச்சினின் துடுப்பாட்டத் திறனுக்கு முன்னால் பந்து வீச்சாளர்கள் பயம் கொள்வது வழமையானது. ஏனெனில் ஒவ்வொரு பந்துக்கும் ஏற்ற முறையில் பிரத்தியேகமான 'ஷொட்' களை சச்சின் வைத்திருக்கிறார். அதிலிருந்து பந்துகளை எல்லைக் கோட்டுக்குப் போக விடாமல் தடுப்பது கடினம். சில வீரர்களைப் போல உடலை வருத்தி சச்சின் அடித்தாடுவது கிடையாது. பந்தைக் கணித்து விட்டு தன்னுடைய துடுப்பை மட்டும் அதற்கேற்ற விதத்தில் பயன்படுத்தி பந்தை சிக்ஸருக்கு பறக்க வைக்கும் வித்தை சச்சினுக்கு மட்டுமே தெரியும். உருவத்தில் சற்றுக் குள்ளமானவராக இருந்தாலும் திறமையால் எல்லோரையும் விட உயரமானவராக இருந்தார். குணத்திலும் அவர் உயரமானவர்தான்.

பொதுவாகவே இந்திய அணியில் உள்ள பெரும்பான்மையான வீரர்கள் ஆக்ரோஷத்துடன் விளையாடுபவர்கள். ஆக்ரோஷத்தின் எல்லை மீறல் அவர்களைக் கோபக்காரர்களாகவும் மாற்றுவதுண்டு. கங்குலி, சிறிசாந்த், ஹர்பஜன் சிங், யுவராஜ் சிங், விராட் ஹோக்லி என்று அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனாலும் திறமையான வீரர்கள் கோபப்படுவதில்லை என்பதற்கு நல்ல உதாரணம் சச்சின். ராவிட், லக்ஷ்மன், டோனி, சேவாக் போன்ற சாதிக்கக் கூடிய வீரர்கள் மைதானத்தில் கோபப்படுவதைக் காண்பதும் அரிதான விடயம். எப்போதும் கலகலப்பாகவும், தலைக்கனம் இல்லாமலும் பழகக் கூடியவர் சச்சின். ஆனாலும் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற முடியவில்லையே என்ற ஆதங்கம் சச்சினுக்கு இன்னமும் இருப்பதாக கூறப்படுகிறது. சில நேர்காணல்களில் இந்த மனக்குறையைச் சச்சின் வெளிப்படையாகச் சொல்லியும் இருக்கிறார்.

சச்சின் முக்கியமான தருணங்களில் பதற்றம் அடைவது அண்மைக் காலமாக அதிகரித்து வந்துள்ளது. ஒவ்வொரு போட்டியையும் அனுபவித்து ஆடக்கூடியவர் சச்சின். ஆனால் அவர் சதத்தை நெருங்கும் போது தன்னுடைய ஆட்டத்திறனை விட்டுவிட்டு சாதாரண வீரர்போல தவறுகளை இழைத்து சதத்தை தவறவிட்டு விடுவார். இதனால் சச்சின் இழந்த சதங்கள் ஏராளம்.

சச்சினின் பதற்றத்துக்கு இன்னொரு காரணம் இந்திய ஊடகங்கள். சச்சின் சாதனைகளை நிகழ்த்தக் காத்திருக்கும் தருணங்களில் அதைப் பற்றி முன்னரேயே பெரும் எதிர்பார்ப்பைக் கிளப்பும் வகையில் செய்திகளையும் கட்டுரைகளையும் இந்திய ஊடகங்கள் எழுதித் தள்ளும். இதனால் வழமையை விடவும் அதிக பதற்றத்துடனேயே சச்சின் மைதானத்துக்குள் செல்ல வேண்டி இருந்தது. அந்தப் பதற்றம் கடைசியில் சாதனைகளை சற்றுத் தள்ளிப் போகவைத்தது. ஆனாலும் சச்சின் ஒரு நவீன விக்கிரமாதித்தன் தான். எத்தனை முறை சாதனைகள் தள்ளிப் போனாலும், அதைப் பற்றி மிகக் கடுமையான விமர்சனங்கள் எழுந்தாலும் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாது மீண்டும் மீண்டும் முயற்சித்து அவற்றை அடைந்த பின்னர் தான் ஓய்ந்திருக்கிறார்.

தற்போது அடித்துள்ள நூறாவது சதமும் அப்படி எடுத்தது தான். ஒவ்வொரு தொடர் தொடங்கும் போதும் அந்தத் தொடரை இந்தியா கைப்பற்றுமா என்பதை விடவும் சச்சின் நூறாவது சதம் அடிப்பாரா என்றுதான் ஊடகங்கள் எதிர்பார்ப்பைத் தூண்டும். ஆனால் நிறையப் போட்டிகளில் சச்சின் சறுக்கலையே சந்திக்க முடிந்தது. இதனால் ''வயது போய் விட்டது. இனியாவது இளம் வீரர்களுக்கு வழிவிட்டு வீட்டுக்கு சச்சின் போக வேண்டும்'' என்ற விமர்சனங்கள் பல தரப்புகளிடம் இருந்தும் எழுந்தன. ஆனாலும் சச்சின் போகவில்லை. நூறாவது சதத்தை அடித்து விட்டுத்தான் நிமிர்ந்திருக்கிறார். கொஞ்சநாளைக்கு விமர்சனங்கள் காணாமல் போய் விடும். எனினும் சச்சின் மீண்டும் ஆட்டத்திறனை இழக்கும் போது இதே கூக்குரல் மீண்டும் எழலாம். சச்சின் சாதனைகளை இனி உடைப்பதற்கு எவரும் இல்லை. எனவே சச்சின் மற்றவர்கள் அவரை நோக்கி விமர்சனங்களை முன்வைப்பதற்கு முன்னர் சதத்தில் சதமடித்த சாதனையோடு தன்னுடைய ஓய்வு பற்றிய முடிவை எடுப்பதும் முக்கியமானது. அந்த முடிவு அவரை எக்காலத்திலும் கிரிக்கெட் உலகில் பிரகாசிக்கும் முதன்மையான நட்சத்திரமாக மாற்றிவிடும்.

# இருளில் எழும் கொடுங்கனவு

*[சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி]*

எனவே ஒரேவிதமான தன்மையோடு நிகழ்த்தப்பட்ட இந்தக் கொலைகள் அனைத்திலும் ஒரே அணியே சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்ற ஊகத்தையும் சனல்–4 ஒளியூட்டி வெளியே கொண்டு வந்திருக்கிறது.

இரண்டாவது கொலைக்களத்தில் இலங்கை அரசின் பொய்பேசும் நாக்கும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. போர் உச்சத்தை தொட்டிருந்தவேளை அங்கு வெறும்5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையிலான பொதுமக்களே இருக்கின்றனர் என்று இலங்கை ஜனாதிபதி தொலைக்காட்சி ஒன்றுக்கு சொல்லியிருந்தார். ஆனால் அங்கு அப்போது 1லட்சத்து 25 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தங்கியிருந்தனர். பின்னர் அதேயளவு தொகையானோர் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்து சேர்ந்தனர். ஆனால் அரசு போரின்போது வெறும் 5 ஆயிரம் பேருக்கு மட்டுமே உணவு, மருந்து என்பவற்றை அனுப்பியது என்பதையும், மக்களை பட்டினி போட்டும் அரசு கொலை செய்ய முயன்றது என்பதையும் ஜனாதிபதியின் நேர்காணலை வைத்தே சனல்–4 வெளிப்படுத்தியிருக்கிறது.

இதைவிட இறுதிப்போரின்போது மக்களுக்காக தொண்டாற்றிய மருத்துவர்கள் மூவரினதும் குரல்வளையில் கண்ணுக்குப் புலப்படாத துப்பாக்கியை வைத்து சர்வதேசத்துக்கு அவர்களை பொய் சொல்ல வைத்து தன் மீதான கறைகளை இலங்கை அரசு களைய முயன்ற விளையாட்டையும் இரண்டாவது கொலைக்களம் அம்பலப்படுத்தியிருக்கின்றது. போர் நிகழ்ந்துகொண்டிருந்த போதும் காயங்களால் கதறும் மனிதர்களுக்கு இடையில் அவர்களுக்குச் சிகிச்சையளித்தபடியே மருத்துவர் ஒருவர் போரின் உக்கிரத்தையும் யாரால் காயம் ஏற்பட்டது என்பதையும் ஒப்புவிக்கிறார். அதே மருத்துவர் போர் முடிந்த பின்னர் ஒரு கை முறிக்கப்பட்ட நிலையிலும் கண்களில் உயிர் பயத்தோடு, செத்துப்போன வார்த்தைகளால் அரச படைகளால் பொதுமக்கள் கொல்லப் படவில்லை [illegible] கிறார். அவரின் [illegible] யும் ஒப்பிட்டு எது உண்மை என்பதை தேட வைக்கிறது இரண்டாவது கொலைக்களம்.

இறுதிப்போர் நடந்தபோது அங்கு பணியாற்றிய ஐ.நா பணியாளர்களின் வாக்கு மூலங்களும், இலங்கை அரசால் கொலை வெறியோடு துரத்தப்பட்டு வெளிநாடு ஒன்றில் தஞ்சம் அடைந்துள்ள ஊடகவியலாளரான பாஷனவின் நேர்காணல், ஐ.நா. வின் முன்னாள் அதிகாரி ஜோன்ஹோம்ஸ், மனித உரிமை வழக்கறிஞர் வில்லியம் செபாஸ், பிரிட்டனின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மில்லிபான்ட் போன்றோரின் கருத்துக்களும் இலங்கை அரசின் கைகளில் உள்ள குருதிக் கறைகளை அம்பலப்படுத்துகின்றன. அத்துடன் 'பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களை அரசு திட்டமிட்டமுறையில் படுகொலை செய்துள்ளது. இதன்போது இறந்தவர்களின் எண்ணிக்கையையும் இலங்கை அரசு மறைத்துள்ளது' என்ற ஐ.நா. வின் பாதுகாக்கப்படும் இரகசிய அறிக்கையொன்றின் பக்கங்களும் [illegible] கொலைக்களத்தில் திறக்கப் பட்டு இலங்கை அரசின் கோர முகத்தை மூடியிருக்கும் திரை திறக்கப்பட்டிருக்கிறது.

சனல்–4 ஐச் சேர்ந்த ஜோன் ஸ்நோ தன்னுடைய தீவிரமான தேடுதலின் விளைவாக இரண்டாவது கொலைக்களத்தைக் கண்டு பிடித்து வெளிப்படுத்தியிருக்கிறார்.

''ஒரு ஊடகவியலாளராக நடந்த கொலைகளை, உண்மைகளை வெளிக் கொணர வேண்டியது எனது கடமை. அதேபோன்று இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்கவேண்டியது சர்வதேசத்தினதும், ஐ.நா. வினதும் கடமை. என்னுடைய கடமையை நான் சரிவரச்செய்துவிட்டேன் என நம்புகிறேன். ஆனால் சர்வதேசமும், ஐ.நா. வும் தங்களுடைய கடமையை நிறைவேற்றுமா?'' என்று கேட்கிறார் ஜோன் ஸ்நோ. அதே கேள்வியைத்தான் புதை குழிகளுக்கு மேல் இருந்துகொண்டு தமிழ் மக்களும் கேட்கிறார்கள். ''இலங்கையின் கொலைக் களம்: தண்டிக்கப்படாத குற்றங்கள்'' படத்தைப் பார்த்தாவது பாடம் படித்து தன்னுடைய கடமையைச் சர்வதேசமும் ஐ.நா. வும் செய்வதற்குத் தயாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்

# ஈரானுக்கு கடைசி சந்தர்ப்பம்

## ரஷ்யா மூலம் அமெரிக்கா அறிவிப்பு

உலகப் பார்வை ஒரு கண்ணோட்டம்

ஈரான் தனது அணு உலைகள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதற்கான கடைசி சந்தர்ப்பத்தை அமெரிக்கா வழங்கியுள்ளது.

அணுஉலைகளின் செயற்பாடுகளை உடன் நிறுத்துமாறும், சர்வதேசஅணு சக்தி முகவர் அமைப்பின் பிரதிநிதிகளை உலைகள் உள்ள பகுதிகளுக்குச் சென்று ஆய்வு நடத்த அனுமதிக்குமாறும் அமெரிக்காவும் ஐ.நாவும் தொடர்ந்து வற்புறுத்தி வரும் நிலையில், ஈரான் கொஞ்சமும் அசைந்து கொடுக்காமல் அணுஉலைகளின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளையே வெளிப்படுத்தி இஸ்ரேலையும், அமெரிக்காவையும் ஆத்திரம் கொள்ளச் செய்து வருகிறது.

இந்தநிலையில் மேற்கு நாடுகளுடன்தனது அணு ஆராய்ச்சி வேலைத் திட்டங்கள் தொடர்பாக, பேச்சுகளுக்கு வருவதாக ஈரான் சைகைகாட்டியுள்ளது பெரும்பாலும் ஏப்ரல் மாதம் இந்தப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

மேற்கு நாடுகளையும், ஐ.நாவையும் தொடர்ந்து ஈரான் இவ்வாறு இனி மேலும் ஏமாற்ற முடியாது. அதன் அணுஉலைகள் மீது இராணுவத் தாக்குதல் எதுவும் நடத்தப்படுவதைத் தவிர்ப்பதனால், இதுவே கடைசிச் சந்தர்ப்பமாக இருக்கும் என்று அமெரிக்கா ரஷ்யாவின் மூலமாக எச்சரிக்கை விடுத்திருப்பது இப்பொழுது தெரியவந்துள்ளது.

ரஷ்யாவிலிருந்துவெளிவரும் கொம்மர்சன்ட் என்ற தினசரி பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்ரன், இந்த விடயத்தை ஈரானுக்கு தெளிவாகச் சொல்லிவைக்கும்படி ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ்ரோவிடம் கூறியிருக்கிறார். அணு ஆய்வுத் திட்டம் தொடர்பாக மேற்கு வல்லரசுகளுடன் நடத்தப்படும் பேச்சுக்களில் இதுவே கடைசிச் சந்தர்ப்பமாக இருக்கும் என்பதை ஈரானுக்கு தெளிவுபடுத் தும்படி கிளின்ரன் கூறியிருக்கிறார். இரு அமைச்சர்களுக்குமிடையிலான உரையாடல் கடந்த திங்களன்று நியூயோர்க்கில் ஐ.நா.பாதுகாப்பு சபை மாநாட்டையடுத்து இடம் பெற்றது.

இதுவே கடைசிச் சந்தர்ப்பம் என்று அமெரிக்கா கூறுவதானது ஈரான் தொடர்ந்தும் தனது இழுபறிப் போக்கைக் கடைப்பிடித்து வந்தால் இராணுவ நடவடிக்கை தவிர்க்க முடியாததாகி விடலாம் என்ற அர்த்தத்தையே உடையதாகும். அவ்வாறான இராணுவ நடவடிக்கை எவ்வாறு அமையும் என்பது பற்றி, அவ்விருவரும் விவாதித்ததாகவும் தெரியவில்லை; ரஷ்யபத்திரிகையும் தகவல் எதுவும் வெளியிடவில்லை.

ஏற்கனவே, இஸ்ரேல் ஈரானின் அணு உலைகள் மீது குண்டு வீசி அழிக்கப் போவதாக கூறிக்கொண்டிருக்கிறது. ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் வேலை செய்யும் வரை பொறுத்திருக்கலாம் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாவுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார். இந்த நிலையில் இனிவரப் போகும் பேச்சுகளின் போது, ஈரானிடமிருந்து காத்திரமான பிரதிபலிப்பினை அமெரிக்கா எதிர் பார்ப்பதாகவே அது இப்போது விடுத்துள்ள எச்சரிக்கையிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய விடயம்.

இதற்கிடையில் மேற்குலக நாடுகளுடன் குறிப்பாக பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளுடன் தனது அணுஆராய்ச்சித் திட்டம் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக ஈரான் தகவல் அனுப்பியிருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்தி யொன்றில் தெரிய வந்தது.

### சீனாவில் அரசியல் சீர்திருத்தம்

சீனாவில் விரைவாக அரசியல் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படுவதை சீனப் பிரதமர் வென்றியாபோ வற்புறுத்தியுள்ளார். சீன நாடாளுமன்றத்தின் வருடாந்த அமர்வுகளின் இறுதி நிகழ்வையும், தமது பத்து வருடகால பிரதமர் பதவியின் இறுதி நிகழ் வையும் குறிக்கும் வகையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இந்தக் கருத்தை வென்றியாபோ வெளியிட்டார்.

அரசியல் சீர்திருத்தம் என்று அவர் எதனைக் குறிப்பிடுகிறார் என்பது தெளிவாகப் புரியவில்லை. சீனத்தலைவர்களிலேயே மிகவும் முற்போக்குவாதியாகக் கருதப்படும் இவர் கடந்த வருடமும் இவ்வாறான ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், கம்யூனிஸ்ட் கட்சியின் தலை மையில் படிப்படியான அரசியல் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருந்தார்.

அந்தக் கருத்தை இந்த முறை மேலும் சற்றுவிரித்துக் கூறுகையில், ''எமது நாட்டினதும் தலை மைத்துவத்தினதும் அமைப்பு முறையில் சீர்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்'' என்றார்.

பொருளாதாரக் கட்டமைப்பு, சீர்திருத்தம், அரசியல் கட்டமைப்பு சீர்திருத்தம் ஆகிய இரண்டுக்கும் நாம் மேற்கொள்ளும் அழுத்தங்களை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக எமது கட்சியினதும் நாட்டினதும் தலைமைத்துவ அமைப்பு முறையில் சீர்திருத்தம் வேண்டும் என்றார் வென்.

அரசியல் கட்டமைப்பில் வெற்றிகரமான சீர்திருத்தம் கொண்டு வரப்படாவிட்டால், பொருளாதாரத்துறையில் கட்டமைப்பு சீர்திருத்தங் களைக் கொண்டுவர முடியாது, இதுவரை இந்தத் துறைகளில் அடைந்துள்ள வெற்றிகளும் தொலைந்து விடும் என்றார். மேலும் கூறுகையில் சீன சமூகத்தில் தோன்றியுள்ள புதிய பிரச்சினை அடிப்படையிலேயே தீர்த்துக் கொள்ளமுடியாமல் போகும். மீண்டும் அந்த சரித்திரபூர்வ துன்பியலான கலாசாரப் புரட்சி தோன்றுவதற்கு இடமளிப்பதாகி விடும்'' என்றார்.

சீன அரசியல் கட்டமைப்பிலும் கட்சி அமைப்பு முறையிலும், மாற்றங்களை ஏற்படுத்த விரும்பு கிறாரா அல்லது ஒரு கட்சி ஆட்சி முறையில் மாற்றம் கொண்டு வர விரும்புகிறாரா என்பது விளங்கவில்லை.

சீனாவில் 1966 - 1976 வரையிலான காலப்பகுதியில் அப்போதைய புரட்சித் தலைவர் மாஓஸெடொங் தலைமையில் கலாசாரப் புரட்சி நடைபெற்றது. அவரது திட்டங்களுக்கு ஏனைய தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஒதுங்கிக் கொண்டனர். கலாசாரப் புரட்சியின் பேரால் கணக்கிடப்பட முடியாத அளவு பேர் மரணமானார்கள். மாணவர்கள், ஆசிரியர்கள் மீது பாய்ந்தார்கள். அதிகாரிகளை வெடுக்கப்பட்டார்கள்-நாட்டின் பொருளாதாரம் அதைவு கண்டு போனது. அந்த நிலை மீண்டும் ஏற்படக்கூடாது என்கிறார் வென். அதன் அர்த்தம் இனிமேல் தான் தெரியவரும்.

### சிப்பாயின் வெறித்தனம் ஒபாமா கவலை

ஆப்கனிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் வெறிபிடித்தவர் போல் கந்தகாரில் ஒரு கிராமத்தில் வீடுவீடாகச் சென்று பெரும்பாலும் பெண்கள் - சிறுவர்களான 16 பேரை சுட்டுக் கொன்ற சம்பவம் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவை பெரிதும் கவலைக்குள்ளாக்கியிருக்கிறது.

குறித்த சம்பவத்தை மிகப்பாரதூரமாக தாம் எடுத்துக் கொள்வதாகவும், அமெரிக்கர்கள் படு கொலை செய்யப்பட்டதுபோன்று பார்ப்பதாகவும் கூறியுள்ளார். அமெரிக்க இராணுவத்தின் பிரதம கட்டளைத் தளபதியான அவர், ஆப்கன் அதிபர் ஹமிட்கார்ஸாரிக்கு அனுப்பிய செய்தியில் அமெரிக்கா இந்தச் சம்பவத்தை தமது சொந்தப் பிரஜைகள் மீது நடத்தப்பட்ட கொடுமையாக மிகப்பாரதூரமாக எடுத்துக் கொள்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

அப்பாவிகளான மக்கள் கொலை செய்யப்பட்டிருப்பது கண்டு நாம் மனம் உடைந்து போயுள்ளோம், கொலைகளைச் செய்தவர் எமது நாட்டின் நட்டத்தின் முழு அளவு தாக்கத்தையும் அனுபவிப்பார் என்று ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஆப்கன் கந்தகாரில் அமெரிக்க இராணுவச் சிப்பாய் ஒருவர் இவ்வாறு பொதுமக்களைச் சுட்டுக் கொன்றதற்கு பழிவாங்காமல் விடப்போவதில்லை என்று தலிபான்கள் அறிவித்த பல' மணி நேரத்தின் பின்னர் ஒபாமாவின் அறிவித்தல் வந்தது..

### இஸ்ரேல் - காஸா மோதல் அமைதி திரும்புகிறது

இஸ்ரேலுக்கும் காஸா பகுதி தீவிரவாதிகளுக்குமிடையில் திடீரென உருவாகிய மோதல் நான்கு நாள்கள் தொடர்ந்ததன் காரணமாக காஸாவாசிகள் 25 பேர் கொல்லப்பட்டார்கள். மோதல் தொடராமல் இருக்க எகிப்து மேற்கொண்ட சமரச முயற்சி வெற்றியளித்துள்ளது.

எகிப்தின் முன்முயற்சியில் கடந்த திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வந்த போர் நிறுத்தம் பெரும் பாலும் இருதரப்பாலும் கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. புதன் கிழமை இரவு இஸ்ரேலிய விமானப்படையும் காஸா புரட்சிவாதிகளும் துப்பாக்கிச் சமரைப் பகிர்ந்து கொண்டாலும் பெரும் பாலும் அமைதி ஒப்பந்தம் கடைப் பிடிக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைதி ஒப்பந்தம் ஒன்று அமுலில் இருப்பதாக இரு தரப்பினரும் ஒப்புக் கொண்ட போதிலும் எதிர்தரப்பினர் மீறி நடப்பார்களானால் ஒப்பந்தம் முறிந்துவிடும் என்று எச்சரித்துள்ளனர்.

“இஸ்ரேல் மீது எவராவது பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டால், அவர்களுக்குத் தெரிய வேண்டும் அவர்களை நாங்கள் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறோம் என்று, இஸ்ரேலிய அமைச்சர் ஒருவர் இப்படிக் கூறினார்.

போர் ஓய்வு ஏற் பட்டதையடுத்து இஸ்ரேல் பக்கமாக காஸா பகுதியிலிருந்து ரொக்கட் வீசப்படு வது படிப் படியாக குறைந்துள்ளது. என்று கூறப் பட்டது.

சுந்த வரம் தீவிரவாதக் குழுவொன்றின் தலைவர் இஸ்ரேலியரால் கொல்லப்பட்டதையடுத்து நான்கு நாள் மோதல்கள் தொடர்ந்தன. தீவிரவாதிகள் இஸ்ரேலின் தென்பகுதியில் ரொக்கட்டுகளாலும், மோட்டார் களாலும், தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தினார்கள். ஐந்து பேர் காயமுற்றனர். இஸ்ரேலியர் விமானத் தாக்குதல்களை நடத்தினார்கள். தீவிரவாதிகளும் ஆயுதக் கிடங்குகளும் இலக்கு வைக்கப்பட்டதாக அறிவித்தார்கள். ★

## துணிச்சலான பத்திரிகையாளருக்கு அமைதியான வழியனுப்பு

சிரியாவில் மக்கள் எழுச்சியின் போது அரச படைகளுக்கும் எதிர் தரப்பினருக்குமிடையில் நடைபெற்ற மோதல்களின் நடுவில் நின்று செய்தி சேகரிப்பில் துணிச்சலுடன் ஈடுபட்டிருந்த வேளையில் ரொக்கட் தாக்குதலில் உயிர் நீத்த சர்வதேச போர்க்கள பத்திரிகையாளரான மேரி கொல்வின் அம்மையாரின் இறுதிச் சடங்குகளில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை ராணுவத்துக்குமிடையில் நடைபெற்ற கடும் மோதல்களின் போது, துணிச்சலுடன் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த வேளையில், இவர் தமது கண்களில் ஒன்றை இழந் திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஜலன்ட் பகுதியிலுள்ள ஒய்ஸ் ரர்பே என்ற இடத்தில் கொல்வின் அம்மையாரின் புகழ் உடம்பு அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் புனித டொமினிக் கத்தோ லிக்க தேவாலயத்தில் மரணச் சடங்குகள் இடம் பெற்றன. உலகம் முழுவதும் சென்று போர்க் கள பத்திரிகையாளராக தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கு முன் இந்தப் பிரதேசத்திலேயே வளர்ந்தார். இறுதியாக பிரித்தானியாவில் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் போர்க்கள பத்திரிகையாளராக பணிபுரிந்தார். 1985 ஆம் ஆண்டு அப்பத்திரிகையில் இணைந் தார். இறுதி அஞ்சலியில் கொல்வினின் தாயார் றோஸ்மேரி மற்றும் குடுபத்தினர் கலந்து கொண்டனர். சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் உரிமையாளரும் ஊடகத்தொழிலதிபருமான ரூபேர்ட்முர்டொக் மற்றும் அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ஜோன் விதரோங் ஆகியவர்களும் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். கொல்வின் தனது வாழ்வில் நம்பிக்கை கொண்டு தனது பணியில் உத்வேகத்துடனான ஆர்வத்துடன் செயற்பட்டார் என்று அவரைப் புகழ்ந்துரைத்தார்கள். அஞ்சலி உரை நிகழ்த்திய தேவாலய குருவானவர் “குரலிழந்து போனவர்களின் குரலாக விளங்கிய மேரியே உனது துணிச்சலுக்காக நீ ஆசிர்வதிக்கப்பட்டவராவீர்'' என்று வாழ்த்தினார். ஆராதனையின் பின்னர் றோஜா மலர்களினால் அலங்கரிக்கப் பட்டிருந்த பேழை தேவாலயத்துக்கு வெளியில் கொண்டு வரப்பட்டது

சிரியாவின் ஹொம் நகரில் மரணமான மேரிகொல்வினின் உடலை அங்கிருந்து வெளியில் கொண்டு வருவதற்கு சந்திக்க நேர்ந்த இடர்களை, பத்திரிகை ஆசிரியர் விதரோ விளக்கிக்கூறினார். ''ஒரு வாரகாலம் பிடித்தது. பெருமளவு ராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது'' என்று கூறிய அவர் இதற்கு பெரும் பங்களித்த பத்திரிகையாளர் ஒருவரைப் பாராட்டினார். அவரது பங்களிப்பு ஏனைய பத்திரிகையாளர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும் என்றார். இறக்கும் போது 56 வயதை எட்டியிருந்த கொல்வின் போர்க்களங்களில் ஆபத்தான சூழ்நிலைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். செசன்யாவிலிருந்து அரசு எழுச்சி வரையான மோதல்களில் அவர் பணியாற்றியுள்ளார். இறுதியாக கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி சிரிய படைகள் ஹோம் நகரில் எதிர்ப்பாளர்கள் மீது நடத்திய ரொக்கட் குண்டு வீச்சிலிருந்து அவரால் தப்ப முடியவில்லை. அவர் தங்கியிருந்த வீட்டின் மீது குண்டு வீழ்ந்ததால் அவரும் இன் னொரு பிரெஞ்சு படப் பிடிப் பாளரான றெம்லுச்லிக் என்பவரும் கொல்லப்பட்டனர். வேறு ஒரு பிரிட்டிஷ் படப்பிடிப்பாளரும் பிரெஞ்சு செய்தியாளரும் காயமடைந்தனர்.

சிரிய மக்கள் எங்கிருந்தாலும் அவர்களின் உள்ளங்களில் கொல்வின் என்றும் வாழ்வார் என்று அஞ்சலிப் புத்தகத்தில் ஒருவர் எழுதியிருந்தார். சிரிய மக்களினதும் உலகில் போரினால் பாதிக்கப்பட்ட எல்லா மக்களினதும், துன்பக் குரலை உலகறியச் செய்தவர் கொல்வின் என்று ஒருவர் எழுதியிருந்தார். சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் சக பத்திரிகையாளரான கிறிஸ்டினா லேம்ப் என்பவர்' எழுதியிருந்த குறிப்பில் “மேரி நான் அறிந்த நபர்களில் நீர் தான் மிகத் துணிச்சல் மிக்கவர், ஏனைய பத்திரிகையாளர்களுக்கு குறிப்பாக என் போன்ற பெண் செய்தியாளர்களுக்கு எவ்வளவு தூரம் ஊக்கமளிப்பவராய் இருந்தீர் என்பதை நீர் அறியமாட்டீர்'' என்று குறிப்பிட் டிருந்தார். நாங்கள் உம்மை இழந்து விட் டோம்- உமது தாயா ரைச் சந்தித்தேன். அவரிடமிருந்துதான்இவைகளைப்(துணிச்சல்) பெற்றிருப்பீர் என்று அறிகிறோம் என்று அவர்மேலும் குறிப்பிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு என்பது என்ன?

அன்புதான் இந்த உலகத்தை செலுத்தும் சக்தி. பலவிதமான மனித உறவுகளிடமும் நாம் எதிர்பார்ப்பதும், பெற விரும்புவதும் அன்புதான். துன்பமும் பயமும் நிறைந்ததாக நாம் எண்ணும் வாழ்வில் அன்புதான் ஒரே ஆறுதல்.

சிலரிடம் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொண்டால் மனம் பாதுகாப்பாக உணர்வதற்கு காரணம் இதுதான். அன்பாக இருப்பதிலும் அன்பு செலுத்துவதிலும் ஈடுபாடு காட்டுவதன் மூலம் எப்போதும் சந்தோஷ உணர்வு ஏற்படுகிறது.

பல அர்த்தங்கள் பொதிந்த வார்த்தை இது. இதுதான் அன்பு என அவ்வளவு எளிதில் வரையறுத்துச் சொல்ல முடியாது. எந்த அளவுக்கு அன்பு ஆழமான வார்த்தையோ அதே அளவுக்கு மலினப்படுத்தப்பட்டும் உபயோகத்தில் இருக்கிறது.

அன்பைப் பற்றி பேசாதவர்களே இல்லை. அன்பு, காதல், பாசம் என்று பல்வேறு பெயர்களில் நாம் அழைத்தாலும் எல்லாமே அன்பு என்பதைத்தான் மையப்படுத்துகிறது.

சரி, அன்பு என்பது ஒரு கருத்தா ? அல்லது தத்துவம் என்று சொல்லலாமா? நான் சந்தோஷத்தை விரும்புகிறேன். கடவுள் அன்பாக இருக்கிறார். நான் உன்னை காதலிக்கிறேன். என்னுடைய தாயை நேசிக்கிறேன். இவையெல்லாம் என்ன...? அன்பை வெளிப்படுத்துகிற பல்வேறு வார்த்தைகள். அன்புதான் இவ்வார்த்தைகளின் மையம். அன்பு எங்கே கிடைக்கும்... எங்கு வாங்கலாம்... அன்பை செலுத்த முடியுமா...?

அன்பைப் பற்றிய கேள்விகள் நிறையவே உள்ளன. அன்பு என்ற உணர்வு உள் மனதிலிருந்து எழ வேண்டியது. சந்தோஷத்தை விரும்புவதும், கடவுள் அன்பாக இருப்பதும், காதலிப்பதும், தாயை நேசிப்பதும் உணர்வு பூர்வமாக செயல்படுத்தப்பட வேண்டும்.

கடவுள் அன்பாக இருக்கிறார் என்பதற்கு என்ன அர்த்தம்? கடவுள் எந்தத் துன்பத்தையுமே நமக்கு தரமாட்டார். நாம் மட்டும்தான் கடவுளின் அன்புக்கு பாத்திரமானவர் என்றில்லை.

கடவுள் நம் மீது அன்பாக இருக்கிறார் என்று நாம் நம்புவதன் மூலம் எல்லா செயல்களிலும் பய உணர்வு நீங்கி செயல்பட உத்வேகம் பிறக்கிறது.

உயிர்களிடத்தில் அன்பு செய் என்று சொல்லியிருக்கிறார்கள். கடவுளிடம் மட்டும்தான் என்றில்லை. எல்லோரும் நம் மீது அன்பாக இருக்கிறார்கள் என்ற நல்ல மன நிலையைக் கொண்டால் வாழ்க்கை இனிதாக அமையும்.

நான் கடவுள் மீது அன்பாக (பக்தியாக) இருக்கிறேன் என்று சிலர் கூறுவார்கள். இதைவிட போலியான விடயம் வேறு என்ன இருக்க முடியும்?

எப்போது நாம் கடவுளை வழிபடத் தொடங்குகிறோமோ, அதாவது, அன்பு செலுத்தத் தொடங்குகிறோமோ அப்போதே நாம் நம்மையே நாம் வழிபடத் தொடங்கி விட்டோம் என்றுதானே அர்த்தம்? நம் மீது நாமே அன்பு செலுத்திக் கொள்வதுதான் வழிபாடு. அதற்கு புனையப்பட்ட நம்பிக்கை வேண்டியிருக்கிறது.

எனவே, அதை நாம் கடவுளின் மீது செலுத்தும் அன்பு என்று கூற முடியாது. கடவுள் என்பது உணர்வு பூர்வமான ஒரு நம்பிக்கை. எந்த விடயத்தின் மீதும் கவனத்தைக் குவித்து வழிபடுவதன் மூலம் இது சாத்தியம்தான்.

தன்னம்பிக்கை என்பதுதான் கடவுள் என்பதை உணர்ந்தவர்களுக்கு இது புரியும். சுவாமி விவேகானந்தர் மிக எளிமையாக இது பற்றிக் கூறுகிறார் தன்னம்பிக்கை இல்லாதவன் எவனோ அவனே நாத்திகன் என்று. நம்பிக்கைதான் கடவுள் என்பதை உணராதவர்கள் மட்டுமே நான் கடவுள் மீது அன்பாக இருக்கிறேன் என்றெல்லாம் கூறுகின்றனர்.

நாம் எல்லோருமே தினசரி பிரச்சினைகளிலிருந்து தப்பிப்பதையே வாழ்க்கையாக கொண்டிருக்கிறோம். அதற்கென பல நாம் பல வழிகளையும் கண்டுபிடித்து வைத்திருக்கிறோம்.

பிரச்சனைகளிலிருந்து தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்ள உதவும் உத்திகள்தான் தொலைக்காட்சி, கடவுள் வழிபாடு, திரைப்படம், எழுதுதல் இவையெல்லாம் இரண்டரை மணி நேரம் இருட்டில், யாரோ சிலரின் வாழ்வின் சந்தோஷங்களைப் பார்த்து சந்தோஷப்படவும், சோகங்களில் சோகமாகவும் நம் மனது இயல்பாக பழகிவிடுகிறது. அதேபோல்தான் கோயில்களிலும், எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக் கொள்வார் என்று வழிபாட்டின் போது வேண்டிக் கொள்வதன் மூலம் நம்முடைய பிரச்சினை நம்மிடமிருந்து இறக்கி விடுகிறோம்.

பிரச்சனைகளைப் பேசிப் பகிர்ந்து, பிறரிடம் அன்பாக இருப்பவர்களுக்கு இந்த தப்பித்தல் சாதனங்களின் தேவையிருக்காது. நம் தேவைகளைக் கூறவும் பிரச்சினைகளை பேசவும் கிடைத்த அதிலும் பதில் எதுவும் பேசி விடாத ஒரே சாதனம் கடவுள் என்பதால்தான் கோயில்களில் கூட்டம் அலைமோதுகிறது.

மனிதனின் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வை அளிக்கக்கூடியது அன்பு மட்டும்தான். இதில் என்ன பிரச்சினையென்றால் அன்பாக இருப்பது எப்படி என்பதை நாம் உணராமலிருப்பதுதான்.

அன்பை நாம் எப்படி உணரப்போகிறோம் ? அன்பாக இருப்பதுதான் அன்பு என்பதை நாம் உணர வேண்டும். பலரிடமும் நாம் அன்பாக இருப்பதாகச் சொல்கிறோம், பேசுகிறோம். ஆனால் உண்மை என்ன?

மனம் நிறைந்த அன்பு மட்டுமே பலனைத் தரும். உள்ளன்போடு செய்யும் எந்தச் செயலும் மன மகிழ்வைத் தரும்.

காலையிலிருந்து மாலைவரை நாம் பல மனிதர்களைச் சந்திக்கிறோம், சிரிக்கிறோம், பேசுகிறோம். இவர்களில் எத்தனை பேரிடம் உண்மையான அன்போடு சிரித்துப் பேசி இருப்போம் ?

உதடுகள் சிரிப்பதை விடுங்கள். பொய்யாக சிரித்து போலியாக புகழ வேண்டிய கட்டாயம் பலருக்கும் வாழ்வின் பல நிலைகளிலும் ஏற்பட்டிருக்கலாம். நம்மில் எத்தனை பேர் சந்திக்கின்ற அனைவரிடமும் அன்பாக இருந்திருப்போம்.

அன்பு பற்றி புத்தர் ஒரு கதை சொல்லியிருக்கிறார். வயல் வரப்பு வழியாக ஒருவன் நடந்து கொண்டிருக்கும்போது புலியைப் பார்த்து விட்டான். அவன் ஓட புலி துரத்தியது. சிறிய குன்றின் உச்சிக்கு வந்து விளிம்பில் இருந்த காட்டு மரத்தின் வேர்களைப் படித்துக் கொண்டு தொங்கினான்.

புலி அவனை முகர்ந்து பார்த்துக் கொண்டிருந்தது. நடுங்கிக் கொண்டே கீழே பார்த்தான். இன்னொரு புலி பார்த்துக் கொண்டிருந்தது. மரத்தின் வேர்களில் அவன் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. இரண்டு எலிகள் வேர்களைக் கடிக்க ஆரம்பித்தன. அவனுக்கு கைக்கெட்டும் தூரத்தில் காட்டுச் செடியின் பழம் இருந்தது. ஒரு கையால் வேரைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கையால் பழத்தைப் பறித்துத் தின்றான். அப்போது அவன் மனதில் பழம் எவ்வளவு சுவையாக இருக்கிறது என்று தோன்றியது.

இக்கதையில் வருகிற கனியைச் சுவைக்கும் மனிதனின் மனநிலைதான் அன்பின் மூலம் நாம் அடைவது.

எவ்வளவு துன்பங்கள், பிரச்சனைகள் இருப்பினும் அனைத்தையும் மறந்து மகிழ்ந்திருக்கச் செய்கிற சக்தி அன்புக்கு மட்டும்தான் உண்டு. அன்புக்கு மட்டுமே வாழ்வை இனிமையாக நகர்த்திச் செல்லும் சக்தி உண்டு.

**பொன். வாசுதேவன்**

Miss CEYLINCO VIP 2012

இந்தக் கிரீடம் உங்களுக்கா...?




விண்ணப்பப் படிவங்கள் யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள எமது சகல செலிங்கோ VIP நிறுவனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி 31.03.2012**

**வயதெல்லை: 18-25**

*(31.03.2012 அன்று திருமணமாகாதவர்கள்)*

Ceylinco Insurance PLC

Ceylinco VIP On the Spot

CEYLINCO VIP ON THE SPOT

## காணி தேவை

சுண்டுக்குளி பகுதியில் 5முதல் 8லாச்சத்திற்கு உட்பட்டதான காணி தேவைப்படுகிறது. வீட்டுடன் கூடிய காணி விரும்பத்தக்கது.

தொடர்புக்கு 0777 660 535
அல்லது இணையம்
concept@sltnet.lk

## பாராட்டி வாழ்த்து

இரசாயனக் கல்லூரி பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதியைச் சேர்ந்த

***ஸிந்துஜா வைத்தீஸ்வரன்***


இரசாயனவியல் பட்டதாரியாக பட்டம் பெற்றார். இவர் பல்லாண்டு காலம் சிறப்புற வாழ வாழ்த்துகின்றேன்.



வாழ்த்துபவர்: நீல் மல்கம் UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










உண்மைகள் உலகின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்புமா?


அசோக் லேலண்ட். நிசான் கூட்டணியில் ரூ.2 லட்சத்துக்கு சிறிய கார்

....போரின்போது இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பான பிரேரணை இலங்கை அரசை சர்வதேச அளவில் அம்பலப்படுத் தியுள்ளதுடன், இடம்பெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது. இது நேரடியாகத் தமிழ் மக்களுக்கு உடனடியான பலன்களைப் பெற்றுத்தராவிட்டாலும், இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது தொடரும் இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளின் வீரியத்தை மட்டுப்படுத்த உதவும். தமிழ் மக்கள் கொடிய இன அழிப்புப் போரில் சிந்திய குருதிக்கும், கண்ணீருக்கும் ஒரு நியாயம் கிடைக்கும்....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேசிய விநியோகஸ்தர்கள்: சொப்ட்லொஜிக் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவெட்) லிமிடெட். இலக்கம் 14, டி பொன்சேகா பிளேஸ், கொழும்பு 5. நொகியா ஸ்டோர்ஸ்: 230/1, காலி வீதி, கொழும்பு 4. தொ.பே: 0777 866820, கண்டி சிட்டி சென்டர் 0812 205836, நொகியா புரொபெஷனல் சென்டர் - தொ.பே: 011 5575000, 2595444 தொடர்: 5021/5110 நொகியா கெயார் சென்டர்ஸ்: கொழும்பு 011 5344237, கண்டி 081 5628054, காலி 091 5629881-4, குருணாகல் 037 5624141, அனுராதபுரம் 0777 320945, இரத்தினபுரி 045 5447003, நொகியா பொயின்ட்ஸ்: கிரெஸ்கெட் 011 5555278, உலக வர்த்தக மையம் 011 5748597, மஜெஸ்டிக் சிட்டி 011 5738890, லிபர்ட்டி [illegible] 011 2577939, [illegible] அலெக்ஸாண்டர் பிளேஸ், அனைத்து சொப்ட்லொஜிக் விற்பனை நிலையங்களிலும் கீழ்க்காணும் பிரதான பிரதிநிதிகள் மற்றும் அவர்களின் சில்லறை விற்பனைப் [illegible] என்டர்பிரைஸஸ் (கிழக்கு) 065 2227071, ஹேமந்த என்டர்பிரைஸஸ் (சப்ரகமுவ) 0777 671931, ஹேவகே டிஸ்ரிபியூட்டர்ஸ் (பிரைவெட்) லிமிடெட் (வடமேல்) 071 8682845, ஹேவகே ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் (மத்திய மற்றும் ஊவா) 081 5620077, சொப்ட்லொஜிக் இன்டர்நெஷனல் (மேல் மற்றும் தெற்கு) 077 7580580, S.V.M. டெக்னோலோஜிஸ் (பிரைவெட்) லிமிடெட் (வடக்கு) 021 4925828 மற்றும் மொபைல் லிங்க்ஸ் (வடமத்திய) 077 3875874.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# குழந்தைகளை அன்பால் கண்டியுங்கள்

உங்கள் குழந்தைளிடம் கண்டிப்பை விட அதிகம் அன்பைக் காட்டுங்கள்.

அன்பை எந்த வற்புறுத்தலும் இல்லாமல் வெளிப்படுத்துங்கள். குழந்தையிடம் இருந்து வரும் அன்பை முழுதாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

அவர்கள் மீது நீங்கள் கொண்டுள்ள அன்பை அவ்வப்போது வார்த்தைகளால் வெளிப்படுத்துங்கள்.

அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும். அன்பு அனைத்தையும் நம்பும்.

அன்பு அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும்.

குழந்தைகளிடம் எதையும் அன்பால் எடுத்துக் கூறினாரல் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டமாட்டார்கள். அது போலவே அவர்கள் செய்யும் தவறுகளைக் கூட கண்டிக்காமல் அன்பாக எடுத்துக் கூறினார் அவர்கள் அதைப் புரிந்து கொண்நடு செயற்படத் தயங்கமாட்டார்கள். அன்புடன் வழிநடத்துங்கள். அன்பால் எச்சரியுங்கள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தின் தயாரிப்பான
## செவன் சீஸ் கொட் லீவர் ஒய்ல் கெப்சூல்ஸ்

SEVEN SEAS®

கெப்சூல் ஒன்றின் விலை ரூபா. 5.50

கார்கில்ஸ் புட்சிட்டி, கீல்ஸ் சுப்பர் போன்ற முன்னனி சூப்பர் மார்க்கட்டுகளிலும் ஆர்ப்பிகோ காட்சியரைகளிலும் மற்றும் முன்னணிமருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

niche cc

உங்கள் வியாபாரத்தை மேம்படுத்த உதயனில் விளம்பரம் செய்யுங்கள்
தொ.பே : 021 567 1111
தொ.நகல்: 021 222 9731



SERVICE 24 hours HOTLINE

077 MAHARAJ
077 6242725
மகாராஜ் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே


MAHARAJ PUMPS
Product of: TRADESMANN

பாவியுங்கள் 100 % சுத்தமான றோயல் குளுக்கோஸ்




Packed By: Royal Industries
Colombo - 13

# IELTS™



Now you can register, prepare and access your results online.

**The British Council provides you with support to help you improve your IELTS score**

- FREE 30 hour online preparation course
- FREE practice book
- FREE reference library membership
- FREE Top Tips seminar

Register for your exam online and stand a chance to take your IELTS for FREE!*

https://ielts.britishcouncil.org/srilanka

*This offer is only valid until 31 May 2012

Terms and conditions apply

BRITISH COUNCIL
T +94 (0) 117521521 E info.lk@britishcouncil.org
www.britishcouncil.org/srilanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THORN BRAND

Hot Dipped
கல்வனைஸ் முள்ளுக்கம்பி...



நீண்டகாலம் தாக்குப்பிடிக்க கூடியது



Rs. 1,390/= Per 10kg Bag
THORN BRAND கம்பி ஆணிகள்

உத்தரவாதம் 25 Kgs




Rs.4,600/-

என். வைத்தியலிங்கம் அன்ட் கம்பனி (பிறைவட்) லிமிட்டட்
கிளை: 23, கந்தசாமி கோயில் வீதி, வவுனியா.
தொலைபேசி: 0244925809, பக்ஸ்: 0242226548

70 கே. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13
தொலைபேசி: 2433143-5 2328842, 4616021-2
கிளை: 448, பழைய சோனக தெரு, கொழும்பு 12
தொலைபேசி: 2327488, 2459963

90 வருடங்களுக்கு மேற்பட்ட தரம்



breeze
CEILING FAN

பிறீஸ் மின் விசிறிகள்

- மின்சார சேமிப்புக் கொண்ட மோட்டர்.
- இலகுவில் பொருத்தக்கூடிய இரண்டு தடவைகள் ஹைப்பிரிட் கோட்டிங் செய்யப்பட்ட பாதுகாப்பான மின் விசிறிகள்.

YEAR WARRANTY

விற்பனை முகவர்கள் தேவை

50, 3/8 Colombo Plaza, Galle Road, Col - 06.
மேலதிக விபரங்களுக்கு
0771484580/0772614755
E-mail : info-sl@zmwint.com